வரு.75 இல. 32 ★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.vaaramanjari.lk
28பக்கங்கள் 100/-


கருணை இல்லம் கோகுலம்
ஆதரவற்ற சிறுவர்களுக்கு கல்வி, நல்வாழ்வு, சிறந்த எதிர்காலம் ஏற்படுத்திக்கொடுக்கும் கருணை இல்லம் கோகுலம். பிள்ளைச் செல்வங்களின் பிறந்த தினம், தங்கள் திருமண நாள், அன்புக்குரியவர்களின் நினைவு தினம் போன்ற எந்தவொரு விசேட நிகழ்வுகளுக்காகவும் இச்சிறியோரின் ஒரு நாளுக்கான பராமரிப்புச் செலவு தொகை 65,000 ரூபாவை வழங்கி உதவலாம்.
நிதியை வைப்பிலிட வங்கி விபரம்:
Commercial Bank A/C No : 1050669901 Office : Sri Sri Radhakrishna Temple.
A/C Name :- ISKCON,Shift Code CCEYLKLX No : 188, Newchetty Street, Colombo-13
Gokulam No : 687 A, Negombo Road Moholz, Wattala. Phone : 0112433325, Email: iskcon@slt.lk

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

තිනකරන් වාරමන්ජරී

2023 ஓகஸ்ட் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
August 13 Sunday, 2023


ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ணா கட்டிட வேலைகள் இறுதிக்கட்டத்தில்
ஆலய திருப்பணிக்கு நிதியை பணமாகவோ காசோலையாகவோ வங்கிக் கணக்கிலோ செலுத்தலாம்
Commercial Bank - Colombo-13
A/C Name: ISKCON Temple Fund
A/C No:- 1120017042
Hatton National Bank - Colombo-13
A/C Name: ISKCON
A/C No- 207010000891
ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ணா (ஆலயம்)
188, புதுச்செட்டித்தெரு, கொழும்பு – 13, தொலைபேசி:–011–2433325
Fax:2471089, Email:iskcon@slt.lk Web: www.iskcon.lk

/Thinakaran.lk /ThinakaranLK

03

13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதில் அனைவரது ஒத்துழைப்பும் அவசியம்

04

பொருளாதார நெருக்கடியை முகாமைத்துவம் செய்தல்; வெற்றிகளும் தொலைநோக்கும்

05

புலம்பெயர் தொழிலாளர்களின் நல்வாழ்வுக்கு முன்னுரிமை

24

விடைபெற்றார் தர்ஜினி

புலிகளால் கொல்லப்பட்டு நேற்றுடன் 18 வருடங்கள்;

## லக்ஷ்மன் கதிர்காமரின் வாழ்க்கை அனைவருக்கும் எடுத்துக்காட்டு



சிறந்த இலங்கையை உருவாக்க படிப்பினை – டுவிட்டரில் அலி சப்ரி



முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அமரர் லக்ஷ்மன் கதிர்காமரின் வாழ்க்கையிலிருந்து நாம் கற்றுக்கொண்ட பாடங்களை பிரதிபலிக்கும் இலங்கையை உருவாக்குவோமென, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். முன்னாள் வெளி 06

## யோஹானிக்கு USA இல் கிடைத்த கௌரவம்

நியூயோர்க் சதுக்கத்தில் புகைப்படம் காட்சி



இலங்கையின் பிரபல பாடகி யோஹானிக்கு அமெரிக்காவில் மற்றுமொரு கௌரவம் கிடைத்துள்ளது. அமெரிக்காவின் நியூயோர்க் சதுக்கத்தில் யோஹானியின் புகைப்படம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. தெற்காசிய மரபுரிமைகள் மாதத்தை கொண்டாடும் வகையில் இந்த புகைப்படம் 06

13ஆவது திருத்தச்சட்டம் தமிழ் மக்களது தார்மீக கடமை;

## சாதகமான சூழலை முன்னகர்த்த அனைவரும் ஒன்றிணைவது அவசியம்

இதயசுத்தியுடன் முன்வருமாறு தமிழ்த் தரப்பினரிடம் டக்ளஸ் அழைப்பு



இந்த நாட்டில் தமிழ் மக்கள் கௌரவமாக வாழ்வதை உறுதிப்படுத்துவது மற்றும் அனைத்து வகையான உரிமைகளுக்கும் உரித்துடையவர்களாக்குவது போன்ற 06

முன்கூட்டியே அறிவித்து பாரிய ஊழல், பண மோசடி கண்டுபிடிப்பு



# CTB பஸ்களின் திடீர் டிக்கட் பரிசோதனை குழு கலைப்பு

போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன அதிரடி

**பொதுமக்களின் பொதுச் சொத்தை கொள்ளையடிக்க எந்தவொரு அதிகாரிக்கும் இடமளிக்க முடியாது என்பதால் திட்டமிட்டு கொள்ளையில் ஈடுபட்ட மேற்படி குழுவை உடனடியாக கலைப்பதாக அமைச்சர் தெரிவிப்பு**

லோரன்ஸ் செல்வநாயகம்

இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களில் சுற்றிவளைப்பு சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடும் பிரிவை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் கலைப்பதற்கு இ.போ.ச. தலைவர் எஸ்.எம்.டி.எல்.கே.டி.அல்விஸுக்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன உத்தரவிட்டுள்ளார்.

அடுத்த வாரத்துக்குள் விரிவான அதிகாரங்களைக் கொண்ட புதிய சோதனை சுற்றிவளைப்புப் பிரிவை உருவாக்க நடவடிக்கை எடுக்குமாறும் இ.போ.ச. தலைவருக்கு அமைச்சர் பந்துல குணவர்தன உத்தரவிட்டுள்ளார்.

தென்மாகாணம், ஊவாமாகாணம் உட்பட பெரும்பாலான மாகாணங்களில் தூரப் பிரதேசங்களுக்கான பஸ் சேவைகளில் பயணச்சீட்டு மோசடி மற்றும் ஊழல், முறைகேடுகள் இடம்பெற்று வருவதாகவும் அதனால், ஒரு நாளில் சுமார் 20 முதல் 30 இலட்சம் ரூபாவரை நட்டம் ஏற்படுவதாகவும் அவ்வாறு மதிப்பிடும் போது, வருடத்துக்கு சுமார் 72 கோடி ரூபா அரசாங்கத்துக்கு நட்டம் 06

## புலம்பெயர் தொழிலாளர் அனுப்பிய 03 பில். டொலர்

2023 ஆரம்பம் முதல் இன்றுவரை பதிவு



வெளிநாட்டில் வேலைவாய்ப்புக்காக சென்றுள்ள இலங்கையர்களிடமிருந்து இந்தாண்டின் இதுவரையான காலப் பகுதியில் இலங்கைக்கு 3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அனுப்பப்பட்டுள்ளதாக, இலங்கை மத்திய வங்கி தெரிவித்தது. இந்த ஜூலை மாதத்தில் மாத்திரம் 541 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளதாகவும் 06

## மிஹிந்தலையில் மின்னல் தாக்கியதில் மூவர் பலி!

வாவியில் மீன்பிடிக்கையில் அனர்த்தம்

அநுராதபுரம் தினகரன் நிருபர்



அநுராதபுரத்தின் மிஹிந்தலை, சிப்பிக்குளம் பிரதேசத்திலுள்ள தம்மன்னாவ வாவியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த மூவர் மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளனர். கஹட்டகஸ்திகிலிய, தம்புருவ பிரதேசங்களைச் சேர்ந்த 43 முதல் 06

## மூத்த எழுத்தாளர் அனுலா டி சில்வா நேற்று காலமானார்



மூத்த எழுத்தாளரும் ஊடகவியலாளருமான அனுலா டி சில்வா நேற்று காலமானார். கொழும்பு, மட்டக்குளி, காக்கைதீவிலுள்ள அவரது இல்லத்தில் காலமானதாக உறவினர்கள் தெரிவித்தனர். அனுலா டி சில்வா, எழுத்தாளராகவும் 06

தமிழ் முற்போக்கு கூட்டணியினரின்

## 'மலையகம் - 200 நாம் இலங்கையர்' நடைபவனி நேற்று நுவரெலியாவிலிருந்து ஆரம்பம்

நுவரெலியா, பொகவந்தலாவ நிருபர்கள்




மலையகம் 200 வருட நிறைவை முன்னிட்டு 'மலையகம் 200 நாம் இலங்கையர்' எனும் தொனிப்பொருளின் கீழ் தமிழ் முற்போக்கு கூட்டணி ஏற்பாடு செய்த நடைபவனி, நுவரெலியா மற்றும் ஹட்டன் 06

## உண்மையான சரித்திரம் தெரியாத நிலையில் சிங்கள மக்கள்

தெளிவுபடுத்துவது எமது கடமை – CV கருத்து



வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய நிலம் அல்லவென்று சிங்கள மக்கள் கூறினால், அவர்களுக்கு உண்மையிலேயே சரித்திரம் தெரியாமல் இருக்கின்றதென்றுதான் அர்த்தமென, பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்று முன்தினம் (11) கருத்துத் தெரிவித்த போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது, சிங்களமொழி 06

## எங்கள் கருத்து

### இருநூற்றாண்டுகள் கடந்தும் முழுமை பெறாத வாழ்வு முறை

பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து தமிழ் மக்கள் பெருந்தோட்ட வேலைகளுக்காக இலங்கைக்கு அழைத்துவரப்பட்டு இருநூறு வருடகாலம் கடந்துவிட்டது. மலையக இந்திய வம்சாவளி சமூகத்தின் இருநூற்றாண்டு கால வரலாற்றை நினைவு கூரும் வகையில் நாட்டில் ஆங்காங்கே நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன.

மலையகத்தில் மாத்திரமன்றி வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் இதுதொடர்பான நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. 'தமிழர்கள் அனைவரும் ஓரினம்' என்ற உணர்வை வெளிப்படுத்தி இவ்வாறான நிகழ்வுகள் நடத்தப்படுவது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது. வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட நாடெங்கும் வாழ்கின்ற தமிழ் மக்களை இனத்தின் பேரில் ஐக்கியப்படுத்துகின்ற இவ்வாறான முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவது மிகவும் அவசியம்.

ஒற்றுமை இல்லாத சமூகமொன்றினால் எக்காலத்திலும் உரிமைகளை வென்றெடுக்க முடியாதென்பதற்கு சிறந்த உதாரணம் தமிழினம் ஆகும். வரலாற்றுக்காலம் தொடக்கம் தமிழினத்தில் அரசியல்ரீதியில் என்றுமே ஒற்றுமை இருந்ததில்லை. வடக்கு, கிழக்குக்கு மாத்திரமன்றி மலையகத்துக்கும் இந்த உண்மை பொருந்தும். ஆயுதப் போராட்டமாகட்டும் அல்லது அரசியலாகட்டும், தமிழினத்தில் ஒற்றுமை என்பது இருந்ததேயில்லை. இத்தகைய பிளவு காரணமாகவே வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களின் அரசியல் 06

## முட்டை விலை விரைவில் ரூபா 35ஆக குறையும்

கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவிப்பு



நாட்டில் முட்டைகளின் விலையை குறைக்க முடியுமென்று, இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்தது.

சோளத்தை இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்கப்படின், எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் முட்டையொன்றை 35 ரூபாவுக்கு விற்பனை செய்ய முடியுமெனவும், அச்சங்கம் 06

## துருக்கி பஸ் விபத்தில் 29 இலங்கையருக்கு காயம்

சுரங்கப் பாதையில் பயணித்த போது சம்பவம்



துருக்கியின், இஸ்தான்புல் விமான நிலையத்தில் பணிபுரியும் இலங்கையரை ஏற்றிச் சென்று கொண்டிருந்த பஸ் வண்டியொன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 29 பேர் காயமடைந்துள்ளனர். துருக்கியின் இஸ்தான்புல் 06

## ஜனாதிபதியை த.மு.கூ. குழு அடுத்த வாரம் சந்திக்கும்

கூட்டணியின் தலைவர் மனோ MP தெரிவிப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அடுத்த வாரம் தாம் சந்திக்கவுள்ளதாக, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

முன்கூட்டியே நுவரெலியாவில் ஏற்பாடு செய்யப்பட்ட பொது நிகழ்வில் கலந்து கொள்ளச் செல்கின்ற கூட்டணி எம்.பிக்கள், கொழும்பில் 06

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம்;

## நௌபர் மௌலவி உட்பட 24 பேருக்கு எதிராக 23,270 குற்றச்சாட்டுகள்

சட்ட மாஅதிபரால் வெள்ளியன்று தாக்கல் செய்யப்பட்டது



உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலுக்கு சதி செய்த மற்றும் உதவிய குற்றச்சாட்டின் கீழ் 23,270 குற்றச்சாட்டுகளை நௌபர் மௌலவி உட்பட 24 பேருக்கு எதிராக சட்ட மாஅதிபர் தாக்கல் செய்தார். இந்த வழக்கு தொடர்பான பிரதிவாதிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் மீதான விசாரணை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் நிறைவடைந்தது. 06

தாவர, விலங்குகளின் பாகங்களை சேகரித்த

## ஈரானிய பிரஜைகள் மூவருக்கு தலா ரூ.44 இலட்சம் அபராதம்

சிங்கராஜ வனப்பகுதியில் சிக்கினர்



சிங்கராஜ வனப்பகுதியில் தாவரங்கள் மற்றும் விலங்குகளின் பாகங்களை சேகரித்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட ஈரானிய பிரஜைகள் மூவருக்கு உடுகம நீதவான் நீதிமன்றம் ஒரு கோடியே 32 இலட்சம் ரூபாவை அபராதமாக விதித்துள்ளது. இந்நிலையில், 06




லோரன்ஸ் செல்வநாயகம்

# தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண சட்ட ரீதியான பல திட்டங்கள்







**மலையக தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான பாராளுமன்ற சபை ஒத்திவைப்புவேளை விவாதம்**

மலையக மக்கள் தொழிலுக்காக இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகை தந்து 200 ஆண்டுகள் நிறைவு பெறுகின்ற நிலையில், அதனை நினைவு கூரும் பல்வேறு நிகழ்வுகள் இடம் பெற்று வரும் காலம் இது.

இந்தியாவிலிருந்து அவர்கள் வந்திறங்கிய மன்னாரிலிருந்து மாத்தளை வரை அந்த 200 ஆண்டு நிறைவை நினைவு கூரும் வகையில் மக்கள் பேரணி ஊர்வலம் கடந்த சில தினங்களாக நடைபெற்று நேற்றுடன் அது நிறைவு பெற்றது.

அதனைத் தவிர மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள், அமைப்புகள் பலவும் பல்வேறு நிகழ்வுகளை ஏற்பாடு செய்து நடத்தி வருகின்றன. அத்துடன் இந்திய அரசாங்கம் மலையக மக்களின் அடிப்படை வசதிகளை பெற்றுக் கொடுக்கும் வகையில் 300 கோடி ரூபா நிதியை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

அந்த நிதியை முழுமையாக மலையக பெருந்தோட்ட கல்வித் துறைக்கு பயன்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளும் முன் வைக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறானதொரு பின்னணியில் தான் கடந்த 10ஆம் திகதி பாராளுமன்றத்தில் மலையக மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் ஒன்றும் நடந்தேறியது.

மலையக பெருந்தோட்ட மக்கள் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் தேவைகளுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றார்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது. குறிப்பாக வீடு உட்பட அடிப்படை வசதிகள் கூட இல்லாத நிலையிலேயே அவர்கள் பல்லாண்டு காலமாக தமது வாழ்க்கையை நடத்தி வருகின்றார்கள். இந்த விடயங்கள் அன்றைய தினம் நடைபெற்ற விவாதத்தில் தெளிவாக முன்வைக்கப்பட்டன.

**"தோட்டத் தொழிலாளர்களுக்கு 10 பேர்ச் காணி விரைவில் வழங்கப்படும். அதற்காக ஜனாதிபதி மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் முக்கிய பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது"**

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் மேற்படி சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை சபையில் சமர்ப்பித்து விவாதத்தை ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற பேதமின்றி அனைவருமே மலையக மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள், அவர்களின் தேவைகள் சம்பந்தமாக தமது கருத்துக்களை முன் வைத்தனர். அனைவருமே இதன் போது காலங் காலமாக தீர்க்கப்படாமல் தொடரும் மலையக மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வு காண வேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டதுடன், எவ்வாறு அவற்றுக்குத் தீர்வு காணலாம் என்பது தொடர்பில் யோசனைகளையும் கருத்துக்களையும் முன் வைத்தனர்.

மலையக தோட்ட தொழிலாளர்களுக்கு அடிப்படை வசதிகளைக் கொண்ட வீடுகள் கிடையாது. பெற்றோரும் பிள்ளைகளும் ஒரு குடும்பமாக வாழ்வதற்கு எந்த விதத்திலும் வசதியற்ற, பொருத்தமற்ற லயன் வீடுகளே இன்றும் அங்கு காணப்படுகின்றன. மலையகத்தின் பெரும்பாலான பகுதிகளில் அடிப்படை மருத்துவ வசதிகள் கிடையாது. மலசல கூடங்கள் இல்லாத பள்ளிக்கூடங்களும் அங்கு காணப்படுகின்றன. கணிதம், விஞ்ஞானம் ஆங்கிலம் போன்ற பாடங்களை கற்பிப்பதற்கு பெரும்பாலான பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கு பெரும் பற்றாக்குறை நிலவுகிறது.

200 ஆண்டுகள் கடந்தும் அந்த மக்களுக்கு என சொந்தக் காணிகள் கிடையாது. 7 பேர்ச் காணி வழங்கப்படும், 10 பேர்ச் காணி வழங்கப்படும் என்று அடிக்கடி அவர்களுக்கு வாக்குறுதி வழங்குகின்ற போதும் மிகச் சொற்பமானவர்களுக்கே அவ்வாறு கடந்த காலத்தில் காணிகள் வழங்கப்பட்டுள்ளன.

தோட்டங்களுக்கு செல்லும் பாதைகள் மிக மோசமாக உள்ளன. அதனால் அன்றாடம் தொழிலுக்கு செல்பவர்கள், பாடசாலை மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர். முறையான போக்குவரத்து சேவைகளோ, தபால் சேவைகளோ கிடையாது. தமக்கு வரும் கடிதங்கள் தமது வீட்டுக்கு கொண்டு வரப்படாமல் அங்குள்ள தோட்ட நிர்வாக அதிகாரியின் காரியாலயத்திலேயே ஒப்படைக்கப்படுகின்றன. அதனைப் பெற்றுக் கொள்வதற்காக அந்த மக்கள் தோட்ட அதிகாரியின் பங்களா முற்றத்தில் மணிக்கணக்காக காத்துக் கிடக்க வேண்டும். அந்த மக்களின் வீடுகளுக்கு சொந்த முகவரி கிடையாது. ஏன் அந்த மக்களுக்கும் கூட அது கிடையாது.

தொழிலுக்குச் செல்லும் பெண்கள் வீட்டுக்கு வந்த பின்னரே மலசல கூடம் செல்ல முடியும். அவசரத்துக்குக் கூட தமது அவசர தேவைகளை நிவர்த்தி செய்வதற்குக் கூட அவர்கள் வேலை செய்யும் பகுதிகளில் மலசல கூடங்கள் கிடையாது.

நாட்டில் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி, அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையதிகரிப்பு, அன்றாட வாழ்க்கைச் செலவு என சுமக்க முடியாத நெருக்கடிக்கு மத்தியில் அவர்களுக்கு கிடைப்பதோ வெறும் ஆயிரம் ரூபா சம்பளம்தான். அதனை வழங்குவதற்கும் சில தோட்டக் கம்பெனிகள் முன் வருவதில்லை.

தோட்ட நிர்வாகிகள் அந்த மக்களை வருத்தி வேலை வாங்குகின்றார்களே தவிர, அவர்களுக்காக ஒருபோதும் எத்தகைய ஒத்துழைப்பையும் வழங்குவதில்லை. சில, சில விடயங்களில் பொலிஸாரின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டு பெரும் அடக்குமுறைக்குள் தோட்ட மக்களை வைத்திருகின்றார்கள் என இது போன்ற பாரிய குறைபாடுகளை சபையில் இந்த விவாதத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சியினர் மட்டுமின்றி ஆளும் கட்சியினரும் எத்தகைய பாரபட்சமும் இன்றி சுட்டிக் காட்டியதைக் குறிப்பிட முடியும்.

இத்தகைய அனைத்து வாழ்க்கை சுமைகளுக்கு மத்தியிலும் அந்த மக்கள் இந்த நாட்டின் பொருளாதாரத்துக்காக தமது முழுமையான அர்ப்பணிப்பை வழங்கி வருகின்றனர். நாட்டின் ஏற்றுமதி வருமானத்தில் இரண்டாவது இடத்தில் தேயிலை காணப்படுகின்ற நிலையில் அந்த தேயிலையை பெற்றுக் கொடுப்பவர்கள் அந்த மக்கள்தான் என விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் ரமேஷ் பத்திரன சபையில் தெரிவித்ததை குறிப்பிட முடியும்.

மற்றும் ஒரு விடயத்தையும் இந்த விவாதத்தில் காண முடிந்தது. பல்வேறு தொழிற்சங்கங்களைச் சேர்ந்த மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எம்.பிக்கள் மற்றும் அமைச்சர்கள் நாங்கள் தான் இதைச் செய்தோம், நாங்கள்தான் அதிகமாக செய்தோம், நாங்கள்தான் அதிக வீடுகளைக் கட்டிக் கொடுத்தோம், நாங்கள் தான் அரைகுறையாக கட்டிக் கொடுக்கப்பட்டிருந்த வீடுகளுக்கு முழுமையான வசதிகளை பெற்றுக் கொடுத்தோம் என்றெல்லாம் தங்களுக்குள்ளேயே வாக்குவாதங்களில் ஈடுபட்டதைக் காண முடிந்தது.

அவர்களுக்குள்ளேயே ஒரு ஒற்றுமை இருக்கவில்லை என்பதனை அதன் மூலம் காண முடிந்தது. இது அந்த பாராளுமன்ற விவாதத்தை நேரலையில் அல்லது தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருக்கும் மக்களுக்கும் பாராளுமன்றத்தில் அதனை பார்த்துக் கொண்டிருந்த ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் எத்தகைய புரிதலைக் கொடுத்திருக்கும் என்பதை சொல்லத் தேவையில்லை.

மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான இந்த சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தை முன்னாள் அமைச்சரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன் எம்.பி சபையில் சமர்ப்பித்தார்.

குறிப்பாக இந்த விவாதத்தில் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன விவாதத்துக்கு பதிலளிக்கும் வகையில் பிரதான உரையை நிகழ்த்தினார்.

அவர் தமதுரையில் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக சட்டரீதியான பல நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக தெரிவித்தார்.

அதேவேளை, மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் போது மலையகத்தில் உபயோகப்படுத்தப்படாத காணிகளை மீண்டும் அரசுடைமையாக்க நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியை வலியுறுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில் அதற்கான அமைச்சரவை அனுமதி கிடைத்த போதும் அது தொடர்பில் ஏற்படுத்தப்பட்ட பல்வேறு தடைகளினால் அது சாத்தியமற்றுப் போனதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் முன்னேற்றமடையவில்லை என்பதற்கான பொறுப்பை இதுவரை ஆட்சியில் இருந்த அனைத்து அரசாங்கங்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

அமைச்சர் ஜீவன் தொண்டமான் தனது உரையில்,

மலையக மக்களுக்கு 10 பேர்ச் காணிக்கான உரிமை மிக விரைவில் வழங்கப்படும். என்றும் அது தொடர்பாக ஜனாதிபதி மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் தாம் முக்கிய பேச்சுவார்த்தையை நடத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

சிலர் வரலாறு தெரியாமல் கருத்துக்களை முன்வைத்து வருவதாக குறிப்பிட்ட அவர், மலையக தமிழர்களுக்கு இடம்பெற்ற அநீதி வேறு. அதேபோன்று இலங்கை தமிழர்களுக்கு இடம் பெற்றுள்ள அநீதி வேறு. நாமும் இலங்கைத் தமிழர்கள் என எம்மை அடையாளப்படுத்தினால் எமக்கு ஏற்பட்ட அநீதி மறைக்கப்பட்டு விடும் என்பதால் தான் இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்கள் என நாம் எம்மை அடையாளப்படுத்தி வருகின்றோம் என்கின்ற தகவலையும் அவர் தமது உரையில் முன் வைத்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விவாதத்தில் உரையாற்றிய போது பெருந்தோட்ட மக்களின் உரிமைகளை பாதுகாத்து அவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்காக தேசிய ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

நாட்டில் ஏனைய மக்களுக்கும் மலையக பெருந்தோட்ட மக்களுக்கும் இடையிலான பாரபட்சம் ஒழிக்கப்படுமானால் மலையக மக்களுக்கான அனைத்தும் இயல்பாகவே கிடைப்பது உறுதி என கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் இந்த விவாதத்தில் தெரிவித்தார். 200 கால வரலாற்றைக் கொண்ட அந்த மக்கள் இன்றும் நவீன அடிமைகளாகவே வாழ்ந்து வருகின்றனர் என்பதையும் அவர் கவலையுடன் குறிப்பிட்டார்.

வேலுசாமி இராதாகிருஷ்ணன் எம்பி தமது உரையில் மலையக பெருந்தோட்ட மக்களுக்கு ஒரு லட்சத்து 44 ஆயிரத்து 650 வீடுகள் தேவைப்படுகின்றன. எனினும் அந்த வீட்டுத் தேவையை முழுமையாக நிவர்த்தி செய்வதற்கு இன்னும் 25 வருடங்களாவது எடுக்கும் என்ற தமது மன ஆதங்கத்தையும் வெளியிட்டார்.

குறிப்பாக தோட்டத் தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்தினரால் அடக்கப்பட்டு வருகின்றனர். அவர்கள் ஏதாவது உதவிகளை அதிகாரிகளிடம் கேட்டுப் போனால் அவர்கள் அதனை வழங்குவதில்லை மாறாக பொலிஸாரின் உதவியுடன் அந்த மக்களை அவர்கள் அடக்கி வருகின்றனர். எதற்கும் ஒத்துப் போகாதவர்களாகவே அவர்கள் செயற்படுகின்றனர். இந்த நிலை மாற்றப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான மருத பாண்டி ராமேஸ்வரன், பழனி திகாம்பரம், உதயகுமார், வேலு குமார் உள்ளிட்ட மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் தலைவர்களும் ஸ்ரீதரன், திலீபன் போன்ற வடக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களும் கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் உள்ளிட்டவர்களும் பெரும்பாலான ஏனைய பெரும்பான்மை ஆளுங்கட்சி எதிர்க்கட்சி அமைச்சர்கள், எம்பிக்களும் இந்த விவாதத்தில் கலந்து கொண்டு சிறப்பான கருத்துக்களை முன்வைத்தமை குறிப்பிடத்தக்கது.


## இலங்கை வங்கி

## பெறுமதி வாய்ந்த காணி விற்பனைக்கு

| ஆதன இலக்கம் | நகரம் | ஆதன வகை | காணியின் வகை | பரப்பளவு |
|---|---|---|---|---|
| 341 | காலி | சுதுபிட்டியமுல்ல பெத்த, அங்குலுகஹ | வெற்றுக் காணி | 18.97 பேர்ச் |
| 403 | ருவன்வெல்ல | ''மஹவத்த'' ருவன்வெல்ல கிராமத்தில் அமைந்துள்ள முன்னாளில் ''சிறினிமா நேர்சிங் ஹோம் (பீவீடி) எல்டீடி'' | காணி மற்றும் கட்டடம் | 7.4 பேர்ச் |
| 412 | கினிகத்ஹேன | முன்னாளில் கிறீன் விவ் ஹோட்டல் ''நொறில்லேண்ட்'', பகதுலுவ, கினிகத்ஹேன | காணி மற்றும் கட்டடம் | 32.0 பேர்ச் |
| 416 | கடவத்தை | கடவத்தை, கோணஹேனயில் அமைந்துள்ள ''கோணஹேன தோட்டம்'' | காணி மற்றும் கட்டடம் | 10.0 பேர்ச் |
| 417 | மஹியங்கனை | ஹந்தகனாவயாயயில் அமைந்துள்ள முன்னாளில் ''சித்தும் அரிசி ஆலை'' | காணி மற்றும் கட்டடம் | 1 ஏக்கர் 2 ரூட் |
| 426 | ஊருபொக்க | ''ஓவிட்டவத்த'' பெரலபனதர, ஊருபொக்க | காணி மற்றும் இரண்டு மாடி வீடு | 1 ரூட் 23.0 பேர்ச் |
| 447-II | கண்டி | கண்டி, ஹிந்தகலயில் அமைந்துள்ள ''ஹிந்தகல தோட்டம்'' | வெற்றுக் காணி | 1 ஏக்கர் 0 ரூட் 0 பேர்ச் |
| 451 | மாவத்தகம | ரின்ஸ் லொட்ஜ், மீதென்வல வீதி, கியுல, மாவத்தகம | காணி மற்றும் கட்டடம் | 1 ரூட் 1 பேர்ச் |
| 455 | குருநாகல் | குருநாகல், (வதுராகல ஆலயத்திற்கு அருகில் உள்ள வீதி) வதுராகலயில் அமைந்துள்ள ''வளவ்வேவத்த'' | வெற்றுக் காணி | 1 ரூட் 12.0 பேர்ச் |
| 457 | குருநாகல் | குருநாகல், கோணவல, விலகெதரயில் அமைந்துள்ள ''ஹல்லவே நிவஸ'' | காணி மற்றும் கட்டடம் | 1 ரூட் 10.7 பேர்ச் |
| 459 | இரத்தினபுரி | ''திஹன ரெஸ்ட்'', இல. 162A, ரத்கம சந்தி (புஞ்சி தம்பதிவ ஆலயத்திற்கு அருகில்) குடாவ, இரத்தினபுரி | காணி மற்றும் கட்டடம் | 15.0 பேர்ச் |
| 472 | ரம்புக்கனை | ''கெடகெலே கும்புர'', இல. 169, மாவனல்லை வீதி, ரம்புக்கனை | காணி மற்றும் கட்டடம் | 29.9 பேர்ச் |
| 473 | தியபெதும | முன்னாளில் சிறிலக அரிசி ஆலை, இல. 114, புரானகம, கட்டுகெலியாவ, தியபெதும | காணி மற்றும் கட்டடம் | 1 ஏக்கர் 0 ரூட் 0 பேர்ச் |
| 474 | பத்தரமுல்ல | கடுவளை, 54/5 இலக்கத்தில் அமைந்துள்ள ''மீகஹவத்த'' | வதிவிட ஆதனம் | 10.5 பேர்ச் |
| 475 | தொம்பே | கம்பஹா, தொம்பே (தொம்பே வைத்தியசாலைக்கு அருகில்) தெகவத்த வீதியில் 387/B இலக்கத்தில் அமைந்துள்ள ''தொடம்கஹவத்த'' | வதிவிட ஆதனம் | 1 ரூட் 1.49 பேர்ச் |
| 477 | அநுராதபுரம் | அநராதபுரம், மாங்கடவலயில் அமைந்துள்ள ''மாங்கடவல கெலே'' | காணி மற்றும் கட்டடம் | 3 ரூட் 3.20 பேர்ச் |
| 484 | பியகம | பியகம, கோணவல, பமுனுவில, 98/2 இலக்கத்தில் அமைந்துள்ள ''மூனமல்கஹவத்த'' | வெற்றுக் காணி | 26.5 பேர்ச் |
| 485 | மாத்தளை | மாத்தளை, தொடந்தெனிய, 44/5 இலக்கத்தில் அமைந்துள்ள ''ஹூலன்கமுவ தோட்டம்'' | காணி மற்றும் வீடு | 27.2 பேர்ச் |
| 497 | கம்பஹா | கம்பஹா, அலுத்கம, மொருபொல 3ஆம் ஒழுங்கை, 92/04 இலக்கத்தில் அமைந்துள்ள ''இந்திகொல்ல தோட்டம்'' | காணி மற்றும் கட்டடம் | 10.0 பேர்ச் |
| 501 | பாணந்துறை | மகா வாத்துவ, வாத்துவ, புகையிரத நிலைய வீதி, 01 இலக்கத்தில் அமைந்துள்ள ''ஜம்புகஹவத்த தெற்கின் நான்கில் ஒரு பகுதி'' | வெற்றுக் காணி | 30.0 பேர்ச் |
| 502 | கடவத்தை | பஹல கரகஹமுன கிராமம், 437ஆம் ஆதன இலக்கத்தில் அமைந்துள்ள ''நெதுன்கஹவத்த மற்றும் அலுபோகஹவத்த'' | காணி மற்றும் வீடு | 37.7 பேர்ச் |
| 508 | நுவரெலியா | நுவரெலியா, கட்டுமான கிராமத்தில் அமைந்துள்ள ''கட்டுமான கெலே'' | காணி மற்றும் கட்டடம் | 30.0 பேர்ச் |

**மேற்படி ஆதனங்களைக் கொள்வனவு செய்வதற்கு ஆர்வமுள்ளவர்களிடமிருந்து (கொள்வனவாளர்களிடமிருந்து மட்டும்) விலைமனுக்கள் கோரப்படுகின்றன.**

விண்ணப்பப் படிவங்களை 2023-08-28ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் இதன் பொருட்டு மீளளிக்கப்படாத 2,000.00 ரூபா மற்றும் மீளளிக்கப்படும் 50,000.00 ரூபாவைச் செலுத்துதல் வேண்டும். இத்தொகையை இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் வைப்புச் செய்யலாம்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை மூடிய தபாலுறையிலிட்டு "PROP/05/2023" எனும் இலக்கத்துடன் ஆதன இலக்கத்தினையும் குறிப்பிட்டு 2023-08-29ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். 2023-08-29ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் திறத்தலின்போது விண்ணப்பதாரர்களும் கலந்து கொள்ளலாம்.

கேள்விதாரரினால் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை இலங்கை வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது.

**மேலதிக விபரங்களுக்கு: தயவு செய்து வார நாட்களில் தொடர்பு கொள்ளவும்:**

முகவரி: இலங்கை வங்கி
நிறுவன அறவீடு - ஆதன சுவீகரிப்புப் பிரிவு,
3வது மாடி, தலைமை அலுவலகம்,
இலங்கை வங்கிச் சதுக்கம், இல. 01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.

தொலைபேசி: உதவிப் பொது முகாமையாளர் (நிறுவன அறவீடு) - 011-2203410 / 011-2386080
சிரேஷ்ட முகாமையாளர் - 011-2321170 / 011-2203429 / 076-9627068
உதவி முகாமையாளர் - 011-2203470 / 0718418898
மின்னஞ்சல்: mgrforeclosed@boc.lk

"www.boc.lk" எனும் இணையதளத்திற்குப் பிரவேசித்து விசேட அறிவித்தலின் கீழுள்ள சுவீகரிக்கப்பட்ட ஆதன விற்பனையைப் பார்க்கவும்.

1975 BOC www.boc.lk

A (lka) Fitch தரப்படுத்தல், AAA Brand Finance தரப்படுத்தல்.

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்


## யாழ். பல்கலை ஊடகக் கற்கைகள் துறையின் மாணவர் சஞ்சிகை 'கனலி' வெளியீடு





யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையின் ஏற்பாட்டில் மாணவர்களின் படைப்பாக்கமான கனலி மாணவர் சஞ்சிகையின் நான்காவது இதழ் வெளியீட்டு நிகழ்வானது அண்மையில் ஊடகக் கற்கைகள் துறைத் தலைவர் பூங்குழலி சிறிசங்கீர்த்தனன் தலைமையில் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதில் துணைவேந்தர் பேராசிரியர் செ.கண்ணதாசனும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராமும் கலந்துகொண்டனர். சஞ்சிகையைக் கலைப்பீடப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் வெளியிட, முதற் பிரதியை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதில் துணைவேந்தர் பேராசிரியர் செ.கண்ணதாசன் பெற்றுக்கொண்டார்.

நிகழ்வில் மாணவர்களுக்கான வாழ்த்துரையை பிஷப் சவுந்தரம் மீடியா சென்டர் இயக்குநர் ரூபன் மரியாம்பிள்ளை அடிகளும், ஆய்வுரையை யாழ்ப்பாணக் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் ஜோ. ஜோன்சரா ராஜ்குமாரும், மதிப்பீட்டு உரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவ சித்தாந்தத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தி.செல்வமனோகரனும் வழங்கினர். ஊடகக் கற்கைகள் துறையின் மூன்றாம் வருட மாணவர்களால் உருவாக்கப்பட்ட கனலி சஞ்சிகையானது முழுமையாக மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளி வருவது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில், கனலியின் நான்காவது இதழானது, நாட்டாரியலை தனது தொனிப்பொருளாகக் கொண்டு பல்வேறுபட்ட பிரதேசங்களிலிருந்தும் மருவிச் செல்கின்ற, நலிவடைந்து செல்கின்ற நாட்டார் கலையம்சங்களையும் நாட்டார் கலைஞர்களின் வாழ்வியலையும் ஆய்வுக்குட்படுத்தி, அவற்றை ஆவணமாக்கும் நோக்குடன் வெளிவந்திருக்கின்றது.

# 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதில் அனைவரது ஒத்துழைப்பும் அவசியம்



**13 ஆவது அரசியலமைப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இன, மத, மொழி, கட்சி பிரதேச பேதமின்றி சகல அரசியல் கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் குறிப்பாக வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் தலைவர்கள் உட்பட சிங்களத் தலைவர்களும் இதற்கு பூரண ஆதரவினைத் தெரிவிக்க வேண்டுமெனவும் கிராமிய விதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவனேசத்துரை சந்திரகாந்தன் தெரிவித்தார். தினகரனுக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலில் நாட்டின் பொருளாதார சவால்களை முறியடிப்பதற்கு மாகாண மற்றும் மாவட்ட அபிவிருத்தியே பிரதான மூலமாக இருக்குமென்றும் வளமானதோர் எதிர்காலத்துக்கு 13ஐ உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டுமெனவும் கூறினார்.**

**நேர்காணல் முழுமையாக ...**

***13 ஆவது திருத்தம் தற்போதைய பிரதான பேசுபொருளாக உள்ளது. உங்களின் நிலைப்பாடு என்ன என்பது தொடர்பில் விரிவாக கூற முடியுமா?***

13ஆவது அரசியல் அமைப்பினை அமுல்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை சகல அரசியல் கட்சிகளும், தலைவர்களும் ஏகமனதாக ஏற்றுக் கொள்ள வேண்டும். 13ஆவது அரசியலமைப்பு திட்டம் வெற்றியடைய வேண்டும் என்பதுடன் வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களும் தென்னிலங்கையில் இருந்து செயற்படும் முற்போக்கான மற்றும் இடதுசாரி கட்சிகளும் வழங்கும் ஆதரவிலேயே இதன் வெற்றி தங்கியுள்ளது.

13 ஆவது திருத்தத்தை இரத்து செய்ய முடியாது என்பதை ஜனாதிபதி தெளிவாக குறிப்பிட்டுள்ளார். பொலிஸ், காணி உள்ளிட்ட அதிகாரங்களில் பிரச்சினைக்கு உரிய விடயங்களை தவிர்த்து ஏனைய அம்சங்களை அமுல்படுத்துவது குறித்து ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தியுள்ளார்.

13 ஆவது திருத்தத்தால் பிரிவினைவாதம் தோற்றம் பெறாது. பண்டா – செல்வா ஒப்பந்தம், டட்லி – செல்வா ஒப்பந்தம், திம்பு பேச்சுவார்த்தை உள்ளிட்ட பல ஒப்பந்தங்களை கடந்துள்ளோம். 13 ஆவது திருத்தம் உறுதியாகவே உள்ளது.

**தொல்பொருள் விவகாரத்தில் தென்னிலங்கையில் உள்ளவர்களும், நமது கடும் போக்குவாதிகளும் நிதானமாக செயற்பட வேண்டும்**

2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவுற்ற பின்னர், அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படும் எனவும் யுத்தம் இல்லாத, வன்முறையற்ற ஒரு சூழல் உருவாக்கப்படும் எனவும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளிநாட்டுத் தலைவர்களிடம் கூறினார். இதற்கும் அப்பால் 13 பிளஸ் வழங்கப்படும் எனவும் வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் 9 மாகாணங்களுக்கும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படும் என வாக்குறுதி அளித்திருந்தார்.

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சகல அரசியல் கட்சிகளும் இன, கட்சி பேதமின்றி ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அதிகாரப் பரவலாக்கல் என்பது பிரதான காரணியாக இருக்கின்றது. ஒரு நாட்டின் வெற்றி அதனில் தங்கியுள்ளது. மாகாணங்களுக்கு இடையில் அதிகாரங்களை பகிர்ந்து கொள்வதன் மூலம் அந்தந்த மாகாணங்கள் மாத்திரமன்றி அதனுடன் தொடர்புடைய மாவட்டங்கள், பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரமும் பொருளாதாரமும் வளர்ச்சி அடையும்.

மத்திய அரசின் சலுகைகளை எதிர்பார்த்து கொண்டிருக்காமல் மாகாண மற்றும் மாவட்டங்களுக்கு அதிகாரங்கள் பகிரப்படும் போது அந்த மாகாணமும், மாவட்டமும், பிரதேசமும் அபிவிருத்தி அடையும். ஓர் இனத்துக்காகவோ அல்லது மதங்களை திருப்திப்படுத்தவோ சட்டங்கள் இயற்றப்படுவதில்லை. மாறாக அந்தப் பிரதேசத்தின் வளர்ச்சி மற்றும் தேசிய வளங்களை நாட்டின் பொருளாதாரத்துடன் இணைப்பதற்காகவே 13ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அவ்வாறான ஒரு முன்மாதிரியான திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த எமது தலைவர்களும் ஒன்றுபட வேண்டும்.

13ஆவது திருத்தச் சட்டம் வடக்கு, கிழக்கு மகாகணங்களுக்கு மாத்திரம் சொந்தமானதல்ல. ஓர் இனம் அல்லது சமூகத்துக்காக உருவாக்கப்படவில்லை. முழு நாட்டையும் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களுக்காக உருவாக்கப்பட்டது. ஆகவே, இதனை சகல மக்களும் ஏற்றுக் கொண்டு ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு கட்சி பேதமின்றி ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

***வீதிப் போக்குவரத்து நடவடிக்கையில் ஈடுபடும் பேருந்துகளில், அனுமதி பெறாத பயணிகள் பேரூந்து போக்குவரத்து சேவை தொடர்பில் முறைப்பாடுகள் உண்டு. இது குறித்து உங்களின் நிலைப்பாடு என்ன ?***

நாட்டில் பெரும்பாலான துறைகளில் ஊழல் காணப்படுகிறது. நிர்வாக மாற்றத்தை அனைவரும் கோருகிறார்கள், பேசுகிறார்கள். ஆகவே அரசியல்வாதிகள் மாத்திரமல்ல, அனைவரும் மாற்றமடைய வேண்டும். தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அனுமதியின்றி போக்குவரத்தில் ஈடுபடுவது கண்டறியப்பட்டுள்ளது. அவர்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளோம். அவ்வாறே, மக்களும் மிக அவதானமாக செயற்பட வேண்டும். ஏனெனில் அந்தந்த பகுதிகளில் சேவையில் ஈடுபடும் போக்குவரத்து பஸ்கள் தொடர்பில் அறிந்து கொள்ள வேண்டும். பயணிப்பதற்கு ஏற்ற பேரூந்து சேவைகளை தெரிவு செய்து போக்குவரத்தை மேற்கொள்ள வேண்டும்.

***கிழக்கின் காணிப் பிரச்சினைகள் பற்றி பரவலாக பேசப்படுகிறதே ?***

பதில் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்காக குரல் கொடுப்பதாக கூறிக்கொண்டு குரலை உயர்த்தி பேசுகிறார்கள். குரல் கொடுப்பது முக்கியமல்ல. எந்த விடயத்துக்கு குரல் கொடுக்கிறோம் என்பதே முக்கியம். தனிப்பட்ட முறையில் என்னையும் எனது கட்சிகளையும் தாக்குவதாக நினைத்து குரலை உயர்த்திப் பேசுகிறார்கள். இதற்கு மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பாடம் புகட்டுவார்கள். இவ்வாறானவர்களின் பாராளுமன்ற உரைகளால் சாதிக்கக்கூடியவற்றைக் கூட சாதிக்க முடியாமல் போகுமா என்ற அச்சம்ஏற்பட்டுள்ளது.

**கிராமப்புற அபிவிருத்தி தொடர்பில் அதிக**

**சுற்றுலாத்துறை சேவையில் ஈடுபடுவது கலாசாரத்துக்கு முரணானது என்று மக்கள் கருதுகிறார்கள்**

**அவதானம் செலுத்துவதற்கான காரணம் என்ன?**

நான் மட்டக்களப்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்றம் சென்றுள்ளேன். எனக்கு வழங்கப்பட்டுள்ள கிராமிய வீதிகள் அமைச்சின் ஊடாக கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்த விசேட செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றேன். குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கிராமிய வீதிகள் உட்பட நாட்டின் சகல பிரதேசங்களிலும் காணப்படும் கிராமிய வீதிகள் புனரமைக்கப்படும்.

சுபிட்சம் மிக்க வாழ்வுக்கு முன்னுரிமை அடிப்படையில் வீதி உட்கட்டமைப்பு மறுசீரமைப்பு, புனரமைப்பு நடவடிக்கைகள் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் வழிகாட்டலின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் மகநேகும மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை போன்றவற்றால்

**இவ்வருடத்தின் இறுதிப் பகுதியில் கிழக்கு மாகாணத்தில் பல அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம்**

முன்னெடுக்கப்படுகின்றன. உணவுப் பாதுகாப்பு மற்றும் போசாக்கை மேம்படுத்தி கிராமிய பொருளாதாரத்தில் மறுமலர்ச்சியை வலுப்படுத்துவதற்காக புதிய கிராமம் புதிய நாடு விசேட வேலை திட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

சிறு தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு மீன் மற்றும் இறால் வளர்ப்புக்காக அரச காணிகளை பகிர்ந்தளிப்பது தொடர்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் விசேட கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. மட்டக்களப்பில் பிரதானமாக அமையப் பெற்றுள்ள கோட்டை கல்லடிப்பாலம், கல்லடி பாசிக்குடா கடற்கரை மற்றும் நூதனசாலை போன்ற சுற்றுலா தலங்களை மேம்படுத்தி பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யதல். அத்துடன் இலங்கைப் பொருளாதாரத்தில்முன்னேறிய இடமாக மட்டக்களப்பு மாவட்டத்தை மாற்றியமைப்பதே எனது திட்டம்.

கடந்த அரசாங்கம் மேற்கொண்ட ஒரு இலட்சம் கிலோமீற்றர் வீதி அபிவிருத்தி திட்டம் வரவேற்கக்கூடிய விடயமாகும். இருப்பினும் பல்வேறு காரணிகளால் அது தடைப்பட்டது. ஆரம்பிக்கப்பட்ட பணிகளை இடைநிறுத்தாமல் முழுமைப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிதி நெருக்கடியால் புதிய அபிவிருத்தி பணிகள் எதனையும் முன்னெடுப்பதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் ஒத்துழைப்பை தொடர்ந்து இடைநிறுத்தப்பட்டுள்ள வீதி அபிவிருத்தி பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும். அதற்கான நிதி திறைசேரி ஊடாக கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கிறோம். உலக வங்கியின் நிதியுதவியுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் வீதி அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவ்வருடத்தின் இறுதிப் பகுதியில் கிழக்கு மாகாணத்தில் பல அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம். வீதி உட்கட்டமைப்பு வசதிகள் நாட்டில் பிரதான தேவையாக உள்ளது. பாதைகளை சீர் செய்வதற்கும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வீதிகளை அபிவிருத்தி செய்ய ஜனாதிபதியுடன் தனிப்பட்ட முறையில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளேன்.

***தொல்பொருள் விவகாரம் தற்போது பிரச்சினைக்குரியதாக உள்ளது. குருந்தூர் மலை விவகாரம் பற்றிய உங்களின் நிலைப்பாடு என்ன ?***

குருந்தூர் மலையில் பிரச்சினை உள்ளது. தொல்பொருள் விவகாரத்தில் தென்னிலங்கையில் உள்ளவர்களும், நமது கடும் போக்குவாதிகளும் நிதானமாக செயற்பட வேண்டும். வடக்கில் உள்ளவர்களும் சட்டத்தின் ஊடாக தீர்வு காண முயற்சிக்க வேண்டும். அதனை விடுத்து ஏட்டிக்கு போட்டியாக செயற்படக் கூடாது. நாட்டில் தொல்பொருள் இடம் என அடையாளம் காணப்படும் இடங்களின் உண்மைத்தன்மையினை உறுதி செய்து அதன் பின்னரே அதனை அறிவிக்க வேண்டுமென்பதே எனது நிலைப்பாடாகும்.

***மட்டக்களப்பு மாவட்டத்தில் சுற்றுலாத்துறையின் அபிவிருத்தி எந்தளவில் உள்ளது ?***

கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சுற்றுலாத்துறை சேவைகளில் இருந்து கிழக்கு மாகாண மக்கள் விலகியுள்ளார்கள். அரசியல் காரணிகளால் கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறை சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. ஆகவே நிலைமையை மாற்றியமைக்க உரிய நடவடிக்கை எடுத்துள்ளோம். சுற்றுலாத்துறை சேவையில் ஈடுபடுவது கலாசாரத்துக்கு முரணானது என்று கருதுகிறார்கள். ஆகவே இந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டும்.

நேர்காணல் : அமீன் எம். றிலான்


**WANTED**

கொழும்பு புறக்கோட்டையில் அமையப் பெறவுள்ள Biryani Restaurant & Delivery நிலையத்திற்கு இத்துறையில் 5 வருடம் அனுபவம் வாய்ந்த ஆர்வம், அக்கறை மற்றும் துடிப்புள்ள தமிழ் மற்றும் சிங்களம் நன்கு தெரிந்த இளைஞர்கள் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

**தொடர்புகளுக்கு: 0773550558.**

**IMMEDIATE VACANCY**

We are looking for a well experienced **ACCOUNTANT** and **GRAPHIC DESIGNER** for our organization.

**ACCOUNTANT**
- Good reporting & analytical skills
- Experience in using Tally Accounting software
- MS-Office and computer literacy are essential
- Ability to work under minimum supervision
- Above 10 years' experience in accounting

**GRAPHIC DESIGNER**
- Experience in **Photoshop, Adobe Illustrator, CorelDraw & 3D Max** advantages
- Have current knowledge of latest design trends
- Be able to multi-task and have strong interpersonal skills
- Willing to work in flexible working hours and tight deadlines

**Note:-**
➢ **Excellent Collaboration - Verbal and Written Communication Skills in Tamil, English and Sinhala (Especially Tamil language).**
➢ **Candidates who reside in, or close to, Colombo would be an added advantage.**

**DWARAKA INDUSTRIES INDIA (PVT) LTD**
No. 95, Sri Kathiresan Street, Colombo-13
Phone: +94 112 333333/84/85 Mobile: +94 773 550558/0777427960
E-mail: dwarakainduslanka@gmail.com

*Send your CV to* - **dwarakainduslanka@gmail.com**





# பொருளாதார நெருக்கடியை முகாமைத்துவம் செய்தல்; வெற்றிகளும் தொலைநோக்கும்



## 1. பின்னணி

நான் பிரதமராகவும், நிதி அமைச்சராகவும் 2022 மே மாதம் பதவியேற்ற போது, இலங்கை சுதந்திரத்துக்குப் பின்னரான வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டிருந்தது.

பயன்படுத்தக்கூடிய அந்நிய செலாவணி கையிருப்பு பூச்சிய மட்டத்தை அடைந்தமையாலும், அத்தியாவசியப் பொருட்களுக்கு நிதியளிக்கக் கூட அந்நிய செலாவணியைப் பெறுவது கடினமானதாலும் உலகளாவிய ரீதியில் கடனை பெற்றுக் கொள்ளும் போது இறுதித் தீர்வாக சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதிகளோடு, கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படும் வரை, 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக கடன் சலுகைக் காலம் பிரகடனப்படுத்தப்பட்டது.

வர்த்தகத்துக்கான மிகக் குறைந்த நிதியுடன், சர்வதேச நிதியுதவிக்கான அணுகலை இழக்கும் அளவுக்கு நாட்டின் கடன் மதிப்பீடு “ கடன் திரும்பப்பெற முடியாத “ நிலைமைக்கு தள்ளப்பட்டது. 2019ஆம் ஆண்டு நவம்பரில் அறிவிக்கப்பட்ட எப்போதும் இல்லாத வகையிலான கடுமையான மற்றும் சிக்கலான வரிக் குறைப்புகளின் நேரடி விளைவாக 2019ஆம் ஆண்டின் பிற்பகுதியில் கடன் தரப்படுத்தல் விசேடமாக ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர் மூன்று கடன் தர மதிப்பீட்டு நிறுவனங்களால் இலங்கையின் இறையாண்மைக் கடன் தர மதிப்பிறக்கம் பல தடவைகள் மேற்கொள்ளப்பட்டன.

மிக நீண்ட காலமாக அமெரிக்க டொலருக்கான நாணயமாற்று விகிதம் ரூ.200 ஆக நீடித்தது. எந்தவொரு பாதுகாப்பு செயற்பாடுகளும் இல்லாமல் நாணயத்தை மிதக்க விட்டதன் காரணமாக அமெரிக்க டொலர் மிக வேகமாக சுமார் 365 ரூபா வரை அதிகரித்தது.

பயன்படுத்தக்கூடிய கையிருப்புக்கள் இல்லாமை மற்றும் வரையறுக்கப்பட்ட சந்தை நிதியுதவி காரணமாக, எரிபொருள், சமையல் எரிவாயு, மருந்துகள் மற்றும் உரங்கள் போன்ற அத்தியாவசிய இறக்குமதிப் பொருட்களின் கடுமையான பற்றாக்குறையை நாடு எதிர்கொண்டது. இந்தப் பற்றாக்குறையுடன் 80 சதவீதமளவிலான செலாவணி விகித தேய்மானம் காரணமாக, இறக்குமதி பொருட்களின் விலை அதிகரித்து, பொருட்களின் விலை அதிகளவில் உயர்ந்தது.

எரிபொருள் பற்றாக்குறை, நீண்ட கால மின்வெட்டு, இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகள் இல்லாததால் விநியோகச் சங்கிலிகள் சீர்குலைவு, என்பனவற்றின் காரணமாக 2022ல் பொருளாதாரம் 7.8 சதவீதமாக கடுமையாக வீழ்ச்சியடைந்தது.

உரப் பற்றாக்குறை காரணமாக விவசாய வளங்களுக்கு ஏற்பட்ட பற்றாக்குறை மற்றும் 2022ல் உணவுப் பணவீக்கம் நூற்றுக்கு 95 சதவீதத்தைத் தாண்டியதன் விளைவாக உணவுப் பொருட்களின் விலை கடுமையாக அதிகரித்தது.

2019ஆம் ஆண்டின் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட வரிக் குறைப்பு காரணமாக, 2021ஆம் ஆண்டில் மொத்த தேசிய உற்பத்தியில் (மொ.தே.உயில்) அரசாங்க வருவாய் 8.3 சதவீதமாகக் குறைந்ததால், அரச நிதித்துறை குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொண்டது. மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக, இது உலகின் மிகக் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் ஒன்றாக இலங்கையை மாற்றியது. இதன் காரணமாக, ஜூன் 2022 இறுதிக்குள், நிலுவையில் உள்ள பில்களின் மதிப்பு 214 பில்லியன் ரூபாவாக அதிகரித்தது. 2021ஆம் ஆண்டில் வரவு செலவு பற்றாக்குறை, மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக நூறுக்கு 11.7 சதவீதமாக வளர்ச்சியடைந்ததோடு, ஆரம்பப் பற்றாக்குறை மொ. தே. உ சதவீதமாக 5.7 சதவீதம் வரை அதிகரித்தது.

வெளிநாட்டு நிதியுதவிக்கான அணுகல் இழப்பு காரணமாக, வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை முற்றிலும் உள்நாட்டு ஆதாரங்களால் ஈடுசெய்யப்பட்டது. வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையின் பெரும் பகுதிக்கு இலங்கை மத்திய வங்கி நிதியளிக்க வேண்டியிருந்தது. ஏழை மற்றும் விளிம்புநிலையில் வாழ்பவர்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. செப்ரெம்பர் 2022 இல் பணவீக்கம் 70 சதவீதத்தை எட்டியது, அவ்வாறு பணவீக்கம் அதிகரிப்பதற்கு மத்திய வங்கியிடமிருந்து கடனைப் பெற்று வரவு செலவுத் திட்ட பற்றாக்குறைக்கு நிதியளித்தமை பாரியளவில் காரணமாகியது. இவை கடுமையான பொருளாதார சிக்கல்கள், அமைதியின்மை மற்றும் அரசியல் கொந்தளிப்புக்கு வழி வகுத்தது. முக்கியமாக மேற்கூறியவற்றால், பரவலான எதிர்ப்புகள் எழுந்தன, மேலும் நாட்டின் எதிர்காலத்துக்கான தெளிவான பாதையோ நம்பிக்கையோ காணப்படவில்லை.

## 2. மறுசீரமைப்பு நடவடிக்கைகள்

இந்தப் பின்னணியில், லெபனான் போன்ற நாடுகளைப் போலவே, இலங்கையும் பொருளாதார மற்றும் சமூக வீழ்ச்சியின் விளிம்பில் இருந்தது. பொருளாதாரத்தின் பலவீனமான நிலைமைகள் மேலும் மோசமடைவதை தடுக்க அரசாங்கம் மற்றும் மத்திய வங்கியால் அவசர மற்றும் ஒருங்கிணைந்த கொள்கை ரீதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய தேவையை ஏற்படுத்தியது. மறுசீரமைப்பு நடவடிக்கைகள் குறுகிய காலத்தில் பெரும்பாலான குடிமக்களை பாதிக்கும் என்றாலும், தனிநபர்கள் மற்றும் வணிகங்களுக்கு ஏற்படும் விளைவுகள், பொருளாதார ஸ்திரமின்மையின் அபாயகரமான விளைவுகளான அதிக பணவீக்கம், பொருளாதார தேக்கநிலை மற்றும் உலகின் பிற பகுதிகளிலிருந்து ஒட்டுமொத்தமாக தனிமைப்படுத்தப்படுவதை விட மோசமாக இருக்கும். பொருளாதாரம் மற்றும் பொருளாதாரத்தின் செயல்பாட்டாளர்களைப் பாதுகாக்க அந் நடவடிக்கைகள் அத்தியாவசியமானவை.

அதனால், விசேடமாக 2022 ஜூலை 20 முதல் ஆரம்பமான எனது ஜனாதிபதி பதவி காலத்தின் புதிய நிர்வாகம், பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்கவும், நாட்டை வழமை நிலைமைக்கு கொண்டு வரவும் மற்றும் வளர்ச்சிப் பாதையில் வழிநடத்தவும் தொடர்ச்சியான மறுசீரமைப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்தது.

அரச நிதி நடவடிக்கைகள்: அரச நிதி ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்க பல வரிச் சீர்திருத்தங்கள் மற்றும் செலவு முகாமைத்துவ நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டன. வரிச்சுமையை தாங்கக் கூடியவர்களால் அதிகமாக சுமக்கக்கூடியவாறு, வருமான வரியை இலக்காகக் கொண்டு வரி விகிதங்கள் மற்றும் வரம்புகள் படிப்படியாக மறுசீரமைக்கப்பட்டன.

### முடிவுகள்:

2022ல் மொத்த தேசிய உற்பத்தியில் முதன்மைப் பற்றாக்குறை 3.7 சதவீதமாகக் குறைக்கப்பட்டது (இலங்கை பெட்ரோலிய கூட்டுத்தாபனம் திறைசேரிக்கு நிலுவைத் தொகையைச் செலுத்தியிருந்தால் இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.7 சதவீதமாக இருந்திருக்கும்). 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் இலங்கை ஒரு முதன்மை வரவு செலவுத் திட்ட அதிகரிப்பை அடைய முடிந்தது, இது சர்வதேச நாணய நிதியத்தின் கட்டமைப்பு அளவுகோல் இலக்கை விட குறிப்பிடத்தக்க செயல்திறன் கொண்டது. இதனை அடைவதற்கு 90 நாட்களுக்கும் மேலாக நிலுவையில் உள்ள பில்கள் எவையும் இல்லாமல் இருப்பது இங்கு மிக முக்கியமான காரணியாகும்.

### நிதிக்கொள்கை:

விலை ஸ்திரத்தன்மை மற்றும் வெளிநாட்டுத் துறையில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த பொருளாதாரத்தில் மொத்த தேவை மற்றும் இறக்குமதி தேவையை கட்டுப்படுத்த வட்டி விகிதங்கள் உயர்த்தப்பட்டன. முதன்மை கையிருப்பு தொகையின் வளர்ச்சியுடன், 2023 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் மத்திய வங்கி நிதியம் மூலம் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை நிதியுதவியை படிப்படியாக வெளியேற்றியதன் மூலம், 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதத்துக்குள் அரசாங்கத்திற்கான நிகரக் கடன் தொடர்பான சர்வதேச நாணய நிதியத்தின் கட்டமைப்பு வரையறைகளை இலங்கை அடையக்கூடியதாக இருந்தது.

### முடிவுகள்:

நிதிக் கொள்கை முடிவுகளில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டிக்கமைய பணவீக்கம் செப்ரெம்பர் 2022இல் அதிகபட்சமாக 70 சதவீதத்திலிருந்து ஜூலை 2023 இல் ஒற்றை இலக்க விகிதமான 6.3 சதவீதமாகக் குறைந்தது. ஆகஸ்ட் 2022 இல் 90 சதவீதத்துக்கும் மேல் இருந்த உணவுப் பணவீக்கம், ஜூலை 2023 இல் 1.4 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. அதன்படி, 2022ம் ஆண்டு, வட்டி விகிதமும் குறைந்தது. செப்ரெம்பரில் 30.5 சதவீதமாக இருந்த ஓராண்டு திறைசேரி உண்டியல் விகிதம் ஜூலை 2023க்குள் 14 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. மத்திய வங்கியின் கையிருப்புநிலை படிப்படியாக பலப்படுத்தப்பட்டு, அதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பணவீக்க அழுத்தங்களை குறைக்க முடிந்துள்ளது.

### மின் வலுத் துறை:

எரிபொருளுக்கான விலை மாதிரியை நடைமுறைப்படுத்துவது மே 2022 முதல் தொடங்கியது. 2014 முதல் மின்கட்டணத்துக்கு எந்த திட்டமும் உருவாக்கப்படவில்லை என்பதால் 2022 ஆகஸ்ட் மாதம் முதல் மின்சாரத்திற்கான செலவு அடிப்படையிலான விலையும் அறிமுகப்படுத்தப்பட்டது. பல தசாப்தங்களாகப் பின்பற்றப்பட்டு வந்த எரிசக்தி விலை நிர்ணயம் அரசியலாக்கப்படுவதைத் தடுப்பதற்கு இது ஒரு மிக முக்கியமான நடவடிக்கையாகும், முக்கியமாக அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் (பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சார சபை) நிதி நிலையை பாதிப்புக்கு உள்ளாக்கும் மற்றும் அதிகரித்த கொடுப்பனவுகளுக்கு பங்களிக்கும் வளமற்ற மற்றும் ஸ்திரமற்ற விலை நிர்ணய நடைமுறைகள் மாற்றியமைக்கப்பட்டன.

### முடிவுகள்:

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சார சபை ஆகியவற்றின் இருப்புநிலை மறுசீரமைப்பு காரணமாக, இரு நிறுவனங்களின் நிதி நிலை வழமைக்கு திரும்பியுள்ளது. இரு நிறுவனங்களும் இப்போது வாடிக்கையாளர்களுக்கு தடையின்றி தொடர்ந்து சேவையை வழங்க முடிந்துள்ளது. மேலும் செலவு மேற்கோள் காட்டப்பட்ட விலைச் சூத்திரம் மூலம் உலகளாவிய எரிசக்தி விலைகுறைப்பின் பயனை தேசிய நுகர்வோருக்கு பெற்றுக்கொடுக்க முடிந்துள்ளது.

### வெளிநாட்டுப் பிரிவு:

வரையறுக்கப்பட்ட அந்நியச் செலாவணி வருவாய் அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக, இறக்குமதிகள் மற்றும் இறக்குமதிக்கான சில கட்டண முறைகளுக்கு தற்காலிகமாக கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. உலகப் பொருளாதாரம் பலவீனமடைந்து வருகின்ற போதிலும், ஏற்றுமதி சந்தையைத் தக்கவைக்க அத்தியாவசிய மூலப் பொருள் உள்ளீடுகளை மட்டுமே வழங்கி ஏற்றுமதியாளர்களுக்கு முன்னுரிமை அளித்தது. நம்பிக்கை வளர்ந்தவுடன், இறக்குமதி கட்டுப்பாடுகள் படிப்படியாக தளர்த்தப்பட்டன, அந்நிய செலாவணி வரவுகளை முறையான வங்கி முறை மூலம் திரும்பப் பெற ஊக்குவித்து, அந்நியச் செலாவணி பணப்புழக்கத்தை மேம்படுத்தியது.

### முடிவுகள்:

அந்நியச் செலாவணியின் பணப்புழக்கம் அதிகரித்ததாலும், இறக்குமதி அதிகரித்ததாலும் அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு குறைக்கப்பட்டது. தற்போது அமெரிக்க டொலர் 315 ரூபாவை எட்டுவதற்கு முன்னர் ஜூன் மாதத்தில் அமெரிக்க டொலர் ரூ. 290 ஐ தொட்டதால் ரூபாயின் மதிப்பு வலுப்பெறத் தொடங்கியது. இது இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் விலை குறைவதற்கு வழி வகுப்பதோடு, இனி வரும் மாதங்களில் பொதுப் பொருளாதாரத்திலும் சாதகமான விளைவை ஏற்படுத்தும்.

### கடன் மறுசீரமைப்பு:

வெளிநாட்டுக் கடனை மறுசீரமைக்கும் நோக்கில் உத்தியோகபூர்வமாக கடனளிப்பவர் மற்றும் வணிகக் கடன் வழங்குநர் ஆகியோருடன் பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டன. மார்ச் 2023 இல், அனைத்து உத்தியோகபூர்வ கடனாளிகளின் நிதி உறுதிப்பாட்டிற்கு உட்பட்டு, இலங்கையுடன் விரிவாக்கப்பட்ட கடன் வசதித் திட்டத்திற்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை ஒப்புதல் அளித்தது. கடன் கொடுத்தவர்களுடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. 28 ஜூன் 2023 அன்று அமைச்சர்கள் குழு மற்றும் 01 ஜூலை 2023 அன்று பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு கடன் மேம்படுத்தல் திட்டம் 04 ஜூலை 2023 அன்று தொடங்கப்பட்டது, இது நிதி அமைப்பின் ஸ்திரத்தன்மையைப் பாதுகாத்ததோடு அதே வேளை கடன் மறுசீரமைப்புக்கான பொறுப்பும் பகிரப்பட்டது.

### முடிவுகள்:

உள்நாட்டுக் கடன் மேம்படுத்தலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரியானது நிதிச் சந்தை நம்பிக்கையை மீட்டெடுத்துள்ளது, இது பணவீக்கத்தின் வீழ்ச்சிக்கு ஏற்ப குறிப்பிடத்தக்க வட்டி விகிதக் குறைப்புகளை அனுமதிக்கிறது. செப்ரெம்பர் 2022 இல் ஓராண்டு திறைச்சேரி பில்கள் 30.5 சதவீதமானதோடு ஜூலை 2023 க்குள் அதன் விகிதம் 14 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. வட்டி விகிதங்களைக் குறைப்பதன் காரணமாக, வட்டி செலுத்துதலுக்கான செலவைக் குறைப்பது உட்பட முழுப் பொருளாதாரத்தின் செலவையும் அரசாங்கம் குறைக்க முடியும், மேலும் இது ஏனைய முன்னுரிமை கொடுப்பனவுகளுக்கு பொது நிதி ஆதாரங்களைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளை வழங்குகிறது. அதன் விளைவாக வட்டி விகிதங்கள் குறைக்கப்படுவது, முதலீடு மற்றும் நுகர்வை மீண்டும் ஊக்குவிப்பதன் மூலம் பொருளாதார மீட்சிக்கு இன்றியமையாத ஊக்கியாக வட்டி வீத குறைப்பு செயல்படும். இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயல்முறை 2023 ஆம் ஆண்டின் 4 ஆம் காலாண்டில் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இது பொது நிதி நடவடிக்கைகள் மற்றும் அந்நிய செலாவணி சந்தையில் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.

### வெளிநாட்டு நிதி:

இலங்கைக்கு வெளிநாட்டு நிதி கிடைக்காததால், உரம், மருந்துகள் மற்றும் சமூகப் பாதுகாப்பு போன்ற குறுகிய காலத் தேவைகளைப் பூர்த்தி செய்ய நீண்ட கால நிதியை வழங்குவதற்கு அரசாங்கம் பலதரப்பு நிதி நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியது. இது மிகவும் முக்கிய துறைகளுக்கு மானிய நிதியைப் பெறுவதற்கான வாய்ப்புகளை வழங்கியுள்ளது. உலகளாவிய சந்தைக்கான அணுகல் இலங்கைக்கு இல்லாத காரணத்தால், வெளிநாட்டு நிதியுதவியை மீட்டெடுப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் அணுகல் மற்றும் கடன் மறுசீரமைப்பு திட்டம் இன்றியமையாததானது.

### முடிவுகள்:

மார்ச் 2023 இல், சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகக் குழுவின் ஒப்புதலுடன், இலங்கை சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 330மில்லியன் அமெரிக்க டொலர்களை அத்தியாவசிய நிதி வசதியாகப் பெற்றது. ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 350 மில்லியன் மற்றும் உலக வங்கியிடமிருந்து 700 மில்லியன் அமெரிக்க டொலரும் பெறப்பட்டுள்ளது. உள்நாட்டு நாணய நிதியத்தின் நிர்வாகக் குழுவின் ஒப்புதல் மற்றும் கடன் மறுசீரமைப்பில் நேர்மறையான நடவடிக்கைகள் காரணமாக, கடந்த ஆண்டு முதல் தற்போது வரை 200 பில்லியன் ரூபா திறைசேரி பிணைமுறி மூலம் குறுகிய கால வெளிநாட்டு முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. ஜூன் 2023க்குள், உரங்களுக்கான நிதி போன்று உணவு விநியோகத்தை மீட்டெடுக்க எடுக்கப்பட்ட அத்தியாவசிய நடவடிக்கைகளால், உணவுப் பணவீக்கம் 95 சதவீதத்தில் இருந்து 4.1 சதவீதமாகக் குறைந்தது.

### எதிர்கால நோக்கு

கடந்த ஆண்டு முழுவதும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அடிப்படை பொருளாதார ஸ்திரத்தன்மையை பரந்த அளவில் நிலைநிறுத்த உதவியது மேலும் அந்த ஸ்திரத்தன்மையை முழுமையாக நிலைநிறுத்தி பொருளாதாரத்தை மீட்சிக்கான பாதையில் கொண்டு சென்று வளர்ச்சியை அடைய நீண்ட காலம் எடுக்கும். அதற்கு, சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தின் கீழ் ஒப்புக் கொள்ளப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்களை மாற்றியமைப்பது அவசியம். வலுவான வருவாய் உருவாக்க நடவடிக்கைகளின் மூலம் முதன்மை வரவு செலவு பற்றாக்குறையை பராமரிப்பது மற்றும் செலவின முகாமைத்துவத்தில் கடுமையான ஒழுக்கத்தை பேணுவது ஆகியவை இதில் அடங்கும். இந்த முக்கிய குறிகாட்டியிலிருந்து விலகல் சாத்தியம் இல்லை என்பதை வலியுறுத்த வேண்டும். எரிசக்தி விலை நிர்ணயத்தை தொடர்ந்து பேணுவதன் மூலம் செலவினம் காட்டப்பட்டுள்ளது, குறிப்பாக இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் திறைசேரியின் மூலம் நிதியை ஈடுசெய்யும் இழப்புக்களை ஏற்படுத்தாமல் நிலைத்தன்மையை பேணுவதற்கான நெறிமுறைகள் கட்டாயம் பேணப்பட வேண்டும்.

இன்னும் சில மாதங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர் திருத்தங்கள் பல காணப்படுகின்றன. மத்திய வங்கிச் சட்டம், வங்கிச் சட்டத்திற்கான திருத்தம் மற்றும் ஊழல் தடுப்புச் சட்டங்கள் ஆகியவற்றில் திருத்தங்கள் செய்வதற்கு நாடாளுமன்றம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. மேலும், பொது நிதி முகாமைத்துவ சட்டம் மற்றும் ஒரு சுயாதீன கடன் முகாமைத்துவ நிறுவனத்தை நிறுவுவதற்கான சட்டம் நடுத்தர மற்றும் நீண்ட காலத்திற்கு பொது நிதி மற்றும் பொதுக் கடனை நிலைநிறுத்த உதவும். 2022 ஆம் ஆண்டில் இலங்கை எதிர்கொண்டது போன்ற ஒரு நெருக்கடிக்குத் திரும்புவதைத் தடுக்க, இந்த சட்டங்கள் தயாரிக்கப்படுவதோடு. எதிர்காலத்தில் அச் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

### கடன் அல்லாத பெறுகை

இலங்கை அந்நிய கடன் பிரச்சினையிலிருந்து வழமைக்கு கொண்டு வருவதற்காக சார்பு பொருளாதார நிலையான தன்மையை அடைவதற்கான நடவடிக்கை மற்றும் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைக்கு உதவுவதோடு, கடன் அல்லாத அந்நிய செலாவணி ஈட்டுதல் நிலையான அபிவிருத்திக்கு நீண்ட கால தீர்வாகும், அதேவேளையில் வெளிநாட்டுக் கடன் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இலங்கைக்கான பூரண பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் கடன் மறுசீரமைப்பை அடைவதற்கான செயல்முறையை ஆதரிக்கிறது. இது இறக்குமதி மற்றும் வெளிநாட்டுக் கடன் சேவைகளுக்கான கொடுப்பனவுகள் போன்ற அந்நியச் செலாவணி வெளியேற்றத்திற்கு தொடர்ந்து நிதியளிக்க உதவும். பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி (சுற்றுலாத் தொழில் மற்றும் பணம் அனுப்புதல் உட்பட) மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு ஆகியவை கடன் அல்லாத பெறுகையில் அடங்கும்.

வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஈர்ப்பதற்கும் ஏற்றுமதிகளை உருவாக்குவதற்கும் இலங்கையின் உற்பத்திச் சந்தையானது அதன் சனத்தொகையான 22 மில்லியனுக்கு அப்பால் விரிவுபடுத்தப்பட வேண்டும். இதற்காக, மூலோபாய பங்குதாரர்களுடன் வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொள்ள அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இங்கு, இந்தியா, சீனா மற்றும் தாய்லாந்து ஆகியவை முதன்மையாகக் கருதப்படுகின்றன, மேலும் கிழக்கு ஆசியாவின் விரிவாக்கப்பட்ட சந்தையை அணுகுவதற்காக அரசாங்கம் பிராந்திய விரிவான பொருளாதார கூட்டாண்மையில் இணையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது இறுதியில் இலங்கை முதலீட்டாளர் ஒருவருக்கு 3 பில்லியனுக்கும் அதிகமான நுகர்வோர் கொண்ட சந்தைக்கு ஏற்றுமதி செய்ய உதவும்.

மூலோபாய சந்தைகளை அணுகும் அதே வேளையில் இலங்கையின் இறக்குமதிகளை படிப்படியாக தாராளமயமாக்குவதும் அவசியமாகும். தற்போது இறக்குமதியின் மீது மிக அதிக சுங்க வரிகள் மற்றும் சுங்க வரியல்லாத ஏனைய இறக்குமதியின்போது செலுத்தப்படும் வரி விதிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், இந்த கட்டண நீக்கம் செயல்முறை கட்டம் கட்டமாக செயல்படுத்தப்படும், இது உள்நாட்டு தொழில்துறைகளில் ஈடுபட போதுமான நேரத்தை அளிக்கும்.

கடந்த ஆண்டு வரவு செலவு திட்ட உரையில் ஒரு வர்த்தக சரிசெய்தல் கட்டமைப்பு முன்மொழியப்பட்டது மற்றும் தாராளமயமாக்கல் செயல்பாட்டில் சரிசெய்தல் செலவுகளால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க இது அவசியம். மேலும், ஏற்றுமதி அபிவிருத்தி சபை, முதலீட்டு சபை போன்ற நிறுவனங்களை இணைப்பதன் மூலம் நவீன பொருளாதாரத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் மிக விரைவாக செயல்படக்கூடிய ஒரு நிறுவனத்தை உருவாக்குவதற்காக வர்த்தகம் மற்றும் முதலீட்டு செயல்முறையை ஆதரிக்கும் நோக்கத்துடன் நிறுவன கட்டமைப்பை சீர்திருத்துவதில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.




# புலம்பெயர் இலங்கைத் தொழிலாளர்களின் நல்வாழ்வுக்கு அரசாங்கம் முன்னுரிமை

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவுடன் சந்திப்பு



**புலம்பெயர்ந்த இலங்கைத் தொழிலாளர்களின் நல்வாழ்வு தொடர்பில் அரசாங்கம் முன்னுரிமை அளித்திருப்பதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார். பயிற்சியளிக்கப்பட்ட தொழிலாளர்களைப் பல்வேறு உலக நாடுகளுக்கு அனுப்புவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இது தொடர்பில் அமைச்சர் எமக்குப் பேட்டி அளித்தார்.**

**கே: வெளிநாடுகளில் உள்ள இலங்கை புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் நலன்புரி மற்றும் அவர்களின் சிகிச்சைகள் தொடர்பில் வெளியாகும் தகவல்கள் கவலையை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளன. இந்த நிலைமைகளை நிவர்த்தி செய்து அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த எவ்வாறான நடவடிக்கைகளை எடுத்துள்ளீர்கள்?**

பதில்: எங்கள் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் நல்வாழ்வுக்கு முன்னுரிமை அளிக்க குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். கடந்த காலத்தைப் போல் அல்லாமல், தற்போது எமது நாட்டின் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளின் அடிப்படையில் தொழிலாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புகிறோம். வீட்டுப் பணிகளுக்காக ஊழியர்களை உள்ளடக்கிய விரிவான காப்புறுதிக் கொள்கையை நாங்கள் செயற்படுத்தி ஏனைய பிரிவினருக்கும் இதனை விரிவுபடுத்தியுள்ளோம்.

மேலும், பணியாளர்கள் நன்கு பயிற்சியளிக்கப்பட்டு சிறந்த உடல் ஆரோக்கியத்துடன் இருப்பதை உறுதி செய்வதற்காக, கட்டாயப் பயிற்சி மற்றும் புறப்படுவதற்கு முந்திய சுகாதாரப் பரிசோதனைகள் என்பன முன்னெடுக்கப்படுகின்றன. சட்டவிரோத குடியகல்வு மற்றும் மனிதக்கடத்தல் ஆகியவை சவால்மிக்கவை என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். இந்த சவால்களுக்கு முகங்கொடுக்க பாதுகாப்பு அமைச்சின் ஒத்துழைப்புடன் ஒரு சிறந்த செயலணியொன்றை நிறுவியிருப்பதுடன், இதுபற்றிய விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் அதிகரித்துள்ளோம்.

**கே: புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகைளில் மிகவும் அதிகரித்துக் காணப்படுகிறது. இந்த அதிகரிப்பைக் கருத்தில் கொண்டு அவர்களைப் பாதுகாப்பதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து விளக்க முடியுமா?**

பதில்: புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள போதிலும், இந்தப் பருவத்தில் குறைந்த எண்ணிக்கையிலான முறைப்பாடுகளே காணப்படுகின்றன. எனது பதவிக் காலத்தில், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் எழுப்பும் எந்தவொரு கவலையையும் உடனடியாக நிவர்த்தி செய்வதற்கு முன்னுரிமை அளித்துள்ளேன். ஒவ்வொரு பிரச்சினையையும் நிவர்த்தி செய்வதில் நாங்கள் உறுதியுடன் இருக்கும்போது, சமூக ஊடகங்கள் வேறுபட்ட நிலைப்பாட்டைச் சித்திரிக்க முனைவதால் நாம் எடுக்கும் ஒட்டுமொத்த முயற்சிகளும் சிக்கல்களுக்கு உள்ளாகின்றன.

**கே: தென்கொரியா மற்றும் ஜப்பான் போன்ற வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான புதிய சந்தைகளை இலங்கை ஆராய்ந்து வருகிறது. எமது நாட்டு மக்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குவதில் இந்த முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து கூற முடியுமா?**

பதில்: நிச்சயமாக, வெளிநாட்டு வேலைவாய்ப்புகளைப் பல்வகைப்படுத்துவதற்கான எங்களது முயற்சிகள் உண்மையில் நம்பிக்கைக்குரிய வாய்ப்புகளைத் திறந்துவிட்டன. தென்கொரியாவுடன் இணைந்து, அதற்கான விசா வகையைப் பெற்றுள்ளோம், இது கொரிய நிறுவனங்களை வெளிநாட்டு நிபுணர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு அனுமதிக்கும் குறிப்பிடத்தக்க சாதனையாகும். இது நமது திறமையான பணியாளர்களின் வளர்ந்து வரும் அங்கீகாரத்தை எடுத்துக்காட்டுகிறது.

மேலும், தென்கொரியாவில் விவசாயம், மீன்பிடி மற்றும் கப்பல் கட்டுமானம் போன்ற துறைகளில் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். செழித்து வரும் கப்பல் கட்டுமானத் துறைக்குப் பங்களிக்க தொழிலாளர்களை அதிகம் அனுப்புகிறோம். இதற்கிடையில், ஜப்பானும் வாய்ப்புகளின் கலங்கரை விளக்கமாக உருவெடுத்துள்ளது. சமீபத்திய விஜயத்தின் போது, ஜப்பானிய அதிகாரிகள் கணிசமான எண்ணிக்கையிலான இலங்கைத் தொழிலாளர்களை 100,000 வரை ஆட்சேர்ப்பு செய்வதற்கான தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்தினர். காலப்போக்கில், ஜப்பானுடனான எங்களது ஒத்துழைப்பு விரிவடைந்துள்ளது. இதன் விளைவாக ஜப்பானிய வேலைவாய்ப்பு தேவைகளுக்கு ஏற்ப பயிற்சி மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்தத் தொலைநோக்கு நடவடிக்கையானது அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்குவது மட்டுமன்றி, நமது பணியாளர்களுக்கு அதிக வருமான வாய்ப்புகளையும் உறுதியளிக்கிறது.

ஜப்பானில், நமது இருதரப்பு ஒப்பந்தம் வேலைவாய்ப்புப் பிரிவுகளை அதிகரிக்க வழிவகுத்துள்ளது. நாங்கள் மூன்று வகைகளிலிருந்து நான்காக மாறியுள்ளோம். மேலும் எதிர்வரும் ஆண்டில் ஏழு வகைகளை இலக்காகக் கொண்டு மேலும் பல்வகைப்படுத்த விரும்புகிறோம். இந்த முற்போக்கான அணுகுமுறையானது பல்வேறு வழிகளில் நமது பிரஜைகளை வலுப்படுத்தும் என்பதில் உறுதியான நம்பிக்கை உள்ளது. மேலும், மொழியியல் புலமையின் முக்கியத்துவத்தை நாங்கள் அங்கீகரிக்கிறோம். ஜப்பானியர்களின் வேலைவாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ள, இலங்கையர்களிடையே ஜப்பானிய மொழித்திறனை மேம்படுத்துவதற்கான கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளோம். இது பாடசாலை மட்டத்திலிருந்தோ அல்லது தொழில்பயிற்சி மையங்கள் மூலமாகவோ தொடங்கப்படலாம்.

**கே: புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் நலனை உறுதி செய்வதற்காக இலங்கை பல்வேறு நாடுகளுடன் இருதரப்பு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது. வெளிநாட்டில் உள்ள எங்கள் தொழிலாளர்களின் உரிமைகளை நிலைநிறுத்துவதில் இந்த ஒப்பந்தங்கள் செலுத்தக் கூடிய தாக்கங்களைக் கூற முடியமா?**

பதில்: சந்தேகத்திற்கு இடமின்றி, இருதரப்பு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டிருப்பது புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் நலனைப் பாதுகாப்பதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமாக அமைந்துள்ளது. இந்த ஒப்பந்தங்கள், பெரும்பாலும் தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், வெளிநாட்டு நாடுகளில் நமது தொழிலாளர்களுக்கு ஆதரவான சூழலை உறுதி செய்வதற்கும் அடித்தளத்தை ஏற்படுத்துகிறது. எங்களின் செயல்திறன்மிக்க அணுகுமுறை தென்கொரியா, ஜப்பான் மற்றும் இஸ்ரேல் போன்ற நாடுகளுடன் குறிப்பிடத்தக்க ஒப்பந்தங்களுக்கு வழிவகுத்தது. இந்த ஒப்பந்தங்கள் தொழிலாளர் பாதுகாப்பு முதல் நாடு திரும்புதல் வரை பல பரிமாணங்களை உள்ளடக்கியது. இந்த முக்கியமான உடன்படிக்கைகளை நிறுவுவதில் நமது அமைச்சு உறுதிபூண்டுள்ள நிலையில், வெளிவிவகார அமைச்சிலிருந்து சில தாமதங்கள் ஏற்பட்டுள்ளன என்பதை நான் ஒப்புக்கொள்ள வேண்டும்.

இந்த தாமதங்கள் இருந்தபோதிலும், எங்கள் முயற்சிகள் உறுதியானவை. எங்கள் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதை நெறிப்படுத்தும் ஆற்றலைக் கொண்ட அரசாங்கங்களுக்கு இடையிலான ஒப்பந்தங்களை நாங்கள் வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளோம். இது அவர்களின் வெளிநாட்டு வேலையின் போது அவர்களின் பாதுகாப்புக்கு உதவுவது மட்டுமல்லாமல் அவர்களின் ஒப்பந்தங்கள் முடிந்ததும் அவர்கள் சுமுகமாக வீடு திரும்புவதற்கும் உதவுகிறது.

நாங்கள் ஏற்படுத்திய இருதரப்பு ஒப்பந்தங்கள் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் நல்வாழ்வுக்கான விரிவான விடயங்களை உள்ளடக்கியுள்ளன. தொழிலாளர் நிலைமைகள், உடல்நலம், சட்டப் பாதுகாப்புகள், ஊதியங்கள் மற்றும் சமூக நலன்கள் தொடர்பான விஷயங்கள் இவற்றில் அடங்கும்.

**கே: முறைசாரா தொழிலாளர்துறை இலங்கையின் தொழிலாளர் தொகுப்பில் ஒரு முக்கிய பகுதியாகும். முறைசாரா தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சவால்களைச் சமாளிக்க உங்கள் அமைச்சு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?**

பதில்: உண்மையில், முறைசாரா தொழிலாளர்துறை நமது நாட்டின் பொருளாதார கட்டமைப்பிற்கு இன்றியமையாதது. இந்தத் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு முகங்கொடுப்பதுடன் தொழிலாளர்களைக் கண்ணியத்துடன் வலுப்படுத்தவும் நாம் உறுதிபூண்டுள்ளோம். எங்கள் முக்கிய முடிவுப் பகுதிகளை நாங்கள் மூலோபாய ரீதியாக கோடிட்டுக் காட்டியுள்ளோம், மேலும் துல்லியமாகவும் குறிக்கோளுடனும் இந்த நோக்கங்களை நோக்கிச் செயல்படுகிறோம்.

தொழிலாளர் கண்ணியம் என்ற கருத்து நமது அணுகுமுறையின் மையத்தில் உள்ளது. ஒவ்வொரு தொழிலும் கண்ணியத்திற்கு தகுதியானவை என்று நாங்கள் நம்புகிறோம். மேலும் இந்தக் கொள்கை முறைசாரா தொழிலாளர்களை மேம்படுத்துவதற்கான எங்கள் முயற்சிகளுக்கு வழிகாட்டுகிறது. முறைசாரா மற்றும் முறையான வேலைவாய்ப்பு கட்டமைப்புகளுக்கு இடையே உள்ள இடைவெளியைக் குறைத்து, அனைத்து வகையான உழைப்பும் மதிக்கப்படும் சூழலை உருவாக்குவதே எங்கள் குறிக்கோள்.

இதை அடைய, நாங்கள் முக்கியமான நடவடிக்கைகளை செயல்படுத்துகிறோம். இது தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல், சமூக நலன்கள் மற்றும் நீண்ட கால நிதிப் பாதுகாப்பைப் பெறவும் உதவுகிறது. அனைத்துத் தொழில்களிலும் உள்ள தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான விதிமுறைகளையும் சட்டவிதிகளையும் நாங்கள் மேம்படுத்தி வருகிறோம். உதாரணமாக, வீட்டு வேலைகளில் கூட, வீட்டுப் பணியாளர்களின் நல்வாழ்வு மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக ஒரு பயிற்சியாளர் உரிமத் தேவையை நாங்கள் அறிமுகப்படுத்தியுள்ளோம்.

**பயிற்சியளிக்கப்பட்ட தொழிலாளர்களை உலகின் பல நாடுகளுக்கும் தொழில்வாய்ப்புக்கு அனுப்ப அரசு முயற்சி**

**கே: ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து பலர் அரசாங்கத்தில் இணைவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து பல ஊகங்கள் உள்ளன. எதிர்காலத்தில் அத்தகைய மாற்றம் ஏற்படுமா?**

பதில்: உண்மையில், ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து அரசாங்கத்திற்கு செல்வதென்பது கணிசமான கவனத்தை ஈர்த்த ஒரு விடயம். இந்த மாற்றம் உடனடி மற்றும் எதிர்பார்த்ததை விட விரைவில் நிகழக்கூடும் என்பதை அறிகுறிகள் சுட்டிக்காட்டுகின்றன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விருப்பம் தெரிவிக்கும் போது பல தனிநபர்கள் எமது வரிசையில் இணைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நபர்கள் ஐக்கிய மக்கள் சக்தியுடன் தொழில்நுட்பத் தொடர்பைப் பேணுகின்ற அதேவேளையில், எங்களது நோக்கத்திற்கான அவர்களின் ஆதரவு உறுதியானது என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் அரசாங்கத்திற்கு தங்கள் முழு ஆதரவையும் அளித்து வருகின்றனர். இது மறுசீரமைப்பைக் குறிக்கிறது.



**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விருப்பம் தெரிவிக்கும் பட்சத்தில் பலரும் எம்முடன் இணைந்து கொள்வார்கள்**




# இந்தியாவில் சகலருக்கும் சமமான சட்டத்தை அமுல்படுத்த முயற்சிக்கும் சட்ட ஆணைக்குழு!

திருமணம், விவாகரத்து உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளில் 'ஒரே நாட்டில் ஒரே சட்டம்' இயற்றப்பட வேண்டும் என இந்திய சட்ட ஆணைக்குழு சமீபத்தில் வலியுறுத்தியுள்ளது. குடும்ப பரம்பரை, வாரிசுரிமை, பாதுகாவலர், தத்தெடுப்பு மற்றும் திருமணத்திற்குப் பிந்திய சொத்து ஆகிய முக்கியமான பிரச்சினைகளை உள்ளடக்கிய சமமான சட்ட அமைப்பைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து ஐந்து ஆண்டுகளாக கலந்துரையாடி வருவதைச் சுட்டிக்காட்டிய ஆணைக்குழு, இந்தத் திருத்தங்களைச் மேற்கொள்வது குறித்து கருத்துக்களைக் கேட்டுள்ளது.

பிறமாநிலங்களின் சாதி, மதம், பழைமைவாத பழக்கவழக்கங்களின் அடிப்படையில் பொதுச்சட்டம் தேவையற்றது என்று முடிவெடுத்தால், சட்ட ஆணைக்குழு இந்தத் திட்டத்தை கைவிடலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி போபாலில் பாரதிய ஜனதா கட்சியின் பிரதிநிதிகளைச் சந்தித்த போது "குடும்பத்தில் ஒருவர் ஒரு சட்டத்தையும் மற்றொருவர் மற்றொரு சட்டத்தையும் நம்பினால், அத்தகைய குடும்பம் வாழ முடியுமா?" என்று கேள்வி எழுப்பினார்.

2022 ஆம் ஆண்டு உயர்நீதிமன்றத்திற்கு விடயங்களை தெரிவிக்கையில், திருமணம் மற்றும் சொத்துரிமை தொடர்பான பல்வேறு சட்டங்களை அதிகாரத்துக்கு உட்படுத்தும் முறை மக்களின் ஒற்றுமைக்கு அவமானம் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது

இந்தியத் தலைமைத்துவம் ஒரே சட்டத்துக்கு அங்கீகாரம் பெற ஆசைப்படுவது, அடுத்த வருடம் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் தீர்க்கமான காரணியாக அமையலாம் என இந்திய புத்திஜீவிகள் சுட்டிக்காட்டுகின்றனர். ராஜஸ்தான், மத்திய பிரதேசம், சண்டிகார் மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்களின் முடிவுகள் பா.ஜ.கவின் வெற்றிக்கு சாதகமாக இருக்கும் நிலையில், இந்தியாவை ஒரே சட்டத்தின் கீழ் இணைக்கும் நடவடிக்கை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால், 1989 தேர்தலில் பாரதீய ஜனதா கட்சி மக்களுக்கு அளித்த மூன்று வாக்குறுதிகளில் இதுவும் ஒன்று ஆகும். சமமானன திருமணம், விவாகரத்து, அரசியல் உரிமை சட்டம் நிறைவேற்றப்பட்டால் கட்சியின் வெற்றிக்கு அது வழிவகுக்கும். மற்றைய இரண்டு வாக்குறுதிகளான இராமர் கோவில் கட்டுவது மற்றும் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் மீது 1947 முதல் திணிக்கப்பட்ட சிறப்பு அதிகாரங்களை ரத்து செய்வது ஆகியவை ஏற்கனவே நிறைவேற்றப் பட்டுள்ளன.

ராம் மந்திர் கட்டப்பட்ட பிறகு, இது உலகின் மூன்றாவது பெரிய இந்துக் கோயிலாக மாறும். 1992 இல் இந்துமுஸ்லிம் மோதல்களின் போது இந்து அடையாளம் அழிக்கப்பட்டதோடு இருபத்தேழு ஆண்டுகளுக்குப் பிறகு, இந்திய நீதிமன்றம் அங்கு ஒரு இந்துக் கோவில் நிர்மாணிக்க அனுமதி வழங்கியது. இந்தியாவின் மிகப்பெரிய இராமர் கோயிலை பிரதமர் நரேந்திர மோடி அமைப்பதோடு, உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து இராமாயணம் தொடர்பான காரணிகளை சேகரித்து அங்கு வைக்கவும் பரிந்துரைத்துள்ளார். இலங்கையிலுள்ள சீதா எலியா கோயிலுக்கு அருகிலுள்ள நீர்த்தேக்கத்திலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பாறையை அங்கு வைப்பதற்காக அப்பாறையை இலங்கையும் வழங்கியுள்ளது.

ஏனைய தேர்தல் வாக்குறுதிகள் எவ்வாறு இருந்தபோதிலும், இந்திய பன்மைத்துவ அமைப்புகள் மற்றும் மதத்துறைகள் எழுப்பிய கருத்துகளின்படி, திருமணம் அல்லது விவாகரத்து போன்ற விஷயங்களில் பொதுவான சட்டத்தை அமுல்படுத்துவது எளிதானல்ல. கோவாவில் உள்ள ஒரு மகளிர்குழு ஏற்கனவே இந்தத் திட்டத்திற்கு தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. பிரேரணை கொண்டுவரப்பட்ட போது நடத்தப்பட்ட மக்கள் கணிப்பில் முப்பத்து எட்டு சதவீதமே ஆதரவாக இருந்தது. எதிர்க்கருத்து கொண்ட அரசியல்வாதிகள் "சீர்திருத்தங்கள் தேவைஇ ஆனால் கட்டாய சீருடை அணிவிப்பது போன்றதாக அல்ல" என்று சுட்டிக்காட்டியுள்ளனர். முஸ்லிம் மக்கள் மத்தியிலும் பல்வேறு கருத்துக்கள் எழுந்துள்ளன. இந்தியாவில் அதிக எண்ணிக்கையிலான சாதிகள், பல்வேறு மதங்கள் மற்றும் பல்வேறு மொழி பேசுபவர்கள் உள்ளனர். மேலும் இந்த மக்களிடையே திருமணம் மற்றும் விவாகரத்துக்கான ஒரு பொதுவான சட்டத்தை இயற்றுவது எளிதானதல்ல.

ஒரு பொதுவான சட்டத்தைப் பாதுகாப்பதும் எளிதல்ல. திருமணம், விவாகரத்து, சொத்துரிமை மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு தொடர்பான பல்வேறு சட்டங்களையும் இலங்கை பின்பற்றுகிறது. பொதுச்சட்டத்திற்கு மேலதிகமாக உடரட, தெசவாலயமே, பதிக் போன்ற நடைமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன. இலங்கையின் நீதித்துறை சீர்திருத்தத்தில் முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்து சட்டத்தை எவ்வாறு திருத்துவது என்பது குறித்து ஆராய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டு அதன் அறிக்கைகள் அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன. இங்கு பெண்களுக்கு எதிரான பாரபட்சம் எனக் கருதப்பட்டது.

ஒரு சமூகம் வளர்ச்சியடைந்தவுடன், சில பழங்குடியின வழக்கங்கள் அகற்றப்பட வேண்டும். சமூக ஒற்றுமை தேவை. கணவன் மற்றும் மனைவிக்கு சமஉரிமைகள் மற்றும் மரியாதையை வழங்குவதற்கான திட்டங்களை கற்றோர் சமூகத்தினர் முன்வைக்கின்றனர், ஆனால் இந்த யோசனைகள் பழைமைவாத கட்டமைப்பால் நிராகரிக்கப்படுகின்றன.

விவாகரத்து மூலம் முஸ்லிம் திருமணத்தில் பெண்கள் படும் சிரமங்களைக் கண்டு அதிர்ச்சியடையும் அந்தச் சமூகத்தின் நவீன தலைமுறை, ஆணின் ஆதிக்கத்தை சாதாரண சமூகம் ஏற்காது என்கின்றனர்.

இந்தியாவின் பி.ஜே.பி ஒரு சர்ச்சைக்குரிய படி முன்னேறியுள்ளது மற்றும் ஒரு சிக்கலான சமூகத்தை ஒன்றிணைக்கும் அதன் முயற்சியை பல்வேறு கோணங்களில் ஆய்வு செய்ய வேண்டும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

# இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் உறவுப்பாலமாக இருப்பது இராமாயணமே

## வேலுசாமி இராதாகிருஷ்ணன் எம்.பி.

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் உறவுப்பாலமாக அமைந்திருப்பது இராமாயணமே என, பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

அந்த வகையில் இராவணன் இல்லாவிட்டால், இராமாயணம் இல்லை. இராமாயணம் இல்லாவிட்டால், இராவணன் இல்லை எனத் தெரிவித்த அவர், சீதையை இராவணன் இங்கு கொண்டு வராவிட்டால் இராமாயணத்துக்கும் இலங்கைக்கும் எந்த வித சம்பந்தமும் இல்லாமல் போயிருக்கும் எனத் தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"இராவணன் சம்பந்தப்பட்ட விடயங்களை ஆய்வு செய்யும் போது, இராமாயணத்தையும் ஆய்வு செய்ய வேண்டும். அத்துடன், சீதாஎலிய பகுதியில் பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக வரலாறுகளிலிருந்து எமக்கு அறிந்துகொள்ள முடிகிறது.



அதனால் இராவணனை ஏற்றுக்கொண்டு நாம் நுவரெலியா சீதாஎலிய பகுதியில் சீதைக்காக கோயில் அமைத்துள்ளோம். அந்தப் பகுதியில் யுத்தம் இடம்பெற்றதாகவும் வரலாறுகள் காணப்படுகின்றன. அந்தப் பகுதியிலேயே அனுமான் சீதைக்கு தனது கணையாளியைக் கொடுத்ததாக கதை இருக்கிறது.

அதேபோன்று, அந்தப் பகுதியில் இருக்கும் மண் கறுப்பாக இருப்பதும் ஆய்வுகள் மூலம் தெரிந்துகொள்ளலாம். அந்தப் பகுதியில் அனுமானின் பாதம் பதிக்கப்பட்டிருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது.

இராமர் பிறந்த இடம் அயோத்தி. அயோத்தியில் இருந்துதான் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இங்கு வருவதை காணக்கூடியதாக இருக்கிறது. அதனால் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பாலமாக இருப்பதும் இந்த இராமாயணமே" எனத் தெரிவித்தார்.

## ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக அறிஞர் சங்க பொதுக்கூட்டம்

ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக அறிஞர்கள் சங்கத்தின் பொதுக் கூட்டம், எதிர்வரும் 2023.09.02ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு இலங்கை மன்றக் கல்லாரியின் 3ஆவது கூட்ட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உறுப்பினர்கள் அனைவரும் இதில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக அதன் செயலாளர் தெரிவித்தார்.

## மன்னாரில் வரட்சியான காலநிலை;

# கால்நடை வளர்ப்பாளர்கள், விவசாயிகள் பாதிப்பு

மன்னார் குறூப் நிருபர்

தற்போது மன்னார் மாவட்டத்தில் நிலவிவரும் வரட்சியான காலநிலையைத் தொடர்ந்து விவசாயிகள், கால்நடை வளர்ப்பாளர்கள், தோட்டச் செய்கையாளர்கள் ஆகியோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.



இம்மாவட்டத்தில் கடந்த 6 மாதங்களாக மழை இன்மையால் அங்குள்ள நீர்நிலைகள் வற்றி வருவதுடன், சிறிய குளங்களும் கால்வாய்களும் முற்றாக வரண்டு போயுள்ளன. இன்னும் சில இடங்களில் கிணறுகளிலும் நீர் வற்றிப் போயுள்ளது.

அத்துடன், மாந்தை பிரதேசத்தில் சிறுபோகச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் நெற்செய்கை கருகி பாதிக்கப்பட்டுள்ளதுடன், கத்தரி, கச்சான் போன்ற பயிர்ச் செய்கைகளும் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன.

மேலும், கால்நடைகளும் விலங்குகளும் குடிநீரின்றி இறக்கும் சம்பவங்களையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

### யோஹானிக்கு....

காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. தமக்கு இது மகிழ்ச்சியை அளிப்பதாக தெரிவித்த யோஹானி, இலங்கையின் கலாசாரமும் இசையும் அமெரிக்காவில் கொண்டாடப்படுவதை காண்பதற்கு ஆவலுடன் காத்திருப்பதாகவும் தெரிவித்தார். கடந்த 2021ஆம் ஆண்டு யோஹானி பாடிய 'மெனிகே மகே ஹித்தே' என்ற பாடல் உலகளவில் பெரும் வரவேற்பை பெற்றிருந்தது.

### மூத்த எழுத்தாளர்...

ஊடகவியலாளராகவும் சிறந்த மொழிபெயர்ப்பாளராகவும் செயற்பட்டார்.

1964ஆம் ஆண்டு லேக்ஹவுஸ் வெளியீடான மிஹிர பத்திரிகைக்கு தனது பங்களிப்பை அவர் வழங்கி வந்ததுடன், 50 ஆண்டுகளுக்கும் மேலாக எட்டுக்கும் மேற்பட்ட பத்திரிகைகளில் ஊடகவியலாளராகவும் ஆசிரியராகவும் கடமையாற்றியிருந்தார்.

பிரபலமான நாவல்கள் உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட புத்தகங்களை அனுலா டி சில்வா எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### 'மலையகம் 200...

மணிக்கூட்டு கோபுரத்துக்கு முன்பாக நேற்று ஆரம்பமாகி நடைபெற்றது. ஹட்டனில் ஆரம்பமாகிய நடைபவணியில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கனேசன், தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, நுவரெலியா நகரில் ஆரம்பமாகிய நடைபவணியில் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் மற்றும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.உதயகுமார், கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் உட்பட பெருந்திரளான மலையக பெருந்தோட்ட மக்கள் கலந்துகொண்டனர்.

ஹட்டனில் ஆரம்பமாகிய நடைபவணி, ஹட்டன் நுவரெலியா பிரதான வீதியினூடாக கொட்டகலை, பத்தனையினூடாக தலவாக்கலை பஸ் நிலையத்தை சென்றடைந்தது. நுவரெலியா நகரில் ஆரம்பமாகிய நடைபவணி, நானுஓயா, லிந்துலை வழியாக தலவாக்கலை பஸ் நிலையத்தை சென்றடைந்தது.

### முட்டை விலை....

தெரிவித்தது. முட்டைக்கான கட்டுப்பாட்டு விலையை நீக்கும் நடவடிக்கை காரணமாக தற்போது முட்டை விற்பனை வலையமைப்பு வலுவடைந்து வருவதாக, இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்தார். இதேவேளை, ஒரு கிலோகிராம் உறைநிலை கோழி இறைச்சியை 1,250 ரூபாவுக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

### லக்ஷ்மன் கதிர்காமரின்...

விவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சுட்டுக்கொல்லப்பட்டு நேற்றுடன் (12) 18 வருடங்களாகியுள்ளன. இந்நிலையில், அன்னாரை நினைவுகூர்ந்து அமைச்சர் அலி சப்ரி டுவிட்டர் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த புனிதமான நாளில் விடுதலைப் புலிகளின் இரக்கமற்ற வன்முறையால் துரதிஷ்டவசமாக உயிரிழந்த ஒரு சிறந்த இராஜதந்திரி லக்ஷ்மன் கதிர்காமரின் நினைவை போற்றுகின்றோம்.

அனைத்து இலங்கையரினதும் பொதுவான நோக்கத்துக்கான லக்ஷ்மன் கதிர்காமரின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு, ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கான அவரது அயராத முயற்சிகள், எமது தேசத்தின் வரலாற்றில் ஒரு அழியாத தடத்தை பதித்துள்ளன.

அமைதியான மற்றும் ஐக்கிய இலங்கைக்கான அவரது தொலைநோக்கு இன்றும் எதிரொலிக்கின்றது. பிளவு மற்றும் வெறுப்பை உருவாக்கும் சக்திகளுள்ள போதிலும், அமைதி மற்றும் ஒற்றுமைக்காக பாடுபடும் அவரது மரபு, அத்தகைய சக்திகளுக்கு ஒரு நிலையான வெறுப்பாக காணப்படுகின்றது. அவரது வாழ்க்கையை பற்றி சிந்திக்கும் போது, அவருடைய அர்ப்பணிப்பிலிருந்து உத்வேகம் பெறுவோம். அவரது குறிப்பிடத்தக்க பயணத்திலிருந்து நாம் கற்றுக்கொண்ட பாடங்களை பிரதிபலிக்கும் இலங்கையை உருவாக்குவோமெனவும், அமைச்சர் அலி சப்ரி மேலும் தெரிவித்தார்.

### துருக்கி பஸ்...

விமான நிலையத்தில் அபிவிருத்தி திட்டமொன்றில் பணிபுரியும் இலங்கையரை ஏற்றிச் சென்றுகொண்டிருந்த பஸ் வண்டியே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

தமது பணியை முடித்துக்கொண்ட இந்த இலங்கையர், பஸ் வண்டியில் தாங்கள் தங்கியிருந்த இடத்துக்குச் சென்று கொண்டிருந்த போதே, யூப்சுல்தான் பகுதியில் விபத்துக்குள்ளாகினர்.

சுரங்கப்பாதையில் பயணித்த பஸ், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து பிரதான வீதியிலிருந்து விலகிச்சென்று, சுமார் 06 மீற்றர் பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதாக, வெளிநாட்டமைச்சின் செய்திக்குறிப்பு தெரிவித்துள்ளது.

சாரதியுடன் 39 இலங்கையர் பஸ்ஸுக்குள் இருந்ததாகவும் விபத்தில் சிக்கி காயமடைந்த 29 இலங்கையரில் 9 பேர் தற்போது இஸ்தான்பூலிலுள்ள 3 வெவ்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவந்த எஞ்சிய 20 பேர் அன்றே சிகிச்சை பெற்றுக்கொண்டு இருப்பிடம் திரும்பியுள்ளதாக, இலங்கை வெளிநாட்டலுவல்கள் அமைச்சு நேற்று தெரிவித்தது.

விபத்தில் காயமடைந்த இலங்கையர் தொடர்பாக விசாரிப்பதற்காக துருக்கியிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் பிரதிநிதி ஒருவரை இஸ்தான்பூல் நகருக்கு அனுப்பவுள்ளதாக, துருக்கியிலுள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளதாக, வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

### உண்மையான சரித்திரம்...

தோன்றியதே கிறிஸ்துவுக்கு பின் ஆறாம், ஏழாம் நூற்றாண்டுகளில்தான். ஆனால், அதற்கு முன்னதாக தமிழ் இந்த நாட்டில் இருந்திருக்கின்றது.

ஆகவே, இது சிங்கள பௌத்த நாடு என்றெல்லாம் கூறுவது மிகவும் பிழையான சிந்தனையெனத் தெரிவித்தார்.

### நௌபர் மௌலவி...

மூன்று நீதிபதிகள் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, சட்டமாஅதிபர் குற்றச்சாட்டுகளை தாக்கல் செய்தார்.

நௌபர் மௌலவி, சஜித் மௌலவி, மொஹமட் மில்ஹான், சாதிக் அப்துல்லா, மொஹமட் சனஸ்தீன் மற்றும் மொஹமட் ரிஸ்வான் உட்பட 24 பிரதிவாதிகளுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டுகளில் கொலை, சதி, உதவி செய்தல், ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளை சேகரித்தல், கொலை முயற்சி ஆகியவை அடங்கும். வழக்கின் அடுத்தகட்ட விசாரணை எதிர்வரும் ஒக்டோபர் 10ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ள அதேவேளை, குற்றப்புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் பி.அம்பாவிலவுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### புலம்பெயர்....

இலங்கை மத்திய வங்கி தெரிவித்தது.

இது, கடந்த ஜூலை 2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 261 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அதிகமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், ஜூலை 2022ஆம் ஆண்டு இலங்கைக்கு 279.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மாத்திரமே அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த ஆண்டு ஜனவரி முதல் ஜூலைவரை 3,363.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அனுப்பட்டுள்ளதாகவும், இலங்கை மத்திய வங்கி மேலும் தெரிவித்தது.

### மிஹிந்தலையில்...

45 வயதுக்குட்பட்ட மூவரே நேற்று முன்தினம் மாலை இந்த அசம்பாவிதத்தை எதிர்நோக்கியுள்ளனர். மீன்பிடிப்பதற்காக தம்மன்னாவ வாவிக்கு 10 பேர் சென்றிருந்த போது, மூவர் மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளனர். இவ்வாறு உயிரிழந்தவர்களில் இரண்டு இராணுவ வீரர்களும் அடங்குகின்றனர்.

### ஈரானிய பிரஜைகள்....

குற்றஞ்சாட்டப்பட்ட ஒவ்வொருவருக்கும் தலா 44 இலட்சம் ரூபாவை அபராதமாக நீதவான் விதித்துள்ளார்.

அண்மையில் இந்த ஈரானிய பிரஜைகள் மூவரும், சிங்கராஜ வனப்பகுதியில் தாவரங்கள் மற்றும் விலங்குகளின் பாகங்களை சேகரித்துக்கொண்டிருந்த போது, நெலுவ லங்காகம பிரதேசத்தில் வைத்து வனவளப் பாதுகாப்பு திணைக்களத்தின் நெலுவ வன அதிகாரிகள் குழுவினரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

### ஜனாதிபதியை...

இருக்கப் போவதில்லையென்பதால், ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெறுவதாகச் சொல்லப்பட்ட கலந்துரையாடலில் கலந்துகொள்ள முடியாமையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரடியாக தான் தெரிவித்து விட்டதாகவும், அவர் தெரிவித்தார்.

இதை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, அடுத்த வாரம் உசிதமான ஒரு தினத்தில் சந்திப்பதாக நேரடியாக பதிலளித்துள்ளார். இதற்கமைய, அடுத்த வாரம் ஜனாதிபதியை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு தமிழ் எம்.பி.க்களைச் சந்தித்து, ஈழத்தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு சாத்தியமான தீர்வுகளை நேர்மையாக தேடும் அதேவேளை, மலையகத் தமிழ் மக்களின் அபிலாஷைகள் தொடர்பாக பிரத்தியேகமாக அனைத்து மலையக எம்.பி.க்களையும் சந்திக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தமிழ் முற்போக்குக் கூட்டணியே பலமுறை கோரிக்கை விடுத்திருந்தது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கு அறிமுகம் இல்லாத ஒரு புதிய தலைவர் அல்ல. அத்துடன், இன்றைய ஒரே நாள் சந்திப்பில் மலையகத்தின் 200 வருட பிரச்சினைகளும் தீர்வுக்கு வந்து விடுமென்றும் எவரும் விளையாட்டாகக்கூட எதிர்பார்க்க முடியாது.

ஆகவே, தவிர்க்க முடியாத காரணத்தால் நடைபெறவிருந்த எமது சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதை ஜனாதிபதியும் ஏற்றுக்கொண்டுவிட்டார். அத்துடன், அந்தப் பிரச்சினை முடிந்தது.

பாராளுமன்றத்தில் நாம் கொண்டு வந்த மலையகம் 200 முழுநாள் விவாதத்தில் கலந்துகொண்ட எதிர்த்தரப்பு, ஆளுந்தரப்பு எம்.பி.க்கள் அனைவரும் மலையக மக்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டுமென மிக உறுதியாக கருத்து தெரிவித்துள்ளனர்.

இது ஒரு மிக சாதகமான சூழலையும் புதிய பல எதிர்பார்ப்புகளையும் உருவாக்கியுள்ளது.

ஆகவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பரந்துப்பட்ட நிகழ்ச்சிநிரல் கொண்ட கலந்துரையாடலை நடத்தவே தாம் விரும்புவதாகவும், அவர் தெரிவித்தார்.

@ மலையகத்தில் வீடு கட்டி வாழவும் வாழ்வாதார தொழிலுக்குமான காணி உரிமை.

@ பெருந்தோட்ட குடியிருப்புகளை அரச பொது நிர்வாகக் கட்டமைப்புக்குள் கொண்டு வருவது.

@ இந்திய அரசு உறுதியளித்துள்ள இலங்கை ரூ. 300 கோடி நன்கொடை பயன்பாட்டுத் திட்டம்.

@ சமூக சபை என்ற மலையக மக்களுக்கான அதிகாரப்பகிர்வு.

@ பெருந்தோட்ட நிறுவனங்களுக்கும் அரசுக்கும் இடையிலான நீண்டகால குத்தகை ஒப்பந்தம் மீளாய்வு ஆகியவை தொடர்பாக பேசவே தமிழ் முற்போக்குக் கூட்டணி விரும்புவதாகவும், மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

### சாதகமான சூழலை...

எதிர்பார்ப்புகளுடன் விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்தவர்களுள் ஒருவன் என்ற அடிப்படையில், தற்போது உருவாகியுள்ள சூழலை முன்னகர்த்துவதற்கு அனைத்து தமிழ்த் தரப்புகளும் இதயசுத்தியுடன் செயற்பட வேண்டுமென, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அண்மைய பாராளுமன்ற உரை மற்றும் அது தொடர்பாக பல்வேறு தமிழ்த் தரப்புகளும் வெளியிட்டு வருகின்ற வியாக்கியானங்கள் தொடர்பாக நேற்று (12) கருத்துத் தெரிவித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"இலங்கையின் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டியதன் அவசியம் மற்றும் அதனை செழுமைப்படுத்துவதற்கான சில பரிந்துரைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் முன்வைத்தார்.

13ஆவது திருத்தச்சட்டமென்பது எமது அரசியலமைப்பில் ஏற்கெனவே உள்ளடக்கப்பட்டிருக்கின்ற விடயம். தமிழ்த் தரப்புகளின் தவறான அணுகுமுறை காரணமாகவே இதனை ஜனாதிபதி மீண்டும் பாராளுமன்றத்துக்கு கொண்டு வந்துள்ளார்.

13ஆவது திருத்தச்சட்டத்தின் உருவாக்கம் மற்றும் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டமை போன்றவை சாதாரணமாக நிகழ்ந்தவை அல்ல.

தமிழ் மக்கள் மத்தியில் உருவாகிய ஆயுத ரீதியான விடுதலைப் போராட்ட அமைப்புகள் ஒவ்வொன்றுக்கும் பங்கிருக்கின்றது.

ஆயுதப் போராட்ட அமைப்புகளில் தம்மை இணைத்துக்கொண்ட ஒவ்வொருவரின் அர்ப்பணிப்புகளின் பயனாக உருவாகியதே இந்த 13ஆவது திருத்தச்சட்டம். இதில் எமது மக்களுக்கு இருக்கின்ற தார்மீக உரிமையையும் புறந்தள்ளிவிட முடியாது.

ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பகால உறுப்பினர்களில் ஒருவனாக 13ஆவது திருத்தச்சட்டத்தின் முக்கியத்துவத்தையும் அதன் பெறுமதியையும் என்னால் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. அதேபோன்று, ஆயுதப் போராட்டத்தில் பங்கெடுத்து தம்மை அர்ப்பணித்தவர்களும் ஆயுதப் போராட்டத்துக்கான ஆத்மார்த்தமான ஆதரவை வழங்கியவர்களும் இதனை புரிந்துகொண்டிருப்பதையும் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

இப்போது 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பான நம்பிக்கையீனங்களை வெளியிடுகின்றவர்களில் பெரும்பாலானவர்கள் அரசியல் ஒட்டுண்ணிகளாகவே இருக்கின்றனர்.

அதாவது, 13ஆவது திருத்தச்சட்டத்துக்காக எந்தவிதமான பங்களிப்பையும் வழங்காது, நெருக்கடியான காலகட்டங்களில் பாதுகாப்பான சுயவாழ்வியலை உறுதிப்படுத்தியவர்களாகவும் அவ்வாறானவர்களின் வாரிசுகளாகவுமே இருக்கின்றனர்.

இப்போது பாராளுமன்றத்தில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்கின்றவர்களை எடுத்துக்கொண்டால் கூட, என்னைத் தவிர நான்கு உறுப்பினர்கள் மாத்திரமே தமிழ் மக்களுக்கான விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்தவர்களாக இருக்கின்றனர். ஏனையவர்கள் அனைவரும் தமிழ் மக்களுக்கான விடுதலைப் போராட்டம் மற்றும் அந்தப் போராட்டம் இலங்கை இந்திய உடன்படிக்கைக்கு பின்னர் தவறான திசையில் முன்னெடுக்கப்பட்டதால் ஏற்பட்ட அவலங்கள் ஆகியவற்றை வைத்து அரசியல் செய்யும் ஒட்டுண்ணிகளாகவே இருக்கின்றனர்.

இவ்வாறான அரசியல் ஒட்டுண்ணிகளே, தற்போது 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுலாக்குவது தொடர்பாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முன்னெடுப்புகள் தொடர்பாகவும் தமது சுயலாப அரசியலுக்காக நம்பிக்கையீனங்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

ஆனால், வரலாற்றுத் தவறொன்றை இன்னுமொரு முறை செய்யாது, கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கு அனைவரும் இதயசுத்தியுடன் செயற்பட வேண்டுமென்பதே என்னுடைய எதிர்பார்ப்பாக இருக்கின்றது." எனத் தெரிவித்தார்.

## எங்கள் கருத்து

# இருநூற்றாண்டுகள் கடந்தும் முழுமை பெறாத வாழ்வு முறை

உரிமைக்கான குரல் அரைநூற்றாண்டுக்கும் மேலாக முடிவின்றி இன்றும் ஒலித்துக் கொண்டேயிருக்கின்றது. அங்குள்ள தமிழ் அரசியல்தரப்புகளுக்கிடையில் ஒருமித்த கருத்தும், ஐக்கியமும் இன்றும்கூட கிடையாது.

அதேபோன்றுதான் மலையகத்தின் அரசியலும் நகர்கின்றது. மலையகத்தின் அரசியல் சக்திகள் அனைத்துமே ஓரணியில் திரண்டு நிற்குமானால், அம்மக்களின் அவலங்கள் என்றோவொருநாள் நீங்கியிருக்கும். ஆனால் மலையகத்தின் அரசியல் கட்சிகள் அம்மக்களின் அவலங்களைத் தீர்ப்பதற்குப் பதிலாக, தங்களது இருப்பைப் பலப்படுத்துவதிலேயே குறியாக நிற்கின்றன என்ற விமர்சனத்தை ஒதுக்கிவிட முடியாதிருக்கின்றது.

இருநூற்றாண்டு காலம் கடந்த போதிலும், மலையகத் தமிழ் மக்கள் இன்னும் இருண்ட காலத்திலேயே வாழ்கின்றனர். கல்வி கற்ற மற்றும் செல்வந்த தரப்பினர் அப்பிரதேசத்தை விட்டு நகரங்களை நோக்கி இடம்பெயர்ந்து சென்று கொண்டிருக்க, தோட்டத் தொழிலாளர்கள் தொடர்ந்தும் வறுமையிலேயே வாடுகின்றனர். அன்றாட சீவனத்துக்கான வேதனம், கல்வி, சுகாதாரம் மற்றும் அடிப்படை வசதிகளின்றி 'லயன்' என்று அழைக்கப்படுகின்ற காம்பராக்களுக்குள் வாழ்கின்ற ஏராளமான மக்களின் வேதனையை பலர் நினைத்துப் பார்ப்பதில்லை.

அவர்களும் இந்நாட்டுப் பிரஜைகளேயாவர். இருநூறு வருடங்கள் கடந்தும் அச்சமூகத்தின் வாழ்வுநிலை இன்னும் பரிதாபமாகவே உள்ளதென்றால், நாட்டின் அரசியல்தரப்பினர் அனைருமே இதற்குப் பொறுப்பாளிகளாவர்.

### CTB பஸ்களின்...

ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டிய அமைச்சர், அதன் காரணமாகவே இந்த தீர்மானத்தை அதிரடியாக மேற்கொண்டதாகவும் தெரிவித்தார்.

அது மட்டுமின்றி இலங்கை போக்குவரத்துச் சபை, பஸ் சோதனை மற்றும் சுற்றிவளைப்புப்பிரிவு அதிகாரிகள், பொது வளங்களை திட்டமிட்ட வகையில் களவாடும் சம்பவங்களுடன் தொடர்புபட்டுள்ளதாக கிடைத்துள்ள தகவல்களின்படி இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களில் பயணச்சீட்டுகளை வழங்குவதில் மோசடிகளை மேற்கொள்ளும் பஸ் நடத்துநர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல், அவர்களிடமிருந்து மேற்படி அதிகாரிகள் இலஞ்சம் பெற்று வருவதாக தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் அதனைத் தவிர, பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் வவுச்சர்கள் மூலமும் மோசடிகள் இடம்பெற்று வருவதும் தெரியவருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், கையடக்கத் தொலைபேசிகளில் APPகளை பாவித்து சுற்றிவளைப்பு சோதனைகள் இடம்பெறும் மற்றும் தாம் இருக்கும் இடங்கள் தொடர்பாக ஏற்கெனவே தெரிந்து வைத்துக்கொண்டு, அதனை அறிவிக்கும் திட்டமிட்ட செயற்பாடுகள் பின்பற்றப்பட்டுள்ளதாகவும் சாரதி மற்றும் நடத்துநர்களின் பண மோசடி செயற்பாடுகளுக்கு மேற்படி அதிகாரிகள் உறுதுணையாக செயற்பட்டுள்ளதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், அந்த அதிகாரிகளில் சிலர் இ.போ.ச. டிப்போ உத்தியோகத்தர்களிடம் பணம் சேகரித்து தமக்கு வழங்குமாறு அழுத்தம் கொடுத்து வந்துள்ளமையும் விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

இத்தகைய ஊழல் மோசடிகளை இல்லாதொழிக்கும் நோக்கில் பயணிகளிடமிருந்து பணத்தை பெற்றுக்கொள்வதற்கு டிஜிட்டல் தொழில்நுட்ப முறைமையை பின்பற்றுவதற்கும் இவ்வாறான மோசடிகளை தடுக்கும் வகையிலும் அமைச்சரால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் குழுவின் தீர்மானங்கள் எட்டப்படுவதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக பயணிகளிடமிருந்து பணம் வசூலிக்கப்படுகிறது.

மேற்படி விடயங்கள் தொடர்பாக தீர்மானம் எடுப்பது தாமதமாவதால் தினந்தோறும் இடம்பெறும் இவ்வாறான ஊழல் மோசடிகளை இல்லாதொழிக்கும் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலை பஸ்களில் பயணச்சீட்டு வழங்குதலில் மோசடிகள் இடம்பெற்று வருவதாக கிடைத்த தகவலுக்கமைய அமைச்சர் பந்துல குணவர்த்தன, நடத்துநர்களின்றி பஸ்களை சேவையில் ஈடுபடுத்தும் வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்.

அந்த நிலையிலும், கடவத்தையிலிருந்து காலி நோக்கிச் செல்லும் அதிவேக நெடுஞ்சாலை பஸ்களில் பயணிகளுக்கு போலி பயணச்சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

950 ரூபா பெறுமதியான 52 போலி பயணச்சீட்டுகள் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளமை விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாகவும் மேற்படி அதிகாரிகள் பிரிவை கலைப்பதற்கு அதுவும் ஒரு காரணமென்றும் குறிப்பிடப்படுகின்றது.

அவ்வாறான பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன், இதற்கு முன்னரும் எம்பிலிப்பிட்டிய முதல் மாக்கும்புரவரையான தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் இவ்வாறு 40,000க்கும் அதிகமான போலி பயணச்சீட்டு மோசடிகள் இடம்பெற்றுள்ளமையும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

# முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம்

## ஜம்இய்யத்துல் உலமாவின் உறுதியான நிலைப்பாடு

**“மார்க்க ரீதியான வழிகாட்டல்களை தந்துவிட்டோம். இதனை பாதுகாக்கும் கடப்பாடு அரசிடமே உள்ளது.” – ஜம்இய்யா அறிவிப்பு**

1970 ஆம் ஆண்டிலிருந்து முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டம் சம்பந்தமாக பல குழுக்கள் நியமிக்கப்பட்டு அந்தக் குழுக்கள் தங்களுடைய சிபாரிசுகளை முன்வைத்திருந்தமை நாம் அனைவரும் அறிந்த விடயமாகும். அதன் அடிப்படையில் சில குழுக்கள் முன்வைத்த முன்மொழிவுகளில் மார்க்கத்துக்கு முரணான சில அம்சங்கள் காணப்படும்போது அதற்கு முஸ்லிம் சமூகமும் உலமாக்கள் அனைவரும் அந்த விடயத்திற்கு எதிராக அழுத்தம் தெரிவித்தமையால் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில் சட்டத்தரணி சப்ரி ஹலீம்தீன் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவால் சில கடுமையான தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டன.

அதில் காதி முறைமை இல்லாமல் செய்யப்பட வேண்டும் என்றும் பலதார திருமணம் முற்றாக நீக்கப்பட வேண்டும் என்றும் 18 வயதுக்குக் கீழ் எவ்வித திருமணமும் செல்லுபடியாகாது என்றும் பெண்களும் காதிகளாக நியமிக்கப்பட முடியும் போன்ற சில அமைச்சரவை தீர்மானங்களை அடிப்படையாகக் கொண்டே அந்தக் குழுவுக்கு இவ்விடயம் பொறுப்புக் கொடுக்கப்பட்டது.

அதன் பிறகான ஆட்சி மாற்றத்தின் பின்னர் தற்போதைய நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ, இது சம்பந்தமான அறிக்கையொன்றை பல முஸ்லிம் அமைப்புகள் அவருக்குக் கொடுத்த முன்மொழிவுகளை அடிப்படையாகக் கொண்டும் முன்னைய குழு முன்வைத்த கருத்துகளை அடிப்படையாகக் கொண்டும் ஓர் அறிக்கையை முன்வைத்தார்.

குறித்த அறிக்கை அமைச்சரவைக்கு வந்தபோது, ‘இது முஸ்லிம்களுடைய விவகாரம் என்று முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது கருத்துக்களை தெரிவித்தனர். பின்னர் அவர்களுடைய கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டே இந்த அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும்’ என்று அமைச்சர் நஸீர் அஹமட் வேண்டிக்கொண்டதற்கு அமைய முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் அந்த அறிக்கை கையளிக்கப்பட்டது.

எனவே அவர்கள் அந்த அறிக்கையில் இஸ்லாத்துக்கு மாற்றமான முன்மொழிவுகள் மற்றும் நமது நாட்டு முஸ்லிம்களுடைய கலாசாரத்துக்கு முரணான விடயங்கள் இருப்பதை அவதானித்து அவர்களுடைய 17 முன்மொழிவுகளை உள்ளடக்கிய அறிக்கையை 17 முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டு முன்னாள் பாராளுமன்ற அமைச்சர் பௌஸி தலைமையில் கையளித்தனர். அதில் அமைச்சர் அலி சப்ரி மற்றும் முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய இரண்டு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிடவில்லை. மேலும் அமைச்சர் கபீர் ஹாசிம் ஆரம்பத்தில் கையொப்பமிட்டு பின்னர் அதை வாபஸ் வாங்கிக் கொண்டார். இந்த முன்மொழிவுகளை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம் சிவில் அமைப்புகளும் ஒருமித்த கருத்துக்கு வரவேண்டும் என்ற நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவின் வேண்டுகோளுக்கு இணங்க முஸ்லிம் சிவில் அமைப்புகள் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவிடம் வேண்டுகோள் விடுத்தன. அதனடிப்படையில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் தலைமையகத்தில் இது தொடர்பாக சிவில் சமூக அமைப்புகளுடனான கலந்துரையாடலொன்று நடைபெற்றது. அதில் பாராளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட குறித்த 17 முன்மொழிவுகளுடன் சேர்த்து மேலும் சில முன்மொழிவுகளையும் இணைத்து மொத்தமாக 20 முன்மொழிவுகளை உள்ளடக்கிய அறிக்கை, முஸ்லிம் சிவில் சமூக அமைப்புகள் கையொப்பமிடுவதற்காக அனுப்பிவைக்கப்பட்டது. இந்த விடயம் சம்பந்தமாக முஸ்லிம் சமூகம், உலமாக்களுடைய வழிகாட்டலையும் அதேநேரத்தில் பெரும்பான்மையான முஸ்லிம் சமூகத்தின் ஜனநாயக ரீதியான கருத்தையும் மதித்து இத்திருத்தத்தில் அனைவரும் உடன்படக்கூடிய திருத்தங்களை அவசரமாக கொண்டுவருதோடு முரண்படக்கூடிய விடயமாக இருந்தால் அதையும் சுமுகமாக கலந்துரையாடி, பேச்சுவார்த்தையின் ஊடாக இணக்கப்பாட்டுக்கு வருவதே பொருத்தமானது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த விடயத்தில் உலமாக்கள், முஸ்லிம் சிவில் அமைப்புகள், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லோருமாக ஒன்றுசேர்ந்து வெளிச்சக்திகள் மற்றும் வெளி சிந்தனைகளுக்கு விலை போகாமல் தூய எண்ணத்துடன் அல்லாஹ்வுக்காகவும் எமது சமூகத்துக்காகவும் நடந்துகொள்ள வேண்டும் என்று நாம் விரும்புகிறோம்.

முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டத் திருத்தத்தில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா தெளிவானதும் ஆதாரபூர்வமானதுமான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதை மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புவதாக அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா விடுத்திருக்கும் ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது. அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: இலங்கையில் முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டம், ஷாபி மத்ஹபை அடிப்படையாகக் கொண்டே எமது முன்னோர்களால் உருவாக்கப்பட்டது.

இலங்கை வாழ் முஸ்லிம்கள் ஆரம்பம் முதலே ஷாபி மத்ஹபை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்ட அதேசமயம் முஸ்லிம்கள் அல்குர்ஆன், ஸுன்னா, இஜ்மா, கியாஸ் ஆகிய மூலாதாரங்களைக் கொண்டே பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தொடராக முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை அடுத்து உத்தியோகபூர்வமாக நான்கு குழுக்கள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு குழுவும் தத்தமது அறிக்கைகளை அந்தந்தக் காலங்களில் முன்வைத்து வந்த நிலையிலும் இன்னும் முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டம் தொடர்பில் சட்ட ரீதியான எந்த முக்கிய மாற்றமும் நடைமுறைச் சாத்தியமானதாக அமையவில்லை.

காலாகாலமாக முஸ்லிம் சமூகத்தின் சிறு குழுவினர், காதிகளாக பெண்கள் நியமிக்கப்பட வேண்டுமென வாதிட்டு வருகின்றனர். இது தொடர்பில் உலகளாவிய ரீதியில் உலமாக்கள், அறிஞர் பெருமக்கள் பலரும் உள்நாட்டில் அறிஞர்கள், புத்திஜீவிகளில் பெரும்பாலானோரும் 1400 வருடங்களுக்கும் மேலாக நாம் பேணி வரும் கலாசாரத்துக்கு மாற்றமான நிலைப்பாடாக அது இருக்கக் கூடாது என்பதில் உறுதியாக உள்ளனர்.

அந்தவகையில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா, மார்க்கத்துக்கு முரணில்லாத வகையிலும் பெண்களுக்கு மார்க்கம் வழங்கியுள்ள உரிமைகளை கருத்தில்கொண்டும் பெண்களோடு சம்பந்தப்பட்ட விவகாரங்களை கையாளுவதற்கு இரண்டு பெண்களை அதிகாரமுள்ள ஜூரிகளாக நியமிப்பது பொருத்தமானதாக இருக்கும் என்ற காலத்திற்குப் பிரயோசனமான முன்மொழிவை முன்வைத்துள்ளது. இந்த முன்மொழிவு நடைமுறைக்கு வந்தால் இவ்விடயத்தில் சமூகம் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை.

### திருமண ‘வலி’ விவகாரம்

இதே போன்றுதான் 1400 வருடங்களாக நாம் பேணி வரும் ‘வலி’ விவகாரமும் காணப்படுகின்றது. இஸ்லாத்தில் ‘வலி’ இல்லாத திருமணம் செல்லுபடியாகாது. அதேசமயம் ‘வலி’ உடன் பெண்ணின் சம்மதம் பெறப்பட வேண்டும். பெண்ணின் சம்மதத்தை உறுதிப்படுத்தும் வகையில் திருமணப் பதிவில் பெண்ணின் கையொப்பமும் கட்டாயமாக பெறப்பட வேண்டும். மணமகன், வலி, இரண்டு சாட்சியங்கள், நிக்காஹை நடத்துபவர், பதிவாளர் ஆகியோரின் கையொப்பங்களும் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும்.

### திருமண வயது

மார்க்கத்தில் திருமணத்துக்கு வயது வரையறுக்கபடவில்லை என்றாலும் சிலர் இதனை துஷ்பிரயோகம் செய்வதன் காரணமாக உலக நடைமுறைக்கு (உர்ப்) தோதாகவும் ஏனைய நாடுகளின் சட்டங்களை ஒப்பிட்டும் பின்வரும் கருத்தை அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா அழுத்தமாக பதிவு செய்கிறது. ஆணுக்கும் பெண்ணுக்குமான திருமண வயது 18 என்பதுடன் 18 வயதுக்குக் கீழ் திருமணம் முடிக்கக்கூடிய அவசியம், தேவை மற்றும் தவிர்க்க முடியாத சந்தர்ப்ப சூழ்நிலை உருவாகும் போது காழி அல்லது நீதவானின் அனுமதியுடன் திருமணம் செய்துகொள்வதற்கு இச்சட்டத்தில் இடம் இருக்க வேண்டும்.

### பலதார திருமணம்

இஸ்லாத்தில் மனிதர்களுடைய இயல்பை அடிப்படையாக வைத்தும் பெண்களுடைய பொது நலனையும் கருத்தில் கொண்டும் ஆண்கள் விபசாரத்தில் ஈடுபடாமல் இருக்கவும் மேலும் எமக்குத் தெரியாத ஏராளமான நலன்களை அடிப்படையாக வைத்தும் பலதார திருமணத்தை இஸ்லாம் அனுமதித்துள்ளது.

தற்போது முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டத்தில் சில நிபந்தனைகளுடன் இதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதோடு இந்த அனுமதியை சிலர் துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்ற கருத்து முன்வைக்கப்படுவதன் அடிப்படையில் எவரும் துஷ்பிரயோகம் செய்யாத முறையில் நிபந்தனைகளுடன் பலதார திருமணத்துக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்.

### ‘குலா’ முறை

ஒரு பெண் கணவருக்கு அவர் வழங்கிய மஹ்ர் மற்றும் நஷ்டஈட்டை கொடுத்து விவாகரத்தை பெற்றுக் கொள்வதாகும். இது தற்போதைய முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டத்தில் உள்வாங்கப்படவில்லை. எனவே இந்த விதி சட்டத்தில் உள்வாங்கப்பட வேண்டும்.

### மதாஉ

ஒரு பெண்ணை கணவர் தன் இஷ்டப்படி பிரியும் பட்சத்தில் அதற்கு மனைவி காரணமாக அமையாத போது பெண்ணுக்கு கணவரால் மதாஉ இழப்பீடு வழங்கப்பட வேண்டும். அதன் அளவு கணவரின் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு காதியால் தீர்மானிக்கலாம். இச்சட்டமும் உள்வாங்கப்பட வேண்டும்.

அதேபோன்று கடந்த 1970 முதல் எமது சமூகத்தின் மத்தியில் காதி நியமனம் தொடர்பில் திருத்தம் தேவைப்படுவதை முன்வைத்து பல முன்மொழிவுகள் மேற்கொள்ளப்பட்டன. மார்க்கத்துக்கு முரணில்லாத, தற்கால நடைமுறைக்கு சாத்தியமான முன்மொழிவுகளையே அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா முன்வைத்துள்ளது.

இது போன்ற பல்வேறு விடயங்களையும் முன்மொழிந்தே ஜம்இய்யத்துல் உலமா முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தில் கொண்டுவரப்பட வேண்டிய திருத்தங்களை முன்வைத்துள்ளது. இது ஜம்இய்யத்துல் உலமாவின் உறுதியான நிலைப்பாடு எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(எம்.ஏ.எம். நிலாம்)

# கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணையம்



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர், வரி & முகாமைத்துவ ஆலோசகர்

கொழும்புத் துறைமுக நகரம் (போர்ட் சிட்டி கொழும்பு) 269 ஹெக்டேர் கடல் பரப்பை நிரப்பி புதிதாக உருவாக்கப்பட்டு சேவைகளின் ஏற்றுமதிக்காக அர்ப்பணிக்கப்பட்ட முதல் சிறப்பு பொருளாதார வலயத்தையும் உள்ளடக்கியது. இது இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக நிலப்பரப்பை மறுவரையறை செய்வதை நோக்கமாகக் கொண்ட தொலைநோக்குத் திட்டமாகும். இது ஒரு பல்கலாசார வாழ்க்கை முறை, உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு மற்றும் நிலையான வாழ்க்கை ஆகியவற்றை வழங்குவதாக உறுதியளிக்கிறது.

முதல் 5 வருட திட்டமாக அந்நிய நேரடி முதலீட்டில் $5.6 பில்லியன் (Billion) பெற்றுக் கொள்வதையும், இலங்கையின் பொருளாதார மீட்சியை விரைவாகக் கண்காணிக்கவும், போர்ட் சிட்டி மற்றும் இலங்கை ஆகிய இரண்டையும் சேவை ஏற்றுமதித் துறையில் முன்னணித் தளமாக நிலைநிறுத்துவதனையும் நோக்கமாக கொண்டுள்ளது. ஒட்டுமொத்தமாக கொழும்புத் துறைமுக நகரம் 140,000க்கும் மேற்பட்ட நேரடி வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதுடன், வருடாந்தம் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் $13.8 பில்லியன் (Billion) பங்களிப்பை வழங்குகிறது. மதிப்பிடப்பட்ட நிதி வருவாய் $ 1.7 பில்லியன் (Billion) கட்டுமான கட்டத்தில் எதிர்பார்க்கப்படுகிறது. அதேசமயம் திட்டத்தின் செயற்பாட்டுக் கட்டத்தில் ஆண்டுக்கு சுமார் $700 மில்லியன் (Million)தொடர்ச்சியான வருவாய் எதிர்பார்க்கப்படுகிறது.

சமீபத்தில் மேம்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கட்டுப்பாட்டு ஒழுங்குமுறைகள் (DCR) ஜூன் 2 இன் அதிவிசேட வர்த்தமானி எண் 2334/47 மூலம் வெளியிடப்பட்டது. இது கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவுக்கு மதிப்பீடு மற்றும் திட்டமிடல் அனுமதி, அபிவிருத்தி அனுமதிகள் மற்றும் சான்றிதழ்களை வழங்குவதற்கான அபிவிருத்தி முன்மொழிவுகளைப் பெற உதவுகின்றது. இத்திட்டத்துக்கு இணங்கும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட முதன்மை திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ள 6.3 மில்லியன் சதுர மீட்டர் பரப்பளவில் கட்டக் கூடிய பரப்பளவில் மெரினா வசதி, சொகுசு வில்லாக்கள், அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் ஒருங்கிணைந்த ரிசார்ட், மாநாட்டு மையம், சர்வதேச பாடசாலை மற்றும் பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுக்கு உலகத் தரம் வாய்ந்த சூழலை வழங்கும் மருத்துவமனை மற்றும் நிதி மையம் போன்றவை அடங்குகின்றன.

வெளிநாட்டு நேரடி முதலீடுகளை அதிகரிப்பதற்கான ஒரு முக்கிய முன்னேற்றமாக கொழும்புத் துறைமுக நகரத்தில் முயற்சிகளைத் தொடங்க விரும்பும் முதலீட்டாளர்களுக்கான, ஊக்கத்தொகைகள் மற்றும் வரி விலக்குகள் ஜூலை 7 திகதியிட்ட அதிவிசேட வர்த்தமானி (2339/31 மற்றும் 2339/32) மூலம் அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ளன. கொழும்புத் துறைமுக நகரத்துக்கான 2023இன் முதன்மை நோக்கம் அபிவிருத்தியாளர்கள், குடியிருப்பாளர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் சுற்றியுள்ள சமூகம் உட்பட அனைத்து பங்குதாரர்களுக்கும் பயனளிப்பதாகும். இந்த ஒழுங்குமுறைகள் கொழும்புத் துறைமுக நகரத்துக்குள் உள்ள அனைத்து நிலப்பரப்புகளிலும் வளர்ச்சியின் தன்மை, கட்டிட உயரம் மற்றும் ஒட்டுமொத்த கட்டுமான கட்டமைப்புக்கான வழிகாட்டுதல்களை நிறுவுகின்றன. அவை ஒரு முக்கிய திட்டமிடல் கருவியாக செயற்படுவதுடன் ஒத்திசைவான மற்றும் ஒழுங்கான வளர்ச்சியை உறுதி செய்கின்றன.

2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்துக்கு இணங்க முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர், கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு மற்றும் சம்பந்தப்பட்ட ஒழுங்குமுறை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து 2023 ஆம் ஆண்டு ஜூலை 07 ஆம் திகதி ஒழுங்குமுறைகளை வெளியிட்டார். அதில் போர்ட் சிட்டிக்குள் அமைக்கப்படும் நிறுவனங்களுக்கு சலுகைகள் மற்றும் வரி விலக்குகள் கிடைக்கும். நான் இந்தக் கட்டுரையில் வரிச் சலுகைகள் தொடர்பான வர்த்தமானி எண் 2339/32 இன் முக்கிய அம்சங்களை தொகுத்துள்ளேன்.

### மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு முதன்மை வணிகத்திற்கு – FOR A PRIMARY BUSINESS OF STRATEGIC IMPORTANCE

அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகாரப் பகுதியில் மற்றும் அதிலிருந்து வியாபாரத்தில் ஈடுபட்டு ஒரு நிலத்தை குத்தகைக்கு எடுத்து அபிவிருத்தி செய்வதற்கு முதலீடு செய்து பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்வதன் மூலம் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு ‘முதன்மை’ வணிகமாக நியமிக்கப்பட்டு கொழும்புத் துறைமுக நகரத்தில் சலுகைகள் மற்றும் வரி விலக்குகள் அனுபவிப்பதற்கு தகைமை உள்ளவராக அடையாளம் காணப்படுவர்.

வணிகங்கள் ஒரு நிலப்பரப்புக்கு குறைந்தபட்சம் $100 மில்லியன் முதலீடு செய்தல் வேண்டும், அல்லது துணைப்பிரிவு செய்யப்பட்ட நிலப்பரப்பில் ஒரு குறிப்பிட்ட பகுதியை முதலீடு செய்தல் வேண்டும். அல்லது




வணிகங்கள் மெரினாவுக்காக குறைந்தபட்சம் $25 மில்லியன் முதலீடு செய்தல் வேண்டும் (கொழும்புத் துறைமுக நகரத்தில் மெரினா வர்த்தக நிலப் பயன்பாடு மற்றும் மெரினா வசதி நிலப் பயன்பாட்டுக்காக நியமிக்கப்பட்ட நிலங்கள்) அல்லது சமூக உட்கட்டமைப்பு (கல்வி, கலாசார மற்றும் சுகாதாரப் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்ட நில அடுக்குகள் மற்றும் கொழும்பு துறைமுக நகரத்தில் அமைந்துள்ள மாநாட்டு மைய நிலப் பயன்பாடு).

மூலோபாய முக்கியத்துவத்தின் முதன்மை வணிகமாக வடிவமைக்கப்பட்ட வணிகமானது பின்வரும் திட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விலக்குகள் அல்லது ஊக்கத்தொகைகளுக்கு உரிமையுடையது:

கீழே உள்ள இணைப்பு 1இல் பட்டியலிடப்பட்டுள்ள வரிகளிலிருந்து 25 ஆண்டுகள் விலக்குகள் மற்றும் 25 ஆண்டுகள் முடிவடைந்ததைத் தொடர்ந்து உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ் 10 ஆண்டு மதிப்பீட்டின் காலத்திற்குப் பொருந்தும் நேரடி வருமான வரி விகிதங்களில் 50% குறைப்பு.

உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் நான்காவது அட்டவணைக்கு இணங்க கணக்கிடப்பட்ட மூலதன கொடுப்பனவுக்கு மேலதிகமாக மதிப்பிடப்பட்ட வருடத்தின் போது கொழும்புத் துறைமுக நகரத்துக்குள் பயன்படுத்தப்படும் அருவ சொத்துக்கள் தவிர்ந்த ஏனைய தேய்மான சொத்துக்களுக்கு 300% மூலதன கொடுப்பனவைப் பெறமுடியும். மேம்படுத்தப்பட்ட மூலதன கொடுப்பனவுகள் கோரப்பட்டு அது நிவாரணமடையாத இழப்பை விளைவித்தால் அத்தகைய நிவாரணமில்லாத இழப்பை 40 ஆண்டுகளில் வருமானத்தில் கழிக்க முடியும். மேலும், அத்தகைய முதன்மை வணிகம் 25 ஆண்டுகளுக்கு உள்நாட்டு இறைவரிச் சட்டம் அல்லாத பிற இணைப்பு 1 இல் பட்டியலிடப்பட்டுள்ள வரிகளிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

கொழும்புத் துறைமுக நகரத்தில் உள்ள வணிகங்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு விலக்கு அல்லது ஊக்கத் திட்டங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம் என்று வர்த்தமானி குறிப்பிடுகிறது. தேர்வு செய்யப்பட்டு போர்ட் சிட்டி கமிஷனுக்குத் தெரிவிக்கப்பட்டதும் பின்னர் அதனை மாற்ற முடியாது.

### மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வணிகத்திற்காக SECONDARY BUSINESS OF STRATEGIC IMPORTANCE

கொழும்புத் துறைமுக நகரத்துக்குள் குறிப்பிட்ட, நியமிக்கப்பட்ட வணிக நடவடிக்கைகளில் ஈடுபடும் அங்கீகரிக்கப்பட்ட நபர்கள், மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த ‘இரண்டாம் நிலை’ வணிகங்களாகக் கருதப்படுவார்கள்.

நியமிக்கப்பட்ட வணிக நடவடிக்கைகளில் பின்வருவன அடங்கும்:

- சர்வதேச வர்த்தகத்தில் உலகளாவிய மற்றும் பிராந்தியப் பொருளாதார நடவடிக்கை
- கப்பல் தளபாட செயற்பாடுகள்
- வெளி, வணிக வங்கி மற்றும் நிதி செயற்பாடுகள்
- தகவல் தொழில்நுட்பம்
- வணிகச் செயன்முறை அவுட்சோர்சிங்
- கூட்டிணைக்கப்பட்ட பல்தேசிய வணிக நிறுவன தலைமையக செயற்பாடுகள்
- பிராந்திய விநியோக செயற்பாடுகள்
- சுற்றுலா மற்றும் துணை சேவைகள்
- கண்டுபிடிப்பு Innovation
- தொழில்முனைவு
- பொழுதுபோக்கு
- வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்
- நிலையான வளர்ச்சி
- குடியிருப்பு சமூகத்தின் குடியேற்றத்தில் நகர்ப்புற வசதி நடவடிக்கைகள்

மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வணிகமாக தகுதி பெற அங்கீகரிக்கப்பட்ட நபர் பின்வரும் அளவுகோல்களில் ஏதேனும் ஒன்றினைப் பூர்த்தி செய்ய வேண்டும்:

அங்கீகரிக்கப்பட்ட நபர் அல்லது அவரது தலைமை நிறுவனத்தின் வருடாந்த உலகளாவிய வருவாய் $50 மில்லியனுக்கும் அதிகமாக இருக்க வேண்டும்.

கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகாரப் பகுதிக்குள் 5 வருடங்களுக்குள் குறைந்தபட்சம் 100 ஊழியர்களை பணியமர்த்த வேண்டும்.

உரிமம் பெற்ற 5 ஆண்டுகளுக்குள் குறைந்தபட்சம் $500,000 நிறுவன மதிப்பீட்டைக் கொண்ட தொடக்க அல்லது வளர்ச்சி நிலை வணிகம்.

புத்தாக்கம், அறிவுப் பரிமாற்றம், தொழில்நுட்ப பரிமாற்றம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு அல்லது கொழும்புத் துறைமுக நகரத்துக்குள் சர்வதேச நிதி மையத்தை உருவாக்குவதற்கான உத்வேகத்தை உருவாக்குவதன் மூலம் இலங்கையின் பொருளாதாரம் மற்றும் சமூக அபிவிருத்திக்கு வணிகம் பங்களிக்கிறது என்பதை ஆணைக்குழுவிடம் நிரூபிக்க வேண்டும்.

மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வணிகங்கள் என வகைப்படுத்தப்பட்ட வணிகங்கள் கீழே உள்ள இணைப்பு 1இல் பட்டியலிடப்பட்டுள்ள வரிச் சட்டங்களால் வழங்கப்படும் விலக்குகள் அல்லது சலுகைகளுக்குத் தகுதியுடையவை. இந்தச் சலுகைகள் வர்த்தமானி வெளியிடப்பட்ட நாளிலிருந்து 25 ஆண்டுகளுக்குப் பொருந்தும்.

குறிப்பு: ஒழுங்குமுறை விதிகளின் கீழ் விலக்குகள் மற்றும் ஊக்கத்தொகைகளைப் பெறுவதற்கு, அங்கீகரிக்கப்பட்ட நபரை மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை வணிகமாகவோ அல்லது மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வணிகமாகவோ வெளியிடப்பட்ட நாளிலிருந்து 2 ஆண்டுகளுக்குள் நியமிக்கப்பட வேண்டும் என்று விதிமுறைகள் குறிப்பிடுகின்றன.

### இணைப்பு 1

***The Inland Revenue Act, No. 24 of 2017 உள்நாட்டு இறைவரிச் சட்டம், 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கம்***

***The Value Added Tax Act, No. 14 of 2002 பெறுமதி சேர் வரிச் சட்டம், 2002 இன் எண். 14***

***The Finance Act, No. 11 of 2002 நிதிச் சட்டம், 2002 இன் எண். 11***

***The Finance Act, No. 5 of 2005 நிதிச் சட்டம், 2005 இன் எண். 5***

***The Excise (Special Provisions) Act, No. 13 of 1989 கலால் (சிறப்பு விதிகள்) சட்டம், 1989 இன் எண். 13***

***The Customs Ordinance (Chapter 235) சுங்கச் சட்டம் (அத்தியாயம் 235)***

***The Ports and Airports Development Levy Act, No. 18 of 2011 துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் மேம்பாட்டு வரிச் சட்டம், 2011 இன் எண். 18***

***The Sri Lanka Export Development Act, No. 40 of 1979 இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம், 1979 இல 40***

***The Betting and Gaming Levy Act, No. 40 of 1988 பந்தயம் மற்றும் கேமிங் லெவி சட்டம், 1988 இன் எண். 40***

***Termination of Employment of Workmen (Special Provisions) Act, No. 45 of 1971 வேலையாட்களை பணிநீக்கம் செய்தல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம், 1971 இன் எண். 45***

***The Entertainment Tax Ordinance (Chapter 267) கேளிக்கை வரி ஆணை (அத்தியாயம் 267)***

***The Foreign Exchange Act, No. 12 of 2017 அந்நியச் செலாவணிச் சட்டம், 2017 இன் எண். 12***

***Casino Business (Regulation) Act, No. 17 of 2010. கேசினோ வணிக (ஒழுங்குமுறை) சட்டம், 2010 இன் எண். 17.***

# இந்திய தேர்தல் நெருங்கும் வேளையில் தூசுதட்டப்படும் இலங்கை விவகாரம்!

**இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பன்னெடுங்காலமாக நெருக்கமான தொடர்புகள் நிலவி வருகின்றன. அரசியல், கலாசாரம், பொருளாதாரம், கல்வி எனப் பல்வேறு விடயங்களில் இரு நாடுகளுக்கும் இடையில் ஒத்துழைப்புக்கள் நீடித்து வருகின்றன. இலங்கையிலோ அல்லது இந்தியாவிலோ யார் ஆட்சிக்கு வந்தாலும் இரு நாட்டுக்கும் இடையிலான உறவுகளில் பாரிய மாற்றங்கள் எதுவும் ஏற்படுவதில்லை.**



குறிப்பாக இந்தியாவின் மத்தியில் ஆட்சிக்கு வரும் கட்சி எதுவாக இருந்தாலும் அதாவது பாரதீய ஜனதாக் கட்சியாக இருந்தாலும் சரி, காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் சரி இலங்கையுடன் நெருக்கமான உறவுகளைப் பேணுவதில் பொதுவான நிலைப்பாட்டையே பேணி வருகின்றன. மத்திய அரசாங்கத்தில் மாத்திரமன்றி தமிழகத்தில் ஆட்சிக்கு வரும் கட்சிகளும் இலங்கை விவகாரத்தில் குறிப்பாக வடக்கு, கிழக்குத் தொடர்பில் எப்பொழுதும் அக்கறை காண்பித்தே வந்துள்ளன.

அந்த அடிப்படையில் பார்க்கும்போது இலங்கை விவகாரத்தில் எப்பொழுதும் இந்தியாவுக்கு நலனுடன் கூடிய அக்கறை இருப்பதை மறுக்க முடியாது. இருந்தாலும் தமிழகத்தில் நடைபெறக் கூடிய சட்டமன்றத் தேர்தல் காலத்திலும், இந்திய பொதுத் தேர்தல் காலத்திலும் இலங்கை விவகாரம் அதிகம் பேசப்படுவது வழமையாகிப் போயுள்ளது.

## இலங்கைத் தமிழர்கள், இந்திய மீனவர்கள் மீதான கரிசனையை முன்னிலைப்படுத்தி இந்திய அரசியல் கட்சிகள் பிரசாரம்!





இந்த வரிசையில் இந்திய நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் 2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு இலங்கைப் பிரச்சினைகள் மீண்டும் இந்திய அரசியலில் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன. இந்தியாவின் மத்தியில் ஆட்சி நடத்திவரும் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க அரசாங்கம் மூன்றாவது தடவையும் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான பிரசாரங்களை முடுக்கிவிட்டுள்ளது. மறுபக்கத்தில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணியும் தமது பிரசாரங்களை ஆரம்பித்துள்ளது.

இந்த நிலையில் கடந்த சில வாரங்களாக இலங்கை விவகாரத்தை பா.ஜ.க தனது அரசியல் மேடைகளில் பயன்படுத்தத் தொடங்கியிருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இந்திய உட்துறை அமைச்சரும், பா.ஜ.கவின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவருமான அமித்ஷா இலங்கையில் நடைபெற்ற இறுதி யுத்தம் குறித்து தமிழ்நாட்டில் வைத்துத் தெரிவித்த கருத்து பெரும் விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளது.

இலங்கையில் இறுதி யுத்தம் இடம் பெற்றபோது இந்தியாவில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசாங்கம் ஆட்சி நடத்தியிருந்ததுடன், கலைஞர் கருணாநிதி தலைமையிலான தி.மு.க தமிழகத்தில் ஆட்சி நடத்திக் கொண்டிருந்தது. இவர்கள் ஆட்சியில் இருக்கும்போதே இலங்கையில் இறுதி யுத்தம் இடம்பெற்றதாகவும், இதில் இழப்புக்கள் ஏற்பட்டதாகவும் அமித்ஷா கருத்துத் தெரிவித்திருந்தார். இந்தக் கருத்துத் தொடர்பில் அரசியல் விமர்சகர்கள் பல்வேறு விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

நிலைமை இவ்வாறிருக்கையில், தமிழகத்தில் தி.மு.க காங்கிரஸ் கூட்டணியைத் தோற்கடிக்கும் விதத்திலேயே அவர்கள் மீது குற்றம் சுமத்தும் வகையிலான இந்தக் கருத்தை அமித்ஷா கூறியிருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

மறுபக்கத்தில், தமிழகத்திற்கான பா.ஜ.க தலைவரான அண்ணாமலையும் இலங்கைத் தமிழ் மக்கள் குறித்த கரிசனையுடனான கருத்துக்களை முன்வைத்து வருகின்றார். கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பிரித்தானியாவுக்குச் சென்றிருந்த அண்ணாமலையை பிரித்தானியாவில் உள்ள புலம்பெயர்ந்த இலங்கையர்களின் அமைப்புக்கள் சந்தித்து தமிழர் விவகாரம் பற்றியும், இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் பற்றியும் கலந்துரையாடியிருந்தன. இவ்விடயத்தில் இந்தியா பூரண ஒத்துழைப்பு வழங்கும் என்ற உறுதிமொழியையும் அண்ணாமலை வழங்கியிருந்தார்.

இவ்வாறான பின்னணியில் இந்தியப் பொதுத்தேர்தலுக்கான பிரசாரங்கள் அந்நாட்டின் சகல மாநிலங்கலிலும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன், தமிழகத்தில் முன்னெடுக்கப்படும் பிரசாரங்களில் இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு வழங்குவது, இலங்கை இந்திய மீனவர் விவகாரம் உள்ளிட்ட விடயங்கள் அதிகம் பேசுபொருளாகியுள்ளன.

இதுபோன்று இலங்கை விவகாரம் அதிகம் பேசப்பட்ட சந்தர்ப்பமாக கடந்த தமிழக சட்டமன்றத் தேர்தல் களத்தைக் குறிப்பிட முடியும். தமிழகத்தில் தற்பொழுது ஆட்சிசெய்யும் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க கூட்டணி தமது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் இலங்கைத் தமிழர் விவகாரத்தைப் பற்றியும் அதற்காக தாம் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகள் பற்றியும் பிரஸ்தாபித்திருந்தது. இதுபோன்ற இலங்கை விவகாரம் இந்தியாவின் தேர்தல்களிலும், ஆட்சிக்கு வரும் கட்சிகளிடையேயும் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

பிரதான கட்சிகள் மாத்திரமன்றி தமிழகத்தில் உள்ள ஏனைய கட்சிகளும் இலங்கை விவகாரத்தைத் தேர்தல்களின் போது துரும்பாகப் பயன்படுத்தி வருகின்றன. குறிப்பாக சீமான் போன்ற தமிழகத்தில் உள்ள அரசியல் தலைவர்கள் இலங்கைத் தமிழர் பிரச்சினையை முன்னிலைப்படுத்தியே தமது தேர்தல் பிரசாரங்களை முன்னெடுப்பது வழமையான போக்காக உள்ளது. இந்த அரசியல் போக்கு 2024 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலிலும் பிரதிபலிப்பதாகவே அமைந்துள்ளது.

இந்தியாவைப் பொறுத்தவரையில் இலங்கை விவகாரம் என்பது அவர்களின் அரசியலில் மிகவும் நெருக்கமானதொரு விடயம் என்பதை மறுக்க முடியாது. தேர்தல் பிரசாரங்களில் மாத்திரமன்றி அதன் பின்னரும் இலங்கை மீது இந்தியா அக்கறை காண்பிக்கத்தான் செய்கிறது. இலங்கை பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்தபோது உடனடியாக ஓடிவந்து உதவிக்கரம் நீட்டும் அயல்நாட்டு நண்பராக இந்தியாவைப் பார்க்க முடியும்.

இதற்குச் சிறந்த உதாரணமாக, கடந்த வருடம் நாடு எதிர்கொண்ட பாரிய பொருளாதார நெருக்கடியின் போது ஓரளவுக்கேனும் நாட்டை நிமிர்த்துவதற்கு இந்தியா வழங்கிய கடனுதவியே முக்கியமாக அமைந்தது. விசேடமாக எரிபொருள், எரிவாயு போன்றவற்றைப் பெற்றுக்கொள்ள மக்கள் பல நாட்களாக நீண்ட வரிசைகளில் காத்திருந்தபோது இந்தியா வழங்கிய இந்தக் கடன் உதவியினாலேயே நிலைமைகளை ஓரளவுக்குச் சமாளிக்க முடிந்தது.

## தமிழகத்தில் இலங்கை இனப்பிரச்சினை மீண்டும் தேர்தல் ஆயுதமாகியது!



இதுபோன்று கொவிட் தொற்றுநோய் ஆரம்பத்திலும் இலங்கைக்குத் தடுப்பூசிகள் உள்ளிட்ட அவசர உதவிகளை வழங்கி உதவி செய்தது இந்தியா. எனவே, இந்திய தேர்தல்களில் இலங்கை விவகாரம் பிரசாரத்துக்கான விடயமாக எடுத்துக்கொள்ளப்பட்டாலும் இலங்கை மீது இந்தியாவுக்குப் பொதுவான அக்கறையொன்று இருந்து வந்துள்ளது என்பதே நிதர்சனம்.

**பி.ஹர்ஷன்...**

# அமெரிக்காவுடன் போட்டியிடும் சீனாவின் பொருளாதாரம் படிப்படியாக வீழ்ச்சி!

**அமெரிக்க பொருளாதாரத்துடன் போட்டியிட்டு வருகின்ற சீனாவின் பொருளாதார நிலைமை நாளுக்கு நாள் வீழ்ச்சியடைந்து வருவதாக சர்வதேச பொருளாதார அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. சீனாவின் ரியல் எஸ்டேட், வங்கி நிதி நிலைமை மோசமானதைத் தொடர்ந்து ஒவ்வொரு துறையும் அதிகப்படியான பாதிப்பை எதிர்கொண்டு நிற்கின்றன. இதனால் சீனா சர்வதேச நாடுகளில் மேற்கொண்டு வருகின்ற முதலீட்டின் வேகத்தையும், அளவையும் பெரிய அளவில் குறைத்துக் கொண்டுள்ளது.**




இதேவேளையில் அமெரிக்காவின் வர்த்தகக் கட்டுப்பாடுகள் காரணமாகவும், சீனாவில் இருந்து பல நிறுவனங்கள் வெளியேறியுள்ள நிலையிலும் சீனாவின் வேலைவாய்ப்பு, உற்பத்தி, உள்நாட்டு வர்த்தகம், ஏற்றுமதி என அனைத்தும் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வருகின்றன. மூன்று வருடங்களுக்கு முன்பு மக்கள் கூட்டம் அலைமோதிய வர்த்தகத் தெருக்கள் தற்போது வெறிச்சோடிக் காணப்படுவதாக சீன மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதற்கு ஏற்றாற் போல சீனாவின் ஏற்றுமதி அளவுகள் மற்றும் அந்நிய முதலீட்டு அளவுகள் பெரிய அளவில் பாதிக்கப்பட்டு வருவதை புடம் போட்டுக் காட்டும் அளவுக்கு புள்ளிவிபரங்கள் வெளியாகியுள்ளன. இதன் மூலம் சீனா உலகின் உற்பத்தி இயந்திரம் என்ற நிலையை இழக்கின்றதா என்ற கேள்வி எழுகிறது.

சீனாவின் ஏற்றுமதி அளவுகள் கடந்த ஆண்டு ஜூலை மாதத்துடன் ஒப்பிடுகையில் ஜூலை 2023 இல் 14.5% சரிந்தன. அதே நேரத்தில் இறக்குமதி 12.4% குறைந்துள்ளது என சீன தரவுகள் காட்டுகின்றன. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி குறைந்துள்ளமையானது உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பில் ஏற்பட்ட சரிவைக் குறிக்கிறது.

பெப்ரவரி 2020 இற்குப் பிறகு உலகின் இரண்டாவது பெரிய பொருளாதார நாடான சீனாவில் இருந்து ஏற்றுமதி அளவுகள் மிகவும் மோசமாக உள்ளன. இதற்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நிலவும் மந்தமான பொருளாதார சவால் முக்கிய காரணமாகும். இதன் மூலம் சீனாவின் பொருளாதாரம் நடப்பு நிதியாண்டின் இரண்டாவது காலாண்டில் மந்தமான வேகத்தில் வளர்ந்துள்ளது. இதனைச் சரிசெய்ய கடந்த மாதம் நடந்த சீன அரசின் உயர்மட்ட நிர்வாக குழுவான பொலிட் பீரோ கூட்டத்தில் கொள்கை ஆதரவை உறுதியளிக்கவும் சாதகமானதாகவும் மாற்றவும் நிர்பந்தம் செய்தது.

சீனாவில் புதிய வெளிநாட்டு முதலீடுகள் 25 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிகவும் குறைந்த அளவீட்டை ஜூலை காலாண்டில் பதிவாகியுள்ளன. புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் பொருளாதாரத்தின் மந்தமான வளர்ச்சி ஆகியவை எந்த அளவுக்கு பாதிக்கும் என்பதை இந்த முதலீடுகள் காட்டுகின்றன.

ஏப்ரல் ஜூன் காலகட்டத்தில் சீனாவில் நேரடி அந்நிய முதலீட்டு அளவுகள் வெறும் 4.9 பில்லியன் டொலர்களாக சரிந்துள்ளன. இது கடந்த ஆண்டின் ஜூலை காலாண்டுடன் ஒப்பிடுகையில் 87 சதவீதம் குறைவானதாகும். 1998 வரையிலான தரவுகளில் இந்த வருடம் ஜூலை காலாண்டில் தான் மிகவும் குறைவான தொகையை அந்நிய முதலீடாக ஈர்த்துள்ளது சீனா.

இந்தியாவின் மிகப்பெரிய பேமெண்ட் மற்றும் பின்டெக் சேவை நிறுவனமான பேடிஎம்ன் அதிகப்படியான பங்குகள் சீனாவின் அலிபாபா பிடியில் இருப்பது பெரும் பிரச்சினையாக இருந்து வரும் வேளையில், இது பங்குச்சந்தை முதலீட்டாளர்கள் இந்நிறுவனத்தில் முதலீடு செய்யும்போது கவனிக்கும் முக்கியமான விஷயமாகவே இருந்து வந்தது. இந்த நிலையில் சீனாவின் முன்னணி ஈகாமர்ஸ் தளமான அலிபாபாவின் நிதியியல் சேவை பிரிவான Ant Group வைத்திருக்கும் பேடிஎம்ன் தாய் நிறுவனமான One 97 Communicationsன் 44 சதவீத பங்குகளை பேடிஎம் நிறுவனர் விஜய் சேகர் ஷர்மா கைப்பற்றியுள்ளார். இதன் மூலம் பேடிஎம்ல் சீன நிறுவனத்தின் ஆதிக்கம் குறைந்துள்ளது.

இந்த நிலையில் அமெரிக்காவின் மிகப் பெரிய முதலீட்டு சேவை நிறுவனமான மார்கன் ஸ்டான்லி இந்திய சந்தைகளின் தரத்தை Equal Weight என்பதில் இருந்து OverWeight ஆக உயர்த்தியுள்ளது. இது இந்திய சந்தைக்கு மிகவும் சாதகமான விஷயமாக இருந்தாலும் இந்தச் சூழ்நிலையில் மோர்கன் ஸ்டான்லி ரேட்டிங்ஐ வைத்து வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்க முடியுமா என்பது பெரும் சந்தேகம். மோர்கன் ஸ்டான்லி இந்தியாவின் ரேட்டிங்ஐ உயர்த்திவிட்டு, மறுமுனையில் சீனாவின் ரேட்டிங்ஐ OverWeight இல் இருந்து Equal Weight ஆகக் குறைத்துள்ளது. இதன் மூலம் வளரும் நாடுகள் சந்தையில் மிகவும் விரும்பத்தக்க சந்தையாக இந்தியா 6 ஆவது இடத்தில் இருந்து முதல் இடத்திற்கு உயர்ந்துள்ளது.







## வளரும் நாடுகள் சந்தையில் மிகவும் விரும்பத்தக்க சந்தையாக இந்தியா 6 ஆவது இடத்தில் இருந்து முதல் இடத்திற்கு உயர்வு!

இதைவிட முக்கியமாக சீனாவின் பொருளாதார, வர்த்தக நிலைமை தற்போது மிகவும் மோசமாக உள்ளது. உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் பெரும் பாதிப்பை எதிர்கொண்டு வருவதை பார்க்கும் போதும் இந்தியாவின் வர்த்தகம் மற்றும் உற்பத்தி சூழல் சிறப்பாக உள்ளது. இதனை மையமாக கொண்டும் சீனாவின் ரேட்டிங்ஐ குறைத்து இந்தியாவின் ரேட்டிங்ஐ உயர்த்தியுள்ளது.

**எஸ்.சாரங்கன்...**

# தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு நீண்ட காலத்தின் பின்னர் ஒரு சந்தர்ப்பம்!

## ஜனாதிபதியின் அழைப்புக்கு அரசியல் கட்சிகள் ஒத்துழைப்பு வழங்குமா?




**நாட்டில் தற்பொழுது நடைமுறையில் உள்ள அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் அழைப்பு விடுத்துள்ளார். தேசியப் பிரச்சினைக்குத் தீர்வாக 13 ஆவது திருத்தத்தில் முன்மொழியப்பட்டுள்ளவாறு அதிகாரப் பகிர்வொன்றை நோக்கிச் செல்வது அவரின் முன்மொழிவாகக் காணப்படுகிறது.**



பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் நாட்டைப் பொறுப்பேற்றுக் கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பம் தொட்டே தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி வருகின்றார். ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் கடந்த டிசம்பர் மாதம் முதன் முதலில் கூட்டியிருந்த சர்வகட்சி மாநாட்டில், ஜனாதிபதி என்ற ரீதியில் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவது பற்றிப் பிரஸ்தாபித்திருந்தார். இதனையடுத்து தமிழ்க் கட்சிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளிலும் இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டு வந்தது.

இவ்வாறான பின்னணியில் அண்மையில் இந்தியாவுக்குச் சென்று திரும்பியிருந்த ஜனாதிபதி, மீண்டும் ஒருமுறை சர்வகட்சி மாநாடொன்றை நடத்தி அதில் 13 ஆவது திருத்தத்தை பொலிஸ் அதிகாரங்கள் தவிர ஏனையவற்றை நடைமுறைப்படுத்துவது என்ற தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியிருந்தார். இது பற்றிப் பாராளுமன்றத்தில் முன்மொழிவொன்றை மேற்கொள்ளப் போவதாகக் கூறியிருந்த அவர், கடந்த புதன் கிழமை பாராளுமன்றத்தில் தனது நிலைப்பாட்டை முன்வைத்தார்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்தச்சட்டமூலம் செயற்பாட்டுக்கு வந்த பின்னர் பல்வேறு ஜனாதிபதிகள் ஆட்சி செய்திருந்தாலும் இதுவரை எவரும் எடுக்காத முயற்சியொன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துள்ளார் என்பதை எவரும் மறுக்க முடியாது.



இருந்தபோதும் மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிரும் விடயத்தில் பல்வேறு கட்சிகளுக்கு சந்தேகங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்வது பற்றி தேவையற்ற சந்தேகங்களை அவர்கள் மக்கள் மத்தியில் ஏற்படுத்துகின்றனர்.

இது அவர்களின் அரசியல் இருப்புக்கான கோஷம் என்பது ஒருபுறம் இருந்தாலும், இதனை முன்னிலைப் படுத்தியே ஜனாதிபதியின் இந்த முயற்சிக்கு அவர்கள் எதிர்ப்பினைத் தெரிவித்து வருகின்றனர்.

இது தொடர்பில் ஜனாதிபதி கூறியிருப்பதாவது:

'13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ், மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்குவதில் பொலிஸ் அதிகாரங்கள் மிகவும் உணர்வுபூர்வமான விடயமாக மாறியுள்ளன. எனவே ஏனைய அதிகாரங்கள் தொடர்பில் முதலில் நாம் உடன்பாட்டிற்கு வருவது மிகவும் நடைமுறைச் சாத்தியமானதாக இருக்கும் என்று கருதுகிறேன். நாம் கட்டம் கட்டமாக இதனைத் தொடரலாம்.

உணர்வுபூர்வமான விடயங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டால், எந்த ஒருமித்த கருத்தையும் அடைவது கடினமாக இருக்கலாம். நாம் இறுதியில் இருந்து தொடங்காமல் ஆரம்பத்திலிருந்து தொடங்குவோம். எனவே முதலில் ஏனைய அதிகாரங்களை பரவலாக்குவது பற்றிப் பேசி, பொதுவான உடன்பாட்டை எட்டுவோம். அதிகாரப் பரவலாக்கம் தொடர்பான தென்பகுதி முதலமைச்சர்களின் அறிக்கையையும் நாம் அடிப்படையாக எடுத்துக் கொள்ளலாம்.'

**13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் என்பது வடக்கு, கிழக்கு மக்களின் அரசியல் உரிமைகளுக்காக மாத்திரம் கொண்டு வரப்படவில்லை என்பதே உண்மை. எனவே தென்னிலங்கை அரசியல் கட்சிகள் பெரும்பான்மை மக்களுக்கு வீண்அச்சம் ஊட்டுவது அர்த்தமற்ற செயல்!**

இவ்வாறு ஜனாதிபதி கூறியிருந்தார். ஜனாதிபதியின் இந்தக் கருத்து மிகவும் நடைமுறைச் சாத்தியமானதாகும். ஆரம்பத்திலேயே சர்ச்சைக்குரிய விடயங்களை முன்னிலைப்படுத்துவது அடுத்தகட்ட நகர்வுகளுக்கு முட்டுக்கட்டையாகவே இருக்கும்.

ஜனாதிபதியின் இந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்குத் தேவையான பின்னணியை உருவாக்கும் வகையில், பல சட்டமூலங்களை பாராளுமன்றத்தில் முன்வைக்கவும், பல புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அவர் முன்மொழிந்துள்ளார். இதற்கு அமைய பிரதேச செயலாளர்கள் நியமனம், கல்வி தொடர்பான சேவைகளை நடைமுறைப்படுத்தத் தேவையான அதிகாரத்தை மாகாண சபைக்கு வழங்குதல், மாகாண சபை பட்டியல் அட்டவணை 3, உபஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைக் கல்வி தொடர்பான அனைத்து அதிகாரங்களையும் செயற்படுத்துதல், தொழில் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி நடவடிக்கைகள் தொடர்பான சேவைகளுக்காக மாகாண மட்டத்தில் சபைகளை நிறுவுதல், பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கு மாகாண சபைகளுக்கு அதிகாரமளித்தல், விவசாயப் புத்தாக்கம் மற்றும் கீழ்மட்டத்திலான அனைத்து விவசாய சேவைகளையும் வழங்க மாகாண சபைகளுக்கு அதிகாரமளித்தல், மாகாண சுற்றுலா மேம்பாட்டு சபைகளை நிறுவுதல், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கைத்தொழில்கள் தொடர்பான வரையறையை ரூ. 4 மில்லியனில் இருந்து ரூ. 250 மில்லியனாக உயர்த்த கைத்தொழில்கள் சட்டத்தில் திருத்தங்களைச் சேர்த்தல், மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட சில பணிகள் இன்னமும் மத்திய அரசாங்கத்தின் கீழ் மேற்கொள்ளப்படுவதால் அந்தத் தவறை திருத்துதல், 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின்படி மாவட்ட அபிவிருத்தி சபைகளை நிறுவுதல் போன்ற முன்மொழிவுகள் ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்டுள்ளன.




"தற்போது அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மத்திய அரசாங்கத்தின் அதிகாரப் பட்டியல், மாகாண சபை அதிகாரப் பட்டியல், ஒருங்கிணைந்த பட்டியல் ஆகியவற்றை மீளாய்வு செய்து, தேவையான திருத்தங்களைச் சமர்ப்பிக்க பிரதமர் தலைமையில் குழுவொன்றை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம். இதற்காக பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளின் ஆதரவும் பெறப்படும்" என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் அனைத்தையும் ஒன்றிணைத்துக் கொண்டு இந்த செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும் என்பதில் அவர் தொடர்ந்தும் உறுதியாக இருந்து வருகின்றமை பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்பட்டுள்ளது.

தேசியப் பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வின் ஊடாகத் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பது குறித்து இதற்கு முன்னர் பதவியில் இருந்த ஜனாதிபதிகள் அனைவரும் பேசியுள்ளனர். விசேடமாக இந்நாட்டில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இனப்பிரச்சினைக்குத் தீர்வாக 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் அதிகாரப் பகிர்வு வழங்கப்படும் என அப்போதைய ஐ.நா செயலாளர் நாயகம் பான்கீ மூனுக்கு உறுதியளித்திருந்தார்.



இவ்வாறு உறுதி அளிக்கப்பட்ட போதும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகள் பெரிதாக முன்னெடுக்கப்படவில்லை.

அதற்கு முன்னர் ஆட்சியிலிருந்த சந்திரிகா பண்டாரநாயக்கவும் சுனாமி பேரலைத் தாக்கத்தின் பின்னர் அதிகாரப் பகிர்வு முயற்சியொன்றை எடுத்திருந்தாலும் அது வெற்றியளித்திருக்கவில்லை.

இவ்வாறான பின்னணியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்த முயற்சி குறிப்பிடத்தக்கதாக அமைந்துள்ளது.

உண்மையில் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் என்பது வடக்கு, கிழக்கு மக்களுக்காக மாத்திரம் கொண்டுவரப்பட்டதொன்று அல்ல. அப்போது பாராளுமன்றத்தில் பெரும்பான்மையாக இருந்த கட்சியினால் நிறைவேற்றப்பட்டதொன்றாகும்.

ஆரம்பத்தில் பல்வேறு கட்சிகள் மாகாண சபை முறைமையை எதிர்த்திருந்தாலும் பின்னர் அவனைவரும் அதில் பங்கெடுத்திருந்தனர். வடக்கு, கிழக்கு அரசியல் தலைவர்களைப் பொறுத்த வரையில் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வாக அதிகாரப் பகிர்வு முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை பல வருடங்களாக முன்வைக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறான பின்னணியில் ஜனாதிபதி தற்பொழுது அதிகாரப் பகிர்வொன்றுக்கு தயார் என்ற சாதகமான நிலைப்பாட்டைத் தெரிவித்திருப்பதால் இச்சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திக்கொள்ள அவர்கள் முன்வரவேண்டும். இவ்விடயத்தை அரசியல் நோக்கத்துடன் பார்க்காமல் நாட்டின் தேசிய முன்னேற்றத்துக்கான ஆரம்பப் படியாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் நாட்டில் இனஐக்கியத்தை விரும்புவோரின் விருப்பமாக உள்ளது.

ஜனாதிபதி ஆரம்பித்துள்ள இந்த முயற்சிக்குப் பிரதான எதிர்க்கட்சி தனது ஒத்துழைப்பை வழங்கத் தயார் என்பதைப் பகிரங்கப்படுத்தியுள்ளது. இருந்தபோதும் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற விடயத்தை அக்கட்சி வலியுறுத்தியுள்ளது. பிரதான எதிர்க்கட்சி மாத்திரமன்றி பல்வேறு கட்சிகளும் இதனை வலியுறுத்தியுள்ளன. மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு அதற்கான சட்டம் திருத்தப்பட வேண்டியுள்ளது.

மாகாண சபைகள் தொடர்பான சட்டங்களை மீளாய்வு செய்து புதிய சட்டங்களை நிறைவேற்றிய பின்னர், பாராளுமன்றம் உடன்படுமானால் மாகாண சபை தேர்தல் சட்டம் திருத்தத்திற்கு தயாராக உள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

அத்துடன், மாவட்ட விகிதாசார முறையின் கீழ் தேர்தலை நடத்தவும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மாகாண சபைகளுக்கு போட்டியிடும் உரிமையை வழங்கவும், 25 வீதம் அல்லது கூடுதலான பெண் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கவும் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் தொடர்பில் கலந்துரையாடி இணக்கப்பாட்டுக்கு வந்த பின்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

எவ்வாறு இருந்தபோதும் தேசிய பிரச்சினைக்குத் தீர்வுகாணக்கூடிய அதிகாரப் பகிர்வு விடயம் ஒருபுறம் முன்னெடுத்துச் செல்லப்பட மறுபக்கத்தில் தேர்தல்களை நடத்துவதற்கான முயற்சிகளும் முடுக்கிவிடப்பட வேண்டும் என்றே பெரும்பாலான அரசியல் கட்சிகள் கருதுகின்றன.

**'சர்ச்சைக்குரிய உணர்வுபூர்வமான விடயங்களுக்கு முன்னுரிமை அளித்தால், ஒருமித்த இணக்கப்பாட்டை அடைவது கடினம்; சாத்தியப்பாடான விடயங்களுக்கு முதலில் முன்னுரிமை அளித்து இணக்கப்பாட்டை எட்டுவதே உகந்தது'**

# பேராசிரியர் மு. இளங்கோவன் தமிழ் விக்கி தூரன் விருது பெற்றார்!





தமிழ் ஆய்வுப்புலத்தில் தொடர்ந்து இயங்கி, சாதனைகள் படைக்கும் தமிழ் ஆராய்ச்சியாளர்களுக்குத் தமிழ் விக்கி தூரன் விருது, விஷ்ணுபுரம் இலக்கியவட்டம் சார்பில் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டுக்கான தமிழ் விக்கி தூரன் விருதுக்குப் புதுச்சேரிப் பேராசிரியர் மு. இளங்கோவன் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். இவர் புதுவை அரசின் காஞ்சி மாமுனிவர் அரசு பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் தமிழ்த்துறையில் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார். ஈரோட்டில் அண்மையில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் எழுத்தாளர் ஜெயமோகன், சூழலியல் அறிஞர் சு. தியடோர் பாஸ்கரன், மலையாளத் திறனாய்வு வல்லுநர் பி. கே. இராஜசேகரன் ஆகியோர் இணைந்து மு. இளங்கோவனுக்குத் தமிழ் விக்கி தூரன் விருதினை வழங்கினர். இரண்டு இலட்சம் ரொக்கப்பரிசு, நினைவுச் சிற்பம், பாராட்டிதழ் ஆகியன வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருது சிவசங்கருக்கு வழங்கப்பட்டது.

இரண்டு நாள் நடைபெற்ற விழாவில் மு. இளங்கோவனின் எழுத்துப்பணி, ஆவணப்படப் பணி, கணனி, இணையத்துறையில் செய்துள்ள பணிகள், நூலாக்கப் பணிகள், நாட்டுப்புறவியல் ஆய்வுகள் குறித்து கலந்துரையாடல்கள் நடைபெற்றன. இவர் உருவாக்கிய இரண்டு ஆவணப்படங்களின் சுருக்கப்பட்ட வடிவம் விழாவில் திரையிடப்பட்டன. தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் பலர் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

கே.பொன்னுத்துரை



யாழ். கீரிமலை நல்லிணக்கபுரம் கிராம மக்களின் குடிநீர்ப் பிரச்சனையை தீர்த்துவைக்கும் நோக்குடன் கனடாவில் வசிக்கும் இராசா பாலேந்திரன், சித்திரா ஆகியோரின் நிதி உதவியுடன் குழாய்க்கிணறொன்று அமைத்துக்கொடுக்கப்பட்டது. இதற்கான ஏற்பாட்டை முன்னாள் யாழ். மாநகர சபை உறுப்பினரும் யாழ். தேசோதயத் தலைவருமான தேசமான்ய லயன் கலாநிதி நா.தனேந்திரன் செய்திருந்ததுடன் குழாய்க் கிணற்றை மக்கள் பாவனைக்கு கையளித்த போது பிடிக்கப்பட்ட படம்.

படம் – வேலணை குறூப் நிருபர்

# Dialog Axiata தொடர்ந்து 5வது வருடமாக இலங்கையின் மிகவும் மதிப்புமிக்க வர்த்தக நாமமாக Brand Finance இனால் தரநிலைப்படுத்தப்பட்டுள்ளது

உலகின் முன்னணி சுயாதீன வர்த்தக நாம மதிப்பீட்டு ஆலோசனை நிறுவனமான Brand Finance தனது 20வது வருடாந்த ஆய்வில் 'இலங்கையின் மிகவும் மதிப்புமிக்க வர்த்தகநாமம்' எனும் மேன்மைமிகு பட்டத்தை நாட்டின் முன்னணி தொலைத்தொடர்பு இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி இற்கு ரூ. 52 பில்லியன் வர்த்தக நாம பெறுமதியுடன் தொடர்ந்து ஐந்தாவது முறையாகவும் வழங்கி கௌரவித்துள்ளது. அதற்கமைய இலங்கையின் பலம்பொருந்திய வர்த்தகநாமமாக வளர்ந்திருக்கும் டயலொக், யுயுயு 'பிட்ச்' மதிப்பீட்டை பெற்றுள்ளது. அத்துடன் டயலொக் ஆனது தொடர்ந்து 16வது முறையாக 'மிகவும் மதிப்புமிக்க தொலைத்தொடர்பு வர்த்தகநாமம்' எனும் பட்டத்தையும் சுவீகரித்துள்ளது.

இவை மட்டுமின்றி 17 மில்லியன் இலங்கையர்களின் அசைக்கமுடியாத நம்பிக்கையை டயலொக் வென்றிருப்பதையும் இலங்கை மக்களின் வாழ்வு மற்றும் நிறுவனங்களை நிலைபேறான டிஜிட்டல் சூழல் அமைப்புகளின் ஊடாக வலுவூட்டி வளப்படுத்தும் நிறுவனத்தின் திடமான அர்ப்பணிப்பையும் பறைசாற்றும் விதமாக 'மிகவும் விரும்பப்படும் தொலைத்தொடர்பு வர்த்தக நாமம்' எனும் பட்டத்தையும் தொடர்ந்து 7வது ஆண்டாக சூடிக்கொண்டது. 'எதிர்காலம் இன்றே' எனும் தன் வர்த்தகநாம உறுதிமொழிக்கு உண்மையாக இருக்கும் வகையில் டயலொக் தொடர்ந்தும் அனைவரையும் உள்வாங்கும் வகையிலான, மலிவான, எல்லோரும் அணுகக்கூடிய அபரிமிதமான தொழில்நுட்பம் மற்றும் இணைப்பையும் தொடர்ந்து வழங்குவதோடு நாட்டை ஒரு டிஜிட்டல் தேசமாக மாற்றியமைப்பதற்கான தன் முயற்சியிலும் மும்முரம் காட்டிவருகின்றது.

'உளமார்ந்த சேவை' எனும் நிறுவனத்தின் கொள்கைக்கு திடமான அர்ப்பணிப்பை வழங்கும் பொருட்டு நிறுவனமானது தன்னிகரற்ற வாடிக்கையாளர் அனுபவங்களை வழங்கி வருகிறது. எடுத்துக்காட்டாக, இதன் டிஜிட்டல் பராமரிப்பு சூழலமைப்பை குறிப்பிடலாம். இதில் "DIA" எனும் மெய்நிகர் உதவியாளர் (Virtual Assistance), MyDialog App மற்றும் Google Assistant உடன் குரல் கட்டளை வசதியை ஒருங்கிணைத்தல் ஆகியவையும் அடங்கும்.

நாடளாவிய ரீதியில் சமூகத்தில் நல்மாற்றத்தை விளைவிக்கும் பொருட்டு நிறுவனமானது தனது கூட்டாளர்களுடன் இணைந்து நாட்டில் நிலவிய எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு தீர்வினை காணும் வகையில் தேசிய எரிபொருள் அட்டை (Fuel Pass) யை அறிமுகப்படுத்தியது. மேலும், தனது பங்காளர்களுடன் கைகோர்த்து நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக பாதிக்கப்பட்ட 120,000 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குமுகமாக மனிதநேய ஒன்றிணைவு எனும் மனிதாபிமான கூட்டின் மூலம் அத்தியாவசிய நிவாரண பொருட்களை வழங்கியது. அத்துடன், 'Karuna.lk' எனும் இலங்கையின் முதல் உசழறனகரனெைபெ தளத்தின் அறிமுகமானது தொழில்நுட்பம் மூலம் அர்த்தமுள்ள மாற்றத்தை நிகழ்த்த டயலொக் காட்டும் முனைப்பை எடுத்துக்காட்டுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.




படத்தில் இடமிருந்து வலமாக: டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ, Brand Finance தலைவர் ருச்சி குணவர்தன, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழும பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி அமலி நாணயக்கார

இது குறித்து கருத்து தெரிவித்த டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ அவர்கள் "இந்த அங்கீகாரத்தை வெற்றிகொள்ள எமக்கு உதவிய 17 மில்லியனுக்கும் அதிகமான இலங்கையர்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியோரின் அசைக்கமுடியாத நம்பிக்கைக்கும் விசுவாசத்திற்கும் நாம் நன்றியுடையவர்கள் ஆகின்றோம். இலங்கையின் மிகவும் மதிப்புமிக்க மற்றும் பலம்பொருந்திய வர்த்தகநாமமாக நாம் தொடர்ந்தும் தொழில்நுட்பத்தின் மாறிவரும் சக்தியை கையாண்டு இலங்கையர்களின் வாழ்க்கை தரம் மற்றும் நிறுவனங்களை வளமூட்டி வலுவூட்டுவோம்" என்றார்.

இலங்கை Brand Finance இன் தலைவர் ருச்சி குணவர்தன உரையாற்றுகையில், "எமது பட்டியலில் தொடர்ந்தும் முதலிடத்தை தக்கவைத்துக்கொண்ட டயலொக்கிற்கு எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம். இது ஏனைய வர்த்தகநாமங்களால் பின்தொடரப்பட வேண்டிய ஒரு முன்னுதாரணம் ஆகும். தொலைத்தொடர்புத் துறையில் பல்வேறு குறிகாட்டிகளினூடாக நாம் மேற்கொண்ட மதிப்பீடுகள் அத்தனையூடாகவும் டயலொக் தனது வர்த்தகநாமத்தின் மதிப்பை அதிகரித்து வர்த்தகநாமத்தின் பலத்தை கட்டியெழுப்பியுள்ளமை புலப்பட்டுள்ளது" என்றார்.

Brand Finance உலகின் முன்னணி சுயாதீனமான வர்த்தகநாம மதிப்பிடல் ஆலோசனை நிறுவனமாகும். இது இலங்கை உட்பட 25 நாடுகளில் தன் அலுவலகங்களை கொண்டியங்கி வருகிறது. Brand Finance ஆனது வர்த்தகநாமங்களின் நிதி மதிப்பை அளவிடுதல் மூலம் சந்தைப்படுத்தல் மற்றும் நிதிக்கிடையிலான இடைவெளிக்கு ஒரு பாலமாய் அமைகிறது. Brand Finance ஆனது தனது லீக் அட்டவணையிலுள்ள வர்த்தக நாமங்களின் மதிப்புகளை Royalty Relief approach எனும் ஐஎஸ்ஓ 10668 சான்றுக்கு இணங்கிய ஒரு வர்த்தகநாம மதிப்பீட்டு முறை மூலம் கணக்கிடுகிறது. இது ஒரு வர்த்தகநாமம் அடையக்கூடிய எதிர்கால வருவாய்களை மதிப்பிடுதலை உள்ளடக்கும்.


# 24ஆவது சிறந்த ஊடகவியல் விருதுகள் 2022

**விருது பிரிவுகள் பட்டியல் (அச்சு ஊடகம்)**

- ஆண்டின் மிகச் சிறந்த ஊடகவியலாளருக்கான மேர்வின் டி சில்வா விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த புலனாய்வு ஊடகவியலாளருக்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த சுவாரஷ்யமான செய்தி வெளியீட்டிற்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த இளம் ஊடகவியலாளருக்கான டென்ஸில் பீரிஸ் விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச்சிறந்த சுகாதார மற்றும் மருத்துவ அறிக்கையிடலுக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த சூழலியல் அறிக்கையிடலுக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த விளையாட்டுத்துறை ஊடகவியலாளருக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த பத்திரிகை பக்க வடிவமைப்புக்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு பரிசு)
- ஆண்டின் மிகச் சிறந்த வணிகவியல் மற்றும் நிதியியல் ஊடகவியலாளருக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த கருத்துப்பட ஓவியருக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த நெருக்கடியான சூழ்நிலைகளின் கீழ் அறிக்கையிடலுக்கான பேராசிரியர் கைலாசபதி விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த புகைப்பட ஊடகவியலாளருக்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த பத்தி எழுத்தாளருக்கான பி.ஏ. சிறிவர்த்தன விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- தகவல் அறியும் உரிமை சட்டத்தை பயன்படுத்தி எழுதப்பட்ட ஆண்டின் மிகச்சிறந்த செய்தி அல்லது விவரணத்திற்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த சமூகப் பிரச்சினைகளை அறிக்கையிடலுக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த விவரண எழுத்தாளருக்கான உபாலி விஜேவர்த்தன விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)

**விருது பிரிவுகள் பட்டியல் (பத்திரிகை இணையத்தளங்கள்)**

- மிகச் சிறந்த பத்திரிகை இணையத்தளம் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- மிகச் சிறந்த காணொளி ஆக்கம் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)

**(தமிழ்/சிங்களம்/ஆங்கிலம்) : ஒவ்வொரு மொழிப் பிரிவிலும் ஒவ்வொரு பரிசு**

2022 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்கும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கும் இடையில் பத்திரிகையொன்றில் தமது ஆக்கங்கள். கருத்துப்பட ஓவியங்கள் மற்றும் புகைப்படங்களின் பிரசுரங்களைக் கொண்ட விண்ணப்பதாரிகள் பத்திரிகையிலிருந்து பெறப்பட்ட தமது மூல ஆக்கங்கள். கருத்துப்பட ஓவியங்கள் அல்லது புகைப்படங்களை ஒவ்வொரு பிரிவுக்கும் தலா 5 வீதம் சமர்ப்பிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மூல பத்திரிகை ஆக்கங்கள் கிடைக்கப்பெறாத பட்சத்தில் பத்திரிகை ஆசிரியர் அல்லது பத்திரிகை ஆசிரியர்கள் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரின் அத்தாட்சிப்படுத்தலுடன் ஆக்கத்தின் பிரதியை அனுப்ப பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

சுதந்திர நடுவர் குழுவினர் வெற்றியாளர்களைத் தெரிவு செய்வர்.

**விண்ணப்ப முடிவுத் திகதி: வியாழக்கிழமை, ஆகஸ்ட் 31, 2023.**

**அனைத்து ஆக்கங்களும் சரியாக கோப்புருவாக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும். (தளர்வாக கட்டப்பட்ட பத்திரிகை ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது) ஆக்கங்கள் சகிதம் விண்ணப்பங்கள் குழுத் தலைவர், சிறந்த ஊடகவியல் விருதுகள் 2022, மேற்பார்த்து இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், 96, பெர்னார்ட் சொய்ஸா மாவத்தை ( கிருள வீதி), கொழும்பு 5 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.**



## LED மின் குமிழ்

## இறக்குமதித் தரப்புகள், உள்நாட்டு உற்பத்தித் தரப்புகள், பொருத்தும் தரப்புகள் மற்றும் விநியோகத் தரப்புகள் ஆகியவற்றுக்கான அறிவித்தல்



ஒரு தன்னார்வ அடிப்படையில் முதல் முறையாக ஆரம்பிக்கப்படவுள்ள LED மின் குமிழ்களுக்கான (பனெல் மின் குமிழ்கள்) ஆகக்குறைந்த சக்தி செயல்திறன் (MEP) முத்திரையை அறிமுகப்படுத்த இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை திட்டமிடுகின்றது. ஆகையால் இந்த முன்னெடுப்புத்திட்டம் பற்றி LED மின் குமிழ் உற்பத்தித் தரப்புகளையும், பொருத்தும் தரப்புகளையும், விநியோகத் தரப்புகளையும் விழிப்பூட்டுவதற்கு .கேட்போர் கூடம், இலங்கை தர நிர்ணய நிறுவனம், 17 விக்டோரியா பிளேஸ், எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு **08** எனும் இடத்தில் **2023 ஆகஸ்ட் 29,** ஆம் திகதி அன்று ஒரு விநியோகத் தரப்பு சந்திப்புக் கூட்டத்தை நடத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

அனைத்து LED மின் குமிழ் உற்பத்தித் தரப்புகளும், பொருத்தும் தரப்புகளும், விநியோகத் தரப்புகளும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அழைக்கப்படுகின்றன. தயவுசெய்து 2023 ஆகஸ்ட் 24, ஆம் திகதி மாலை 4 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கீழ்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு ஒரு மின்னஞ்சலை அனுப்பி இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபையில் தங்களை பதிவுசெய்து, தங்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்வதை உறுதிப்படுத்துமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**தொலைபேசி இலக்கம்: 0112575030 (நீட்டிப்பு: 412)**
**மின்னஞ்சல் முகவரி: register@energy.gov.lk.**

பணிப்பாளர் நாயகம்
இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை
இலக்கம் 72
ஆனந்த குமாரசுவாமி மாவத்தை
கொழும்பு 07
தொலைபேசி இலக்கம்: 0112677445
தொலைநகல் இலக்கம்: 0112682534
இணையத்தள முகவரி: www. energy.gov.lk

சக்தியை சேமிப்பது எமது கடமையாகும்

தினகரன் வாரமஞ்சரி

# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வேலைவாய்ப்பு

### 301 வேலை வாய்ப்பு
வேலை வாய்ப்புகள்/சேவைகள்

கொழும்பு புறக்கோட்டையில் இயங்கும் விளையாட்டு பொருட்கள் விற்பனை காட்சியகத்திற்கு அவசரமாக பெண் காசாளர்கள் தேவை. வயது 20 35 ற்கும் இடையில் இருத்தல் வேண்டும். கல்வித் தகைமை சா/ தரம் வேண்டும். சம்பளம் பற்றிய லேதிக விபரங்க ளுக்கு நேரில் சமுக ம் தரவும். இல. 110 , மல்வத்த வீ தி, கொழும்பு11. 076 0 260545. 050437

### 306 வெற்றிடங்கள்
மருத்துவம்

கண்டிக்கு அருகில் உள்ள ஓர் மருத்துவ ஆலோசனை நிலையத்திற்கு MBBS/ SLMC பதிவுசெய்த வைத்தியர் தேவை . (முழு நேரம்/ பகுதி நேரம்) தங்கு மி டம் உண்டு. 0777566105/ 0765479510 041710

JOB

### 318 வெற்றிடங்கள்
டிரைவர்கள்

கனரக வாகன சாரதி உரிமம் சகிதம் சாரதி டிலிவரி வாகனத்திற்கு இரத்மலானை, மொரட்டுவ, கல்கிசை சுற்றுப் புறத்தில் தேவை. சம்பளம் 50, 000/ = பெற்றுக் கொள்ளலாம். விசாரணைகளுக்கு நெஸ்கோ என்டர்பிரைசஸ், இல. 29/5, 4ஆம் ஒழுங்கை, இரத்மலானை. 048078

க ம்பஹா வெ லிவேரிய பழ வகைகள் நிறுவனத்தி ற்கு தங்கி வேலை செய்ய 20 30 வயதிற்கு இடைப்பட்ட க ன ரக வாகன சாரதி க ள் தேவை. உணவு, தங்குமிடம் இலவ சம். 0 7 63471665 , 0 7 73656928 . 050490

### 319 வெற்றிடங்கள்
வீட்டு வேலையாளர்கள்

பெண் மருத்துவரின் வீட்டில் சேவைக்கு குடும்பப் பராமற்ற பெண் ஊழியர் தேவை. நல்ல சம்பளம். 0716669333. 049831

### 320 வெற்றிடங்கள்
ஹோட்டல்கள், பேக்கரிகள்

மாத்தறை சிற்றுண்டிச்சாலைக்கு அப்பம்/ கொத்து/ றைஸ் வேலை தெரிந்த வேலையாட்கள் தேவை. தங்கு ம் இடம் வசதி செய்து கொடுக்கப்படும். (40 வயதுக்கு கு றை ந் த வ ர் க ள் ) 0778800793. 050581

## பொது

### 431 நானாவிதப் பொருட்கள்
விற்பனைக்கு

தூய ஆட்டுப்பால் உண்டு. 100 லீற்றர் ஒரு நாளைக்கு. தயவு செய்து தொடர்பு கொ ள் ளு ங் க ள் . 0779509809. 050160

வாரமஞ்சரி
திருமண சேவைகள்
முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா
00000377

## காணி/தோட்டம்

### 616 வீடு சொத்து
கொழும்பு மாவட்டம்
விற்பனைக்கு

அங்கொட, அம்பதலே பிரதேசத்தில் முழுமையாக கட்டி முடித்த வீடு விற்பனைக்கு. 18 Perches. Tel: 0775916628, 0775916745. 049542

கம்பஹா நகர மத்தியில் குடியிருப்புக்கு மிகவும் பொருத்தமான சகல வ ச தி க ளு ட னா ன சிறந்த காணி விற்பனைக்கு. ஒரு பேர்ச் 11.50. 0706460360, 0717590601. 049800

களுபோவில 20 பேர்ச் காணி பழைய வீட்டுடன் விற்பனைக்கு. டி சில்வா வீதியில் அமைந்துள்ளது. வைத்தியசாலைக்கு மிக அருகில். விலை 140 (மில்.) (தரகர்கள் வேண்டாம்). 0776492313, 0776310866. 047409

கொள்ளுப்பிட்டியில் முஹந்திரம் வீதி 3 அறைகள், 2 குளியலறையுடன் முழுமையான வீடு விற்பனைக்கு. 0775262362. 050434

### 635 வீடு சொத்து
அம்பாறை மாவட்டம்
விற்பனைக்கு

அம்பாறை மஹாஓய பிரதான வீதியில் வெல்லாவெளி நாற்சந்திக்கு அருகாமையில் 16 பேர்ச் வயல் இடம் மற்றும் 1 ஏக்கர் மேட்டுக் காணி விற்பனைக்கு. இரு போகங்களுக்கும் விவசாயம் செய்வதற்கான நீர் வழங்கப்படும். விலை பேசித்தீர்க்கலாம். 0777221479/ 0632222140. 050753

### 642 வீடு சொத்து
கம்பஹா மாவட்டம்
வாடகைக்கு குத்தகைக்கு

ஹெந்தளை 24 பேர்ச் காணி, வீடொன்றை கட்டிக் கொள்ள உங்களுக்கு 5 அல்லது 10 வருடம் குத்தகைக்கு விடப்படும். 6 பேர்ச் வேறொரு காணியும் விற்பனைக்கு. 0778890001. 050243

வாரமஞ்சரி
சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்
முதல் 15 சொற்களுக்கு 330/- ரூபா
ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
அவ் அறிவித்தலை மிகவும் கவர்ச்சியாக பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 100
அவ் அறிவித்தலை இன்டர்நெட்டில் பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 100
இலங்கை வங்கி கணக்கிலக்கம் 000000377 (லேக்ஹவுஸ் கிளை)
BOC ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

## வாரமஞ்சரி BUDGET adz

It suits your budget


































## BUDGET adz போட்டோ குறும் விளம்பரம்









# கடும் வரட்சியால் நாட்டின் உணவுப் பாதுகாப்பு மேலும் நெருக்கடி நிலைக்கு தள்ளப்படும் அபாயம்

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

இலங்கையில் மீண்டும் ஒரு வரட்சி நிலை தோன்றியுள்ளது. பிரதான நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் குறைந்து வருவதுடன் விவசாய நிலங்களுக்கான நிர்ப்பாசனமும் கடுமையாகப்பாதிக்கப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள சிறிய குளங்கள் வற்றிப்போயுள்ளதுடன் ஏனைய நீர்வளங்களிலும் கடுமையான வரையறைகள் உருவாகியுள்ளன.

இதன் காரணமாக நாட்டின் உணவு உற்பத்தியில் பாதிப்புகள் ஏற்பட்டு வருவதைக் காண முடிகிறது. கடந்த பெரும்போகத்தில் சற்று சாதகமான அறுவடைகள் கிடைத்த போதிலும் சிறுபோக அறுவடைகளில் பாரிய வீழ்ச்சியை எதிர்நோக்க நேரிடலாமென துறை சார் நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். இது ஏற்கெனவே கேள்விக்குறியாகப் போயுள்ள நாட்டின் உணவுப் பாதுகாப்பை நெருக்கடி நிலைக்குத் தள்ளிவிடக்கூடிய அபாயம் நிலவுகிறது.

மழையை நம்பி மேற்கொள்ளப்படும் மானாவாரிப் பயிர்ச்செய்கைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் ஒவ்வொரு கிராமத்தினதும் மரக்கறி மற்றும் உணவுத் தேவைகளை வெளியில் இருந்து பெறப்படும் உணவுப் பொருள்களை வைத்துப் பூர்த்தி செய்யும் நிலை ஏற்கெனவே உருவாகி வருகிறது.

இந்நிலையில் பிரதான பயிர்ச்செய்கை வலயங்களில் நிலவும் நீர்ப்பற்றாக்குறை விவசாய விளைச்சலைக் குறைத்து, மரக்கறிகள் மற்றும் உபஉணவுப் பொருள்களின் விலையை மேலும் அதிகரிக்கும் சாத்தியம் உள்ளது. நாட்டில் உணவுப்பொருட்களில் விலை ஏற்ற வேகத்தில் சற்று தளர்வு அண்மைக் காலத்தில் அவதானிக்கப்பட்டாலும் விலைகளில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி ஏற்படவில்லை. அவ்வாறு வீழ்ச்சியடைந்தாலும் அவற்றின் நன்மைகள் இறுதி நுகர்வோரைச் சென்றடையவில்லை. பணவீக்கம் வானத்தைத் தொட்டிருந்த காலப்பகுதியில் அதிகரித்த உணவு விலைகளில் எதுவிதமான குறிப்பிடத்தக்க மாற்றங்களும் இதுவரை ஏற்படவில்லை. மாறாக ஒரு சாதாரண மனிதனால் தனது மூன்று வேளை உணவுத் தேவையை முன்பு போல பூர்த்தி செய்துகொள்ள முடியாத அவல நிலையே இன்றுவரை தொடர்கிறது.

ஆயினும் ஒரு சாதாரண மனிதனின் மாதாந்த வருமானத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படவில்லை. சம்பளம் பெற்று வாழ்பவர்களின் சம்பளங்கள் கொவிட் காலத்தில் குறைக்கப்பட்டன. அத்துடன் அவை பழைய நிலைக்கு கொண்டுவரப்படவில்லை. பெரும்பாலானவர்களின் சம்பளங்கள் மாற்றமின்றிக் காணப்பட்ட போதிலும் விலை அதிகரிப்பு காரணமாக அவர்களால் முன்னைய உணவுப்பழக்கத்தை தொடர முடியவில்லை. மறுபுறம் அரசாங்கம் வரிகளை சடுதியாக அதிகரித்து வருமானத்தில் இன்னொருபகுதியை உறிஞ்சிக்கொண்ட பின்னர் சாதாரண குடிமகனால் தனது உணவுத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளது.

பிரதான உணவுப்பொருட்களின் மனித உட்கொள்ளல் வெகுவாகக் குறைந்துள்ளது. உணவு வேளைகளைக் குறைத்தல், உண்ணும் உணவின் அளவைக் குறைத்தல் உண்ணும் உணவின் தரத்தைக் குறைத்தல் போன்றவழிகளைக் கைக்கொண்டுள்ளமையை காணமுடிகிறது. குடும்பங்களைப் பொறுத்தவரையில் தமது குழந்தைகளுக்கு கைவசமுள்ள உணவை உண்ணக் கொடுத்து விட்டு பெற்றோர் பட்டினி கிடக்கும் நிலை உருவாகியுள்ளது. குறிப்பாக குடும்பத்தலைவிகள் பட்டினி கிடக்கும் நிலை அதிகரித்து வருவதாக ஆய்வுகள் கூறுகின்றன. இவை குறுங்காலத்தில் மட்டுமன்றி நீண்டகால சுகாதாரப் பிரச்சினைகளை ஏற்படுத்துவதுடன் போசாக்கற்ற மக்கள் கூட்டத்தையும் அறிவு திறமையற்ற ஊழியப்படையையும் உருவாக்கிவிடும். நோய்க்காளாகும் நோஞ்சான் குஞ்சுகளாக நாட்டின் எதிர்கால சந்ததி உருவாகும் அவல நிலையில் இலங்கை இருப்பதை கூற வேண்டியுள்ளது.

- நாட்டில் உணவுப்பொருட்களில் விலை ஏற்றவேகத்தில் சற்று தளர்வு அண்மைக்காலத்தில் அவதானிக்கப்பட்டாலும் விலைகளில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி ஏற்படவில்லை.
- அவ்வாறு வீழ்ச்சியடைந்தாலும் அவற்றின் நன்மைகள் இறுதி நுகர்வோரைச் சென்றடையவில்லை குறிப்பாக குடும்பத்தலைவிகள் பட்டினி கிடக்கும் நிலை அதிகரித்துவருவதாக ஆய்வுகள் கூறுகின்றன.
- வரட்சி காரணமாக உணவுப்பொருள் உற்பத்தி குறைவடையுமாயின் உணவு விலைகள் மிகமோசமாக அதிகரிக்கும் வாய்ப்புள்ளது.
- உலகின் உணவு உற்பத்தி மற்றும் விநியோக சங்கிலியிலும் பாதிப்புகள் ஏற்படும் ஏது நிலை தோன்றியுள்ளது.
- உலகின் பிரதான உணவு ஏற்றுமதி நாடாகிய உக்ரேனிலிருந்து உணவை ஏற்றுமதி செய்ய முடியாதவாறு ரஷ்யா அதன் துறைமுகங்களை மூடியுள்ளது.
- உலகளாவிய ரீதியில் அதிகரித்துவரும் வெப்பநிலையும் வரட்சியும் எதிர்கால உலக உணவு உற்பத்தியில் பாதிப்பை ஏற்படுத்தும் வாய்ப்புகள் உண்டு.
- கிடைக்கின்ற நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் சொட்டு நீர்ப்பாசனம் போன்ற நவீன முறைகளைக் கையாண்டு உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய கட்டாயத்தில் நாடு உள்ளது.



இப்போது வரட்சி காரணமாக உணவுப்பொருள் உற்பத்தி குறைவடையுமாயின் உணவு விலைகள் மிகமோசமாக அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. இதனால் நாட்டின் பட்டினி நிலை மேலும் அதிகரிக்கும். தேவையான உணவுப்பொருட்களை இறக்குமதி செய்வதிலும் பிரச்சினைகள் ஏற்படலாம். காரணம் உலகின் உணவு உற்பத்தி மற்றும் விநியோக சங்கிலியிலும் பாதிப்புகள் ஏற்படும் ஏது நிலை தோன்றியுள்ளது. உதாரணமாக இந்தியா வெளிநாடுகளுக்கான தனது உணவுப்பொருள் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தியுள்ளது. உலகின் பிரதான உணவு ஏற்றுமதி நாடாகிய உக்ரேனிலிருந்து உணவை ஏற்றுமதி செய்ய முடியாதவாறு ரஷ்யா அதன் துறைமுகங்களை மூடியுள்ளது. அதேவேளை உலகளாவிய ரீதியில் அதிகரித்துவரும் வெப்பநிலையும் வரட்சியும் எதிர்கால உலக உணவு உற்பத்தியில் பாதிப்பை ஏற்படுத்தும் வாய்ப்புகள் உண்டு. ஆகவே உள்நாட்டு உணவு உற்பத்தி பாதிப்படைந்து உலக உணவு விலைகளும் அதிகரிக்குமானால் மிகப்பெரிய உணவு நெருக்கடியினை நாடு சந்திக்க நேரிடும்.

ஆகவே உள்நாட்டிலும் உலகத்திலும் எற்பட்டுவரும் நெருக்கடி நிலைமைகளை சரியாக இனங்கண்டு உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லையானால் எதிர்பாராத பேரழிவைச் சந்திக்க நேரிடும். கிடைக்கின்ற நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் சொட்டு நீர்ப்பாசனம் போன்ற நவீன முறைகளைக் கையாண்டு உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய கட்டாயத்தில் நாடு உள்ளது. மாறாக ஓரிரவில் இரசாயன உரத்தையும் கிருமிநாசினிகளையும் தடை செய்தது போல புத்திசாலித்தனமற்ற கடந்த காலத் தீர்மானங்களைப்போல நடவடிக்கைகள் எடுக்கப்படுமாயின் அதன் விலையையும் சேர்த்தே மக்கள் கொடுக்க நேரிடும். தீர்மனங்களை எடுத்தவர்கள் வழமைபோலவே எதுவுமே தமக்குத் தெரியாத உத்தமர்களாக உல்லாசம் அனுபவிப்பார்கள். நாட்டின் உணவுப் பாதுகாப்பு மிகப்பெரிய இடரபாயத்தைச் சந்தித்துள்ளமை தெளிவாகத் தெரிகிறது. இலங்கையர்கள் ஒவ்வொருவரும் அதனைப் புரிந்து செயற்படவேண்டியது கட்டாயம்.

## அமெரிக்க ஜனாதிபதியின் இந்திய விஜயம்

# பிராந்திய அரசியலில் தாக்கம் செலுத்துமா?



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

நாடுகளுக்கிடையிலான உறவு சர்வதேச உறவாக கருதப்பட்டாலும் அதற்குள் நிகழும் அரசியல் விடயங்கள் சர்வதேச அரசியலாகவே புரிந்து கொள்ளப்படுகிறது. உலக ஒழுங்கானது அரசியல் பொருளாதார, இராணுவ காரணிகளால் மாற்றம் அடைந்துவருகிறது. மீண்டும் ஒரு உலக ஒழுங்குக்கு தயாராகும் நாடுகளும் அவற்றின் அணிகளும் புதிய கூட்டுக்களையும் உறவுகளையும் உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுவருவதைக் காணக்கூடியதாக உள்ளது. இதில் அமெரிக்காவின் முன்னாள் தேசிய பாதுகாப்புச் செயலாளர் ஹென்றி கீசிங்கரது சீனப் பயணம் ஒன்றாகவும் மறுபக்கத்தில் எதிர்வரும் செப்ரெம்பர் 7இல் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் இந்திய விஜயம் இன்னென்றாகவும்கொள்ளப்பட வேண்டும். இத்தகைய இரு பயணங்களும் உலகளாவிய அரசியலில் அதிக முக்கியத்துவம் பெற்றதாகவே உள்ளது. ஹென்றி கீசிங்கரது இரகசிய பயணம் தந்த விளைவை இப்பகுதி ஏற்கனவே விவாதித்துள்ளது. இக்கட்டுரை அமெரிக்க ஜனாதிபதியின் இந்தியப் பயணத்தின் விளைவை தேடுவதாக அமையவுள்ளது.



அரசியல் பொருளாதாரத்தின் தந்தை என அழைக்கப்படும் அடம்ஸ் சிமித்தின் 1776இல் *Inquiry into the Nature and causes of the Wealth of Nation* என்ற அவரது நூலில் உழைப்புத்தான் செல்வத்தின ஊற்று எனவும் விலைப் பொறிமுறையே சந்தையையும் வர்த்தகத்தையும் வழிநடத்துகின்றது எனவும் விவாதித்தார். அத்தகைய சிந்தனையே இன்றுவரை உலகப் பொருளாதாரத்தின் மையப்புள்ளியாக விளங்கியது.

ஆனால் இருபத்தியோராம் நூற்றாண்டில் மட்டுமல்ல இருபதாம் நூற்றாண்டின் இரண்டாவது அரையாண்டில் தேசிய பாதுகாப்பும் (*National Defense*) தேசத்தின் செல்வமாக மாறிவிட்டது. இன்றைய உலகத்தின் மிகப் பிரதான சக்தியாக தேசிய பாதுகாப்பு நிலை நிறுத்தப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்புக்கான அணிகளும், புதிய அமைப்புகளும் விண்வெளிக் கட்டமைப்புக்களும் தேசங்களின் செல்வத்தை பாதுகாக்கும் அடிப்படைகளாக விளங்குகின்றன. அதற்கான உத்தியை முதன்மைப்படுத்தும் நோக்கிலேயே வல்லரசுகளும் அவற்றின் இராணுவ கூட்டுக்களும் கட்டமைக்கப்படுகின்றன.

தேசத்தின் செல்வமாக வாணிப வாதம் கருதிய வர்த்தகமும் நிலமும் என்ற கருத்தை அடம்சிமித் விலைப் பொறிமுறைக்கு மாற்றினார். அதனை கார்ல் மார்க்ஸ் முதலாளித்துவத்தின் இலாபம் எனும் பொறிமுறைக்குள்ளால் உயிருள்ள, உயிரற்ற உழைப்பின் விளைவாக எழுந்த செல்வம் பற்றிய உரையாடலை முதன்மைப் படுத்தினார். நிதி முதலீடுகளாலும், மூலதனமும் உலகப் பொருளாதாரத்தின் மையப்புள்ளியாக மாறியுள்ளது. அத்தகைய முதலீடுகளைப் பாதுகாப்பதில் கவனம் கொள்ளும் அரசுகள் தேசிய பாதுகாப்பை முதன்மைப்படுத்துகின்றன.

அதனையே அமெரிக்கா இந்தோ–பசுபிக் பிராந்தியத்தில் பாதுகாப்பு அரண்களை கட்டமைக்க முயலுகிறது. தனது முதலீடுகளையும் நிதி மூலங்களையும் பாதுகாக்கும் நகர்வுகளை அமெரிக்கா மேற்கொள்ள முனைகிறது. அதன் ஓர் எத்தனமாகவே இந்தியாவுடனான உறவை அமெரிக்கா பலப்படுத்த முனைகிறது. சீனாவுடன் எடுத்த முயற்சி முழுமையான வெற்றியை அமெரிக்காவுக்கு வழங்கவில்லை என்றே தோன்றுகிறது. அதனடிப்படையில் இந்தியாவுடனான அமெரிக்க உறவு பிராந்திய தளத்தில் மட்டுமல்ல உலகளாவிய தளத்திலும் அதிக மாற்றத்தை ஏற்படுத்த விளையுமா என்ற கேள்வி யதார்த்தமாகவே உள்ளது. அதனை விரிவாக நோக்குவோம்.

ஒன்று, இந்தியாவினது ரஷ்யா தொடர்பான கொள்கையை கேள்விக்கு உட்படுத்தாது அமெரிக்கா நகர்கிறதாகவே தெரிகிறது. ஆரம்பத்தில் சில முயற்சிகளை அமெரிக்கா மேற்கொண்ட போதும், இந்தியப் பிரதமரது அமெரிக்க விஜயத்துக்குப் பின்னர் அதற்கான விவாதங்களை அமெரிக்கத் தரப்பு கைவிட்டுள்ளதாகவே உணரத் தோன்றுகிறது. அதனடிப்படையிலேயே அமெரிக்காவுக்கு இந்தியாவின் இருப்பும் உறவும் அவசியமானதாக உள்ளது. இந்தியாவை முழுமையாக பாதுகாப்பதன் வாயிலாக பொருளாதார அடிப்படைகளை பேணமுடியுமென அமெரிக்கா கருதுகிறது. இந்திய, அமெரிக்கப் பொருளாதார உறவை மேலும் பலப்படுத்துவதன் மூலம் அமெரிக்கா தற்போது எதிர் கொண்டுள்ள நெருக்கடியை கடக்க முயலுகிறது. இந்தியாவின் சந்தைகளைக் கடந்து இந்தியாவில் அமெரிக்கா முன்வைத்துள்ள முதலீடுகளை பாதுகாப்பதற்கும் மேலும் முதலீகளை அதிகரிக்கவும் எடுக்கும் முயற்சியாகவே அமெரிக்காவின் நகர்வு உள்ளது.

இரண்டு, இந்தியாவின் ஆயுத இறக்குமதிக்கான தெரிவிலும் மாற்றம் செய்ய அமெரிக்கா முயலுகிறது. ஏறக்குறைய இந்தியாவின் ஆயுததளபாட இறக்குமதியை ரஷ்யாவிடமிருந்தும் பிரான்ஸிலிருந்தும் மேற்கொள்ளும் நிலையை மாற்றுவதற்கு அமெரிக்கா விரும்புவதாகவே தெரிகிறது. அதற்கான உரையாடல்களை அண்மையில் அதிகரித்துள்ளது. இந்திய அமெரிக்க வெளியுறவு மட்டத்தில் இது சார்ந்து அதிக உரையாடல்களை முதன்மைப் படுத்தியுள்ளது. ரஷ்யாவிடமிருந்து 45 சதவீதமான ஆயுதளபாடங்களை இந்தியா இறக்குமதி செய்கிறது. பிரான்ஸ், இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவிடமிருந்து மீதியை கொள்வனவு செய்கிறது. இதில் 29 சதவீத ஆயுத தளபாடங்களை பிரான்ஸிலிருந்து இந்தியா இறக்குமதி செய்கிறது. இதில் மாற்றத்தை எட்டுவதற்கான நகர்வுகளை அமெரிக்கா அண்மைக்காலமாக மேற்கொண்டு வருகிறது.

மூன்று, சீனாவின் இந்தியாவுடனான எல்லை முரண்பாட்டை இராணுவ ரீதியில் கையாளவே அமெரிக்கா அதிகம் விரும்புகிறது. அதற்கு அமைவாகவே இந்தியாவுடனான உறவை பாதுகாப்பதிலும் ரஷ்ய இந்திய உறவைத் தாண்டி அமெரிக்கா இந்தியாவுடன் நட்புறவை பேண முனைகிறது. அத்தகைய உத்திக்கு பின்னால் இருநாட்டினது வளர்ச்சியையும் முடிவுக்கு கொண்டுவருவதே அமெரிக்காவின் நோக்கமாகவுள்ளது. மீளவும் அமெரிக்கா இலக்கம் ஒன்றை நோக்கி நகர முடியுமெனக் கருதுகிறது.

உலகளாவிய நிலையில் இலக்கம் ஒன்றினைத் தீர்மானிப்பது பொருளாதாரம் என்பது முடிவாகும். அதனடிப்படையில் 2079இல் சீனா, இந்தியா என்பனவே முதல் இரண்டு நிலையையும் எட்டும் வகையில் உலகப் பொருளாதாரப் போக்கு நகர்வதாக சர்வதேச நாணய நிதியம் அறிக்கையிட்டுள்ளது. அதன் வடிவத்தை மாற்றுவதற்கான உத்திகளைக் கொண்டதாகவே அமெரிக்காவின் நகர்வும் திட்டமிடலும் அமைந்துள்ளது. இதனாலேயே முரண்பாடுகளைக் கடந்து அமெரிக்கா இந்தியாவுடன் நட்புறவை பேண முனைகிறது. முதலீட்டையும் பொருளாதார வாய்ப்புக்களையும் தக்கவைப்பதென்பது இராணுவவாதத்தை நிலைநிறுத்துவதாகவே உள்ளது. அதனை நோக்கியே அமெரிக்க ஜனாதிபதியின் இந்தியப் பயணம் அமையவுள்ளது.

நான்கு, ஜி20 மாநாட்டின் தலைமை இந்தியாவுக்கு கிடைக்கும் போது அதனை மேற்கு நாடுகள் பயன்படுத்திக் கொள்ள முனைந்தன. இந்தியாவின் வாய்ப்புகளும் மேற்குலகத்தின் வாய்ப்பு களும் அதிகம் உரையாடப்பட்டன. இந்தியா திறந்த நாடு என்ற அடிப்படையில் இந்தியாவுடன் உறவை முதன்மைப்படுத்திக் கொண்டு இந்தியாவின் வளர்ச்சியில் பிராந்திய, சர்வதேச பாதுகாப்பினை தக்க வைக்க முடியுமென அமெரிக்கா சார்ந்த மேற்குலகம் கருதுகிறது. பிரான்ஸ், அமெரிக்க உத்தியிருந்து விலகிக் கொண்டாலும் மேற்குலக நட்புக்களால் கட்டமைக்கப்பட்ட புவிசார் அரசியலைக் கொண்ட நாடு என்ற அடிப்படையில் நோக்கப்பட வேண்டியதாகும்.



ஐந்து, இந்தியாவை பொறுத்தவரை சீனாவுடனான உறவு அமெரிக்காவை கடந்து அமைதியான வழிமுறைக் கூடாக பேணப்பட வேண்டுமென கருதுகிறது. தனது முழுமையான பொருளாதார இராணுவ வளர்ச்சியை அடுத்து சீனாவுடனான மோதலை எதிர்கொள்வதற்கு இந்தியா திட்டமிடுகிறது. அவ்வாறே அயல்நாடான இந்தியா, சீனாவுக்கு அடுத்த நிலையில் எதிர்காலத்தில் வலுவடைகின்ற சூழலை அடைந்தாலும் மேற்குலகுடனான முரண்பாட்டையும் மேற்குலகத்தின் முழுமையான தோல்வியையும் உத்தரவாதப்படுத்திய பின்னரே இந்தியாவுடனான முரண்பாட்டை எதிர்கொள்ளலாமென சீனா கருதுகிறது.

இதுவே அமெரிக்கா எதிர்கொள்ள வேண்டிய அடிப்படையாகும். சீனா, இந்தியா, ரஷ்யா என்ற அணியை இந்தியாவை கையாள்வதன் மூலம் இலகுவில் தோற்கடித்து விடலாமென அமெரிக்கா கருதுகின்றது. அதற்கான வாய்ப்பு இருக்கின்றதென்றே குறிப்பிட வேண்டும்.

எனவே, மேற்குக்கும் கிழக்குக்கும் மத்திய அதிகாரம் கொண்ட சக்தியாக இந்தியா விளங்குகின்றது. இருதரப்பையும் சமதூரத்தில் நிறுத்த முயலும் இந்தியாவை ஜனாதிபதி பைடன் அமெரிக்காவுடனும் மேற்குடனும் பலமான உறவுக்குள் நகர்த்துவாரா என்ற கேள்வியே தற்போது எழுந்துள்ளது. பிராந்திய நலன், சர்வதேச நலன் என்ற அடிப்படையில் இந்தியாவின் இயல்பான நடுநிலைத்தன்மை அமெரிக்காவுக்கு நெருக்கடியானதாகவே அமைய வாய்ப்புள்ளது.

# 'அடித்தாலும் சிரிப்பார்கள், எரித்தாலும் மறப்பார்கள் உதைத்தாலும் குனிவார்கள், கதைத்தாலும் மறப்பார்கள்'

## யாழ். 'தாயகம்' சஞ்சிகையின் மலையகச் சிறப்பிதழ் வெளியீடு

இக்பால் அலி

**மலையகம் 200 ஆவது ஆண்டை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 'தாயகம்' கலை இலக்கிய சமூக விஞ்ஞான சஞ்சிகையின் மலையகச் சிறப்பிதழ் வெளியீட்டு விழா மலையக தேசிய கலை இலக்கியப் பேரவையின் பொதுச் செயலாளர் சிவ. இராஜேந்திரன் தலைமையில் கண்டி இந்து சீனியர் சிரேஷ்ட பாடசாலையில் இடம்பெற்றது.**

**இந்நிகழ்வில் வளவாளர்களாக கலாநிதி க. பிரபாகரன், எஸ். தமிழ்ச் செல்வன், ஆர். இராமசீலன், எஸ். ரொபட், எஸ் புவனேஸ்வரன், ஜே. சற்குருநாதன் உள்ளிட்டவர்களுடன் பாடசாலையின் அதிபர் சிவகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.**

**இச்சஞ்சிகை வெளியீட்டு விழாவில் மலையகம் 200 ஆவது நிறைவை முன்னிட்டு இதில் கலந்து கொண்ட வளவாளர்கள் பல கருத்துக்களை முன்வைத்தனர்.**

நாளாந்தம் நடந்தேறிக் கொண்டிருக்கின்றன. இந்த அச்சத்தில் இருந்து எங்களைப் பாதுகாத்துக் கொள்ள அதற்கான போராட்டத்தை ஏற்படுத்திக் கொள்ள இந் நூலில் இடம்பெற்றுள்ள அனைத்து ஆக்கங்களும் ஒரு களமாக அமைந்துள்ளன.

'நாங்கள் அப்பாவி என்பதை அரசாங்க அறிவிப்பாளர்களே செய்து விடுங்கள். ஏனெனில் நாளைய உங்கள் குரல்களை கடித்து பிளந்து இரத்தம் குடிக்கும் போது எங்களை அப்பாவிகள் என்று சொல்லுங்கள்' என்ற வசனம் இச்சஞ்சிகையில் வெளிவந்துள்ளது. உண்மையிலே அந்தக் கவிதையின் வரி இரண்டு தளங்களைக் தாண்டிருக்கின்றது. அதில் ஒன்று எங்களுடைய புதிய வழிக்குரிய ஏற்பாட்டாளர்கள் நாங்கள் மாற வேண்டும் என்ற தளத்தை அச்சஞ்சிகையில் வெளிவந்துள்ள கவிதை உணர்த்தி நிற்கின்றது. போராட்டம் என்பது ஒவ்வொரு







கின்ற கவிதை வரிகளாக எழுதப்பட்டுள்ளன.

எங்களுடைய சமூக இருப்புக்கள், கலாசார அம்சங்கள் நாளுக்கு நாள் சிதைக்கப்பட்டும் உடைக்கப்பட்டும் பின்தள்ளப்பட்டும் மறக்கப்பட்டும் மறைக்கப்பட்டும் வருகின்றன. எங்களை ஏற்றுக் கொள்ளாமையில்










இந்த நூலிலுள்ள விடயங்களைக் கவனத்திற்கொள்ளும் போது மலையகம் குறித்த சிந்தனைக்குரிய எழுச்சியைத் தோற்றுவிக்கக் கூடியதாக இருக்கின்றது. புதிய ஜனநாயகத்தை ஏற்படுத்தக் கூடியவையாக இந்நூலிலுள்ள அம்மசங்கள் கூறுகின்றன. இன்றைய காலத்தில் எங்களுடைய இருப்புக்கள் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.அதற்காக போராடக் கூடிய குழுக்களின் எச்சங்களாக நாங்கள் மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். அது பல்வேறு உடைவுகளாக எங்கள் மலையக சமூகத்தில்

மலையக மக்களுடைய எண்ணத்திலும் அடிப்படைச் சிந்தனையாக வர வேண்டும் என்ற கருத்தை தாங்கி நிற்கின்றது. மலையக அரசியலை நகைப்புடன் கவிஞன் சொல்லியுள்ளான். மேலும் அந்தக் கவிஞன் கூறுகின்றான் 'அடித்தாலும் சிரிப்பார்கள், எரித்தாலும் மறப்பார்கள். உதைத்தாலும் குனிவார்கள், கதைத்தாலும் மறப்பார்கள்' என்று கூறுகின்றான். உண்மையிலே அந்தக் கவிதையில் எங்களுடைய சமூகத்தில் இன்று காணப்படுகின்ற இருக்கின்ற விடயங்களை அப்படியே ஒரு முக்கிய அம்சமாகவே சொல்லு

இருந்தும், கண்டு கொள்ளாமல் போகும் காலத்திற்குள் தான் நாங்கள் வாழுகின்றோம். எங்களை மெல்லக் கண்டு கொள்ளாமல் போகும் தனம் தற்போது அதிகரித்துள்ளது. அந்த வகையிலே எம்மைக் கண்டு கொள்ளாமல் இருக்கின்ற அந்த தனத்தை மெல்ல உடைக்கின்ற பொக்கிசமாக தாயகம் என்னும் சஞ்சிகை விளங்குகின்றது.

நான் எப்பொழுதும் தாயகம் என்னும் கலை இலக்கிய சஞ்சிகையை வாசிப்பேன். மலையகம் 200 ஆவது ஆண்டு இதழாக வெளி வந்திருப்பதையிட்டு நான் பெருமிதம் அடைகின்றேன் என்று அங்கு முதல் உரையாற்றிய வளவாளர் தெரிவித்தார்.

இச்சஞ்சிகையில் வெளிவந்துள்ள இரா. சடகோபனின் கட்டுரை மலையக வரலாற்றோடு சம்பந்தப்பட்ட கட்டுரையாகும். அதில் கற்பனையோ மெருகூட்டப்பட்ட விடயங்களோ அன்றி மலையக மக்களுடைய வரலாற்றுத் தடங்களை ஆவணப்படுத்தக் கூடியதாக அந்தக் கட்டுரை அமைந்துள்ளது.

'மலையக மக்களுக்கான கலையும் இலக்கியமும் இயங்கு தளத்தின் தேவைகளும் சவால்களும்' என்ற தலைப்பில் சிவ. இராஜேந்திரன் எழுதிய மிக முக்கியத்துவம் வாய்ந்த கட்டுரையாகும். மலையக மக்களுக்கான கலைகளும் இலக்கியங்களும் இயங்கு தளத்தின் தேவைகளுக்கும் சவால்களுக்கும் பதில் சொல்லக் கூடியதாக அமைய வேண்டும். மலையக கலை கலாசாரப் பண்பாட்டு அம்சங்களுக்கு செயற்பாட்டு ரீதியான வடிவங்கள் அவசியம். மலையக கலை இலக்கியத்தின் மேம்பாட்டுக்காக ஆங்காங்கே பலர் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் அவை போதாது என்ற நிலை இருந்து கொண்டிருக்கின்றது. மலையக மக்கள் தேசிய இனமாக அங்கீகரிக்கக் கூடிய ஓர் அடையாளத்தை முதலாளித்துவ அரசியல் கட்டமைப்புக்குள் நேரடியாக மோதக் கூடிய ஆவணங்களை எழுத்துக்கள் மூலம் மோதக் கூடிய சக்திமிக்க இளைஞர்கள் இன்று உருவாகியுள்ளார்கள். படை எடுத்துள்ளார்கள். இந்த இளைஞர்களை நாங்கள் குறைத்து மதிப்பிட முடியாது. எதிர்காலத்தில் தாயகம் போன்ற சஞ்சிகை வாசிப்பதன் மூலம் அந்த இளைஞர்களை மேலும் சரியான வழிகாட்டலுடன் உருவாக்க முடியும்.

ஒரு சமூகத்தின் மாற்றம் என்பது கால மாற்றத்திற்கு ஏற்ப சமூகத்தை மாற்றியமைக்கப் போவதென்பது அந்த இளைஞர்களுடைய கடப்பாடாக அமைந்திருக்கிறது. இளைஞர்கள் காலைச் சூரியன் போன்றவர்கள். அவர்களை யாராலும் தடை செய்து விட முடியாது. அவர்கள் நினைத்தால் ஒரு சமூகத்தை நிச்சயமாக விடியலுக்குக் கொண்டு வர முடியும்.

நாம் நினைத்தால் நிச்சயமாக விடியலை நோக்கிப் பயணிக்கச் செய்ய முடியும். ஆகவே இளைஞர் ஏன் ஒரு சமூகத்தின் முக்கியமானவர்கள்.

உலக இளைஞர் சனத் தொகையைப் பொறுத்த மட்டில் 1.2 பில்லியன் இளைஞர்களுடைய சனத் தொகையாக இருக்கின்றது. அது இலங்கையினுடைய சனத் தொகையில் 4 மில்லியனாக இருக்கின்றது. ஆகவே மொத்த சனத் தொகையில் கால் பகுதி இளைஞர்களுடைய பங்களிப்பு இருக்கிறது. ஆனால் இந்த இளைஞர்களுடைய சனத்தொகைக்கு ஏற்றவாறான செயற்பாடுகள் இருக்கிறதா என்றால் மிகப்பெரிய கேள்விக்குறிதான்.

உலக வரலாறுகள் பல இருக்கின்றன. ஆகவே மலையக சூழலிலும் மலையக எதிர்கால செயற்பாடுகள் கட்டமைக்கப்பட வேண்டுமாக இருந்தால் இந்த மலையகத்தினுடைய வரலாறுகள் ஆழகமாக விதைக்கப்பட வேண்டும். அது விதைக்கப்பட வேண்டிய இடம் தான் இளைஞர்களாக இருத்தல் வேண்டும்.

இளைஞர் அதனைத் தெரிந்து கொள்வதில் மத்தியில் இந்த வரலாற்றுப் பயணத்தில் தடைகள் இருக்குமாக இருந்தால் எதிர்கால மலையகத்தை கட்டமைப்பது என்பது மிகப் பெரிய பாதிப்பான விடயமாக மாறி விடும்.

அரசியல் பண்பாடாக இருக்கலாம். அல்லது பொருளாதாரப் பண்பாடாக இருக்கலாம் ஒரு சமூகத்தின் பொருளாதாரம் என்பது அந்த சமூகத்தினுடைய அரசியலிலும் அந்த சமூகத்தின் சுய இருப்பையும் தீர்மானிக்கும் சக்தியாக அது இருக்கும். மலையகத்தைப் பொறுத்த மட்டில் நிலவுரிமை இருந்திருந்தால் அல்லது அது மாற்றப்பட்டிருந்தால் எங்களுடைய பொருளாதாரம் கட்டமைக்கப்பட்டிருக்கும்.

பொருளாதாரம் சிறந்த முறையில் கட்டமைக்கப்பட்டிருந்தால் கல்வி, இதர செயற்பாடுகளும் தற்போது இருப்பதை விட பல மடங்கு உயர்வானதாக கட்டமைக்கப்பட்டிருக்கும்.

---

# மீண்டும் சர்ச்சைக்குள்ளாகியுள்ள ரதல்ல குறுக்கு வீதி



## போக்குவரத்து தடையால் பாதிக்கப்படும் ஒரு தரப்பால் விசனம்...

**ஹற்றன் – நுவரெலியா பிரதான வீதியிலுள்ள ரதல்ல குறுக்கு வீதியில் பார ஊர்திகள் மற்றும் பஸ் பயணங்களுக்கு தற்போது தடைவிதிக்கப்பட்டுள்ளது.அந்த வீதியில் நடந்த கோரவிபத்தால் இந்த நடைமுறை வகுக்கப்பட்டுள்ளது.அதனால் ஒரு சாரார் பாதிக்கப்பட்டுள்ளனர்.விபத்துக்கள் எதிர்பாராமல் நடப்பவை அதை தடுப்பதற்கு மாற்று வழிகள் இருக்கின்றன.அதைவிடுத்து பாதையை பஸ் பயணங்களுக்காக மூடுவது ஏற்கொள்ள முடியாத காரணியாகும்.**

கடந்த சில வருடங்களாக பொது போக்குவரத்து ரதல்ல குறுக்கு வீதியிலேயே இடம்பெற்று வந்தன. வீதியில் தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து சேவைக்கு சொந்தமான பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

இந்நிலையில் கொழும்பிலிருந்து நுவரெலியாவுக்கு பிரபல பாடசாலை ஒன்றிலிருந்து கடந்த ஜனவரி மாதம் சுற்றுலா வந்த பஸ்களில் ஒன்று ரதல்ல குறுக்கு வீதியில் வேன் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் வேனில் பயணஞ் செய்த ஆறு பேரும் ஆட்டோவில் பயணஞ் செய்த ஒருவர் உட்பட ஏழுபேர் பலியாகி, 53 மாணவர்கள் காயமடைந்தனர்.

அதனை தொடர்ந்து குறுக்கு வீதியில் பார ஊர்திகளுக்கான போக்குவரத்து தடை செய்யப்பட்டன.

இதனால் கார்லிபெக், தம்பகஸ்தலாவ,லேன்டெல்,சமர்செட்,வங்கி ஓயா ரதல்ல உள்ளிட்ட தோட்டங்களில் சுமார் 5000 இற்கும் மேற்பட்ட மக்கள் குறித்த வீதியில் நடைபெற்ற பொது போக்குரத்தினையே பயன்படுத்தி வந்தனர்.

இந்நிலையில் குறித்த பொக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளமையினால் குறித்த தோட்டங்களிலிருந்து நானுஓயா,நுவரெலியா உள்ளிட்ட பல பகுதிகளுக்கு செல்லும் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக பலரும் தெரிவிக்கின்றனர்.

இந்த குறுக்கு வீதியில் தற்போது கடுகதி போக்குவரத்து மாத்திரம் இடம்பெறுவதாகவும் குறித்த பஸ்களில் ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு விதமாக கட்டணம் அறவிடப்படுவதாகவும், பொது போக்குவரத்து இல்லாது போனதன் காரணமாக பலருக்கு ஆட்டோகளில் சென்று பஸ்களில் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பாடசாலை மாணவர்கள் உரிய நேரத்திற்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், கிளினிக் செல்லும் தாய்மார்கள் வைத்திய சாலை செல்லும் நோயாளர்கள் உட்பட பலர் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதியில் பெரும்பாலான விபத்துக்கள் வெளியிலிருந்து வருகை தந்த பார ஊர்திகளினால் தான் எற்பட்டுள்ளதாகவும் இவ்விபத்துக்கள் அனுபவமில்லாததன் காரணமாக ஏற்படுவதாகவும் ,இந்த வீதியில் பயணஞ் செய்யும் சாரதிகள் மிகவும் அவதானமாகவும் கவனமாகவும் பயணஞ் செய்வதாகவும் எனவே மீண்டும் பொது போக்குவரத்தினை ஆரம்பிக்குமாறு பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.




கே.சுந்தரலிங்கம்
ஹற்றன் விசேட நிருபர்

---

# 'மலையகம் 200'

## பொது வேலைத்திட்டத்தின் தேவை உணர்த்தப்பட வேண்டும்

**A** வருடத்தில் அடைந்த சாதனைகள் சில, அடைய வேண்டியவை பல என்பதில் சந்தேகமில்லை. 1980களின் இறுதிப்பகுதியில் குடியுரிமை படிப்படியாக வழங்கப்பட்டதன் பின்னரே இச்சமூகத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இடம் பெற்றுள்ளன. கல்வித் துறையில் அடைந்துள்ள முன்னேற்றங்கள், சமூக நிலை, உட்கட்டமைப்பு, வீடு, சுகாதாரம் என குறிப்பிட முடியும். ஆனால், தேசிய ரீதியான அபிவிருத்தியுடன் ஒப்பிடும்போது இவை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது. ஆயினும், இச்சமூகத்தின் இன்றைய வளர்ச்சி சுமார் 30 வருடங்களில் அடைந்து கொண்டமையாகும்.

200 வருட வரலாற்றை நினைவு கூரும் தருணத்தில் மலையக மக்களின் பிரச்சினைகளை இலங்கை சமூகத்தில் பெரிதும் அறியப்பட்ட ஒன்றாக காணப்படுகிறது. அரசியல் மற்றும் சிவில் சமூக மட்டத்தில் இது பேசப்படுகிறது. இவை முற்போக்கான அபிவிருத்தியாகும். மலையக மக்கள் தமது பிரச்சினைகளை, உரிமை மறுப்புகளை, கோரிக்கைகளை எல்லா இடங்களிலும் அச்சமின்றி முன்வைக்கின்றனர். இது குறித்து வாதபிரதிவாதங்கள் இடம்பெறுகின்றன. ஏனைய சமூகங்களில் காணப்படும் முற்போக்கான சக்திகள் மலையக சமூகம் தொடர்பான கரிசனைகளைத் தொடர்ந்தும் வெளிக்காட்டி வருகின்றன. அத்துடன், இம் மக்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்குத் தயாராக உள்ளனர். .

இருநூறு வருட நிகழ்வுகள் அனைத்தும் ஒரு பொது வேலைத் திட்டத்தினை முன்வைத்து இடம்பெறுவது அவசியமாகும். தற்போதைக்கு இத்தகைய பொது வேலை திட்டம் ஒன்று இருப்பதாகத் தெரியவில்லை. அத்தகையதொரு பொது வேலை திட்டம் அல்லது நடவடிக்கை திட்டம் , இச் சமூகத்தின் தேவைகள், சமூக பொருளாதார மற்றும் அரசியல் கோரிக்கைகள் என்ன என்பதனை தெளிவாக வெளிப்படுத்த, அதனை தேசிய, சர்வதேச ரீதியாக பரப்புரை செய்வதற்கு உதவும்.

அத்தகையதொரு பொது வேலை திட்டம் விரைவில் தயாரிக்கப்படுமாயின் அதனை சகல 200 வருட நிகழ்வுகளிலும், மக்கள் மயப்படுத்த, மக்களை அது தொடர்பாக அறிவூட்ட, பொது பிரகடனமாக வெளியிட முடியும்.

மலையகத்தவர் அல்லாத பிற சமூகங்களும் 200 வருடத்தினை முன்னிட்டு சில நிகழ்ச்சிகளை செய்து வருகின்றனர். அத்தகைய தரப்பினருக்கும் எமது பொது வேலைத் திட்டத்தினை வழங்கி அதற்கான ஆதரவினை சகல மட்டத்திலும் திரட்ட வேண்டும். பொது வேலைத்திட்டம் மலையக மக்களின் கல்வி, சுகாதாரம், வீடு, காணி, ஆட்சி நிறுவனங்கள், அரசியல் பிரதிநிதித்துவம், பெண்கள், சிறுவர்கள், இளைஞர்கள், தொழில்வாய்ப்பு, பெருந்தோட்டம், கைத்தொழில், மனித உரிமைகள், வறுமை, வாழ்வாதாரம், கலை, கலாசாரம், இனத்துவ அடையாளம், உட்கட்டமைப்பு, சம்பளம் என சகல அம்சங்களையும் உள்வாங்கியதாக அமைய வேண்டும்.

மேற்கூறிய துறைகளில் எமது தற்போதைய அடைவு, அது தொடர்பான புள்ளிவிபரங்கள், தேசிய ரீதியான அடைவுகளுடன் ஒப்பிடும் போது காணப்படும் வேறுபாடுகள் மற்றும் இந்த நிலையினை சரி செய்ய அவசியமான செயற்பாட்டுத் திட்டங்கள் எவை போன்ற விடயங்களை தெட்டத் தெளிவாக முன்வைப்பதாக பொது வேலைத்திட்டம் அமைய வேண்டும். இவை முன்னுரிமை அடிப்படையில் குறுங்கால, நடுத்தர மற்றும் நீண்டகால திட்டங்கள் என்ற அடிப்படையில் அமைய வேண்டும்.

ஆகவே, இந்த வாய்ப்பினை மலையக சமூகம் சரியாகப் பயன்படுத்த வேண்டும். ஒரு பொது வேலைத்திட்டத்தினை சகல தரப்பினரையும் உள்வாங்கி தயாரித்து அதற்கான மக்கள் அங்கீகாரத்தைப் பெற்று பெரும்பான்மை மற்றும் ஏனைய சிறுபான்மை சமூகங்களில் உள்ள முற்போக்குவாதிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்துவது, விவாதிப்பது, ஊடகங்களில் பரப்புரை செய்வது, சர்வதேச கவனத்தினை ஈர்க்க உபாயங்களை வகுப்பது, அரசியல் கருத்தொருமைப்பாட்டை கட்டியெழுப்புவது என்பன 'மலையகம் 200' முழுமை பெற, ஒரு அர்த்தமுள்ள நிகழ்வாக இருக்கும்.

# கவிதை மஞ்சரி

கிருஷா

kavithaimanjari@gmail.com

## வறுமைக்குள் வைரம்..!

எம்.ரீ.எம்.அன்ஸார்
ஏறாவூர்.




இலங்கை யிலிருந்து
இந்தியா சென்றாய்
கலங்காத குரலில்
பாடியே வென்றாய்
கலங்கரை விளக்காய்
வழிகாட்டி நின்றாய்
துலங்கிடும் குரலை(த்)
துல்லியமாய் ஆக்கினாய்

ச ரி க ம ப மேடையில்
சரித்திரம் படைத்தாய்
தெறித்திடும் பாடலில்
துயரைத் துடைத்தாய்
சிரித்திடும் அழகில்
சிகரம் தொட்டாய்
விரித்திடும் சிறகில்
விசித்திரம் கொண்டாய்

அசானி என்ற
உந்தன் நாமம்
அசைபோட வைக்குது
உலகைத் தினமும்
இசையோடு சேர்ந்த
உந்தன் பாட்டும்
திசை எட்டில்
என்றும் முழங்கும்

உன்னாலுன் ஊரே
மகிழுது மகளே
உன்னதம் கண்டே
உயர்ந்திடு நீயும்
கைகள் தட்டவே
எழுந்திடும் ஓசை
நாளை உன்பேர்
சொல்லும் உண்மை..!



## என்னவளே...

உசனார் எம்.பஷீர்,
ஏறாவூர்.

திசைமாறியே என் பொழுதுகள்
தினசரி நகர்ந்ததால்
கரிசனைகள் வாழ்வில்
கவிழ்ந்தே போயின

வாழ்க்கையின் பிடிப்புகள்
வலுவிழந்து போனதாலே
ஊழ்வினை இதுவோவென
ஊராரும் இகழ்ந்தனரே

நீசனாய் என் பெயரும்
நிதர்சனமாய் உலாவிட கெடுதியின்
தாசனாய் கேலியும் எனைக்
கேட்காமலே அண்டின

பெற்றோரின் கண்ணீரும்
கற்றோரின் கண்டனமும்
சுற்றத்தாரின் சுடுசொல்லும்
முற்றத்திலே முகாமிட்டன

கால்கட்டு போட்டாலே
காளையிவன் வாழ்வு வளமாகுமென்று
காரிகையைத் தேடியே
காலமும் கழிந்ததே

வரனொன்றின் சமிக்ஞையினால்
வரமொன்று கிடைத்தது போல்
கரம்பற்றிக் களிப்படைய
காலமும் கனிந்ததே

துணிந்து கழுத்தை நீட்டியே
துயர் துடைக்க வந்தவள்
கனிந்து தந்த அன்பினாலே
கறையும் விலகி ஓடியதே

கசந்துபோன வாழ்க்கையதில்
வசந்தம் வந்து வீசிட
சுகந்தமாய் பாதையமைத்து
சுபீட்சத்தைத் தெளித்தாளே

வாழவந்தவர் நாமென்று
நீளமாய் அறிவுரைதனை
நிதானித்து மொழிந்ததாலே
நிலைமைகள் யாவும் சீராயமைந்தனவே

நாலுபேரும் மதித்திட
நானிலத்தில் சிறந்திட என்
நாணயமே அவள்தானே
நா நயமாய் சொல்வேனே

## புதுமருந்து தருவதாரோ?

மெய்யன் நடராஜ்

அடிமைகளாய் இருக்கின்ற ஆட்க ளென்று
அடையாளப் படுத்திடவோ ஆண்டிரு நூறு
கொடிபிடித்துக் கோசமிட்டுக் கூட்டம் கூடிக்
கொண்டாடிக் களிக்கின்ற கோலம் பாரு
ஓடிந்துநிற்கும் சமூகத்தை ஒட்ட வைக்கும்
உயர்பசையை உருவாக்க ஊரில் யாரு
மடிவதற்குள் வழிசமைத்து மக்கள் வாழ்வில்
மறுமலர்ச்சி ஏற்படுத்தின் மாறும் ஊறு
★
கடப்பதற்குப் பாலமில்லாக் கடவை தன்னைக்
கடப்பதற்கு முடியாதக் கட்டம் கொண்டோர்
நடக்கவுள்ள நாடகத்தை நாடே காண
நல்லதொரு மேடையிடல் ஞாய மாமோ
முடங்கிவிட்ட முன்னேற்றம் முட்டி மோதி
முழுநிலவாய் ஆவதற்கோ வழியைக் காணோம்
தடங்கலின்றி ஊர்வலங்கள் தானே செல்லத்
தலையெடுத்து நிற்பதுதான் தர்ம மாமோ?
★
கொண்டாட்டம் நடத்துகின்றக் குன்றில் இன்றும்
குருத்துகளை வேலைக்காய் கூட்டிச் சென்றே
திண்டாட வைத்தற்கோர் தீர்வைக் காணத்
திணறுகின்ற நிலையினிலே தீயாய்ச் சுடும்
பண்பாட்டை உண்டாக்கிப் பாட்டும் பாடும்
பாங்கிதனை என்னவென்று பார்ப்ப தாமோ
புண்பட்ட நெஞ்சங்கள் பூசிக் கொள்ளப்
புதுமருந்து கொண்டுவரப் போவா ராமோ?

## என் நிலா...!

முகம்மது அய்யாஷ்
கிண்ணியா.



உனக்கும் எனக்கும் இருக்கும்
இந்த உறவை இவ்வுலக மனிதர்களால்
புரிந்து கொள்ள முடியாது...
அனைவரும் உன்னை சொந்தம் கொண்டா
டலாம்,
நீ அவர்களுக்கு சொந்தம் எனலாம்
அந்த நேரம் நீ அவர்களை பார்த்து
ஏளனமாய் சிரிப்பதை நான் அறிவேன்...
கண் இல்லாத எவனோ
உன்னை மானிட பெண்ணுக்கு ஒப்பிட்டு
காதல் கவிதை கிறுக்குகிறான்
என்ன ஒரு வேடிக்கை,
புரியவில்லை அந்த மடையனுக்கு
இறைவனின் படைப்பில்
உனக்கு நிகர் நீ மட்டுமே என்பது....
விடு! அவர்கள் திருப்திக்கு
அவர்கள் எது வேண்டுமானாலும்
சொல்லிக் கொள்ளட்டும்,
ஏனெனில் நம் காதல்
என் ஜன்னலின் வழி என்றும் தொடரும்...

## குதிரை நிலவு

வாழை நிஹாரா

நிலவு பெய்கிறது
நிழலை வீசுகின்றன ஏன் இம்மரங்கள்?

வளர்பிறை நாட்களை நேசிப்பவள்
அந்நாட்களின் இரவுகளை
வெட்ட வெளிகளில் கழிப்பவள்

எங்கள் ஊர் சிற்றூரும் அல்ல
பேரூரும் அல்ல
ஒவ்வொரு இரவும்
எங்களூரில்
ஏழு நிலவுகள் வந்து
அழகு கொள்ளை கொள்ளும்

தண்ணீரில் கல் எறிந்து
ஒரே நிலவை
ஆயிரம் நிலவாய்
ஆக்குவோம் நாங்கள்...

வெறுமனே
பொறுமை காத்து
ஆயிரம் நிலவுகள்
ஒரே நிலவாய் கலப்பதும்

நிலாவுடன் பேசிக்கொண்டே
வீடு திரும்புவதும்
தனிமைப் பயங்களோ
வழிநடை அலுப்போ
தெரிவதே இல்லை

வீடடையும் முன்பே
விடைசொல்ல மறந்து
வாசலைத் தாண்டி உள்ளே புகுவோம்

வெளியைக் களைந்து வீட்டை அணிந்து
கூரை சுவர்கள் தரையென்று இயங்கையில்
வழித்துணை நிலாவை வாசலில் நிறுத்துவோம்...

முற்றத்து வானில் பிரிந்த நிலவு
தெருவைக் கடந்து மறைந்துபோயிருக்கும்

இப்போதும் கொடியில் காய்கிறது நிலவு
கூடவே என் அணியும் துணியும்
ஒளியில்
குதிரைபோல் தெரிகிறது

இப்படிச் சிவந்து
இவ்வளவு பெரிதாக
இத்தனைக் குளிர்வாய்

ஒவ்வொரு இரவும்
சிறுமிகளாகிறோம்

தினமும் நிலவு தேடும்
எங்கள் கண்களுக்கு
தனியான ஒரு நிலவு
எங்கள் ஊர்
மேலாக ஒரு குதிரைபோல்
போய்க் கொண்டிருக்கிறது



## கோடுகள்

(கவிநேசன் நவாஸ்)

நிறங்களின் சரணாலயம்
தூரிகையின்
அழகிய ஒப்பம்
ஓவியம்!

விரல்கள் வேண்டுகிறது
நகராத நம்பிக்கையை
பூக்களின் மூச்சுகளில்
புன்னகைக்கும்
காற்றைப்போல்!

சிந்தியது "மை"
சிதறாத அற்புத அழகு
சித்திரம்...
மகிழ்சியோடு ஒப்புக் கொள்கிறது
மனது!

கோடுகள் சிதைந்து கிடக்கின்றன
இங்கு
அது சித்திரங்களை
சிதைத்து விடாது
எங்கும்!

கோடுகள்
சித்திரத்துக்குள்
குடியிருந்தாலும்
அது நிராகரிக்க நினைப்பதுமில்லை
விட்டு வெளியேற
விரும்புவதுமில்லை!

கோடுகள்
தூரிகையின் தேடல்கள்
ஓவியத்தின்
மெல்லிய வருடல்கள்!

ஓவியம்
வானவில்லாக வார்க்கப்படுகிறது
ஒரு தாஜ்மஹாலைப்போல்
கண்களில் தங்கிக் கொள்கிறது!

வேறுபடும் இதயங்களும்
ஈடுபாடுடன் அல்லவா நெருங்குகிறது...
ஆளும் உள்ளங்களையும்
ஒரு எல்லைக்குள்
வாழவைக்கிறது ஓவியம்!

தூரிகை
மையை அருந்துகிறது
உண்மையை உணர்த்துகிறது!

விரல்கள் வேண்டுகின்றன
நகராத நம்பிக்கையை
பூக்களின் மூச்சில்
புன்னகைக்கும்
காற்றைப்போல்!

## பாதை மாறாப் பயணம்...!!

ஷெல்லிதாசன்
திருகோணமலை

காட்டாற்று வெள்ளத்துக்கு
கல்லணைகள் .
கட்டற்று நெறிபிறழ்ந்த வாழ்க்கைக்கு
நல்லறிஞர் வார்த்தைகள்.

வாலறுந்த பட்டம்
வானத்தில் நிலைக்காது
தன்னிலையை அது இழந்து
சேற்றில் வீழ்ந்து சீரழியும்.

கற்கின்ற வயதினிலே
கற்றுவிட வேண்டுமடா
காலத்தின் பயணத்தில் நீ
கால்பதிக்க மறந்துவிட்டால்

உனைப்பார்த்து
தன் பயணத்தை அது
ஒருபோதும் நிறுத்தாது.

போன காலம்
வருவதில்லை
பொன்னான இளமை
மீண்டும் அது புலராது.

மயக்கதில் உனையாழ்த்தி
மண்ணாக்கி காசுபண்ண
தயங்காத கூட்டமொன்று உன்
தோள் தழுவி தாலாட்டும்.

இழந்தபின்னே அழுவதிலே
ஏது(ம்) பயன் கிடையாது.

தீச்சுடரை அமிழ்தமென
எண்ணி வீழும் விட்டில்கள்
சொல்லுகின்ற பாடத்தை
நீ உணர்ந்து விழித்துக்கொள்.

தொட்டிலிலே உன்னையிட்டு
தூங்கவைத்த அன்னையின்
இனிமையான கனவுகள்
நனவாகிப் புன்னகைக்க
ஏற்றவழியை இன்றே நீ தீர்மானி
எதிர்கால விடியலுக்காய்..!

## சொல் வழுவிய தேசிய கீதம்

காத்தான்குடி எம்.ஐ.அப்துல் நஸார்

தேசத்தின் அடையாளம் தேசிய கீதம்
தேசபக்தியின் தேயாத உயிரின் நாதம்
நேசிக்கும் நாட்டின் இதயத்தின் துடிப்பு
நேயம் நிறைந்த கனிவான பிணைப்பு

உலகம் பார்க்க தேன்சுவைக் குரலில்
உடல் சிலிக்கும் வரிகளின் வடிவில்
பலரும் வியக்கும் பிரமாண்டக் காட்சி
பண்ணிசை பார்த்த கண்களே சாட்சி

வார்த்த வரிகளில் பாரதியும் பாடியது
வார்த்தை தவறியதால் உதிரம் கொட்டியது
பூர்வீகத் தாய்மொழியில் வழுவிய கீதம்
பூரணமாய் குவிந்த அவமானச் சோகம்

திரிபு என்பது அவசரத்தின் இயல்பு
திருத்திய ஒத்திகையில் தவறிய இயைபு
சரியான உச்சரிப்பே தேசத்தின் மகிழ்ச்சி
சரிசெய்ய மறந்தது மாபெரும் இகழ்ச்சி

இனிமேலும் இதுபோல் தவறு வேண்டாம்
இனிமை கீதத்தில் திரிபுகள் வேண்டாம்
தனியாகவும் கூட்டாகவும் பாடிய போதும்
தற்புலன் இருக்கட்டும் வரிகள் மீதும்

இலக்கண யாப்பினை கவிதையில் மீறலாம்
இதுவும் வடிவமாக புதுக்கவிதை ஆகலாம்
இலங்கையின் உயரிய அரசியல் யாப்பில்
இருப்பதை மாற்றினால் முடியும் தப்பில்

## இயற்கை அழகுடன்

# விடுமுறையை களிக்க உதவும் "சீதாவக்க ஒடிசி"




**சீதாவக்க ஒடிஸி என்று சொன்ன–வுடனேயே எனக்கு கி.மு.800 இன் கிரேக்கக் கவிஞரான ஹோமர் எழுதிய புகழ்பெற்ற காவியமான 'ஒடிஸி' தான் நினைவுக்கு வருகிறது. கிரேக்கத்–தில் ஒரு சிறிய ராஜ்ஜியமான இத்தாக்கா–வின் ஆட்சியாளரான ஒடிஸியஸ், டிராய் நகரில் நடந்த ட்ரோஜன் போரில் பங்கேற்று, அதில் வெற்றி கொண்டதன் பின்னர் தனது நாட்டுக்குத் திரும்பியபோது எதிர்கொள்ள வேண்டிய சாகசங்கள் மற்றும் விசித்திரமான நிகழ்வுகளை அது குறிக்கிறது.**

இந்தக் கதையினையடுத்து ஒடிஸி என்ற சொல் காவியப் பயணம் என்ற அர்த்தத்தில் தற்போது பயன்பாட்டுக்கு வந்திருக்கின்றது. இந்தப் பெயரை இந்தப் பயணத்திற்காகப் பயன்படுத்துவது ஒரு வகை ஆச்சரியமான நினைவைத் தருகின்றது. அதற்கான காரணம் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு ஒடிஸி எனக் கூறும் போது நினைவுக்கு வருவது ஒடிஸியஸின் வீரப் பயணமாகும். இந்தப் பயணத்தின் மூலம் அத்தகைய அனுபவத்தை அனுபவிக்க முடியும் என்ற நம்பிக்கையை இந்தப் பெயரிடல் அவர்களுக்குள் உருவாக்குகின்றது. மேலும், ஒடிஸியஸ் வந்த ஒகிஜியா என்ற சொர்க்கத் தீவு இது என்பதையும் உணர வைக்க முடியும். உலகெங்கிலும் உள்ள கோடிக்கணக்கான மக்கள் இந்தக் கதையைப் படித்து ரசித்திருப்பதால், 'சீதாவக்க ஒடிஸி' எனக் கூறியவுடன் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் ஈர்ப்பை அதிகரிக்க இது ஒரு நல்ல ஊக்கத்தை அளிக்கிறது.

ஊடகம் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் கூற்றின் பிரகாரம், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு புதிய அனுபவத்தை வழங்கி சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் நோக்கில் ஊடக அமைச்சு, புகையிரத திணைக்களம் மற்றும் மேல்மாகாண சுற்றுலா சபை ஆகியன இணைந்து இந்த 'சீதாவக்க ஒடிஸி' சிறப்பு புகையிரதப் பயணத்தை ஆரம்பித்துள்ளன.



2013ம் ஆண்டு ஜனவரி 15ம் திகதி 'சீதாவாக்க ஒடிஸி' சொகுசு ரயில் சேவை சோதனை ஓட்டமாக ஆரம்பிக்கப்பட்டதுடன், அதன் பின்னர் இந்தச் சுற்றுலா வலயத்துக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து பெப்ரவரி 26ம் திகதி முதல் வார இறுதியில் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் சுற்றுலாப் பயணிகளுக்காக சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த பயணத்துக்கு உள்ளூர் மற்றும் வெளியூர் சுற்றுலா பயணிகளிடம் அதிக செல்வாக்கு இருந்தது. அதற்குத் தீர்வாக ஆகஸ்ட் 5ம் திகதி முதல் சனிக்கிழமைகளில் புதிய அட்டவணையை அமுலாக்க புகையிரதத் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது.



சனிதா சீதாவக்க ஒடிஸி பயணத்தின் ஆரம்ப பயணத்தில் போக்குவரத்து, ஊடக மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ சென்ஹோன்க், இலங்கைக்கான வியட்னாம் தூதுவர் ஹோ தீ தன் ட்ருக், ரஷ்ய கலாசார நிலையத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தர் நடாலியா குலிசென்கோ உள்ளிட்ட உள்நாட்டு, வெளிநாட்டு இராஜதந்திரிகள் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த புகையிரதப் பாதை முன்னர் 'களனிவெளி' சப்ரகமுவ இலகு புகையிரதப் பாதை' என அறிமுகப் படுத்தப்பட்டிருந்தது, சேர் வெஸ்ட் ரிட்ஜ்வே ஆளுநராக இருந்த காலத்திலாகும். அந்த களனிவெளி புகையிரதம் கொழும்பு கோட்டையிலிருந்து ஒபநாயக்க வரை பயணித்ததே இதற்குக் காரணம். பின்னர் இது பெரியவர் மற்றும் சிறியவர் அனைவரிடமும் பிரபலமடைந்தது. தற்போது அவிசாவளை வரை மட்டுமே இந்தப் புகையிரதம் பயணிப்பதால், ஒரே மாவட்டத்திற்குள் சேவையில் ஈடுபடும் புகையிரதம் இதுவாகும்.

காலை 8.30 மணியளவில் 9வது ப்ளாட்பாரத்திலிருந்து நாம் பயணித்த சனிதா சீதாவக்க ஒடிஸி சிறப்பு புகையிரம் பயணத்தை ஆரம்பித்தது. கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தைக் கடந்து மருதானை, பேஸ்லைன், ராஜகிரிய புகையிரத நிலையத்தைக் கடக்கும் போது பூக்கள் நிறைந்த புல்வெளியில் கண்கள் குத்திட்டு நின்றன. கண்களுக்கும் பெரிய ஆறுதலாக அமைந்தது. அதுதான் கொழும்பு ராஜகிரிய கொல்ப் விளையாட்டு மைதானமாகும். அது 1896ம் ஆண்டு 13வது காலனித்துவ யுகத்தில் அது நிர்மாணிக்கப்பட்டதோடு, அது நிர்மாணிக்கப்பட்டு 127 வருடங்கள் பூர்த்தியாகியுள்ளன.

புகையிரத நிலையத்தில் இருந்து இறங்கிய உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கையின் கலாசார அடையாளத்தை வெளிப்படுத்தும் பாரம்பரிய நடனம் மற்றும் பறை இசையுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது. நடைபயணமாகச் சுற்றுலாவுக்குத் தயார்படுத்தப்பட்டிருந்த பஸ் தரிப்பிடத்துக்கு சென்றவர்களுக்கு குளிர்ச்சியான செவ்விளநீர் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பின்னர் பஸ்ஸில் ஏறி கலட்டுவாவ நீர்த்தேக்கத்தைப் பார்க்கச் சென்றோம்.

அதன் பின்னர் நாம் ரண்முத்து எல்லவைப் பார்ப்பதற்காகச் சென்றோம். மழையின்றி நீர் வற்றிப் போயிருந்தாலும், எஞ்சியிருக்கும் நீரோடைகள் மழைக்காலத்தில் இப்பகுதியின் பசுமையையும் அழகையும் மறைமுகமாகச் சொல்கின்றன. மதிய உணவுக்குப் பிறகு அவிசாவளையில் உள்ள சீதாவக்க தாவரவியல் பூங்காவிற்குச் சென்றோம். ஈரலிப்பு வலயத்தில் உருவாக்கப்பட்ட முதலாவது தாவரவியல் பூங்கா இதுவாகும், இது 2014ம் ஆண்டின் பிற்பகுதியில் பொதுமக்களின் பாவனைக்காக இது திறக்கப்பட்டது. 106 ஏக்கர் பரப்பளவில் இது உருவாக்கப்பட்டதன் நோக்கம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் ஈரமண்டல காடுகளில் உள்ள தாவரங்களை எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாப்பதாகும். இந்த பூங்காவின் சமவெளிகள் அழகான குளத்தை சுற்றிக் கட்டப்பட்டுள்ளன, அங்கு அன்னப் படகுகளில் மிதித்து குளிர்ச்சியை அனுபவித்து மகிழ்வதற்கான வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த சுற்றுப்பயணத்தின் போது, சுற்றுலாப் பயணிகள் லபுகம நீர்த்தேக்கம், கோரக்கா நீர்வீழ்ச்சி, குமரி நீர்வீழ்ச்சி, எல்ல மேல் நீர்வீழ்ச்சி, தும்மோதர பாலம், கல் பங்களா மற்றும் கொடிகல மலைத்தொடர் போன்ற பல சுற்றுலாத் தலங்களை பார்வையிடும் அரிய வாய்ப்பைப் பெறுவார்கள்.





வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட கலாசார நிகழ்ச்சியுடன் அழகிய சுற்றுப்பயணம் நிறைவடைந்தது. இந்த புகையிரத சேவையானது குளிரூட்டப்பட்ட மூன்று பெட்டிகளைக் கொண்டுள்ளதோடு, ஒரு வழிப் பயணத்தை மாத்திரம் மேற்கொள்வதாயின் டிக்கெட்டின் விலை 500 ரூபாயாகும். இரு வழிப் பயணங்களுக்கும் ஒரே நேரத்தில் டிக்கெட் வாங்கினால் டிக்கட்டின் விலை 800 ரூபாய் மட்டுமேயாகும். இரண்டாம் வகுப்பில் இரண்டு பெட்டிகள் உள்ளதோடு, ஒரு வழிப் பயணத்திற்கு 300 ரூபாய் அறவிடப்படுவதோடு, இரு வழிப் பயணத்திற்கு கட்டணத்தில் சலுகை வழங்கப்படும். மூன்றாம் வகுப்பில் ஒரு பெட்டி உள்ளதோடு அதற்கான கட்டணம் 200 ரூபாயாகும்.

இதற்கு சீதாவக்க ஒடிஸி, எனப் பெயரிட்டிருப்பது எல்ல ஒடிஸி என்ற பெயரைத் தொடர்ந்தேயாகும் என இது தொடர்பில் தினகரனுக்கு கருத்து தெரிவித்த மேல் மாகாண சுற்றுலா சபையின் தலைவர் சுகத் ஹேவாபத்திரன தெரிவித்தார். 2023ம் ஆண்டு டிசம்பரில், 'சீதாவக்க ஒடிஸி' சுற்றுலாப் பயணம் பல்வேறு செயற்பாடுகள் மற்றும் சாகசங்கள் நிறைந்த அனுபவமாக மாற உள்ளது.

பசுமையான தோட்டங்களின் அற்புதங்களையும், அருவியின் குளுமையையும் ரசித்து, இந்த சூழலில் விளையும் இயற்கைப் பசளைகளைக் கொண்டு பயிரிடப்பட்ட காய்கறிகள் மற்றும் பழங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் கிராமிய உணவின் சுவையை அனுபவிக்கும் சூழலை உருவாக்குவதே இதன் குறிக்கோளாக உள்ளது.

ரசிக கொட்டுதுரகே
தமிழில் எம். எஸ். முஸப்பிர்

---

# 'நம் வாழ்வின் வரங்கள் குழந்தைகளே'

## சச்சின் டெண்டுல்கார்



பியோன் பெர்க் மற்றும் ஜோன் மெக்கன்ரோ ஆகிய இருவரும் 1981ம் ஆண்டின் விம்பிள்டன் டென்னிஸ் செம்பியன்ஷிப்பின் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். எட்டு வயது சிறுவன் தனது இரண்டு மூத்த சகோதரர்கள் மற்றும் சகோதரியுடன் தொலைக்காட்சியில் அந்தப்போட்டியைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"பியோன் பெர்க்தான் வெற்றி பெறுவார்....." மூத்த சகோதரன் நிதித் இவ்வாறு கூறிய போது அச்சிறுவனால் வாயைத் திறக்காமல் இருக்க முடியவில்லை.

"பைத்தியமா உங்களுக்கு....? மெக்கன்ரோதான் கிண்ணத்தைத் தூக்குவார்"

அவனது இளைய சகோதரன் அஜீத்தும், சகோதரி சமீதாவும் சிறுவனின் கூற்றை ஏற்றுக் கொண்டதால் வாக்குவாதம் செய்ய முயலவில்லை. என்றாலும் இறுதியில் சிறுவனின் கணிப்பே நிறைவேறியது. இப்போட்டியில் மெக்கன்ரோ வெற்றி பெற்று விம்பிள்டன் டென்னிஸ் கேடயத்தை வெற்றி கொண்டார்.

அதற்குப் பிறகு, மெக்கென்ரோவின் உற்சாகம் இந்தச் சிறுவனைக் கவர்ந்ததோடு, அது குடும்பத்தின் மற்றவர்களுக்கு பெரும் தொல்லையாக இருந்தது. சிறுவன் மெக்கன்ரோவைப் போல தனது இரு கைகளிலும் துணியைக் கட்டிக்கொண்டு டென்னிஸ் மட்டையை வாங்கித்தருமாறு கேட்டு தொல்லை கொடுக்கத் தொடங்கினான். அப்போது பம்பாய் பல்கலைக்கழகத்தில் மராத்தி இலக்கியப் பேராசிரியராக இருந்த சிறுவனின் தந்தை தனது வேலைப் பழுவுக்கு மத்தியிலும் சிறுவனின் கோரிக்கையை நிறைவேற்றத் தவறவில்லை.

சிறுவயதில் இருந்தே டென்னிஸ் மட்டையை அரவணைத்தபடியே திரிந்த சிறுவன் டென்னிஸ் விளையாட ஆரம்பித்தார். அவன் தனது வீட்டில் டென்னிஸ் மைதானத்தை ஏற்படுத்திக் கொண்டான். தன்னந் தனியே நான்கு பக்கத்திலும் சுற்றிச் சுழற்றி டென்னிஸ் பந்தினை விரும்பியவாறு அடித்து விளையாடத் தொடங்கியதோடு, சுருள் முடியைக் கொண்டிருந்ததால் அவன் மெக்கன்ரோவைப் போலவே தோற்றமளித்தான். இதனால் பக்கத்து வீடுகளில் உள்ள மற்ற சிறுவர்களுக்கு அவன் மெக்கன்ரோவைப் போல தோற்றமளித்தான். அதன் பிறகு தினமும் மாலையில் டென்னிஸ் விளையாடி வந்த சிறுவன், பின்னர் டென்னிஸ் விளையாட்டைக் கைவிட்டு விட்டு அவரது ஊக்கத்தால் கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபட்டான்.

"உனக்கு ஏன் மெக்கன்ரோ மீது இந்தளவு விருப்பம்?" ஒருநாள் நண்பன் ஒருவன் சிறுவனிடன் கேட்டுள்ளான்.

"அவருக்கு எப்போதும் கோபம் வருகிறது. அவர் மிகவும் முரட்டுத்தனமானவர். நானும் அவ்வாறுதானே...." என பதிலளித்தான் சிறுவன்.

சச்சின் டெண்டுல்கார்...!

டென்னிஸ் மட்டையை விட்டு விட்டு கிரிக்கெட் துடுப்பைக் கையில் எடுத்துக் கொண்ட அந்தச் சிறுவன் அதன் பின்னர் 24 வருடங்களாக கிரிக்கெட் களத்தின் முடிசூடா மன்னனாக திகழ்ந்தான். அவர் 2013ம் ஆண்டில் விளையாட்டிலிருந்து ஓய்வு பெறும் போது, சர்வதேச கிரிக்கெட் விளையாட்டில் பல உலக சாதனைகளுக்கான தனி உரிமையைப் பெற்றார். அவர் இந்தியாவிலு ம் சர்வதேச அளவிலும் கிரி க்கெட்டின் 'லிட்டில் மாஸ்டர்' ஆகத் திகழ்ந்தார். கோடிக்கணக்கான இந்திய மக்களிடையே அவர் வாழும் கடவுளாக ஆகினார்.

மெக்கென்ரோவின் ஆட்டத்தையும், அவரது கோபத்தையும் நேசித்த சச்சின் டெண்டுல்கர், சிறு வயதில் குறும்புக்காரச் சிறுவனாவான்.

"ஆமாம்.... நான் சிறுவயதில் குறும்புக் காரச் சிறுவன்தான்"

2013ம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகள் சர்வதேச சிறுவர் நிதியத்தின் தெற்காசிய பிராந்தியத்திற்கான தூதுவராக இருந்து வரும் சச்சின், அதன் சில நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த போது இதனைத் தெரிவித்தார். இந்த நாட்டின் கிராமப்புற சிறுவர்களுக்கு பலம் கொடுக்கவே அவர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்.

ஒரு கிரிக்கெட் வீரராக பல சந்தர்ப்பங்களில் இந்திய அணியுடன் இலங்கை வந்துள்ள சச்சினின் இந்த விஜயமானது அதற்கு அப்பாற்பட்டதாகும். இலங்கைக்கான விஜயத்தின் போது, கொழும்பு சினமன் லேக் ஹோட்டல் வளாகத்தின் டென்னிஸ் மைதானத்தில் சுமார் இருபது நிமிடங்களு க்கு மேல் நீண்ட உரையை நிகழ்த்தினார். 24 ஆண்டுகளாக, 22 யார் எல்லைக்குள்ளான வாழ்க்கையை வாழ்ந்த இந்த அமைதியான மனிதருக்கு விளையாட்டைத் தவிர வேறு கதைகள் இல்லை.

"நான் முதன்முதலில் இலங்கைக்கு வந்தது 1993, 1994ம் ஆண்டு காலப் பகுதியிலாகும். அதாவது 30 வருடங்களுக்கு முன்னராகும். இந்த நீண்ட காலத்தினுள் நான் இலங்கையில் சிறந்த பல நண்பர்களைச் சந்தித்துள்ளேன். அனுபவங்களும் அவ்வாறுதான். மிகவும் விசித்தரமானது. UNICEF சிறுவர் நிதியத்தின் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதன் முக்கியத்துவத்தைப் பற்றி இலங்கையில் உள்ள சிறுவர்களுக்குக் கற்பிக்கும் திட்டத்திற்காக நான் கடைசியாக 2015 இல் வந்தேன். எனது நல்ல நண்பரான முத்தையா முரளீதரன் என்னுடன் இணைந்திருந்தார். அது மறக்க முடியாத அனுபவம். நாம் இருவரும் பல சந்தர்ப்பங்களில் ஒருவருக்கு ஒருவர் எதிராக கிரிக்கட் மைதானத்தில் விளையாடியதை நீங்கள் அறிவீர்கள்.



எனினும் அன்று அந்த நிகழ்வில் நாம் இருவரும் ஒரே நோக்கத்திற்காக இணைந்தோம். அந்தப் பயணம்தான் இதோ இன்னும் தொடர்கிறது" என்றார் சச்சின்.

சிறுவயதில் பிடிவாதமும் குறும்பும் கொண்ட சிறுவனாக இருந்த சச்சின், சிறுவர்களை மிகவும் நேசிப்பவர். யுனிசெஃப் சிறுவர்கள் நிதியத்தில் இணைவதில் மிகவும் மகிழ்ச்சியடைவதாக அவர் பல சந்தர்ப்பங்களில் கூறியிருக்கின்றார்.

இம்முறை தனது இலங்கை விஜயத்தின் போது, ருவன்வெல்லவுக்கு மேற்கொண்ட விஜயத்தை நினைவுகூரவும் அவர் மறக்கவில்லை.

"நான் அண்மையில் ஒரு நாள் ருவன்வெல்லவுக்கு விஜயம் செய்தேன். அப்பிரதேச பாடசாலை மாணவர்களுடன் காலத்தைக் கழித்தேன்.

அது மறக்க முடியாத புதுமையான அனுபவமாகும். காரணம் அந்தப் பிள்ளைகளுடன் காலத்தைச் செலவிட்ட நேரம் நிறைய விடயங்களைக் கற்றுக் கொள்ள முடிந்தது. அதேபோன்று நான் தோட்டப்புற குடும்பங்களின் பிள்ளைகளோடும் நேரத்தைச் செலவிட்டேன். அவர்களைப் போன்று அவர்களது பிள்ளைகளும் பல சவால்களுக்கு முகங் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். இலங்கை அரசாங்கமும், யுனிசெஃப் நிறுவனம் போன்ற அரச சார்பற்ற அமைப்புக்களும் அவற்றிற்குத் தீர்வைக் கொடுக்க பெரும் அர்ப்பணிப்புக்களை, முயற்சிகளை மேற்கொள்கின்றன. இந்தப் பிள்ளைகளின் வாழ்க்கையினை முன்னேற்றுவதற்காக அனைவரும் ஒரே விதமாக பொறுப்புடன் செயற்படுகின்றார்கள். சிறுவர்கள்தான் எதிர்காலம் என்பதை நான் உறுதியாக நம்புகின்றேன். இன்று நாம் அவர்களுக்கு உதவி செய்தால் அவர்கள் நாளை எம்மை பெருமையடையச் செய்வார்கள். எந்த ஒரு நாட்டிலும் சிறுவர்கள் ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பது அவசியம்" என்றார் சச்சின்.

"சிறுவர்கள் விடயத்தில் மூன்று பிரதான காரணிகள் தொடர்பில் கவனத்தைச் செலுத்தப்பட வேண்டும் என யுனிசெஃப் அமைப்பைப் போன்று நானும் நம்புகின்றேன். முதலாவது ஆரம்ப குழந்தைப் பருவம். இரண்டாவது ஊட்டச்சத்து. மூன்றாவது கல்வி. ஆரம்ப குழந்தைப் பருவத்தில் 80 வீத மூளை வளர்ச்சி அடைகின்றது. அப்போது முதல் ஆயிரம் நாட்களில் முழு வளர்ச்சி இடம் பெறுகின்றது. எந்த ஒரு குழந்தைக்கும் முதல் இரண்டு வருடங்கள் மிகவும் முக்கியமானவையாகும். ஊட்டச்சத்து தொடர்பில் புரிந்துணர்வு இருந்த போதிலும் அதிகமான பெற்றோர்கள் தெரிந்தோ தெரியாமலோ குழந்தைகளுடன் அதிக நேரம் செலவிடுவதில் அக்கறை காட்டுவதில்லை. குழந்தைகளிடம் அன்பு காட்டுவது, அவர்களுடன் விளையாடி அவர்களுடன் நேரத்தை செலவிடுவது, பேசுவது, செல்லமாக அரவணைப்பது, கட்டிப்பிடிப்பது போன்ற விஷயங்கள் குழந்தைகள் மற்றும் பெற்றோருக்கு இடையேயான உறவுக்கு மிகவும் முக்கியமானவைகளாகும். இது போன்ற விடயங்கள் அவர்களின் மன வளர்ச்சி அடைவதில் தாக்கத்தைச் செலுத்துகின்றது. அவர்களுடன் நேரத்தை செலவிடுவது உண்மையில் குழந்தைகளின் வாழ்க்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு விடயமாகும். எனினும் அன்றாட வாழ்க்கையின் வேலைப்பழுவின் காரணத்தினால் அது நம்மால் தவறவிடப்படுகிறது. நேரம் பொன் போன்றது என்பது எனக்குத் தெரியும். என்றாலும் அது குழந்தைகளை விட பெரியதாக இருக்கக் கூடாது. இது மிகவும் முக்கியமானதாகும். அதை நாங்கள் புறக்கணிக்க முடியாது" என்றார் சச்சின்.

தனது வாழ்நாளின் பாதியை கிரிக்கெட்டுக்காக அர்ப்பணித்தாலும், சச்சின் தனது ஒரே மகள் சாரா மற்றும் ஒரே மகன் அர்ஜுன் ஆகியோருக்கு அன்பான தந்தையாராவார். அவருடைய பிள்ளைகள் இன்று இளைஞர்களாக இருந்தாலும், தந்தையின் அரவணைப்பில் இருக்க வேண்டும் என்ற அதீத ஆசையைக் காட்டுகிறார்கள். அவர் தனது கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறும் போது ஆற்றிய உரையில், தனது வாழ்க்கையில் மிகவும் விலையுயர்ந்த இரண்டு வைரங்கள் சாரா மற்றும் அர்ஜுன் எனக் கூறினார். அப்போது மகளுக்கு 16 வயது, மகனுக்கு 14 வயது.

"அவர்களின் பிறந்த நாள், வருடாந்தர விடுமுறை நாட்கள், விளையாட்டு நாட்கள் போன்ற விசேஷ சந்தர்ப்பங்களில் அவர்களுடன் நேரத்தை செலவிட விரும்பினாலும், அவற்றையெல்லாம் தவறவிட்டேன். என்றாலும் என் பிள்ளைகள் இருவரும் அதை புரிந்து கொண்டனர்". (17ஆம் பக்கம் பார்க்க)

பௌஸ் முஹம்மட்
தமிழில் எம். எஸ். முஸப்பிர்



# பகிடிவதை



பேராதனை பல்கலைகழகப் பட்டதாரி ஓய்வு பெற்ற சரவணன் மாஸ்டர், பேராதனை வைத்திய பீடத்துக்குத் தெரிவான தனது மகளை அழைத்துச் சென்றிருந்தார். பல்கலை பதிவு நடைமுறைகள் முடிந்த பின், மகளை விஜயவர்தன விடுதியில் கொண்டு விட்டார். "வீட்டுக்கு புறப்பட இன்னமும் நேரம் இருக்கு. நூலகம் வரை போய் வந்தால் என்ன.." மாஸ்டர் மனதில் தோன்றியது. "மகள் நான் கொஞ்சம் 'லைப்ரரி' வரை போய் வாறன்". நடந்தார். மாற்றங்கள் கண்டு பிரமித்தார். நூலக நுழை வாயில் அருகே சங்கப் பலகை இன்னும் மாறாது அப்படியே. அதில் அமர்ந்தார். மனதுக்கு இதமாக இருந்தது. மாணவர்கள் நால்வர் நூலகத்தைக் கடந்து 'செனட்' பக்கம் சென்று மறைந்தனர்." அவர்களில் இருவர் சீனியர்களாக இருக்க வேணும். அவர்கள் பின்னால் பீதியில் செல்லும் இருவரும் புதிய மாணவர்கள்தான். ராக்கிங் செய்ய கொண்டு போகிறார்கள்". மாஸ்டரின் ஊகம் சரிதான். மாஸ்டருக்கு பழைய நினைவுகள் ஒன்றன் பின் ஒன்றாக வந்தன. தான் வந்த காரியத்தைக் கூட மறந்து போனார்.

பேராதனை பல்கலைக்கு அப்போது தெரிவாகி வந்த முதல் வருட புதிய மாணவர்கள், சரவணன் உள்ளிட்ட குழுவினர். பகிடி வதை முடியும் வரை, வெள்ளை உடைதான். விரிவுரைகளுக்கும் அதே உடைதான். 'ராக்கிங் பீரியட்'டில் சீனியர்களிடம் சிக்க வைத்து விடும் இந்த வெள்ளை உடை.

முதலாம் வருடத்தில் பெற்ற பகிடி வதைகளை, இரண்டாம் வருட சிரேஷ்ட மாணவர்களாகிய பின்

புதிய மாணவர்களுக்கு மிகச் சிறப்பாகக் கொடுப்பார்கள். பேராதனை பல்கலைக் கழகத்துடன் இணைந்தாக தும்பறை வளாகம் தொடங்கப் பட்ட வேளை அது. முதலாம் வருட கலைப்பீட மாணவர் தும்பறை வளாகத்தில் அனுமதிக்கப் பட்டனர்.பேராதனை இரண்டாம் வருட மாணவர்களுக்கு அவர்களை 'ராக்கிங்' செய்யும் பாக்கியம் இல்லாமல் போனது." அவர்களுக்கு எப்படியாவது 'ராக்கிங்' கொடுக்க வேணும் மச்சான் இல்லாவிட்டால் திமிர் எடுத்து விடும்" திட்டமிட்ட சரவணன் குழுவினர் தும்பறை வளாகம் நோக்கி அன்று புறப்பட்டனர்.

தும்பறைக்கு பேராவில் இருந்து இரண்டு மணி நேரப் பயணம். பிரதான வீதியை ஒட்டிய சூழலில் தும்பறை வளாகம். வளாகத்தை அண்மித்து சல சலத்த படி ஓடிக் கொண்டிருக்கும் சிற்றருவி. பிரதான வாயிலைக் கடந்து உள்ளே போனால் நில உயர்வு தாழ்வுக்கேற்ப வளாக கட்டிடங்கள் அழகாக காட்சி தரும். 'ராக்கிங்' கெடுபிடிகள் இன்றி சுதந்திரமாய் வருவதும் போவதுமாய் புதிய மாணவர்கள். பேராதனையில் இருந்து போன பாலா, வசந்தன் உள்ளிட்ட சரவணன் குழுவினர் ஆங்காங்கே. தும்பறை வளாக வாயிலில் இருந்து சற்று தூரத்தில் நின்று கொண்டு புதியவர்களை பிடித்தெடுக்கும் முயற்சியில் இறங்கினர். செக்யூரிட்டி கண்களில் மண்ணைத் தூவி விட்டு ஜுனியரை தள்ளிக் கொண்டு அவர்களது றூமுக்கே கொண்டு போய் ராக்கிங் செய்யும் திட்டம் அவர்களிடம் இருந்தது. சீனியர் வெளியே நிற்பது தெரியாமல் 'ஜுனியர் கேரள்ஸ்' இருவர் வளாக வாயிலை கடந்து வீதியில் இறங்கி வெளியே வந்தனர். சரவணன் முந்திக் கொண்டான். இருவரையும் சைகையால், அருகே வருமாறு அழைத்தான். இருவரும் சுமாரான அழகு. அவர்கள் நடையில் நளினம் இருந்தது. அழைப்புக்கு மரியாதை கொடுத்து, புன்னகையோடு அருகே வந்தவர்களை அதட்டினான் சரவணன். "என்னடி சிரிப்பு.." சரவணனின் அதிரடித் தாக்குதல் கண்டு அசரவில்லை அவர்கள். "இருவருக்கும் புரிந்து விட்டது. சீனியர்களிடம் அகப்பட்டு விட்டோம். இனித் தப்பிப்பது எப்படி" இருவரும் யோசிக்க முன்பே "என்னடி, மினுக்கிக் கொண்டு திரியவா, இல்ல படிக்கவா, வந்த. சூட்டிங் ஏதும் இருக்கோ, சொல்லுடி" பாலாவின் எறிகணை, அது. பாலாவுக்கு முண்டு கொடுக்க அன்ரனி நெருங்கினான். ஜுனியர் இருவரும் அசரவில்லை, ஆனால் மௌனமாகினர். "ஊமையாடி? ஏய், என்னடி முதலில் உங்கட பெயரைச் சொல்லுங்கடி" அன்ரனியும் அவன் பங்குக்கு அதட்டினான். அவர்களில் ஒருத்தி சீறினாள், திடீரென்று. "ஐ, கான்ற் ரமில்" தொடங்கியவள்தான். ஒரு செக்கனில் "இங்கிலிசில்" இவர்களை கிழித்து தொங்கப் போட்டு விட்டு மற்றவளையும் இழுத்துக் கொண்டு ஓடிப் போய் விட்டாள். சரவணன் குழுவுக்கு ஒரு கணம் எதுவுமே புரியல்ல.. வம்புக் கிழுத்த இவர்களையே அவள் 'ராக்கிங்' பண்ணி விட்டுப்போன அதிர்ச்சியில் இருந்து மீளமுடியாமல் துவண்டு போய் நின்றனர். "போயும் போய் 'இங்கிலிஷ் மீடிய' காரிகை களையா நீ வம்புக் கிழுத்த? பார்டா ஓடி விட்டாளுகள்". சரவணன் சிவாவிடம் திட்டு வாங்கினான்.. "எனக்கு என்ன தெரியும் மச்சான் பொறுடா அவளுகள், அடுத்த வருடம் வருவாளுகள் பேராதனைக்கு. அப்ப பாக்கிறண்டா. அண்டைக்கு இருக்கு இவளுக்கு". பொருமினான் சரவணன். "நான் வரும்போதே சொன்னன். ஒருவரும், கேக்கல்ல. குண்டகசாலைக்கு "பாகப்பிரினை " படம் பாக்க போகலாம் என்றன். அத விட்டுப் போட்டு, இஞ்ச வந்து அவமானப்பட்டதுதான் மிச்சம்" எரிஞ்சி விழுந்தான் இனியன். "சரி மச்சான் அத விடு. ஐஞ்சு மணிக்கு மாத்தளை முத்து மாரியம்மன் தேர் இருக்குடா. அங்க போவோமா தேரோட்டம் பாக்கலாம்". "சிவா, இப்பவே மூணுமணியாச்சு. நாம போய் சேர, தேரும் ஓடி முடிஞ்சிருக்கும். நேரம் இருந்தா போவம்" இனியன் சொல்லி முடிக்க முன், "டேய்.. பாலா அங்க பார்டா ஒருவன் வாறான்". "ஓம்டா, அவன மடக்கி அவண்ட றூமுக்கே கொண்டு போவம். "வந்தவன் சற்று உயரமான, வாட்சாட்ட மானவன் அவன் நடையில் கம்பீரமிருந்தது. பயந்த சுபாவத்தை கொஞ்சம் கூட அவனிடம் காணவில்லை. பாலா அவன அழைத்தான். "டேய் இஞ்ச வாடா" சுற்றுமுற்றும் பார்த்தபடி வந்தான். சீனியர் அழைப்பதை அந்த தொனியில் இருந்து அவன் புரிந்து கொண்டான். "டேய் உன்னத் தாண்டா. வாடா அங்க ஏன்டா பாக்கிற." மீண்டும் அதட்டினான் பாலா.

"இஞ்ச பாருங்கோ. நீங்க சீனியர் அண்ணன்மார். என் ஊகம் சரியா. இந்த வேலய, பேராதனையில வைச்சுக் கொள்ளுங்கோ. இஞ்ச வேணாம்". "டேய், என்னடா சொன்ன" கோபம் கொப்பளித்தது, கட்டுப் படுத்திகொண்டான். "என்னை, டேய் என்று அழைத்தால் நானும், டேய், எண்டு அழைக்க வேண்டி வரும். நீங்க மரியாதையாய் போயிடுங்கோ" அமைதியாகச் சொன்னான் அவன். "டேய், எங்க, நீ கூப்பிடு பாப்பம்". "டேய்" போங்கடா. சொல்லிய அவன் தன் பாட்டில் போய்க் கொண்டிருந்தான். அசடு வழிந்தது சரவணன் குழுவினருக்கு. "டேய், மச்சான் இவனுக்கு இருக்குடா.. அங்கு வரட்டும். " கறுவினான் பாலா. நடந்த எதையும் எவரிடமும் சொல்வதில்லை என்ற முடிவோடு கண்டி வந்து வருந்தம் தீர பானம் பகிர்ந்துண்டு, கவலைகள் மறந்து விடுதி போயினர்.

காலச் சுழற்சியில் சரவணன் உள்ளிட்ட அனைவரும் இப்போது மூன்றாம் வருட சீனியர்கள். தும்பறை வளாகத்திலிருந்து இருந்து இரண்டாம் வருடத்தை தொடர வந்தவர்கள் ஆங்காங்கு சீனியர்களிடம் சிக்கிக் கொண்டிருந்தனர். சரவணன் குழுவினர் விரிவுரை முடிந்து 'வூஸ்' கன்ரீனுக்கு போயினர்." அங்க பாருடா, சரவணா அது அவள்தான். தும்பறையில்..'ஐ கான்ற் ரமில் ' சொன்னவள். வரட்டும். இப்ப இருக்கு அவளுக்கு.." சரவணனால் அவளை எப்படி மறக்க முடியும்."டேய் மச்சான் பாலா. அவளே தான். தனியாகவே வாறாள்". "வரட்டும்..பார்க்கலாம்.."ஒருவருடம் போனாலும், அவளிடம் பெரிதாக மாற்றமில்லை. நெருங்கி விட்டாள். இப்பவும் சரவணன்தான் முந்திக் கொண்டான். ஏய், நில்லு. எங்கடி போறா. 'ஐ கான்ற்' சொன்னவள் நீதானே. "திருதிருவென முழித்தாள். பயம் அவள் கண்களில் தெரிந்தது. "உனக்குத்தான் தமிழ் தெரியாதே. சரி, சரி. இந்த பெஞ்சில இரு". பயத்தில் உறைந்து நாவறண்டு போன அவள், அக்கம் பக்கம் பார்த்தாள். "டேய், இவள நான் லவ் பண்ணப் போறன். நிமிர்ந்து பாரடி." குனிந்த தலை நிமிரவில்லை அவள். "டேய், தாடா அந்த றோசாப் பூவ. "சிவா ஏதோ ஒரு பூ, பக்கத்தில் இருந்து பறித்துக் கொடுத்தான் " ஐ லவ் யூ டார்லிங்" கையில் இருந்த பூவை நீட்டினான். அவள் என்ன அவனிடம் லவ் சொல்ல வந்தவளா? சுற்றி வர பார்த்தாள். எவரையும் அங்கு காணவில்லை. பீதி அவள் முகத்தில் தெரிந்தது. "உன் லவ்வ சொல்லுடி." கூடவே பாலா நெருங்கிவர சிவாவும் இனியனும் சுற்றி வளைத்தனர்."இனி வேறு வழியில்ல" புரிந்து போனது அவளுக்கு" வகையாக மாட்டி விட்டேன்..". "நீ லண்டனில் இருந்தாடி இங்கு படிக்க வந்த" அவள் கண்கள் குளமாகின. "இஞ்ச, பாருடி, உன்ன தொலைத்து போடுவம்". "நீ.. இஞ்ச படிக்க மாட்டா, அடிச்சு துரத்திடுவம், இருந்து பார்" . "எங்கடி, போச்சு உன் இங்கிலிஷ்?" அவளது இரு கண்களிலும் இருந்து கண்ணீர் கொட்டியது. சரவணனை நிமர்ந்து பார்த்தாள். "அண்ணா.. என்னை மன்னித்து விடுங்கள்.." அழகான தமிழில் ஆற்றொழுக்காக அவள் பேச்சு இனிமையாய் இருந்தது. சரவணன் கையிலிருந்த பூ தானாக கீழே நழுவி விழுந்தது.

"நான் அன்று செய்தது தவறுதான் அண்ணா. சீனியரிடம் அப்படி நடக்கக் கூடாதது தான். அப்போது உங்களிடம் இருந்து தப்பிப் போகறதுக்காகவே, பயத்தில அப்படிச் சொன்னன். எனக்கு இப்ப விரிவுரை இருக்கு அண்ணா, என்னை விடுங்கோ நான் போறன்" அவள் கெஞ்சுவதை பார்க்க பாவம் போல் இருந்தது. கண்ணீரை துடைத்தாள். சரவணனை பார்த்தாள். "அண்ணா ஐ லவ் யூ" சொன்னவள், ஒரு நொடியில் எழுந்து ஓடியே விட்டாள். சரவணன் பேய் அறைந்தவன் போல நின்றான். தும்பறையிலும் அவன் அப்படித்தான் நின்றான்" ஷாலினி "அதுதான் அவள் பெயர். அன்றும் தும்பறையில் சீனியருக்கு ஒரு ராக்கிங். இன்றும் இங்கு அதுதான் நடந்தது. "சரி, அவள் போகட்டும். மச்சான் நமக்கு "டேய்" சொன்னவன, மட்டும் பிடித்தால் போதும் "."அவன பிடிக்கலாம். வந்திருப்பான் சரவணன்" . பாலா சொல்லிவிட்டு நிமிர்ந்தான், "அவன்தான் மச்சான் அங்க நிற்பவன்" ஆட்ஸ் தியேட்டர் அருகே பஸ் எடுப்பதற்காக, அவன் நின்று கொண்டிருந்தான். "சரவணா அவன்தான் நல்லா பார் டா, அவனேதான் " சிவா ஒரே பாய்ச்சலில் அவன் அருகே நின்றான். ஒரு நொடியில் நண்பர்கள் அவனை சூழ்ந்தனர். அப்போது தான் சுற்றி வளைக்கப் பட்டிருப்பதை உணர்ந்து தப்ப வழி தேடினான். "தப்ப வழி ஏதுமில்லை"புரிந்து கொண்டான். சீனியர்கள் கட்டளைக்கு அடி பணிந்தான்.

பாலாவை கண்டு மிரண்டு போனான் "டேய், இப்ப ஒரு தடவை, என்னை 'டேய்" எண்டு கூப்பிடு டா உன் குரல கேக்க ஆசையாய் இருக்கு" . அதே நேரம் 'கெந்தகல' பஸ் வந்து நின்றது. பஸ்சில் பாய்ந்து ஏற முனைந்தான். வசந்தன் அவன் கையை பிடித்து விட்டான். இரும்புப் பிடி அது. அப் பிடியில் இருந்து தப்புவது மிகக் கடினம். முரண்டு பிடிப்பின், எலும்பு உடைவது திண்ணம். அவனுக்கு அந்த கையின் வலிமை ஒரு நொடியில் புரிந்தது.

"டேய். இனி தப்பி ஓடுவது கடினம். எங்கட கோட்டைக்குள், இப்போ, நீ. இது தும்பற இல்ல, எங்களுக்கு இப்பவும் நீ 'பெஸ்ட் இயர் தான்' இங்கு தொடர்ந்தும் படிக்க நீ விரும்பினா எங்களோட வா". சிவா சொன்னதை அவன் புரிந்திருப்பான் போலும். "டேய் என்னடா பாக்கிறா". "ஓம் அண்ண. நான் உங்களோட வாறன். நான் செய்தது தப்புத்தான். மன்னித்துக் கொள்ளுங்கோ அண்ண" . "டேய், நீ இனி சீன் போட வேணாம். சீனியருக்கு மரியாதை கொடுக்க உனக்கு தெரியாம போச்சே. ஆத்திரத்தில் இனியன்."ஜே.பி விடுதிக்கு போகலாம். நீ முன்னால் நட". ஜே.பி வளைவு அண்மித்தது. செங்குத்தாக தொடங்கும் படிகளின் வழியே. அவனை ஏற்றினர். பாலாவின் அறைக்குள் அவனை அடைத்தனர். சுற்றி வர ஐந்து பேர். "என் கதையை இன்றோடு முடிக்கப் போகிறார்கள். "மனதில் அவன் நினைப்பது முகத்தில் பிரதிபலித்தது. "டேய் முன்னால் போய் நின்று இரண்டு நிமிடம் பேசு. உன்னப்பற்றி" . திருதிருவென முழித்த படி. அவன் "என் பெயர். ஆனந்தன். மஹாஜனா கல்லூரி" ". நிறுத்து போதும் உன் புராணம். வேறு ஏதாவது சொல்". "எனக்கு சீனியர் மேல மரியாதையும் மதிப்பும் இருக்கு". "அடிடா. அவன செருப்பால பிறகு ஏன்டா 'டேய்' என கூப்பிட்டாய்". "மன்னியுங்கோ அண்ணா, தெரியாம நடந்து போட்டன். பிறகுதான் உணர்ந்தன்". "சரி. உன்ன மன்னிக்கலாமா என்று பாப்பம். மலை ஏறிய அனுபவம் ஏதும் இருக்காடா உனக்கு". பாலாவின் அதட்டலில் பயந்தே போனான். "இல்ல..அண்ணா". "ஓகே நீ இப்ப சிவனொளிபாத மலையில ஏறி இறங்க வேணும். கிட்ட வாடா நான் சொல்லித்தாறன்". உயரமான ஸ்டூல் ஒன்று அறை மத்தியில் வந்தது. "அதுதான் மலை. அதில் ஏறி இறங்கு". முதல் ஏற்றமே அவனுக்கு தடுமாற்றம். "அப்படித்தான் விரைவாக ஏறு. ம்ம். ம்ம். சரி ஏறுடா. தடுமாறி கீழே விழுந்தான். "டேய், நாடகமா போடுறா". "இல்ல அண்ணா. ரவுசர் பிடிக்குது" "சரி தாண்டா, அதக் கழற்றி போடு" "ரன்னிங் சோட்ஸ்" உடன் ஏறி இறங்கினான். வசதியாக இருந்தது அவனுக்கு "ஐம்பது வரை எண்ணுவம். இலக்கை தீர்மானித்தான் சரவணன். இருபதை கூட தாண்டவில்லை. கீழே விழுந்து விட்டான். மயங்கியவன் போல கிடந்தான். "மச்சான் அவண்ட முகத்தில தண்ணிய அடிச்சு விடு" தண்ணி தெளிக்க அவன் துள்ளி எழும்பி விட்டான் . "டேய் நீ இன்னும் மலை ஏற்றம் முடிக்கல்ல, உன்ன மன்னிக்க முடியாது, அதனால உனக்கு இன்னொரு சோதனை இருக்கு ஓ.கே யா" தலையாட்டினான். "நீ கம்பஸ் கள்ளு குடித்து இருக்கிறாயா". "இல்ல அண்ணா" "உனக்கு ஒரு எழவும் தெரியாது. இவனுக்கு கம்பஸ் கள்ளு குடிப்பது எப்படி எண்டு சொல்லிக் கொடு சிவா ". "டேய், கம்பஸ் கள்ள குடிச்சுப் போட்டு எங்களுக்கு "சலூட்" அடிச்சு விட்டு திரும்பிப் பாக்காம, ஓடிப் போயிடு".

கம்பஸ் கள்ளு குடிக்கத் தொடங்கி விட்டான். கவுண்டிங் தொடங்கியது. பத்தாவது ரவுண்ட். தடால் என மல்லாக்காக விழுந்தான். தண்ணி முகத்தில் தெளித்தும் அவன் எழும்ப வில்லை. "டேய் உன் நடிப்பு போதும் எழும்படா" அவன் எழவில்லை. அவனை எழுப்பும் முயற்சி எதுவும் பலிக்க வில்லை. ஐந்து நிமிடம் கழிந்தது. அவனுக்கு மயக்கந்தான். அசைவைக் காணவில்லை. சரவணன் மனதில் சற்றுக் கலவரம். ஆனால் அவன் அதை காட்டிக்கொள்ளவில்ல.

"சரவணா, என்னடா பயமாயிருக்கா, உன் முகம் மாறி இருக்கு". "அப்படி எதுவும் இல்லடா". பக்கத்தில போய் அவனது கையைப் பிடித்து நாடி துடிப்பு பார்த்தான் சிவா. "டேய், மச்சான் இவனுக்கு நாடி நல்லா வேல செய்யுது. பயப்பட ஒண்ணுமில்ல. கொஞ்ச நேரத்தில மயக்கம் போகும்" . "மச்சான் சரவணா. பகிடி வினையாக போனா என்னடா செய்யிற". "போடா, கண்டதை நீ கற்பனை பண்ணாத இனி கண்ணத் திறப்பான்". சிவா உறுதியாக சொன்னான். "டேய். நான் ஒண்ணும் பயப்பிடல்ல. ஆனா ஏதாச்சும் நடந்தா பொலிஸ் பிரச்சினை எல்லாம் வரும்டா". "நீ பேசாத மற்றவர்கள, பயம் காட்டாத".

அவன் மயக்கம் போட்டு அரை மணி நேரம் போனதே தெரியல்ல. சரவணன் குழுவுக்கு கொஞ்சம் பயம் தொற்றிக் கொண்டது. சரவணன் பதற்றத்தில் வெளியில் போய் பார்த்து விட்டு வந்தான். "எங்கடா, போய் வாறா? சரவணா". "யாராவது வந்து பார்த்தால் பிரச்சனை, அதுதான்" "சிவாவுக்கு நாடித் துடிப்பு பாத்த அனுபவம். ஆனால் சொன்னது போல் எதுவும் நடக்கல்ல வேறு வழிய பாப்பம்". "சரவணா வீணாக பயப்பட வேணாம் ஒண்ணும் நடக்காது. கொஞ்சம் பொறுங்க, சரிவரும்" விழுந்தவன் ஆடாது அசையாது கிடந்தான். "மச்சான், இன்னும் பார்த்துக் கொண்டிப்பது சரி வரா. இவன "கெல்த் சென்ரர்" கொண்டு போவதுதான் சரி.நேரம் போய்க் கொண்டிருக்கு". "சரவணா இவன நாம் எப்படி கொண்டு போற, என்னடா சொல்லுறா?". "மச்சான் ஒருத்தரும் அவசரப்பட வேணாம். நான் சப் வார்டன் வரதன் சேரிடம் விடயத்த பக்குவமாக சொல்லி 'ஹெல்த் சென்ரர்' கொண்டு போக ஆம்புலன்ஸ் ஏற்பாடு செய்து வாறன். ஒண்ணுமே நடக்காது. சாதாரண மயக்கந்தான். பயப்பட வேணாம் கெதியாக வாறன்" சரவணன் விரைவாகப் போனான். ஓய்வு நேரங்களில் அவருடன் "காட்ஸ்" விளையாடும் நட்பு. அந்த தைரியம் சரவணனுக்கு. அவரும் அப்போதுதான் விரிவுரை முடிந்து வந்திருந்தார். அவரது றூமை அண்மித்தும் விட்டான்.

"மச்சான். பாலா நமக்கு இதோடு படிப்பும் முடிஞ்சிடும். இவனுக்கு ஏதும் நடந்தால் கம்பி எண்ண வேண்டும்". "அவன் "டேய்" சொன்னாசொல்லி விட்டு போறான். விட்டுத் தொலைக்க வேண்டியதுதானே. 'வழியில் போன ஓணான பிடித்து மடியில கட்டிய' கதை போல இருக்கு". இனியன் புறுபுறுத்தான். "பொறுடா. நீ எல்லாரையும் பயமுறுத்தாத. டேய் இவன நான் மட்டும் பாக்கிறன். நீங்க எல்லாரும் வெளியில போய் நில்லுங்க". எரிச்சலை கொட்டினான் சிவா. "வரதன் சேர் வந்து பாத்தால் பிரச்சினையாகி விடும்". பாலா தனியாக அவன மெல்ல உருட்டி, ரவுசரை மாட்டி விட்டான். "இவன் கதைத்திருக்கும் போது மயங்கி விட்டதாக சேரிடம் சொல்ல வேணும்". உள்ளே போய் சேருடன் கதைக்க சரவணன் கதவைத் தட்ட, நெருங்கியும் விட்டான்.

மயங்கிக் கிடந்தவன் அருகே தனியே இருந்த பாலா, வெளியே பாய்ந்தான். டேய் இவனப் பாருங்கடா, நான் இந்தா வாறன்" பதறியடித்து ஓடிப் போனான். "சேரிடம், சரவணன் எதுவும் சொல்லாமல் தடுக்க வேண்டுமே. சொன்னால் எல்லாம் கெட்டுப்போகும். எதற்கு சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுப்பான் " பாலாவின் அவசர ஓட்டம் வீண் போகவில்லை.

சரவணன் கதவில் தட்டக் கை ஓங்க, பாலா அதே ஓட்ட வேகத்தில் போய் அவன் உயர்த்திய கையைப் பிடித்து தடுத்து விட்டான். சைகையாலேயே சத்தமிடாமல், றூமுக்கு வருமாறு அழைத்தான். மூச்சிரைத்த படி நின்ற பாலாவைப் பார்த்தான். "ஏன்டா?" சரவணன் வாயை பொத்திய படி கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு போனான் பாலா.

பாலா எதுவும் சொல்லாமல் வெளியே பாய்ந்து ஓடுவதைப் பார்த்து றூமுக்குள் போனவர்கள் வாயடைத்துப் போய் நின்றனர். பாலாவும் சரவணனும் அப்போது தான் வந்து சேர்ந்தனர். பாலா றூமை விட்டு சரவணைனைத் தேடி ஓடும்போதே ஆனந்தன் எழும்பி விட்டான். "கொஞ்சம் தாமதித்தாலும் விசயம் சேர் காதுக்கு போய்விடும். எப்படியும் அதைத் தடுக்க வேணுமே அதனாலதான் பாலாவின் அந்த ஓட்டம்.

இப்போ அனைவரையும் பார்த்து சிரித்தபடி மயங்கி கிடந்த ஆனந்தன் கட்டிலில் எழுந்து அமர்ந்தான். அவனே சொன்னான் "நான் மயங்கி விழுந்தது உண்மை அண்ணை. நீங்கள் சொன்னமாதிரி இரண்டு நிமிடத்தில் என் மயக்கம் போய் விட்டது. உங்களிடமிருந்து தப்ப எனக்கு இப்பவும் வேறு வழி தெரியல்ல. எதுவும் செய்ய என்னாலும் இயலவில்ல. உங்கள் பதற்றத்தைப் பார்த்து இவ்வளவு நேரமும் நானும் மயக்கம் போல நடிச்சன். மன்னித்துக்கொள்ளுங்க. அண்ணை" அவன் கைகுவித்து வணங்கி நின்றான். "உங்கள இனி நான் எப்போதும் மறக்க மாட்டேன். மரியாதையோடு அழைப்பேன்" எழுந்தான், விறைப்பாக நின்று ஐவருக்கும் "சலூட்" அடித்தான். " அவன.. அடிச்சி விரட்டுங்கடா " கத்தினான் பாலா. என் கண் எதிரே அவன் நின்றால், என்ன செய்வேன் என எனக்கே தெரியாது. இரைந்தான். "எல்லாரையும் நீண்ட நேரம் அலைக் கழித்து, கொதி நிலையில் வைத்திருந்த ஆத்திரம்". பாலாவுக்கு மட்டுமா? அன்றும், பகிடிவதை. இன்றும், பகிடிவதை. சிக்கிக் கொண்டது என்னவோ சீனியர்கள் தான்.

மாஸ்டரின் 'போன்' மணி ஒலித்தது. நினைவுகள் தடைப்பட போனை பார்த்தார். மகளின் அழைப்பு. "என்னப்பா எங்க இருக்கிறீர்கள்? வீட்டுக்கு போக வேணாமா? உங்களுக்கு ஆறு மணிக்கு பஸ் ". "ஓ! மகள் இதோ வாறன் நான் பக்கத்தில் இருக்கன்". சமாளித்துக் கொண்டார் மாஸ்டர் சரவணன்.

**வெல்லாவெளி விவேகானந்தம்**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 82



திரு/திருமதி.செல்வி ..........................................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..........................................

..........................................

..........................................

திகதி .................... கையொப்பம் ....................

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 82
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 82

### இடமிருந்து வலம்

1. மத்தியஸ்தம்
3. மனதை வருத்தும் துக்க உணர்வு
6. மனத்தை சாந்தமடையச் செய்வது
7. வீடு
9. கொலை அல்லது விபத்தினால் உயிரிழப்பு (திரும்பியுள்ளது)
10. அறிவு மேம்பட்டவன் திரும்பிவிட்டான்.
13. ஒரு வாத்தியக் கருவி
15. தீக்கு இரையாகுதல் (திரும்பியுள்ளது)
16. இதுவும் ஒரு நிறம்
18. கட்டடம் அல்லது அறை வாயிலுக்கு பாதுகாப்புத் தருவது (குழம்பியுள்ளது)
19. ஆகாயம் (குழம்பியுள்ளது)
20. நோய்
21. மனம் அல்லது உள்ளத்தைக் குறிக்கும்

### மேலிருந்து கீழ்

1. சிநேகிதன்
2. கவலை அல்லது இடையூறு இல்லாத நிலை
3. வேக வைத்த அரிசி
4. ஒரு வாழை இனம்
5. ஒருவகை மலர் (குழம்பியுள்ளது)
8. எவ்வளவு என்ற வினாவுக்குச் சமமான சொல் (குழம்பியுள்ளது)
11. ஒரு காட்டு மிருகம்
12. பூமி
14. ஒரு ரூபாயின் நூறில் ஒரு பகுதி
15. பகுக்கப்பட்டு அமைவது அல்லது ஒருவரை விட்டுச் செல்வது. (குழம்பியுள்ளது)
16. உத்தேச கணிப்பு (குழம்பியுள்ளது)
17. எதுவித பயனையும் எதிர்பாராது பிறருக்கு வழங்கப்படுவது
19. ஆவல், விருப்பம் (தலைகீழ்)

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 81

### விடைகள்

**இடமிருந்துவலம்**

1. ஆத்திசூடி
4. ஒலி
6. சகி
7. அப்பா
8. கல்கி
10. களி
12. தந்திரம்
15. தாரம்
16. மருதம்
17. பம்பரம்
19. பாவை
20. அத்தை
21. துப்பு

**மேலிருந்து கீழ்**

1. ஆதிக்கம்
2. திகில்
3. சூசகம்
4. ஒப்பந்தம்
5. அலி
9. கிரமம்
11. அரளி
13. திருப்பம்
14. தம்பதி
17. ரவை
18. அரை
19. பாதை

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 81

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ. 500.00 | இரண்டாம் பரிசு ரூ. 350.00 | மூன்றாம் பரிசு ரூ. 150.00 |
| --- | --- | --- |
| **சின்னையா செல்வராஜ்**<br>91/1 பிரதான வீதி,<br>கொழும்பு 11 | **எஸ். சிறிகிருஷ்ணராஜா,**<br>24/41(1)செல்வநாயகம் வீதி,<br>முதலாம் குறுக்கு,<br>மட்டக்களப்பு | **எஸ். எம் மௌசூம்,**<br>இல 124/16 வத்தேகம வீதி,<br>மன்னம்பொட,<br>உக்குவளை |

### பாராட்டு பெறுவோர்

**1. என்.கே. வேணி,** பலாங்கொடை

**2. எஸ் கனகரத்தினம்** திருகோணமலை

**3. எம்.எம். சசாத்** மருதமுனை

**4. எம்.எல் ஆதம்லெப்பை** அக்கறைப்பற்று

**5.பி. குணசேகரன்** களுவாஞ்சிக்குடி

**6. எஸ். வாகிஷ்னா** மட்டக்களப்பு

**7. எஸ்.எச்.எம் ஜிப்ரி** கொழும்பு 11

**8. தி. நாகையா** கல்முனை

**9. எம்.எச்.சி.என். ஹம்தா** வெலிகம

**10. எஸ். சித்தி உம்மா,** ஹிங்குல்

# மலையகம் –200 (எழுச்சிப்பாடல்)

எங்கள் மலையகம், எங்கள் மலையகம்!
எங்கள் மலையகம், இது எங்கள் மலையகம்!
எங்கள் மலையகம்!

இருநூறு வருட நிறைவினைக் கண்டோம்
இதனையே நாங்கள் கொண்டாடி மகிழ்வோம்
இதுவே எங்கள் தாயகமாகும்
என்றும் வாழ்கவே, என்றென்றும் வாழ்கவே!

தனுஷ்கோடியைக் கடந்து,
தலைமன்னாரில் கால்பதித்தோம்
மாதோட்ட நன்நகரில்,
கேதீஸ்வரரை தொழுதோம்!

நடந்தோம், நடந்தோம்,...
நாளும் பொழுதும் நடந்தோம்
வனத்தில் நடந்தோம்...
வனவிலங்கிற்கு இரையானோம்!

காட்டுச்சுரம் கடும்நோய்களுக்குள்ளானோம்
மாண்டே மடிந்து மண்ணில் புதைந்தோம்
எழுதவும் ஏடு இல்லை எடுத்துரைக்க வார்த்தை இல்லை
வாடிய பயிர்போலே வாட்டம் நாம் அடைந்தோம் !

இராமேஸ்வரத்தில் தொடர்ந்த பயணம்
இரவு பகலென நீண்டது
நீண்ட பயணத்தை நிம்மதியின்றி
தொடர்ந்தோம் சோகமே வழித்துணையானது!

தூரத்துப் பச்சையை நம்பி
புதுவாழ்வு கிடைக்குமென்றே
விரைந்தே நடந்தோம் விடியலைத் தேடினோம்
விரைந்தே நடந்தோம் மாத்தளையை அடைந்தோம்!

அடைக்கலம் தந்தாள் எங்கள் அன்னை முத்துமாரி
அபயம் அளித்தாள் அருள்மழை பொழிந்தாள்
மலைக் காடுகளை அழித்தே புதுப்பாதைகளை அமைத்தோம்
பாலங்களைக்கட்டி புது பயணத்தைத் தொடர்ந்தோம்!
தேயிலையையும் இறப்பரையும் வளர்க்க
கண்ணீரையும் உதிரத்தையும் சொரிந்தோம்
நாட்டின் வளத்தினை உயர்த்த
நாளும் பொழுதும் உழைத்தோம்!

காவேரி நதியும் கங்கை மகாவலியும்
ஒன்றென இங்கு சங்கமித்தோம்
தில்லை சிதம்பரமும், சிவனொளிபாதமும்
எங்கள் குலதெய்வங்களாகின!

மதுரை மீனாட்சியும், மாத்தளை முத்துமாரியும்
எங்கள் சக்தி மூர்த்தங்களாகின
இந்து, பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம்
எங்கள் ஆன்மிக நெறிகளாகின!

சிங்களமும், செந்தமிழும் ...
எங்கள் வாழ்வில் ஒளிச்சுடர்கள்
கதிர்காம முருகனும் கண்டி தலதாமாளிகையும்
எங்கள் தீப தூபங்கள் ஆகும்!

இங்கு உயர்சாதி, குல மத பேதமில்லை
"ஒன்றே குலம், ஒருவனே தெய்வமென"
ஒன்றுபட்டு ஒரு தாய் மக்களாக
நாங்கள் இலங்கையரென இதய கீதம் இசைத்தே
எழுச்சி கண்டோம்!

வாழ்க மலையகம்! வாழ்க மலையகம்!
வானுர ஓங்கி வளர்க மலையகம்

**கலாபூஷணம் மாத்தளை பெ.வடிவேலன்**

## 'நம் வாழ்வின்.... (15 ஆம் பக்கத் தொடர்)

வாழ்க்கையின் இறுதி காலம் முழுவதும் அவர்களுடன் இருப்பேன் என உறுதியளித்தே அவர் விளையாட்டுக்கு விடைகொடுத்தார்.

இன்று, சச்சின் டெண்டுல்கர் தனது இரண்டு குழந்தைகளுக்கு மட்டுமல்ல, தெற்காசியாவின் அனைத்து குழந்தைகளிடமும் அன்பும் கருணையும் காட்டும் ஒரு அர்ப்பணிப்புள்ள தந்தையாக மாறிவிட்டார். சச்சின் தனது குழந்தைப் பருவத்தை நினைவு கூர்ந்து குழந்தைகளின் ஊட்டச்சத்து தொடர்பில் கருத்து தெரிவித்தார்.

"போசாக்கு தொடர்பில் பேசும் போது அது என்னை எனது பாடசாலை நாட்களுக்கு அழைத்துச் செல்கிறது. எனது பாடசாலை நாட்களில் நான் விளையாட்டில் ஈடுபடும் நேரத்தில் பகல் உணவு இடைவேளையின் போது எனது பசியை போக்க உண்மையில் எனக்கு உணவு இருக்கவில்லை. நான் செய்ததெல்லாம் இரண்டு குளிர்பான போத்தல்களை அருந்தி விட்டு மீண்டும் களத்திற்கு செல்வதுதான். காலம் மாறும் போது அது மாற்றமடைந்தது. ஆனால் அது எனது விளையாட்டைப் பாதித்ததை சிறிது காலம் கழித்துதான் உணர்ந்தேன். என்னுடைய அறியாமையால்தான் அது நடந்தது. ஏனென்றால் ஒரு முக்கியமான போட்டியில் மதிய உணவுக்குப் பிறகு நான் ஆட்டமிழந்தேன். மீண்டும் ஓய்வறைக்குத் திரும்பியதும் நான் சாப்பிட்டேன். இது எனக்கு போசாக்கு தொடர்பில் பெரிய பாடத்தைக் கற்றுத் தந்தது. ஆனால் பல்வேறு பொருளாதார பிரச்சினைகளால் பல குடும்பங்கள் இவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. பல குடும்பங்களால் தங்கள் பிள்ளைகளுக்கு தரமான மற்றும் போதுமான உணவை வழங்க முடியாதுள்ளது. இது மிகவும் கவலையான விடயமாகும்" எனக் கூறினார்.

"சிறுவர்கள் தங்களது முழுமையான திறனை அடைய ஊட்டச்சத்துடன் அதற்குச் சமமான கல்வியும் தேவை. அவர்களின் கல்வி மற்றும் ஊட்டச்சத்தை வழங்குவதற்கு முதலீடு செய்வது என்பது அது நாம் அவர்களின் எதிர்காலத்திற்காகச் செய்யும் முதலீடு மாத்திரமல்ல, அது எந்தவொரு நாட்டினதும் எதிர்காலத்திற்காய் செய்யும் முதலீடாகும்" எனக் கூறினார் சச்சின்.

AUTOWHEEL
FAMILY RESTAURANT IS NOW OPEN
"Friday Special Buriyani
RS. 455/- PER PACK
During Weekends
Lamprais Available
Rs.865.00 per pack
Order Now.
AA CEYLON Estd. 1904
VISIT - PickMe
Automobile Association of Ceylon
40, Sir Mohomed Macan Marker Mawatha,Colombo 03
Tele. No: 0774369013 (Krishon)

# கோடுகள்

அண்மையில் நம்மை விட்டு மறைந்த தென்னகத்தின் பிரபல ஓவியக் கலைஞரும் தமிழக அரசினால் கலைமாமணி விருது பெற்றவருமான மாருதி ஐயாவுக்கு இக் கவிதை காணிக்கையாகிறது!



நிறங்களின் சரணாலயம்
தூரிகையின்
அழகிய ஒப்பம்
ஓவியம்!

விரல்கள் வேண்டுகிறது
நகராத நம்பிக்கையை
பூக்களின் மூச்சுகளில்
புன்னகைக்கும்
காற்றைப்போல்!

சிந்தியது "மை"
சிதறாத அற்புத அழகு
சித்திரம்...
மகிழ்சியோடு ஒப்புக் கொள்கிறது
மனது!

கோடுகள் சிதைந்து கிடக்கின்றன
இங்கு
அது சித்திரங்களை
சிதைத்து விடாது
எங்கும்!

கோடுகள்
சித்திரத்துக்குள்
குடியிருந்தாலும்
அது நிராகரிக்க நினைப்பதுமில்லை
விட்டு வெளியேற
விரும்புவதுமில்லை!

கோடுகள்
தூரிகையின் தேடல்கள்
ஓவியத்தின்
மெல்லிய வருடல்கள்!

ஓவியம்
வானவில்லாக வார்க்கப்படுகிறது
ஒரு தாஜ்மஹாலைப்போல்
கண்களில் தங்கிக் கொள்கிறது!

வேறுபடும் இதயங்களும்
ஈடுபாட்டுடன் அல்லவா
நெருங்குகிறது...
ஆளும் உள்ளங்களையும்
ஒரு எல்லைக்குள்
வாழவைக்கிறது ஓவியம்!

தூரிகை
மையை அருந்துகிறது
உண்மையை உணர்த்துகிறது!

விரல்கள் வேண்டுகின்றன
நகராத நம்பிக்கையை
பூக்களின் மூச்சில்
புன்னகைக்கும்
காற்றைப்போல்!

கவிநேசன் நவாஸ்

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை National Lotteries Board
வியாழக்கிழமை 2023.08.10
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5202
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 31,077,416.00
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கங்கள் 0 4 2 4 0 6

Lucky 7
திகதி 10.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0028
வெற்றி இலக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 4 0 7 0 3 1
L7 இலக்கம் 2 1
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,783,760.88

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3444
சீட்டிழுப்பு திகதி 2023.08.10
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 72,148,024.40
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 06 39 50 61
விசேட எழுத்து M
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 61264

Mega Power
சீட்டிழுப்பு இலக்கம் 1550
10/08/2023
78935
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 403,648,316.00
ரூ. 10,000,000.00
ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து I
சுப்பர் இலக்கம் 18
வெற்றி இலக்கங்கள் 19 48 55 76

தன நிதானய
தேதி 2023/08/10
சீட்டிழுப்பு இலக்கம் 1232
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 104,281,636.80
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 11 14 23 40
விசேட ஆங்கில எழுத்து D
Double Chance இலக்கம் 13745

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்
சீட்டிழுப்பு திகதி 2023-08-10
511
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 4,442,249.40
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 34 43 49 59
விசேட இலக்கினம் மீனம்

**துறைமுகம், கப்பற்றுறை மற்றும் விமானசேவைகள் அமைச்சு**

## இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை

### இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபைக்கு பைபர் கோர் சுவிட்ச் (Fiber Core Switch) ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காக விலைமனு கோரல்

**SP/2023-06**

இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபைக்கு பைபர் கோர் சுவிட்ச் ஒன்றைக் (Fiber Core Switch) கொள்வனவு செய்வதற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் இதற்கான விலைமனுக்களை வழங்கப்படும் விபரக்குறிப்பின் பிரகாரம் சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையில் மேற்கொள்ளப்படும்.

குறித்த விபரக்குறிப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கு mgrrdp@caa.lk எனும் மின்னஞ்சலில் அல்லது விசாரணைக்கு 0112358824 எனும் தொலைபேசி இலக்கத்தில் பிரதான பெறுகை அதிகாரியைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பைபர் கோர் சுவிட்ச் ஒன்றைக் (Fiber Core Switch) கொள்வனவு செய்வதற்கான விலைமனு'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை, இல. 152/1, மினுவாங்கொட வீதி, கட்டுநாயக்க எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் 2023-09-05ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும். அவ்வேளையிலேயே விலைமனுக்களைத் திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதுடன் தாமதமாக கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை**

### சீனன்கோட்டை அல்ஹுமைஸராவில்

# 'வேர்கள்' நூலின் வெளியீட்டு விழா

பேருவளை நகர சபை முன்னாள் நகர பிதா ஐ.எல்.எம். யூஸுப் பற்றியும் அவர் வாழ்ந்த சீனன்கோட்டை ஊர் பற்றிய வரலாற்று குறிப்புகளையும் உள்ளடக்கி அன்னாரது புதல்வர் அஷ்ரப் யூஸுபினால் எழுதப்பட்டுள்ள "வேர்கள்" எனும் நூலின் வெளியீட்டு விழா இன்று 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு சீனன் கோட்டை அல்ஹுமைஸரா தேசிய பாடசாலை எஸ்.எம். ஜாபிர் ஹாஜியார் ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நூலின் ஆசிரியர் அஷ்ரப் யூஸுபின் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் சீனன் கோட்டை பள்ளிச்சங்கத்தின் தலைவர் ஏ.எச்.எம். முக்தார் பிரதம அதிதியாக கலந்து கொள்வார். இந்நிகழ்வில் பேருவளை, மருதானை மஸ்ஜிதுல் அப்ரார் ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான அல்ஹாஜ் ஏ.எம். ஹனபி, பாராளுமன்ற உறுப்பினர்களான மர்ஜான் பளீல், இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இந்நூலின் அறிமுக உரையை அரும்பு சஞ்சிகையின் ஆசிரியர் ஹாபிஸ் இஸ்ஸதீனும் புத்தக விமர்சன உரையை ஜாமியா நளீமிய்யா கலாபீட சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் அரபாத் கரீம் ( நளீமி, எம்.ஏ) ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

**(அஜ்வாத் பாஸி)**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்

### கல்வி அமைச்சு

| | |
|---|---|
| **கடனிலக்கம் மற்றும் தலைப்பு** | 3698/3699-SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம் |
| **ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு** | **MOE/STHRD/SB/E51** : இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கு உயிரியல்வலு (Bioenergy) உபகரணங்கள் 2 (GCMS Analyzer) என்பதன் பெறுகை |
| **விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி** | 2023 செப்டெம்பர் 14ஆம் திகதி மு.ப. 10.00 மணித்தியாலம் (உள்ளூர் நேரம்) |

1. இலங்கை சோஷலிச குடியரசானது 145 மில்லியன் ஐ.அ. டொலருக்குச் சமமான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து **(ADB)** கல்வி அமைச்சின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட (**STHRD** செயற்றிட்டம்) அமுல்நடாத்தலின் கிரயச் செலவினத்திற்காக பெற்றுக் கொண்டுள்ளதுடன் இந்த நிதியின் பெறுகைகளின் பகுதியொன்றை மேலே பெயரிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவழிப்பதற்கு உத்தேசித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் **(ADB)** வள நாடுகளின் தகுதியுள்ள விலைமனுதாரர்களும் இவ்விலைமனுவில் பங்கேற்கலாம்.
2. இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட, பிரதி செயற்றிட்ட பணிப்பாளரின் (''கொள்வனவாளர்'') சார்பாக பல்கலைக்கழக பெறுகைக் குழுவின் தலைவர் **MOE/STHRD/SB/E51 - இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கு உயிரியல்வலு (Bioenergy) உபகரணங்கள் 2 (GCMS Analyzer) (``பொருட்கள்")** பெறுகைக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். இந்த பெறுகையானது இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கு உயிரியல்வலு (Bioenergy) உபகரணங்கள் 2 (GCMS Analyzer) என்பதன் பெறுகை என்பதை அடக்குகின்றது. ஒப்பந்தம் கையொப்பமிடும் திகதியிலிருந்து பூர்த்தி செய்யும் காலப்பகுதியானது 12 வாரங்களாகும்.
3. இந்த விலைமனுக்கோரலில் பங்குபெறுவதற்காக பின்வரும் பிரதான தகைமைகளை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.
   - கடந்த மூன்று வருடங்களில் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் பின்வரும் அட்டவணையில் 2ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியையுடையதும் நிகரான தன்மை மற்றும் சிக்கல்தன்மை ஆகியவற்றைக் கொண்ட ஆகக் குறைந்தது இரண்டு ஒப்பந்தங்களை 6ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறான வழங்கலின் நோக்கத்திற்காக பிரதான வழங்குநராக வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.
   - கடந்த மூன்று வருடங்களில் பின்வரும் அட்டவணையில் 3ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பூர்த்தி செய்யப்பட்ட அல்லது முடிவுறாத ஒப்பந்தங்களுக்காக விலைமனுதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த பணக்கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிதிப்புரள்வு.

***விலைக்கோரலில் பங்குபற்றுவதற்கான பிரதான தகைமைகள்***

| நிரல் - 1 | நிரல் - 2 | நிரல் - 3 |
|---|---|---|
| ***லொட் இலக்கங்கள் மற்றும் விபரங்கள்*** | ***ஒவ்வொரு ஒப்பந்தத்தினதும் பெறுமதி (இல. ரூபா)*** | ***வருடாந்த சராசரி புரள்வின் பெறுமதி (இல. ரூபா)*** |
| BENG 01 Gas Chromatography Mass Spectrometry (GCMS) System | 33,600,000.00 | 84,000,000.00 |

4. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) பண்டங்களின் பெறுகை ஒற்றைக்கட்ட-ஒரு கடித உறை நடைமுறையில் பகிரங்க போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்கேற்கலாம்.
5. மேலதிக தகவலைப் பெற்றுக்கொள்ளவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கவும், விலைமனுதாரர் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

   சிரேஷ்ட பெறுகை அலுவலர்,
   செயற்றிட்ட அமுல்நடாத்தல் பணிமனை,
   விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,
   தொழில்நுட்பவியல் பீடம்,
   இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,
   பெலிஹுல்ஓய, இலங்கை.
   **ZIP code : 70140**
   தொலைபேசி : 045-2280081
   மின்னஞ்சல் : pasb-sthrd@mohe.gov.lk

   - விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் பீடத்தின் பணிப்பாளர் சபை அறையில் இடம்பெறும்.

6. ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யவுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்களால் **"MOE/STHRD/SB/E51 - இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கு உயிரியல்வலு (Bioenergy) உபகரணங்கள் 2 (GCMS Analyzer) என்பவற்றின் பெறுகை"** என்பதற்கான விலைமனுக்களை வேண்டி மேலேயுள்ள முகவரிக்கு எழுத்து / மின்னஞ்சல் மூலம் அனுப்புதல் வேண்டும். மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 இ.ரூபாவை (ஐயாயிரம் இலங்கை ரூபா மாத்திரம்) ரொக்கப் பணத்தில் அல்லது வங்கி வரைவாக பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர், STHRD செயற்றிட்டம், இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் அல்லது பெலிஹுல்ஓய இலங்கை வங்கியில் பேணப்படும் 0083695474 என்ற கணக்கிலக்கத்திற்கு (சகல லொட்களுக்குமான ஒரு ஆவணத்திற்கு) வரவு வைக்கப்படல் வேண்டும். ஆவணம்/ஆவணங்கள் வங்கி வரவுத் துண்டைச் சமர்ப்பித்ததன் பின் 2023.08.14ஆம் திகதி முதல் மின்னஞ்சலின் ஊடாக மட்டும் அனுப்பப்படும். காணாமல் போன அல்லது தாமதமான ஒப்படைத்தலுக்கு பொறுப்பேற்கப்படமாட்டாது.
7. 2023.09.14ஆம் திகதி 10:00 மணித்தியாலம் அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனுப்பிணையுடன் உங்கள் விலைமனுக்களை ஒப்படைக்கவும்.

   பிரதி செயற்றிட்ட பணிப்பாளர்,
   செயற்றிட்ட அமுலாக்கல் பணிமனை,
   STHRD செயற்றிட்டம்,
   தொழில்நுட்பவியல் பீடம்,
   இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,
   பெலிஹுல்ஓய, இலங்கை.

   - பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகள் **மூலப்பிரதி** மற்றும் **நகல்பிரதி** என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியாக உள்ளிட்டு ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என முறையே அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். அதன் பின்னர், இந்த இரு தபாலுறைகளும் இன்னொரு தபாலுறையில் உள்ளிட்டு, முத்திரையிடப்பட்டு உரிய ஒப்பந்த அடையாளத்தை **(ID)** அதன் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.

8. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரம் முடிவடைந்ததும் தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,**
**பெலிஹுலஓய, இலங்கை.**
**ZIP code: 70140**
**திகதி: 2023-08-13**

# புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் மீள் ஒருங்கிணைப்பு சவால்கள்

தாயகம் திரும்பிய புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் திறன்கள், அபிலாஷைகள் மற்றும் மீள் ஒருங்கிணைப்பு சவால்கள்: இலங்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் இருந்து சான்றுகள்' என்ற தலைப்பில் அண்மையில் நிறைவுற்ற புலம்பெயர் தொழிலாளர் தொடர்பான கற்கை ஆய்வின் முதலாவது வெளியீடு கொழும்பில் திறன்வாய்ந்த மற்றும் நெகிழ்திறன் கொண்ட புலம்பெயர் தொழிலாளர்கள் திட்டத்தால் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளர் ஆர்.பி.ஏ. விமலவீரவிடம் கையளிக்கப்பட்டது.

சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிறுவனத்தின் YouLead முயற்சியுடன், அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்பிற்கான சுவிஸ் முகவர் நிறுவனத்தின் நிதியுதவியுடன் SRMW திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

SRMW திட்டத்தின் சார்பாக கொள்கை ஆய்வுகள் நிறுவனத்தால் இந்த ஆய்வு நடத்தப்பட்டதுடன், இது திறன் அபிவிருத்தி மற்றும் தகைமைகள் அங்கீகாரம் தொடர்பான பொருளாதார மீள் ஒருங்கிணைப்புக்கான சவால்களை மையமாகக் கொண்டு, தாயகம் திரும்பிய புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மீது இருக்கும் அனுபவ தரவு இடைவெளிகளைக் குறைக்கிறது.

இத்திட்டத்தின் முன்னுரிமை மாவட்டங்களான அனுராதபுரம், கண்டி, குருநாகல், புத்தளம் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் தாயகம் திரும்பிய புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் மாதிரி கணக்கெடுப்பிலிருந்து ஆய்வுக்கான முதன்மை தரவு சேகரிக்கப்பட்டதுடன், அதில் பதிலளித்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் பெண் புலம்பெயர் தொழிலாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



நிகழ்வில் கொள்கை வகுப்பாளர்களுக்கு அறிக்கையின் மேலோட்டம் வழங்கப்பட்டதுடன், அதன்பின்னர், IPS ஆராய்ச்சி சக அங்கத்தவரான கலாநிதி பிலேஷா வீரரத்ன தலைமையிலான புகழ் பெற்ற நிபுணர்கள் குழுவால் இதன் விளைவுகள் பற்றிய ஆழமான கலந்துரையாடல் இடம்பெற்றது.

## கூடைப்பந்தாட்ட வெற்றிக் கிண்ணத்தை வென்ற CINEC CAMPUS




மாலபே CINEC CAMPUS இன் கூடைப்பந்தாட்ட வீரர்கள், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்த "J Pura 3×3 Ballers Unleashed" கூடைப்பந்தாட்ட போட்டித்தொடரின் சாம்பியன் கிண்ணத்தை வென்று சாதனை படைத்துள்ளனர். இப் போட்டித்தொடரில் நாட்டின் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த 21 அரச மற்றும் தனியார் பல்கலைகலைக்கழகங்களிலிருந்து 21 கூடைப்பந்தாட்ட அணிகள் கலந்து கொண்டதோடு, இறுதிச் சுற்றுக்கு CINEC CAMPUS மற்றும் SNBM பசுமைப் பல்கலைக்கழகம் தகுதி பெற்ற நிலையில் இறுதிப்போட்டியில் 7 – 6 புள்ளிகள் வித்தியாசத்தில் மாலபே CINEC CAMPUS அணி வெற்றி வாகை சூடிக்கொண்டது. செனால்.டீ பொன்சேகாவின் தலைமையிலான CINEC கூடைப்பந்தாட்ட அணியின் பயிற்சியாளராக ஹிமால் ரஞ்சன் சில்வா பணியாற்றியதோடு கேப்டன் பிரசன்ன செட்ரிக் மற்றும் பூர்ணிக்கா சந்தமாலி ஆகியோரின் மேற்பார்வை இந்த வெற்றிக்கு பெரிதும் உந்துசக்தியாக இருந்துள்ளது.

## தேயிலை உற்பத்தியாளர்களை வலுவூட்டிய கொமர்ஷல் வங்கி

மத்துகம பிரதேசத்தில் சிறிய அளவில் தேயிலை செய்கையில் ஈடுபட்டுள்ள சுமார் 100 பேருக்கு அண்மையில் கொமர்ஷல் வங்கி கருத்தரங்கொன்றை ஏற்பாடு செய்திருந்தது. வங்கியால் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் அறிவைப் பகிர்ந்து கொள்ளும் நிகழ்ச்சியின் கீழ் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கொமர்ஷல் வங்கியின் திரிஷக்தி நிலைபெறுதகு தொழில்முயற்சியாளர் அபிவிருத்தி திட்டத்தின் ஒரு அங்கமாகவே இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்தக் கருத்தரங்குக்கான கொமர்ஷல் வங்கிக் குழுவில் மத்துகம அருண தேயிலைக் கம்பனி, சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் அபிவிருத்தி அதிகார சபை, தேயிலை ஆராய்ச்சி நிலையம் மீகஹதென்ன பொதுச் சுகாதார திணைக்களம் என்பனவற்றின் பிரதிநிதிகள் இணைந்து கொண்டனர்.



பொது சுகாதார திணைக்களத்தால் தொற்றும் மற்றும் தொற்றா நோய்கள் தொடர்பான விரிவுரை வழங்கப்பட்டது. ஒரு நெருக்கடியான கால கட்டத்தில் குறைவான வளங்களை வைத்துக் கொண்டு புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அறுவடையை எவ்வாறு அதிகரிப்பது என்பது பற்றி குழு விரிவுரையை நடத்தியது.

## பெறுமதி வாய்ந்த நுகர்வோர் வர்த்தக நாமங்களில் ஒன்றாக Prime Land Residencies மீண்டும் தெரிவு

இலங்கையின் முன்னணி ரியல் எஸ்டேட் வடிவமைப்பாளரான Prime Land Residencies, இலங்கையின் மிகப் பெறுமதி வாய்ந்த நுகர்வோர் வர்த்தக நாமங்கள் 2023 இல் ஒன்றாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. LMD உடன் இணைந்து வர்த்தக நாம பெறுமதி ஆலோசனை நிறுவனமான Brand Finance முன்னெடுத்திருந்த வருடாந்த மீளாய்வில் Prime Land Residencies, மீண்டும் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

The Brand Finance: LMD 2023 வருடாந்த இலங்கையின் 100 மிக பெறுமதி வாய்ந்த வர்த்தக நாமங்கள்வரிசையில் mover மற்றும் shaker ஆக, கடந்த ஆண்டின் தரப்படுத்தல்களுடன் ஒப்பிடுகையில் நான்கு நிலைகள் முன்னேறி, 60ஆம் ஸ்தானத்தில் Prime Residencies தரப்படுத்தப்பட்டிருந்தது. ரியல் எஸ்டேட் துறையில் மிகவும் பெறுமதி வாய்ந்த ரியல் எஸ்டேட் நுகர்வோர் வர்த்தக நாமமாகவும் Prime Residences தெரிவு செய்யப்பட்டிருந்தது. ரியல் எஸ்டேட் சந்தையில் வாடிக்கையாளர்களுக்கு ஒப்பற்ற தரம் மற்றும் பெறுமதியை பெற்றுக் கொடுப்பதில் நிறுவனம் காண்பிக்கும் அர்ப்பணிப்பான செயற்பாடுகளுக்கு கிடைத்த மைல்கல் சாதனையாக இது அமைந்துள்ளது.

மாற்றமடைந்து வரும் சந்தை சவால்கள் நிறைந்த சூழலில், முன்னணி வர்த்தக நாமங்களினால் பின்பற்றப்பட்டிருந்த மாற்றியமைப்பு மற்றும் பின்பற்றுகை தொடர்பில் 'The Courage to Change,'எனும் தொனிப்பொருளில் அமைந்திருந்த அறிக்கை கவனம் செலுத்தியிருந்தது. மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட ஆண்டில் (2022), பெருமளவு தடங்கல்கள் நிலவிய போதிலும், Prime Land Residencies இனால், வெற்றிகரமான செயற்பாட்டுக்காக மீண்டெழுந்திறன், இசைவாக்கம் மற்றும் முன்நோக்கிய வழிமுறையை பின்பற்றிய நடவடிக்கைகள் போன்றன வெளிப்படுத்தப்பட்டிருந்தன.




## நிலத்தில் பொருத்தப்பட்ட சூரிய மின்பிறப்பாக்கல் கட்டமைப்புக்கு வலுவூட்டியது அமானா வங்கி

இலங்கையின் புதுப்பிக்கத்தக்க வலுத் துறையை கட்டியெழுப்புவதற்கான தனது பங்களிப்பை உறுதி செய்யும் வகையில், நாட்டில் சகாயமான மற்றும் தூய புதுப்பிக்கத்தக்க வலுப் பிறப்பாக்கலில் முன்னோடியாக அமைந்துள்ள விதுல்லங்கா பிஎல்சியினால் ஹொரண பகுதியில் நிலத்தில் பொருத்தப்பட்ட 2MW சூரிய மின்பிறப்பாக்கல் கட்டமைப்புக்கு அமானா வங்கி நிதிவசதியை ஏற்படுத்திக் கொடுத்திருந்தது.

வருடாந்தம் 3.9GWh வலுப்பிறப்பாக்கலை மேற்கொள்ளும் என மதிப்பிடப்பட்டுள்ள இந்த சூரிய மின்பிறப்பாக்கல் கட்டமைப்பு, வைபவ ரீதியான தேசிய மின்விநியோகக் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டது. இவ்வைபவத்தில் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, மின்வலு மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த, இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் பொறியியலாளர். ரொஹான் செனெவிரட்ன, இலங்கை புதுப்பிக்கத்தக்க வலு அதிகாரசபையின் தலைவர் பொறியியலாளர் ரஞ்சித் சேபால, அமானா வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மொஹமட் அஸ்மீர் மற்றும் விதுல்லங்கா பிரதம நிறைவேற்று அதிகாரி ரியாஸ் சங்கானி ஆகியோர் கலந்து கொண்டனர். விதுல்லங்கா பிரதம நிறைவேற்று அதிகாரி ரியாஸ் சங்கானி கருத்துத் தெரிவிக்கையில், "அமானா வங்கியை எமது நிதிப் பங்காளராக இந்தத் திட்டத்தில் இணைத்துக் கொண்டுள்ளதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். நாட்டில் காணப்படும் பெருவாரியான இயற்கை புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களை பயன்படுத்தும் எமது திட்டத்தை ஊக்குவிப்பதாக அமானா வங்கி திகழ்கின்றது " என்றார்.



## AAT ஸ்ரீலங்கா 2023 இன் இறுதிப் பரீட்சையில் வெற்றிபெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழா

AAT Sri Lanka தனது இறுதிப் போட்டியாளர்களுக்கான சான்றிதழ் வழங்கும் விழாவை 26 ஜூலை 2023 அன்று கொழும்பு பண்டாரநாயக்கா நினைவு சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் (BMICH) பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடத்தியது. விழாவில் சான்றிதழ்கள் வழங்கப்பட்ட மாணவர்களில் மார்ச் 2023 இல் நடைபெற்ற அனைத்து AAT தேர்வுகளையும் வெற்றிகரமாக முடித்தவர்களும் அடங்குவர்.




நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் இறுதிப் பரீட்சையில் தேர்ச்சி பெற்ற 1,040 பேர் இந்த விருது வழங்கும் விழாவில் தங்கள் டிப்ளோமா சான்றிதழை சம்பிரதாயபூர்வமாகப் பெற அழைக்கப்பட்டனர். இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க கலந்துகொண்டதுடன் கௌரவ அதிதியாக இலங்கை CA இன் தலைவர் சஞ்சய பண்டார கலந்து கொண்டார். கூடுதலாக, AAT இலங்கையின் தலைவர் நளீன் டி சில்வா, AAT Sri Lanka இன் CEO திஷங்க குமாரசிங்க, AAT இன் ஆளும் சபை உறுப்பினர்கள், வெற்றிபெற்ற இறுதிப் போட்டியாளர்களின் பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகள் ஆகியோர் விழாவில் கலந்துகொண்டனர்.

NVQ 5 க்கு சமமான டிப்ளோமா சான்றிதழைப் பெற்றுள்ள தேர்ச்சி பெற்ற இறுதிப் போட்டியாளர்கள் கல்வி மற்றும் தொழில்முறை வழிகாட்டல்களை அணுகலாம் மற்றும் நிதி வல்லுநர்களாக தொழில்முறை அரங்கில் நுழையலாம். மேலும், பயிற்சி மற்றும் தலைமைத்துவ திறன் பட்டறையை முடித்த பின்னர் AAT "MAAT" இன் மதிப்புமிக்க தொழில்முறை உறுப்பினர் அந்தஸ்தைப் பெறுவதில் அவர்கள் இப்போது முன்னணியில் உள்ளனர்.

## ஜோன் கீல்ஸ் குழுமத்தின் முயற்சிகளை அங்கீகரித்து விருது வழங்கி கௌரவம்

ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி, 2023 ஆம் ஆண்டுக்கான "சிறந்த 50 தொழில்முறை மற்றும் தொழில் துறை சார்ந்த பெண்களுக்கான உலகளாவிய விருதுகள் பதின்மூன்றாவது பதிப்பு" 2023 இல், 'ஆண்டின் சமத்துவம்/ சமவாய்ப்பு மற்றும் பன்முகத்தன்மையை ஊக்குவிக்கும் நிறுவனம்' என்ற விருதைப் பெற்றுள்ளது.

விமன் இன் மெனேஜ்மன்ட் (WIM) ; சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் (IFC) மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்கத்துடன் கூட்டுப் பங்காண்மையுடைய விமன் இன் வொர்க் உடன், பணியிடத்திலும் சமூகத்திலும் சாதனை மற்றும் தாக்கத்தை வெளிப்படுத்திய அசாதாரண தலைவர்கள் மற்றும் கூட்டாண்மைகளை ஆண்டுதோறும் அங்கீகரிக்கிறது.

ஜோன் கீல்ஸ் குழுமம் (ஜேகேஎச்) பணிக்குழுவில் உள்ள பன்முகத்தன்மையை மதிப்பிடுவதற்கான அணுகுமுறை மற்றும் ஒவ்வொருவரும் தாங்கள் உண்மையாக சுயமாக இருக்கக்கூடிய மரியாதை மற்றும் நம்பிக்கை அடிப்படையாக இருக்கும் இடமாக இருப்பதற்கான உள்ளடகத்திற்கான தொடர்ச்சியான முயற்சிகள் முற்போக்கானதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. குழுமமானது ஒவ்வொரு இனம், வர்க்கம், மதம், பாலின அடையாளம், பாலியல் நோக்கு நிலை, வயது மற்றும் திறன் ஆகியவற்றிலிருந்து அதன் மக்களை மதிக்கிறது.




2015 ஆம் ஆண்டில், கொள்கை மற்றும் விழிப்புணர்வு மூலம் ஓரினசேர்க்கை மற்றும் பிற பாலின வேறுபாடுகளை கொண்ட (LGBTIQ+) சமூகத்தை உள்ளடக்கிய முதல் இலங்கை நிறுவனமான ஜேகேஎச் தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது.

## விநியோகஸ்தர்களைப் பாராட்டிய DPMC

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிரைவட்) லிமிடெட் நிறுவனம் தனது டீலர்கள் மற்றும் விநியோகஸ்தர்களைப் பாராட்டும் நோக்கில் பண்டாரகமவில் உள்ள பேர்ள் பேயில் விசேட ஒன்றுகூடல் நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தது. இந்த நிகழ்வில் 1,300ற்கும் அதிகமான டீலர்கள் தமது குடும்பங்களுடன் கலந்து கொண்டனர்.

உதிரிப்பாகங்கள் மற்றும் துணைக்கருவிகள், சேர்விஸ் மற்றும் விற்பனை டீலர்கள், டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிரைவட்) லிமிடட் நிறுவனத்தின் அட்லஸ், ஒரியன், DPMC _MRF டயர் விநியோகஸ்தர்கள் தமது குடும்பத்தினருடன் இந்நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

பங்கேற்றவர்களுக்குப் பல்வேறுபட்ட நீர் விளையாட்டுக்கள், கார்ட்டிங், ரைபிள் சூட்டிங் போன்ற பொழுதுபோக்குகள் மற்றும் சர்வதேச சுகாதாரம், பாதுகாப்புத் தரங்களுக்கு அமைய பேர்ள் பேயினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தனித்துவமான போட்டிகளில் பங்கேற்று மகிழ்வதற்கான வாய்ப்புக்கள் கிடைத்தன.

நாள் முழுவதும் அவர்களுக்கு சுவையான உணவுகள் மற்றும் குடிபானங்கள் வழங்கப்பட்டன. விசேட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு உற்சாகமான பரிசுகள் வழங்கப்பட்டதுடன், அதிஷ்ட சீட்டிழுப்பில் வெற்றிபெற்றவர்களுக்கு பண்டாரகம அல்லது கொழும்பு துறைமுக நகரில் உள்ள ஸ்பீட் பேயில் இலவச கார்ட்டிங் செய்வதற்கான வாய்ப்பு பரிசாக வழங்கப்பட்டது.




டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிரைவட்) லிமிடட் நிறுவனத்துடன் நீண்டகாலமாக இணைந்திருந்திருக்கும் டீலர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் நிறுவனத்தின் வெற்றிக்காக வழங்கிவரும் கணிசமான பங்களிப்பைப் பாராட்டுவதே இந்த ஒன்றுகூடலின் நோக்கமாகும்.

சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகார

# அறிவித்தல்

## சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதியின் நீச்சல் தடாக பம்பியகத்தை நவீனமயப்படுத்தும் செயற்றிட்டத்திற்கு இயைபான விலைக்கோரலுக்காக 2023-07-23ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரம் தொடர்பானது

சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகார சபையின் நீச்சல் தடாக பம்பியகத்தை நவீனமயப்படுத்தும் செயற்றிட்டத்திற்கு இயைபான விலைக்கோரல் 2023-08-29ஆம் திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இதன் பிரகாரம் விலைக்கோரல் ஆவணங்கள் 2023-08-28ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை வழங்கப்படும் என்பதுடன் தேவையானவர்கள் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் மேற்கூறப்பட்ட அலுவலக நேரங்களில் வருகை தந்து கொள்வனவுப் பிரிவிற்கு 7,500.00 ரூபா மீளளிக்கப்படும் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுக்கள் 2023-08-29ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்குத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 119 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் காலம் சகிதம் (2023-08-29ஆம் திகதி முதல் 2023-12-27ஆம் திகதி வரை) 760,000.00 ரூபா பெறுமதியான விலைக்கோரல் பிணை முறியொன்றை சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதியின் தலைவரின் பெயரில் வழங்குதல் வேண்டும்.

விலைமனுக்களின் செல்லுபடிக் காலம் 91 நாட்களாகும். (2023-08-29ஆம் திகதி முதல் 2023-11-27ஆம் திகதி வரை)

2023-07-23ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரத்தில் விலைக்கோரல் தொடர்பில் உள்ள சகல நிபந்தனைகளும் இதற்கு ஏற்புடையதாகும்.

**தலைவர்,
பெறுகைக் குழு,
சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகார சபை,
ஆர்தர் டி சில்வா மாவத்தை, கொழும்பு-13.
தொலைபேசி: 0112445677 தொலைநகல்: 0112445675
மின்னஞ்சல்: psnsca@yahoo.com**

## இலங்கை துறைமுக அதிகார சபை

# கேள்வி அறிவித்தல்

## இலங்கை துறைமுக அதிகார சபையில் பயன்படுத்த முடியாத மிதக்கும் பாரந்தூக்கியை கேள்வி மூலம் கழிவு இரும்பாக (Scrap Iron) விற்பனை செய்தல்

**கேள்வி இல.** : LD/S/T/UD/01/2023
**கேள்வித் திகதி** : 2023-09-05

கொழும்புத் துறைமுகத்தின் கடற்படை பிரிவில் துறைமுக படகு அதிகாரசபைக்கு பிரிவிற்குரித்தான பின்வரும் மிதக்கும் பாரந்தூக்கியை (பாரந்தூக்கி மற்றும் மிதக்கும் படகின் சகல பகுதிகளும்) கழிவு இரும்பாக விற்பனை செய்வதற்கு முத்திரைக்குறி பொறிக்கப்ட்டட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| உருப்படி இல. | வைக்கப்பட்டுள்ள இடம் | பாரந்தூக்கியின் வகை | சராசரி நிறை (கி.கிராம்) |
|---|---|---|---|
| 1 | கொழும்புத் துறைமுகம் | 60 தொன் உயர்த்தும் கொள்ளளவைக் கொண்ட மிதக்கும் பாரந்தூக்கி (ஜிரா.ஃப்) | 590,000 |

1. மேற்படி பாரந்தூக்கியை பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட இரும்பாக (Scrap Iron) கேள்வி மூலம் விற்பனை செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இயைபுடைய கேள்வி ஆவணங்களை மீளளிக்கப்படாத 2000.00 தொகை மற்றும் பெறுமதி சேர் வரி மற்றும் ஏனைய வரிகளைச் செலுத்தி கொழும்பு-01, லோட்டஸ் வீதி, இல. 15, கெனல் முற்றவெளியில் அமைந்துள்ள இலங்கை துறைமுக அதிகார சபையின் சேவை வழங்கல் பிரிவின் விற்பனைப் பிரிவு அலுவலகத்தில் 2023-08-14ஆம் திகதி 1000 மணித்தியாலம் முதல் 2023-08-21ஆம் திகதி 13.30 மணித்தியாலம் வரையான காலத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
2. கொழும்புத் துறைமுகத்தில் கடற்படை பிரிவில் குறித்த பாரந்தூக்கியை 2023-08-14ஆம் திகதி முதல் 2023-08-21ஆம் திகதி வரையில் பொதுவான கடமை நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
3. கேள்விதாரர்கள் குறைந்தபட்சம் கடந்த ஐந்து (05) வருடங்களினுள் பாரந்தூக்கிகளை வெட்டி அப்புறப்படுத்துவதற்குச் சமமான வியாபாரத்தில் ஈடுபட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கேள்வி நிபந்தனைகளில் காட்டப்பட்டுள்ள வகையில் அது தொடர்பான விபரங்கள் மற்றும் ஆவணச் சாட்சி சகிதமான அறிக்கையொன்றை இலங்கை துறைமுக அதிகார சபையின் சேவை வழங்கல் பிரிவில் பிரதிப் பிரதான முகாமையாளர் (சேவை வழங்கல்) அலுவலகத்திற்கு 2023-08-23ஆம் திகதி 1300 மணித்தியாலத்திற்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும்..
4. கேள்விதாரரைத் தெரிவு செய்யும் செயற்பாடு மற்றும் கேள்வி நிபந்தனைகளின் பிரதிகள் இல. 15, கெனல் முற்றவெளி, லோட்டஸ் வீதி, கொழும்பு - 01 எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கைத் துறைமுக அதிகார சபையின் சேவை வழங்கல் பிரிவு பிரதிப் பிரதான முகாமையாளர் (சேவை வழங்கல்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளன என்பதுடன் 2023-08-14ஆம் திகதி 10.00 மணித்தியாலம் முதல் 2023-08-21ஆம் திகதி 14.30 மணித்தியாலம் வரையான காலத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. 2023-08-24ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்குப் பின் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்களின் பெயர்ப் பட்டியல் சேவை வழங்கல் பிரிவின் விற்பனைப் பிரிவு அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தப்படும்.
6. எழுத்துமூலமான மேன்முறையீடுகளை 2023-08-28ஆம் திகதி பி.ப. 02.00 மணிக்கு முன்னர் பிரதான முகாமையாளர் (சேவை வழங்கல்) அவர்களுக்கு அனுப்புதல் வேண்டும் என்பதுடன் சகல மேன்முறையீடுகளும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு அனுப்பப்பட்டதன் பின் இறுதித் தீர்மானம் 2023-08-31ஆம் திகதி பி.ப. 03.00 மணிக்கு வழங்கப்படும்.
7. மேற்படி 03ஆம் இலக்க விடயத்தின் கீழ் காட்டப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்கள் மட்டும் 1,000,000.00 ரூபா மீளளிக்கப்படும் வைப்புத் தொகையை கேள்விதாரரால் செலுத்தப்பட்டதன் பின் கேள்விப் படிவங்களை சேவை வழங்கல் பிரிவின் விற்பனைப் பிரிவு அலுவலகத்திலிருந்து 2023-09-01ஆம் திகதி 10.00 மணித்தியாலம் முதல் 2023-09-04ஆம் திகதி 14.00 மணித்தியாலம் வரையில் பெற்றுக்கொள்ளலாம்.
8. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்களை 2023-09-05ஆம் திகதி 08.00 மணித்தியாலம் முதல் 10.00 மணித்தியாலத்திற்கிடையில் இல. 15, கெனல் முற்றவெளி, லோட்டஸ் வீதி, கொழும்பு - 01 எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கைத் துறைமுக அதிகார சபையின் சேவை வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் என்பதுடன் அதன் பின் உடனடியாக அந்த மண்டபத்தல் கேள்விகள் திறக்கப்படும்.
9. கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு எழுத்து மூல வேண்டுகோள் மற்றும் 1,000,000.00 ரூபா மீளளிக்கப்படும் வைப்புத் தொகை கேள்விதாரரால் வைப்புச் செய்யப்படல் வேண்டும். வெற்றிகரமான கேள்விதாரரின் வைப்புத் தொகை இந்த பாரந்தூக்கியை வெட்டி அப்புறப்படுத்தியதன் பின் விடுவிக்கப்படும்.
10. சகல கொள்வனவாளர்களும் பெறுமதிசேர் வரி (VAT) செலுத்துவதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும். அவ்வாறு பதிவு செய்து கொள்ளப்படாதவர்களானால் பெறுமதிசேர் வரிக்காக பதிவு செய்யப்படவில்லை என்பதற்காக உள்நாட்டு இறைவரி ஆணையாளரிடம் சான்றொன்றைப் பெற்று சமர்ப்பித்தல் வேண்டும்.
11. கேள்வியைக் கையளிப்பதற்கான கடிதம் வழங்கப்பட்டதன் பின் வெற்றிகரமான விலைமனுதாரரால் 2,000,000.00 ரூபா முற்பணத் தொகையொன்றை வைப்புச் செய்தல் வேண்டும் என்பதுடன் கொண்டு செல்லும் பொருட்களின் நிறையின் பிரகாரம் கொடுப்பனவில் முற்பணம் கழித்துக்கொள்ளப்படும் என்பதுடன் குறைந்தபட்சம் செயலாற்றுகை பிணைத் தொகையாக 1,000,000.00 ரூபாவை பேணிச் செல்லுதல் வேண்டும்.
12. அரசாங்க சட்ட விதிமுறைகளின் பிரகாரம் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையிடமிருந்து அனுமதிப்பத்திரம் மற்றும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளத் தேவையானால் அவைகளை வெற்றிகரமான விலைமனுதாரர் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
13. இலங்கைத் துறைமுக அதிகார சபையின் ஊழியர்கள் மற்றும் அவர்களின் வாழ்க்கைத் துணைகள் மற்றும் திருமணமாகாத பிள்ளைகள் விலைகளைச் சமர்ப்பிக்க முடியாது.
14. கேள்விப் படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கொள்வனவாளர் இணங்குதல் வேண்டும்.

**தலைவர்,
கேள்விச் சபை
இலங்கைத் துறைமுக அதிகாரசபை,
சேவை வழங்கல் பிரிவு,
இல. 15, கெனல் முற்றவெளி,
லோட்டஸ் வீதி,
கொழும்பு 01.
2023-08-13**

## வ/ப மத்திய மாகாண கூட்டுறவு கிராமிய வங்கி சங்கத்திற்கு சொந்தமான இல. 107, பேராதனை வீதி, கண்டி முகவரியில் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடங்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக் கோரல்

மேற்படி கட்டிடத்துடனான வளாகத்தை விற்பனை செய்வதற்காக 2023.09.18 பி.ப. 12.00 வரை விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

கேள்வி விண்ணப்பங்கள் மற்றும் ஏனைய சகல விபரங்களும் வ/ப மத்திய மாகாண கிராமிய வங்கி சங்கத்தின் தலைமையகத்தில் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 4.00 வரை பெற்றுக் கொள்ளலாம்.

குறைந்த பட்ச கேள்வி ரூபா. இரு நூற்றி என்பது மில்லியன் ஆகும். (ரூ. 280000000/-)

தொடர்புகள் - பொது முகாமையாளர் - 081-2232477 மற்றும் 081-4940425

**தலைவர்,
வ/ப மத்திய மாகாண கூட்டுறவு கிராமிய வங்கி சங்கம்
107, பேராதனை வீதி,
கண்டி.**

## வெளிநாட்டு மதுபான தவறணைகளை குத்தகையில் விற்றல்
## மொரட்டுவை பிரதேச செயலகம் - 2024

மேற்குறிப்பிட்ட மதுபானத்தவறணைகள் கீழ் வரும் திகதிகளில் குறிப்பிட்ட நேரங்களல் மொரட்டுவை பிரதேச செயலகத்தில் குத்தகையில் விற்கப்படும்.

1. வெளிநாட்டு மதுபான தவறணைகள் 2023.09.20 மு.ப. 10.30 மணிக்கு
2. மேற்குறிப்பிட்ட திகதிகளில் தவறணைகள் குத்தகையில் விற்கப்படாத இடத்து 2023.10.20ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு மறுபடி விற்கப்படும்.
3. முழு விபரங்களுக்கு 2023.08.11ஆம் திகதிய இல. 2345 இலங்கை வர்த்தகமானி அறிவித்தல் பத்திரிகையைப் பார்க்கவும்.

**இஷன்கா டீ. கே உடவத்த
பிரதேச செயலாளர்
மொரட்டுவை.**

**மொரட்டுவை பிரதேச செயலகம்,
மொரட்டுவை.**

**Repeat Your ad For Better Offers**

கொழும்பில் அமைந்துள்ள நிறுவனத்திற்கு நன்கு அனுபவம் உள்ள வாகன சாரதி தேவை. வயது 35 - 45 வரை போதை பழக்கம் அற்றவராக இருக்க வேண்டும். சம்பளம் 50,000/= முதல் வழங்கப்படும் உணவுக்கு 15000/- வழங்கப்படும் ஒரு மாதத்திற்கு தேநீருக்கு தேவையான பொருட்கள் வழங்கப்படும்.

உங்கள் தேர்வுக்கு அடையாள அட்டை கிராமசேவகர் உறுதிப்பத்திரம் அவசியம் தேவை. மேலதிக தகுதியாக மூன்று மொழிகளையும் தமிழ், சிங்களம், ஆங்கிலம் பேசவும் புரிந்துக் கொள்ளவும் தெரிந்திருந்தால் சம்பளம் கூடுதலாக வழங்க ஆலோசிக்கப்படும். பொலிஸ் சான்றிதழ் இருப்பின் மேலதிக தகைமையாக கருதப்படும்.

**தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம்
ரொஷான் - 0765743935.**

# பெறுகை அறிவித்தல்

## இலங்கை அரச மருந்தகங்கள் கூட்டுத்தாபனம்

## 500 கி.தேயிலை பெக்கற்கள் மற்றும் 2 கி. கிறீன் தேயிலை பைகளை வழங்குவதற்கான கேள்விக்கான அழைப்பு

**கேள்வி இல: AD/2/TL&GT/72/2023**

**மூடப்படும் திகதி : 2023.08.29 மு.ப. 11.00 மணி**

500 கி. தேயிலை பெக்கற்கள் மற்றும் 2 கி. கிறீன் தேயிலைப் பைகளை வழங்குவதற்காக பொறியிடப்பட்ட விலைமனுக்களை நாராஹேன்பிட்ட, அரச மருந்தகங்கள் கூட்டுத்தாபனம், திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். அத்துடன் நாரஹேன்பிட்ட, கிளே வீதி, இல. 41, 27ம் மாடி, "மெஹெவர பியச" வில் காசாளருக்கு ஓர் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் ரூபா 3,000.00 + VAT செலுத்துவதன் பேரில் 2023.08.14 முதல் 2023.08.28 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை வேலை நாட்களில் நாரஹேன்பிட்ட, கிருல வீதி, இல. 41, 16ம் மாடி, "மெஹவர பியச" அரச மருந்தகங்கள் கூட்டுத்தாபனத்தின் வரவேற்புகரும பீடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

உங்களது விலைமனுக்களை, தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை அரச மருந்தகங்கள் கூட்டுத்தாபனம், "மெஹெவர பியச", 16ம் மாடி, இல. 41, கிருல வீதி, நாரஹேன்பிட்ட என முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது 2023.08.29 மு.ப. 11.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பு மேற்படி அமைவிடத்தின் நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள ஓர் பெட்டியில் வைப்புச் செய்யலாம்.

தாமதமான விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. கேள்விகள் மூடப்பட்ட பின்னர் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க அனுமதிக்கப்படுவர்.

தேவைப்படும் மேலதிக தகவல்களை, வேலை நாட்களில் மு.ப. 9.00 இற்கும் பி.ப. 3.00 இற்கும் இடையில் மாத்திரம் தொ.பே. 0112-055410 மூலம் நிர்வாக அலுவலர் (நிர்வாகம்) இடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,
இலங்கை அரச மருந்தகங்கள் கூட்டுத்தாபனம்
"மெஹவர பியச", 16ம் மாடி, இல. 41,
கிருல வீதி, நாரஹேன்பிட்ட.
தொ.பே. - 2320356-9**

## PUBLIC NOTICE

Public Notice is hereby given that VOX HOSPITALITY CEYLON (PVT) LTD., intends to purchase the below addressed property from Mr N.M. Hewawasam, the present owner of the said property.

| | |
|---|---|
| Address | : Riverside, Old Mathugama Road, Kadana, Horana. |
| Survey Plan | : Land called "Padiyawatta" depicted in Plan # 1639 & 1640 dated 26th February 2021 made by T.A.N. Pushpakumara Licensed Surveyor |
| Extent | : 143 Perches |
| Pradeshiya Sabha | : Madurawala |
| Village | : 632B-Kadana South |

Any persons including legal heirs, having any claim, rights, title, interests or objections over the said property, shall inform the undersigned in writing with supporting proofs within a period of 14 days from the date of publication of this notice failing which any such claim by anyone shall not be considered.

| | |
|---|---|
| Date | : 13th of August 2023 |
| Place | : Colombo |
| E-Mail | : voxceylon@gmail.com |
| WhatsApp | : +919444033777 |

**Chamara Alahakoon - Director**

## துறைமுகங்கள், கப்பற்சேவைகள் மற்றும் விமானசேவைகள் அமைச்சு

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

**Purchase of One Number 80 Ton Bollard Pull Twin Azimuth Stern Drive Harbour Tug for the Sri Lanka Ports Authority**

**CES/FP/04/PT/6421 (HM)**

## விலைமனுக்கோரல் செயற்பாட்டிற்கான நேர அட்டவணையின் நீடிப்பு

1. மேலேயுள்ள கேள்வி தொடர்பாக 2023 ஜுன் 25 ஆம் திகதியன்று சண்டே ஒப்சேவர், சிலுமின மற்றும் வாரமஞ்சரி மற்றும் 2023 ஜுன் 26 ஆம் திகதியன்று டெயிலி நியூஸ், தினமின மற்றும் தினகரன் ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பாக 1 ஆம் பிரிவின் விலைமனுக்கோரல் ஆவணத்தின் விலைமனுதாரர்களுக்கான பணிப்புரையின் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதிக்காக உட்கூறு 24.2 இன் பிரகாரம் விலைமனுக்களின் சமர்ப்பித்தலுக்கான மூடும் திகதியை நீடிப்பதற்கு அமைச்சரவை நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுவானது தீர்மானித்துள்ளது.
2. இதற்கமைவாக, விலைமனுக்கோரல் செயற்பாட்டின் புதிய நேர அட்டவணையானது பின்வருமாறு.

| நிகழ்வு | திகதி |
|---|---|
| அ. விலைமனுக்கோரல் ஆவணங்களின தெளிவுறுத்தலுக்காக விலைமனுதாரர்கள் விண்ணப்பிக்கும் இறுதித் திகதி | 2023 ஒகஸ்ட் 17 ஆம் திகதி |
| ஆ. விலைமனுக்கோரல் ஆவணங்களுக்காக இது அ இனால் தெளிவுறுத்தலை வழங்குவதற்கான மற்றும்/ அல்லது பிற்சேர்க்கைக்கான இறுதித் திகதி | 2023 ஒகஸ்ட் 24 ஆம் திகதி |
| இ. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான மூடும் திகதி மற்றும் நேரம் | 2023 செப்டெம்பர் 26 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு |
| ஈ. விலைமனுக்களை திறத்தல் | 2023 செப்டெம்பர் 26 ஆம் திகதியன்று விலைமனுவை மூடிய பின்னர் உடனடியாகவே. |

3. விலைமனுக்கோரல் ஆவணங்களை வழங்கல்: 2023 ஜுன் 26 ஆம் திகதியிலிருந்து 2023 செப்டெம்பர் 26 ஆம் திகதியன்று மதியம் 12 மணி வரையும் அலுவலக நேரங்களில்.
4. உட்கூறு 21 இன் பிரகாரம் விலைமனு பிணையின் செல்லுபடியாகும் காலஎல்லை: விலைமனுப்பிணை மற்றும் விலைமனுக்களின் செல்லுபடியாகும் காலஎல்லையானது உட்கூறு 20 இன் பிரகாரம். விலைமனுக்கோரல் ஆவணத்தின் விலைமனுதாரர்களுக்கான பணிப்புரையின் I ஆம் பிரிவின் விலைமனுக்களின் செல்லுபடியாகும் கால எல்லையானது புதிய மூடும் திகதிக்கு அமைவாக இடம்பெறும்.

**தலைவர்,
அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு,
துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு,
இல. 19, சைத்திய வீதி,
கொழும்பு-01.
இலங்கை.**

## பணியாளர் காலியிடங்கள்

**கொழும்பு ராயல் கோல்ஃப் கிளப்**

எங்கள் நிறுவனத்தில் பின்வரும் காலியிடங்களுக்கு விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

கோல்ஃப் மைதான பராமரிப்பு இயந்திர ஆபரேட்டர்கள்

ஓட்டுநர் உரிமம் வைத்திருப்பது அவசியம்

கோல்ஃப் கோர்ஸ் மெஷின் ஆபரேட்டராக அனுபவம் கூடுதல் நன்மையாகக் கருதப்படுகிறது.

40 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

கவர்ச்சிகரமான சம்பளத்துடன் மற்ற கொடுப்பனவுகளும் கிடைக்கும்

விண்ணப்பதாரர்கள் தங்களின் விண்ணப்பங்களை Vacancies@rcgcsl.com மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது பின்வரும் முகவரிக்கு 07 நாட்களுக்குள் அனுப்ப வேண்டும்.

**மனிதவள மேலாளர்
கொழும்பு ராயல் கோல்ஃப் கிளப்
மாதிரி பண்ணை சாலை
கொழும்பு - 08
தொலைபேசி எண்: 0112695431**

**Best way to fulfil your Future Dreams**

**Marriage Proposals**

**in the**

**Sunday Observer**

# அறிவித்தல்

## ஜீனோம் நிலையங்கள் மற்றும் தேசிய ஜீனோம் தரவு களஞ்சியம் தொடர்பில் தேசிய கொள்கை தொடர்பில் பொதுமக்கள் கருத்தறிதல்

NASTEC

1994இன் 11ஆம் இலக்கம் கொண்ட விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி சட்ட மூலத்திற்கு அமைய அமைக்கப்பட்ட தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு (NASTEC), விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப (S&T) துறை சார்ந்த கொள்கை தயாரிப்புக்கு தொடர்புடைய பணி ஒன்றாக ஜீனோம் மற்றும் மூலக்கூறு உயிரியல் துறை தொடர்பிலான நிபுணர்களினதும் உதவியுடன் தற்போது "ஜீனோம் நிலையங்கள் மற்றும் தேசிய ஜீனோம் தரவு களஞ்சியம் தொடர்பில் தேசிய கொள்கை" வரையப்பட்டுள்ளது. அமைச்சரவை மூலம் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் இரு கொள்கை ஆவணங்களான, தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கொள்கை மற்றும் இலங்கை தேசிய ஆய்வு மற்றும் அபிவிருத்தி கட்டமைப்பு (NRDF) உப பிரிவு கொள்கை மேம்பாட்டின் கீழ் முன்மொழியப்பட்டிருக்கும் இவ்வாறு தயாரிக்கப்பட்டிருக்கும் கொள்கை வரைவின் அடிப்படை நோக்கம் இலங்கைக்குள் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட மரபணு விஞ்ஞான கட்டமைப்பு ஒன்றை நிறுவுவதற்கு வாய்ப்பை வழங்குவதாகும்.

தற்போது தயாரிக்கப்பட்ட இந்த 'ஜீனோம் நிலையங்கள் மற்றும் தேசிய ஜீனோம் தரவு களஞ்சியம்' தொடர்பில் தேசிய கொள்கை வரைவு சார்ந்து இலங்கை பிரசைகளிடம் இருந்து மக்கள் கருத்தை அறிவதற்கு தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு உத்தேசித்துள்ளது. அதன்படி, இந்த கொள்கை வரைவு தொடர்பில் பொதுமக்கள் கருத்துகள் மற்றும் முன்மொழிவுகள் 2023 செப்டெம்பர் 15 அல்லது அதற்கு முன்னர் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழிகளில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிகளுக்கு தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிப்பதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

முகவரி: தலைவர், தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு, 6ஆவது மாடி (D பிரிவு), செத்சிறிபாய கட்டம் II, பத்தரமுல்லை. மின்னஞ்சல் முகவரி: : nastec.genomepolicy@gmail.com

மேல் குறிப்பிடப்பட்ட கொள்கை வரைவு NASTEC இன் உத்தியோகபூர்வ இணையதளமாக http://www.nastec.gov.lk இடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்,**
**தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப சபை**
**2023 ஒகஸ்ட் 13**
**தொ.: +94 112186719 தொலைநகல்: +94 112186713**

---

# கட்புல மற்றும் ஆற்றுக்கலைகள் பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடங்கள்

2023.09.12 ஆம் திகதியன்று வரையும் இசைப் பீடம் மற்றும் நடனம் மற்றும் நாடகம் ஆகிய பீடங்களின் கீழே குறிப்பிட்டுள்ள பதவி வெற்றிடங்களுக்காக ஒன்-லைன் விண்ணப்பங்களை கட்புல மற்றும் ஆற்றுக்கலைகள் பல்கலைக்கழகம் வரவேற்கின்றது.

**பதவிகள்: சிரேஷ்ட விரிவுரையாளர் (தரம் I/II), விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாதது), விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை)**

### இசைப் பீடம்:

I. **இனஇசையியல் திணைக்களம்**
**பாடம்: இனஇசையியல்**
**விஷேட குறிப்புக்கள்:**
சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் கற்பித்தலின் ஆற்றல் பரீட்சிக்கப்படும்.

II. **இசையியல் திணைக்களம்:**
**பாடம்: இசையியல்**
**விஷேட குறிப்புக்கள்:**
உடலியல் மற்றும் இசை தொழில்நுட்பவியல் துறைகளின் விஷேட புலமை எதிர்பார்க்கப்படுகின்றது.
சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் கற்பித்தலின் ஆற்றல் பரீட்சிக்கப்படும்.

### நடனம் மற்றும் நாடக பீடம்:

I. **கண்டி நடன திணைக்களம்:**
**பாடம்: பாரம்பரிய கண்டி நடனம்**
**விஷேட குறிப்புக்கள்**
உடெக்கி நடனம், கண்டி நோய் தீர்க்கும் சடங்குகள்; shanthikarma pelapali எதிர்பார்க்கப்படுகின்றது.

**சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் கற்பித்தலின் ஆற்றல் பரீட்சிக்கப்படும்.**

II. **அரங்கு, பலே மற்றும் நவீன நடன திணைக்களம்**
**பாடம்: நாடகம் எழுதுதல் மற்றும் இயக்குதல்.**
**விஷேட குறிப்புக்கள்:**
பின்வரும் பாடத் துறைகளில் தேர்ச்சி இருத்தல் விரும்பத்தக்கதாக கருதப்படும்.

1.1. இலங்கை மற்றும் சர்வதேச நாடக கலைஞர்கள் மற்றும் பலதரப்பட்ட நாடக வகைகளின் படைப்பு மற்றும் தத்துவார்த்த பயன்பாடுகளில் கணிசமான அறிவு.
1.2. நாடக உரை பகுப்பாய்வு செயற்றிறன் உருவாக்கம் செயல்முறைகள் மற்றும் நாடகவியல் ஆகியவற்றின் தத்துவார்த்த மற்றும் நடைமுறை பயன்பாடுகளில் கணிசமான அறிவு.
1.3. கல்விசார் ஆராய்ச்சி மற்றும் எழுத்தில் நடைமுறை மற்றும் தத்துவார்த்த அறிவு.
1.4. பின்வரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துறைகளில் விரிவான அறிவு மற்றும் ஆராய்ச்சி/ கற்பித்தல் அனுபவம் ஆகியவை சேர்க்கப்பட்ட தகைமையாகும்.
திரைக்கதை, பயன்பாட்டு நாடகம், விமர்சனக் கோட்பாடு, செயற்றிறன் ஆய்வுகள், இடைநிலை செயற்றிறன், கலாசாரங்களுக்கு இடையேயான செயற்றிறன், நாடக சிகிச்சை, முகமூடி மற்றும் சடங்கு செயற்றிறன், பிரிக்கப்பட்ட தியேட்டர், தியேட்டர் வரலாறு ஆராய்ச்சி மற்றும் செயற்றிறன் நெறிமுறைகள், காட்சியியல்.
1.5. சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் கற்பித்தலின் ஆற்றல் பரீட்சிக்கப்படும்.

III. **தகவல் தொழில்நுட்பவியல் திணைக்களம்**
பாடம்: தகவல் தொழில்நுட்பவியல்
விஷேட குறிப்புக்கள்
Knowledge in Network, Server Management, Data Management and Security will be expected.

**சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் கற்பித்தலின் ஆற்றல் பரீட்சிக்கப்படும்.**

**சம்பள அளவுத்திட்டங்கள்:**

| | | |
|---|---|---|
| விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை) | U-AC 3(IV) | மாதாந்தம் 54,600-10x1335 - 67,950 ரூபா |
| விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாதது) | U-AC 3 (III) | மாதாந்தம் 69,580-5x1630-77,730 ரூபா |
| சிரேஷ்ட விரிவுரையாளர் (தரம் II) | U-AC 3(II) | மாதாந்தம் 79,360-11x1,630-97,290 ரூபா |
| சிரேஷ்ட விரிவுரையாளர் (தரம் I) | U-AC 3 (I) – | மாதாந்தம் 91,310-7x2,170-106,500 ரூபா |

❖ மேலதிகமாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய படிகளும் வழங்கப்படும்.

### விண்ணப்பதாரிகளுக்கான பணிப்புரைகள்:

(1) **www.vpa.ac.lk** என்ற பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து விண்ணப்ப படிவங்கள் மற்றும் அபேட்சகர்களுக்கான பணிப்புரைகளும் பதிவிறக்கம் செய்யப்படலாம். உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட ஒன்-லைன் விண்ணப்பங்கள் மற்றும் அனைத்து தேவையான ஆவணங்களும் 2023.09.12 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். தபால் சேவையினூடாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
(2) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட 721 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் வகுதி அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படும்.
(3) பல்கலைக்கழக பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகளுக்கமைவாக நடத்தப்படும் பிரயோக மற்றும் கட்டமைப்பு நேர்முகப்பரீட்சையின் மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
(4) சேவைச் சான்றிதழ்கள் அடங்கலான அனைத்து உரித்தான சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிழற்படப்பிரதிகளும் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.
(5) அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் அபேட்சகர்கள் அவர்களின் விண்ணப்பங்ளை உரித்தான நிறுவனங்களின் தலைமைகளூடாகவே அனுப்புதல் வேண்டும்.
(6) ஒரு பதவிக்கு/ஒரு பாடத்திற்கு மேலதிகமாக விண்ணப்பிக்க விரும்பும் அபேட்சகர்கள் தனித்தனியான விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
(7) இந்த பதவிகளுக்காக மேற்கொள்ளப்படும் எந்தவொரு ஆதரவு தேடுதலும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாதென்பதுடன் தகுதியிழப்பிற்கும் வழிவகுக்கும்.
(8) தேவைப்படும் தகைமைகளை பூர்த்தி செய்யாத மற்றும்/அல்லது மேலே வழங்கப்பட்டுள்ள பணிப்புரைகளுக்கு இசைவில்லாத விண்ணப்பங்கள் மற்றும் தாமதமான சமர்ப்பித்தல்கள் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர் (பதில் கடமையாற்றுபவர்),**
**கட்புல மற்றும் ஆற்றுக்கலைகள் பல்கலைக்கழகம்.**
**13.08.2023**

---

## சுற்றாடல் அமைச்சு

## ஜீ எஸ் எம் பீ டெக்னிக்கல் சேர்விசஸ் (தனியார்) கம்பனி

**ஜீ எஸ் எம் பீ டெக்னிக்கல் சேர்விசஸ் (தனியார்) கம்பனியின் கீழ் செயற்படும் 'பரெபஞ்ஞுங்' மணல் அகழ்வு செயற்றிட்டத்தின் ஒவ்வொரு தடத்திலும் மணல் அகழ்வு செய்வதற்காக, பொருத்தமான சேவை வழங்குநர்களை தேர்ந்தெடுப்பதற்காக பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரல்**

**சந்தைப்படுதல் இலக்கம் - GSMBTS/MKT/2023/44/02**

சுற்றாடல் அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அரச வர்த்தக கம்பனியான ஜீ எஸ் எம் பீ டெக்னிக்கல் சேர்விசஸ் (தனியார்) கம்பனியின் தலைவரால் 'பரெபஞ்ஞுங்' மணல் அகழ்வு செயற்றிட்டத்தின் ஒவ்வொரு தடத்திலும் மணல் அகழ்வு செய்து கொள்வனவு செய்வதற்காக, பொருத்தமான சேவை வழங்குநர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனுக்கள் கோரல், பத்திரிகை அறிவித்தலை பிரசுரிப்பதன் மூலம் இடம்பெறும் ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு மேலதிக விபரங்களை ஜீ. எஸ். எம் பீ டெக்னிக்கல் சேர்விசஸ் (தனியார்) கம்பனியின் சந்தைப்படுத்தல் மற்றும் திட்டமிடல் பிரிவு (தொ.பே. இல. 0112515029) இடம் பெற்றுக் கொள்ளலாம்.

சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்ட விலைமனுக் கோரல் ஆவணங்களை 2023 ஓகஸ்ட் 14 முதல் 2023 செப்டம்பர் 01 பி.ப. 3.00 வரை அலுவலக நாட்களில் கீழ்க்காணும் முகவரியில் குறிப்பிடப்படும் தலைமையகத்தில் கட்டணங்கள் செலுத்தாமலேயே பரீட்சித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

பொறியிடப்பட்ட விலை கோரல் ஆவணங்களை 2023 செப்டம்பர் 04ம் திகதி பி.ப. 2.00 இற்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது தலைமையகத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் திட்டமிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் உள்ளிடல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக் கோரல் ஆவணங்களுடன் ஒரு தடத்திற்கு ரூ. 10,000.00 வீதமான காசுப் பிணையை சமர்ப்பித்தல் வேண்டும். காசுப் பிணை இன்றிய எந்த விலை கோரல் ஆவணமும் நிராகரிக்கப்படும் தாமதமாகக் கிடைக்கும் விலை கோரல் ஆவணங்கள் நிராகரிக்கப்படும்.

விலைகோரல் ஆவணங்கள் 2023 செப்டம்பர் 04ம் திகதி பி.ப. 2.00 இற்கு முன் கீழ்க்காணும் முகவரியில் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு அவ் வேளையில் சமுகமளிக்கலாம்.

**தலைவர்**
**ஜீ எஸ் எம் பீ டெக்னிக்கல் சேர்விசஸ் (தனியார்) கம்பனி**
**190/A, ரத்னவீர கட்டிடம், ஸ்டான்லி திலகரத்ன மாவத்தை,**
**நுகேகொடை.**

---

## சுகாதார அமைச்சு

SPMC

### அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்

# கழிக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்தல்

இல. - 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்த, கந்தவலவத்த, இரத்மலாளை என்ற இடத்தில் அமைந்துள்ள அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் (SPMC) இனால் மீண்டும் பாவிக்கக்கூடிய பல்வேறு அளவிலான கீழ்க்காணும் உருப்படிகளை விற்பனை செய்வதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| வெற்றுபிளாஸ்டிக் பெரல் | பலகை தட்டு (பெலட்) |
| திண்ம காட்போட் பெரல் | போர்ட் பலகை |
| வெற்று காட்போர்ட் பெட்டி | பழுதடைந்த வெற்று பிளாஸ்டிக் பெரல் |
| கடதாசி பேக் | பழுதடைந்த வெற்று திண்ம காட்போர்ட் பெரல் |
| பாவிக்கப்பட்ட பத்திரிகை | வெற்று எண்ணெய் கொள்கலன் |
| ரெஜிபோம் சீட் (1" தடிப்பு) | வெற்று குளோரீன் கொள்கலன் |
| ரெஜிபோம் சீட் (1/2" தடிப்பு) | அகற்றப்பட்ட பிளாஸ்டிக் போத்தல் (கிலோ) |
| அகற்றப்பட்ட பொலித்தீன் (கிலோ) | |

கேள்வி மாதிரிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக மீளளிக்கப்படாத ரூ. 1,000/- வைப்புத் தொகையைச் செலுத்தி அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் (SPMC) கணக்கு இலக்கத்திலிருந்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் எழுத்துமூல வேண்டுதலைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பொதுவாக தினமும் மேற்படி உருப்படிகள் சேருகின்றது அத்துடன், 7 நாட்களுக்கு ஒரு முறை அவற்றைக் கொள்வனவு செய்தல் வேண்டும். விற்பனைக்குள்ள பொருட்களை மேற்படி இடத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

பொதியிடப்பட்ட கேள்விகள் 2023 ஓகஸ்ட் 28 பி.ப. 2.00 இற்கு முன்பு இரத்மலானை, கந்தவலவத்த, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்த, இல.11, அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபன கேள்விச் சபையின் தலைவருக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அதற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

இது பற்றிய கேள்விக்கு முன்னரான சந்திப்பு (SPMC) நிறுவனத்தில் 2023 ஓகஸ்ட் 24 மு.ப. 10.00 இற்கு நடைபெறவுள்ளது.

கேள்விப் பத்திரங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி மாதிரிப் பத்திரங்களில் குறிப்பிடப்படும் கேள்வி இலக்கம் (SPMC/PEP/SCRAP/01/2023) குறிப்பிடுதல் வேண்டும்.

இது பற்றிய மேலதிக விபரங்கள் தேவையெனில் தொ.பே. இலக்கம் - 011-2637574 அல்லது 011-2636234 மூலம் பிரதிப் பொது முகாமையாளர் திட்டமிடல் மற்றும் பெறுகையை அழையுங்கள்.

**தலைவர்,**
**அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்,**
**இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்த, கந்தவலவத்த,**
**இரத்மலானை.**

---

## தேசிய உப்பு நிறுவனம்

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

**செயற்றிட்டத்தின் பெயர் : மன்னார், பெரியகடை, மீன் சந்தை வீதி, தேசிய உப்பு நிறுவனத்தின் இடப்பரப்பில் வெளிக்கள அலுவலக கட்டிடமொன்றை நிர்மாணித்தல்.**
**ஒப்பந்த இல. : NSL/MN/FOB/2023/04**

1. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பதிக்கப்பட்ட விலைமனுக்களை தேசிய உப்பு நிறுவனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் மூலம் நடத்தப்படும்.
3. ஒப்பந்தத்தை கையளிப்பதற்கான தகுதிக்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவிருத்தல் வேண்டுமென்பதுடன் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தில் நிர்மாணம், பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான நிறுனம் (ICTAD) பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. தகைமைத் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணத்தின் 4 ஆம் பிரிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. மேலதிக தகவல்கள் விலைமனு ஆவணத்தின் 5 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ளன.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கொழும்பு-05, இல. 561/3, எல்விட்டிகல மாவத்தை, தேசிய உப்பு நிறுவனத்தின் பொது முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: 011-2368974/64. மின்னஞ்சல்: **nslhoe@gmail.com** மற்றும் 2023 ஓகஸ்ட் 31 ஆம் திகதி வரையிலான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணி முதல் பி.ப. 2 மணி வரையும் பின்வரும் முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத மூவாயிரம் ரூபா கட்டணத்தைச் (வரிகள் நீங்கலாக 3000 ரூபா) செலுத்துவதன் மூலம் 2023 ஓகஸ்ட் 15 ஆம் திகதியிலிருந்து 2023 செப்டம்பர் 01 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் மன்னார், பெரியகடை, மீன் சந்தை, தேசிய உப்பு நிறுவனம் அல்லது கொழும்பு-05, இல. 561/3, எல்விட்டிகல மாவத்தை, தேசிய உப்பு நிறுவனத்தின் பொது முகாமையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றை பெற்றுக் கொள்ளலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
7. நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை **2023 செப்டம்பர் 04 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு** அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரியில் ஒப்படைத்தல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைக்கோரல்கள் மூடப்பட்டதன் பின்னர் சமூகமளிக்கும் விலைமனுதாரர்கள் அல்லது விலைக்கோரலில் பங்குபற்றுவதற்கு அவர்களினால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட நாளிலிருந்து 77 நாட்களுக்கு (2023 நவம்பர் 20 ஆம் திகதி) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
9. விலைமனுவுடன் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தகவலின் பிரகாரம் விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| ஒப்பந்த இல. | வேலையின் விளக்கம் | மதிப்பீடு செய்யப் பட்ட ஆகுசெலவு மில்லியன் இலங்கை ரூபாவில் | ஒப்பந்தக் காலப் பகுதி | தேவைப்படும் தரம் | தேவைப்படும் விலைமனுப் பிணை முறி | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | விலைமனுத் தொகை | செல்லுபடியாகும் காலப்பகுதி |
| NSL/MN/FOB/2023/04 | மன்னார் தேசிய உப்பு நிறுவன இடப்பரப்பில் வெளிக்கள அலுவலக கட்டிடமொன்றை நிர்மாணித்தல் | 12..23 மில். | 4 மாதங்கள் | C-7 அல்லது மேற்பட்டது | 122,300.00 | 2023.12.20 ஆம் திகதியன்று வரையும். |

10. கீழே குறிப்பிட்டுள்ள முகவரியில் **2023 ஓகஸ்ட் 24 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு** விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் அவர்கள் சொந்த செலவிலேயே விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய உப்பு நிறுவனம்,**
**இல. 561/3, எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு-05.**

www.adz.lk
it's what you want



ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரமும், மாவனல்லை பதுரியா தேசிய பாடசாலையும் இணைந்து நடாத்திய 74வது ஊடகக் கருத்தரங்கு பதுரியா தேசிய பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் சான்றிதழ் வழங்கும் வைபவத்திற்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட பங்களதேஷ் உயர் ஸ்தானிகர் தாரிக் மொஹமட் ஆரிபுல் இஸ்லாமை கல்லூரியின் அதிபர் ஏ.எல்.எம் றஹுமான் கௌரவிப்பதனையும், உயர் ஸ்தானிகரின் பாரியாரை பதுரியா தேசிய பாடசாலையின் பழைய மாணவிகள் சங்கத்தின் ஊடகச் செயலாளரும், முஸ்லிம் மீடியா போரத்தின் அங்கத்தவருமான பாரா தாஹிர் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதனையும் படத்தில் கானலாம். அருகில் மீடியா போரத்தின் தலைவர் என். எம் அமீன் காணப்படுகின்றார். (அஷ்ரப் ஏ சமத்)

## இலங்கை துறைமுக அதிகாரசபையின் காலி தேசிய ஊழியர் சங்கத்தின் தொழிற்சங்க அலுவலகத் திறப்பு விழா





இலங்கை துறைமுக அதிகாரசபையின் காலி தேசிய ஊழியர் சங்கத்தின் தொழிற்சங்க அலுவலகம் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

துறைமுக தேசிய ஊழியர் சங்கத்தின் கௌரவத் தலைவர் திருமதி துஷாரி பிரியங்கா தலைமையீட்டில் தொழிற்சங்க உறுப்பினர்களுக்கு புதிய வசதிகளுடன் கூடிய கட்டடம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்திலக் வனிதா சங்கத்தின் தலைவி திருமதி சாந்தினி கொங்கஹா, தொழிற்சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய ஊழியர் சங்கத்தின் உப தலைவர் சுனில் டி சில்வா, இலங்கை துறைமுக தேசிய ஊழியர் சங்கத்தின் தலைவர் திருமதி துஷாரி பிரியங்கா, சிவில் அமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்தி ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் குழுவின் உறுப்பினர் சுப்பையா ஆனந்தகுமார், உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

## மாத்தளையில் நிறைவுற்ற பயண யாத்திரை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது

**சமூக செயற்பாட்டாளர் எச்.எச்.விக்கிரமசிங்க**



தென்னகத்திலிருந்து மலையகத்தை நோக்கி குடிபெயர்ந்த மலையக மக்களின் 'வேர்களை மீட்டு உரிமை வென்றிட" மாண்புமிகு மலையக மக்கள் இயக்கம், நமது முன்னோர் 200 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த வழி நடைப்பயணத்தின் தடமாக தலைமன்னாரில் ஆரம்பித்து நேற்று (12.8.2023) மாத்தளையை வெற்றிகரமாக வந்தடைந்தது. இப்பயண யாத்திரை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்று மலையக சமூக, கலை, இலக்கிய, ஆன்மீக செயற்பாட்டாளர் எச்.எச்.விக்கிரமசிங்க வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது இந்த நீண்ட பயணத்தில் கரம் கோர்த்த அனைத்து நெஞ்சங்களுக்கும் எனது வாழ்த்துகள் உரித்தாகும்.

“மாத்தளை எங்கள் மலையகத்தின் தலைவாயில்” தமிழகக் கரையிலிருந்து படகுகள் மூலம் கடலைக் கடந்து, கொடிய கானகங்களுக்கிடையே கால்நடையாய் உயிர்தப்பி வந்ததற்காக நன்றிகூரும் முதல்தெய்வம் எங்கள் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன். மலையக மக்களின் வரலாறு மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வரலாற்றுடன்தான் ஆரம்பமாகிறது' என்று மலையகத்தின் மூத்த பேராசானும், இன்று மலையகத்தில் ஏற்பட்டிருக்கும் எழுச்சிக்கும் வித்திட்டவருமான இர.சிவலிங்கம் குறிக்கும் மாத்தளை நகரில் சங்கமிக்கும் இந்தப் புனித யாத்திரை மலையக வரலாற்றில் என்றும் பொறிக்கப்படும். ஆகஸ்ட் 12 ஆம் திகதி மாத்தளையில் நிறைவுபெற்ற இந்தப் பயண யாத்திரையின் வெற்றிக்கு முன்னின்று உழைத்த அனைவருக்கும் என் வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

## 2023 முதல் அரையாண்டில் இலாபத்துடன் உறுதியான வளர்ச்சியை பதிவு செய்துள்ள செலான் வங்கி





2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் நிலவிய, சவால்கள் நிறைந்த சந்தைச்சூழலிலும் செலான் வங்கி மீட்சியுடனான வளர்ச்சியைப் பதிவு செய்து, வரிக்கு முந்திய இலாபமாக ரூ. 4.2 பில்லியனைப் பதிவு செய்துள்ளது. 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் சுமார் 104.65% அதிகரிப்பு என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் வங்கி, வரிக்கு பிந்திய இலாபமாக ரூ. 2.6 பில்லியனை பதிவு செய்துள்ளது. இது முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 71.29% வளர்ச்சி என்பது குறிப்பிடத்தக்கது.

சிறப்பு மற்றும் நிலையான வளர்ச்சி ஆகியவற்றுக்கான தனது உறுதி மொழியை வெளிப்படுத்தும் வகையில் வங்கியின் உறுதியான நிதிப் பெறுபேறுகள் அமைந்துள்ளன. ஆரோக்கியமான திரள்வு நிலையை வங்கி பேணியிருந்ததுடன், எதிர்கால வளர்ச்சிக்காக திரள்வு மற்றும் மூலதன இருப்பு போன்றவற்றை போதியளவில் பேணியிருந்தது.

ஒட்டுமொத்த திரள்வு சொத்து விகிதம் முதல் அரையாண்டு காலப்பகுதியில் 32.30% ஆக காணப்பட்டது. இதனூடாக, ஒழுங்குபடுத்தல் தேவைகளை நிவர்த்தி செய்து அவற்றை விஞ்சுவதுடன், செயற்பாடுகளை வினைத்திறனான வகையில் ஆதரவளிக்கும் வகையில் அமைந்துள்ளது. மேலும், துரித நிதி அடித்தளத்தை பேணுவதற்கான அர்ப்பணிப்பை பிரதிபலிப்பதுடன், செலான் வங்கி தொடர்ந்தும் சிறந்த வகையில் மூலதனவாக்கத்தை கொண்டிருப்பதுடன், மொத்த மூலதன போதுமான விகிதத்தை முதல் அரையாண்டில் 15.51%ஆக உயர்வடையச் செய்திருந்தது. முறையாக பேணப்பட்ட பொது பங்கு நிலை 1 மூலதன விகிதம் (Common Equity Tier 1 Capital Ratio) 11.85% ஆக பேணப்பட்டிருந்ததனூடாக சீரான செயற்பாடு மேலும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

குறிப்பாக, செலான் வங்கியின் தேறிய வட்டி வருமானம் (NII) 21.47% இனால் அதிகரித்து ரூ. 20.5 பில்லியனாக பதிவாகியிருந்தது. தேறிய வட்டி எல்லைப் பெறுமதி 6% எனும் உறுதியான நிலையில் காணப்பட்டது. வங்கியின் தேறிய கட்டணஅடிப்படையிலான வருமானமும் 26.72% எனும் உறுதியான வளர்ச்சியை பதிவு செய்து, ரூ. 3.5 பில்லியனாக பதிவாகியிருந்தது. டெபிட் மற்றும் கிரெடிட் கார்ட்களுடன் தொடர்புடைய வருமானங்கள், உத்தரவாதமளிப்புகள் மற்றும் வெளிநாட்டு பண அனுப்புகைகளின் மீதான தரகுக் கட்டணங்களினூடாக இந்தப் பெறுமதி உயர்வடைந்திருந்தது.

செலான் வங்கியின் மொத்த தொழிற்பாட்டு வருமானம் 2023 முதல் அரையாண்டில் 13.31% வளர்ச்சியைப் பதிவு செய்து ரூ. 24.6 பில்லியனாக பதிவாகியிருந்தது. தேறிய வட்டி வருமானம், தேறிய தரகு மற்றும் கூலி வருமானம் மற்றும் இதர பங்களிப்பு காரணிகளை மேம்படுத்துவதில் வங்கியின் மூலோபாய கவனத்தினூடாக இந்த சிறந்த பெறுமதிகளை எய்த முடிந்தது. அந்நியச் செலாவணி வீதங்களில் ஏற்றத்தாழ்வுகள் காணப்பட்டமையினால் சில வருமானப் பிரிவுகளில் வங்கி சரிவை சந்தித்திருந்த போதிலும், அதன் செலவுக் கட்டமைப்பை சீரமைப்பதில் செலான் வங்கி கவனம் செலுத்தியிருந்தது. மொத்த செலவுகள் 25.88% இனால் அதிகரித்திருந்தன. ஊழியர் அனுகூலங்களை மேம்படுத்துவதிலும், பொருளாதாரக் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களுக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்வதிலும் காண்பித்திருந்த செயற்பாடுகளை பிரதிபலிப்பதாக இது அமைந்திருந்தது. இந்த சவால்களுக்கு மத்தியிலும், செயற்பாட்டுச் சிறப்பை பேணுவதற்காக செலவுச் சிக்கனமான தந்திரோபாயங்களை நடைமுறைப்படுத்துவதில் வங்கி உறுதியாக செயலாற்றியிருந்தது.

## கள்ளம் இல்லாப் பிஞ்சுகளே!

கள்ளம் இல்லாப் பிஞ்சுகளே கருத்தாய்க் கற்றே உயர்ந்திடுவீர்
துள்ளிக் குதித்துத் தோழருடன் சேர்ந்தே ஆடி மகிழுங்கள்
தள்ளிப் போகும் வேளையிலே தேழமை அகலும் அறிவீரோ
வெள்ளி நிலவாய் ஒளிதரவே விண்ணைத் தொடலாம் துணிவீரே

பேயாய்த் துரத்தும் போதையது பிழையாம் யார்க்கும் வாழ்வினையே
தாயார் வடிக்கும் கண்ணீரும் தணலாய்த் தகிக்கும் தரணியிலே
நோயால் வாடித் துடித்தாலே நொறுங்கித் தவிப்பார் தந்தையுமே
ஓயாத் துன்பம் உறைந்திடவே உயிரும் பறக்கும் உணர்வீரே

பெற்றோர் மனமும் புண்பட்டால் பெறுவீர் இறையின் தண்டனையை
வற்றா நதியாய் வாழ்வதற்கு, வாழ்த்திட வேண்டும் அன்னவரே
கற்றோ னாகிக் காசினியில் கடமைகள் அனைத்தும் புரிந்திடுவீர்
நற்சொல் வாழ்வில் இமயமெனும் நலங்கொள உயர்வைத் தந்திடுமே

பொல்லாச் செயலை வெறுத்திடவே பூக்கும் நம்மிற் புத்துணர்வு
நல்லோர் காட்டும் வழியினிலே நலங்கள் விளையும் அறிவாயே
கல்விக் கனியைச் சுவைப்பதிலே காணும் இன்பம் கணக்கிலையே
சொல்லும் செயலும் சிறந்தாலே! சுகங்கள் நூறாய்ச் சொரிந்திடுமே!

உயிராய் ஒழுக்கம் பேணாதோர், உலகம் பழிக்க வாழ்ந்திடுவார்
பயிராய் வளரும் சிறுமியரைப், பதைக்கப் பதைக்கக் குதறிடுவார்
வயிறும் பற்றி யெரிந்திடவே வன்மச் செயல்கள் புரிவோரே
துயிலும் அறிவை எழுப்பிடுவீர்! தூய்மை எண்ணம் செழித்திடவே

தீதை விலக்கா மாந்தர்க்குத் தேளாய்க் கொட்டும் மனச்சாட்சி
போதை தவிர்த்தால் வாழ்க்கையுமே பொன்னாய் ஒளிரும் அறிவீரே
வாதை இல்லா உடனலமும் வாகாய் அமையும் மகிழ்ந்திடவே
பாதை தவறாப் பயணமது பசுமைச் சோலை காட்டிடுமே

சபீனா சாபி

## உத்வேகமளிக்கும் பெண்கள், கதையாசிரியர்களுக்கு வெகுமதியளிக்கும் காமனி கொரியா அறக்கட்டளை

உத்வேகமாக இருக்கக்கூடிய இலங்கைப் பெண்களின் முயற்சிகளை அங்கீகரிக்க Gamani Corea Foundation முடிவு செய்துள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் சமகால பெண்களின் சாதனைகளின் அடிப்படையில் கதைகள் இருக்க வேண்டும். சமர்ப்பிக்கப்படும் அனைத்து கதைகளும் எழுத்தாளரின் அசல் படைப்பாக இருக்க வேண்டும் மற்றும் 1500 முதல் 2000 வார்த்தைகளுக்கு இடையில் இருக்க வேண்டும். உத்வேகம் தரும் பெண்களின் முயற்சிகளை வெளிக்கொணர்வதில் எழுத்தாளர்கள் கவனம் செலுத்த வேண்டும். கொள்கை வகுப்பாளர்கள் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளவும், தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தெளிவாக வெளிப்படுத்தப்பட வேண்டும். ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் படைப்புகள் ஏற்றுக்கொள்ளப்படும். காமனி கொரியா அறக்கட்டளையால் இந்த நோக்கத்திற்காக அமைக்கப்பட்ட மதிப்பீட்டுக் குழுவால், கதைகளின் உள்ளடக்கம் மற்றும் தரத்தின் அடிப்படையில் புள்ளிகள் அடிப்படையிலான தேர்வு செயல்முறை மூலம் வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். மேலதிக விபரங்களுக்கு https://gamanicoreafoundation.lk எனும் இணையதளத்தை அணுகவும்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
நகர அபிவிருத்தி அதிகாரசபை

முன்மொழிவுகளுக்கான அழைப்புக் கோரிக்கை (RFP)

**கொழும்பு 06, வெள்ளவத்தை, மயூரா பிளேஸில் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம்**



காணி அளவு : 00A- 01R- 16.05P
குத்தகைக் காலம் : 99 ஆண்டுகள்
அடிப்படை பெறுமதி : ரூபா 231,500,000/-
விலைமனு பிணைமுறி : ரூபா 2,500,000/-
விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு : 2023.09.07 அன்று மு.ப. 10.00
விலைமனு நிறைவு : 2023.10.13 அன்று பி.ப. 2.30

காணி அளவு : 00A- 01R- 18.2P
குத்தகைக் காலம் : 99 ஆண்டுகள்
அடிப்படை பெறுமதி : ரூபா 116,200,000/-
விலைமனு பிணைமுறி : ரூபா 1,500,000/-
விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு : 2023.09.07 அன்று மு.ப. 11.00
விலைமனு நிறைவு : 2023.10.13 அன்று பி.ப. 2.00



**கடவத்த நகரில் கலப்பு மேம்பாட்டு திட்டம்**

சாத்தியமுடைய விலைமனுதாரர்கள் (முதலீட்டாளர்கள்/ மேம்பாட்டாளர்கள்) பத்தரமுல்லை, செத்சிறிபாய கட்டம் 1, 6ஆவது மாடியில் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிப் பிரிவுக்கு அரச வரிகள் உள்ளடங்கிய 100,000 இலங்கை ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2023 ஒகஸ்ட் 16 ஆம் திகதி தொடக்கம் 2023 ஒக்டோபர் 02 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.30 வரை பத்தரமுல்லை, செத்சிறிபாய கட்டம் 1, 8ஆவது மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, மெய் ஆதன முகாமைத்துவ மற்றும் அபிவிருத்திப் பிரிவில் இருந்து RFP ஆவணங்களை கொள்வனவு செய்யலாம். விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு பத்தரமுல்லை, “செத்சிறிபாய” கட்டம் 1, 9ஆவது மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை கேட்போர்கூடத்தில் மேல் குறிப்பிடப்பட்ட திகதிகள் மற்றும் நேரத்தில் இடம்பெறும்.

தொழில்நுட்ப முன்மொழிவு பத்தரமுல்லை, செத்சிறிபாய வீதி, “செத்சிறிபாய”, 18ஆவது மாடி, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, பணிப்பாளர் (தொழில்நுட்பம்) அலுவலகத்தில் மேல் குறிப்பிடப்பட்டவாறு RFP ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் உடன் திறக்கப்படும். விலைமனு திறக்கப்படும் நேரத்திற்கு விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிக்கு பங்கேற்கலாம்.

**தலைவர், நிலையான அமைச்சரவை நியமித்த பேச்சுவார்த்தைக் குழு (SCANC), நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, 12ஆவது மாடி, செத்சிறிபாய கட்டம் 11, பத்தரமுல்லை.**

UDA
உடன்
முதலீடு
செய்யுங்கள்

**கலப்பு அபிவிருத்தி திட்டங்களுக்கான கேள்விமனு கோரல்**
**கொலன்னாவை கலப்பு அபிவிருத்தித் திட்டம்**

காணி அளவு : 00A- 01R- 10.04P
குத்தகைக் காலம் : 30 ஆண்டுகள்
அடிப்படை பெறுமதி : ரூபா 92,220,000/-
விலைமனு பிணைமுறி : ரூபா 1,000,000/-
விலைமனு நிறைவு : 2023.10.09 அன்று பி.ப. 2.30



சாத்தியமுடைய விலைமனுதாரர்கள் (முதலீட்டாளர்கள்/ மேம்பாட்டாளர்கள்) பத்தரமுல்லை, செத்சிறிபாய கட்டம் 1, 6ஆவது மாடியில் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிப் பிரிவுக்கு வரிகள் உள்ளடங்கிய 25,000 இலங்கை ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2023 ஒகஸ்ட் 16 ஆம் திகதி தொடக்கம் 2023 செப்டெம்பர் 27 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.30 வரை பத்தரமுல்லை, செத்சிறிபாய கட்டம் 1, 8ஆவது மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, மெய் ஆதன முகாமைத்துவ மற்றும் அபிவிருத்திப் பிரிவில் இருந்து கேள்விமனு ஆவணத்தை கொள்வனவு செய்யலாம்.

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு பத்தரமுல்லை, “செத்சிறிபாய” கட்டம் 1, 9ஆவது மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபையில் 2023.09.11 ஆம் திகதி மு.ப. 10.00க்கு இடம்பெறும்.

மேல் குறிப்பிடப்பட்ட இறுதித் திகதிக்கு பின் பத்தரமுல்லை, “செத்சிறிபாய - கட்டம் 1”, 6ஆவது மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, நிதிப் பிரிவில் கேள்விமனுக்கள் உடன் திறக்கப்படும். விலைமனு திறக்கப்படும் நேரத்திற்கு கேள்விமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிக்கு பங்கேற்கலாம்.

**தலைவர், வருவாய் கேள்விமனு சபை (கனிஷ்ட), நகர அபிவிருத்தி அதிகாரசபை, 6ஆவது மாடி, செத்சிறிபாய கட்டம் 1, பத்தரமுல்லை.**

**மேலதிக விபரங்களுக்கு:**
**பணிப்பாளர் (மெய் ஆதன மேம்பாடு),**
**மெய் ஆதன முகாமைத்துவ மற்றும் மேம்பாட்டு பிரிவு,**
**நகர அபிவிருத்தி அதிகாரசபை, 8ஆவது மாடி,**
**செத்சிறிபாய கட்டம் 1, பத்தரமுல்லை.**
**தொலைபேசி இலக்கம்: 011 2875921 அல்லது 011-2875916-20, 071-5522-279**
**தொலைநகல்: 011-2875900, மின்னஞ்சல்: directorred@uda.gov.lk**
**இணையதளம்: www.uda.gov.lk**

# படித்ததும் பகர்வதும் 155



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### மின்சாரத்தில் சிக்கனம்

"இலங்கையில் மீண்டும் ஒருமுறை மின்வெட்டு அமுலுக்கு வரும்" என்றவாறான செய்திகள் பரவலாக எங்கும் பேசப்படுகின்றன. இதனால் இவ்விடயம் தொடர்பில் பலரும் தமது விருப்பப்படி பல்வேறு கருத்துக்களை சாதகமாவும், பாதகமாவும் தெரிவித்து வருகின்றனர்.



மின்வெட்டு அமுலுக்கு வருகின்றதோ இல்லையோ, 'மின்சாரம்' என்பது மனித வாழ்வோடு பின்னிப் பிணைந்து எப்போதும் எல்லாவற்றுக்கும் தேவைப்படுகின்ற தவிர்க்க முடியாத, இன்றியமையாத ஒன்றாக இருப்பது எல்லோரும் அறிந்த விடயம்.

மின்வெட்டு, மின்சாரக் கட்டண அதிகரிப்பு, மின்சாரத் துண்டிப்பு போன்ற விடயங்கள் எவரையும் பாதித்தாலும் பாதிக்கா விட்டாலும், அனைவரும், மின்சாரத்தை சிக்கனமாக பாவிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றனர் என்பதை ஒவ்வொருவரும் சிந்தித்து உணர வேண்டும்.

ஒவ்வொருவரும் அறிந்தோ, அறியாமலோ, கவனயீனத்தினாலோ மின்சாரத்தை வீண்விரயம் செய்வதில் பங்குதாரர்களாக இருக்கின்றனர் என்பதை மறுக்க முடியாது. இந்நிலை உடனடியாக மாற்றப்பட்டு ஒவ்வொருவரும் மின்சாரத்தை மிகச் சிக்கனமாக பாவிப்பவராக மாற வேண்டும்.

ஒருவரது வீட்டை எடுத்துக் கொண்டால் அளவுக்கு மீறிய அளவில் மின்குமிழ்களை ஔிரச் செய்தல் மின்விசிறிகளை அளவுக்கு அதிகமாக பாவித்தல் மின் அழுத்திகளை முறையற்று பாவித்தல், குளிர்சாதன பெட்டிகளை கட்டுப்பாடுகள் இன்றி உபயோகித்தல் போன்ற விடயங்களினால் மின்சாரம் அளவுக்கு அதிகமாக விரயமாக்கப்படுவதைக் காணமுடிகிறது.

இதே போன்று, காரியாலயங்களிலும், வேலைத் தளங்களிலும் ஊழியர்களின் பொடுபோக்குத்தனத்தால் கூடுதலான மின்சாரம் எந்தவித பயனுமின்றி வீணாகிறது. ஆட்களே இல்லாத வேலைகளிலும் மின்விசிறிகளை சுழலவிடுதல், வாயு சீராக்கி(air conditioner)களை இயங்க விடுதல், அளவுக்கு அதிகமாக மின்குமிழ்களை ஔிரச்செய்தல் போன்ற விடயங்களாலும் அதிக அளவில் மின்சாரம் விரயமாகிறது. இவற்றை தவிர்த்துக் கொள்ளுவதன் மூலம் அதிக அளவில் மின்சாரத்தை சேமிக்க முடியும்.

தேவையான போது மட்டும் அதுவும் உரிய அளவில் மின்விசிறிகளையும், வாயுச் சீராக்கிகளையும் பயன்படுத்துதல். அவசியமற்ற மின்குமிழ்களை ஔிரச் செய்யாதிருத்தல், மின் அழுத்திகளை முறையாகப் பயன்படுத்துதல், குளிர்சாதனப் பெட்டிகளை தேவையற்ற சந்தர்ப்பங்களில் இயங்க விடாதிருத்தல். முறையான நேர இடைவெளிகளில் அவற்றைப் பயன்படுத்தும் வழக்கத்தை ஏற்படுத்தல், மின்சார பாவனை மிக அதிகமாகவுள்ள மாலை 6 மணி முதல் 8 மணி வரையான காலப்பகுதியில் இயன்றளவு குறைவாக, கட்டுப்பாட்டுடன், தேவைக்கு அவசியமான அளவில் மட்டும் மின்சாரத்தைப் பயன்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் மின்சாரப் பாவனையை குறைப்பதோடு மின்சார வீண்விரயத்தையும் தவிர்க்க முடியும். கூடவே தாம் செலுத்தும் மின்கட்டணத்தை குறைத்துக் கொள்ளவும் இயலும்.

இந்நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் இவ்விடயத்தை கருத்தில் கொண்டு, மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துவதன் மூலம் தமக்கு மட்டுமன்றி நாட்டுக்கும் நல்லதை செய்ய உள உறுதி கொள்ள வேண்டும்.

## நெஞ்சுக்கு நீதி

***உலகில் வாழ்ந்திட இன்றியமையாதது மின்சாரம்***
***உணர்ந்ததனை சிக்கனமாய் பாவித்தல் அவசியம்***
***அளவின்றிய பாவனையால் அதி துயரம் நிச்சயம்***
***நிலையறிந்து செயற்பட்டால் நிம்மதியே! சத்தியம்***

## பிரிந்தார் பெருமை

### மூத்த ஒலிபரப்பாளர் விமல் சொக்கநாதன்

இலண்டன் பிபிசியின் 'தமிழோசை', இலங்கை வானொலி உட்பட தமிழர் புலம்பெயர்ந்த நாடுகளின் பல தனியார் தமிழ் வானொலிகளிலும், தொலைக்காட்சிகளிலும் பணிபுரிந்து புகழ் பெற்ற மூத்த ஒலிபரப்பாளர் விமல் சொக்கநாதன் கடந்த ஆகஸ்ட் 1ம் திகதி (2023.08.01) இலண்டனில் தனது 79வது அகவையில் அகால மரணமானார்.

1944 ஜுன் 30ல் யாழ்ப்பாணம், கொக்குவிலில் பிறந்த இவர், கொழும்பு வெஸ்லி கல்லூரியிலும், புனித பெனடிக்ட் கல்லூரியிலும் கற்றுள்ளார். 1959ஆம் ஆண்டிலேயே ஒரு சிறுவர் கலைஞராக இலங்கை வானொலியின் "சிறுவர் மலர்" நிகழ்ச்சி மூலம் வானொலியில் அறிமுகமாகியுள்ளார். பின்னர் கொழும்பு சட்டக் கல்லூரியில் சேர்ந்து சட்டத்தரணியான விமல் சொக்கநாதன், 1963ல் சட்டக் கல்லூரியில் கற்கும்போதே இலங்கை வானொலியில் பகுதிநேர அறிவிப்பாளராகச் சேர்ந்தார். 1970ல் இவரது பதவி நிரந்தரமாக்கப்பட்டுள்ளது.



இலங்கை வானொலியில் இவர் வழங்கிய 'சங்கநாதம்', 'இசையும் கதையும்', 'வாலிப வட்டம்' போன்ற நிகழ்ச்சிகள் மிகவும் ஜனரஞ்சகமானவை. விமல் சொக்கநாதனைத் தொடர்ந்து, உலக அறிவிப்பாளர் பி. எச். அப்துல் ஹமீத், வீ. என். மதியழகன் உட்பட பல அறிவிப்பாளர்களாலும் நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சிகள் இன்றும் இரசிகர்களால் பெரிதும் சிலாகித்துப் பாராட்டிப் பேசப்படுகின்றது. நகைச்சுவை கலந்து இவர் வழங்கிய 'களம் பல காண்போம்' எனும் உலக அரசியல் ஆய்வு நிகழ்ச்சி, பல அரசியல் தலைவர்களையே கவர்ந்திருந்தமை விசேடமாகக் குறிப்பிடத்தக்கது.

1976ஆம் ஆண்டில் இலண்டனுக்குப் புலம் பெயர்ந்து, அங்கு சட்டத்தொழிலில் ஈடுபட்ட இவர். சமகாலத்தில் இலண்டன் பிபிசி தமிழோசையில் அறிவிப்பாளராகவும் சிறப்பாகப் பணியாற்றினார். நடிப்பிலும் சிறந்த ஆற்றலைப் பெற்றிருந்த விமல் சொக்கநாதன், வரணியூரானின் 'பாசச்சுமை' மேடை நாடகத்திலும், வி. பி. கணேசனின் 'நான் உங்கள் தோழன்' திரைப்படத்திலும் நடித்துள்ளார்.

சென்னை: காந்தளகம், 2007ல் வெளியிட்ட 'வானொலிக் கலை' மற்றும் 'விமலின் பக்கங்கள்', அண்மையில் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் வெளியிடப்பட்ட 'இலண்டனில் இருந்து விமல்' என்பன விமல் சொக்கநாதன் எழுதி வெளியிட்ட நூல்களாகும்.

உலக அறிவிப்பாளர் பி. எச். அப்துல் ஹமீதின் 'வானலைகளில் ஒரு வழிப்போக்கன்' நூலின் அறிமுக விழா கொழும்பில் அண்மையில் நடைபெற்றபோது, விமல் சொக்கநாதன் அந்நிகழ்வில் தலைமைதாங்கி உரையாற்றினார். இதுவே இவர் பங்குபற்றிய இறுதி பகிரங்க நிகழ்வாக இருக்குமெனக் கருதுகிறேன்.

சட்டத்துறையை தனது தொழிலாக கொண்டிருந்தாலும், ஊடகத்துறையையே தனது உணர்வாகக் கொண்டு வாழ்ந்த விமல் சொக்கநாதன், இந்த மண்ணுலகைப் பிரிந்தாலும், தமிழ் மக்கள் மனங்களில் என்றும் வாழ்வார்.

## வாசிக்க ஒரு நூல்

### 'அமீன் அருங் காவியம்'

இலங்கையில் பிரபல மூத்த ஊடகவியலாளர் என்.எம். அமீன் பற்றி 'காப்பியக் கதிரோன்' மூதூர் எம்.எம்.ஏ. அனஸ் எழுதியுள்ள காவிய நூல் 'அமீன் அருங் காவியம்'.

தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளில் செய்தி ஆசிரியர் முதல் நிருவாக ஆசிரியர் வரை பல பதவிகளில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக கடமையாற்றிய பின்னர், நவமணி பத்திரிகையின் பிரதம ஆசிரியராக அது பிரசுரத்தை நிறுத்தும் வரை பணியாற்றி, இலங்கையின் ஊடகத்துறையில் தனக்கென தனியிடம் பிடித்துள்ளவர் என்.எம். அமீன் .

ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸில், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் என்பவற்றின் தலைவராக இருக்கின்ற, எல்லோராலும் "அமீன் நானா" என அன்போடு அழைக்கப்படுகின்ற என். எம். அமீன், சமூக சேவையில் சுமார் ஐந்து தசாப்தங்களாக தன்னை அர்ப்பணித்து சேவையாற்றி வருகிறார். அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம், அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு உட்பட பிரதான சமூக சேவை இயக்கங்கள் பலவற்றில் தலைவர், உபதலைவர், செயலாளர் உட்பட பொறுப்பான பதவிகளை இவர் அலங்கரித்துள்ளார்.




கடந்த சுமார் 23 வருடங்களாக ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவராக இருக்கும் இவரால் அறிமுகப்படுத்தப்பட்ட நூற்றுக் கணக்கான ஊடகவியலாளர்கள் நாட்டின் நாற்திசையிலும் பரவியிருக்கிறார்கள் என்பது விசேடமாக குறிப்பிடத்தக்கது. சாதி, மத, இன, மொழி வேறுபாடுகளின்றி, மக்களின் தேவையறிந்து இரகசியமாகவும், பரகசியமாகவும் இவர் பலருக்கும் வழங்கி வருகின்ற உதவிகள், ஒத்துழைப்புகள், ஆதரவுகள் பற்றி பெரும்பாலானோர் நன்கு அறிவர்

இத்தகையவரைப்பற்றி, அவரது சிறப்புகளை எடுத்துக்காட்டி, மற்றவர்களுக்கு அவை முன்மாதிரியாக அமைய வேண்டும் என்ற நோக்கில், எழுதப்பட்டுள்ள காவியம்தான் "அமீன் அருங் காவியம்". 2017ல் வெளியிடப்பட்ட இந்நூல், மக்கள் நலனில் கரிசனை கொண்ட ஒருவரைப் பற்றி எழுதப்பட்ட ஒரு வரலாற்றுப் பதிவாகும்.

"இலங்கை முஸ்லிம் சமூகத்தின் தேசிய விடயங்களைக் கையாள்வதிலே, அமீன் முக்கிய பங்கு வகிக்கிறார். அரசியல்வாதிகளை விட மக்கள் சக்தியினை ஒன்றிணைப்பதில் அவருக்கு அதிக பங்கிருக்கிறது. மக்கள் இயக்கத்தைக் கூட்டிணைப்பவராக, நம் எல்லோருக்கும் நம்பிக்கை தரும் சக்தியாக அவர் "அமீன் நானா" என்று அழைக்கப்படுகிறார். அந்த உரிமையின் காரணமாகவே அனஸ் அவரைக் காவிய நாயகனாக்கி இருக்கிறார்".

"அமீன் அருங் காவியம் பலராலும் தேடப்பெறாத பல செய்திகளை நமக்குத் தந்திருக்கிறது. அமீனின் வழியில் சேவையாற்றக் கூடிய பலரை உருவாக்கும் வழியைக் காட்டியிருக்கிறது. இந்த அர்ப்பணிப்பு மிக்க பணியைச் செய்த மூதூர் எம்.எம்.ஏ. அனஸுக்கு நமது வாழ்த்துக்கள்". என்று பேராசிரியர் ராமீஸ் அப்துல்லா, இக்காவியம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

"அமீன் அருங்காவியம்" தரும் சில காவிய வரிகள் இங்கே மாதிரிக்காக:

வன்செயல்கள் நாட்டினிலே வளராமல் தடுக்க
வகைவகையாம் பணியெல்லாம் வாஞ்சையுடன் செய்தார்
இன்பத்தில் இந்நாடு இலங்கிடவே அவரும்
இதயத்தால் உவந்தேதான் இயன்றபணி செய்தார்.
இனப்பகைமை இந்நாட்டில் இல்லாது போக
இதயத்தால் அழுதழுதே இதையகற்ற முயன்றார்
கனமான சிந்தனையின் கருவான அவரின்
காத்திரமாம் சேவைகளைக் காலமதும் மறவா!
எதுவிதமாம் பிரதிபலனும் எதிர்பார்க்கா வண்ணம்
எழிலாகச் சேவைகளை ஏற்றமெனச் செய்வார்
புதுமைமிகு மனிதரெனப் புகழ்வோமே இவரை'
புவியினுக்கு இவர்பணியால் புகழ்ச்சியேதான் என்போம்.

நூல்: அமீன் அருங் காவியம், ஆசிரியர்: மூதூர் எம்.எம்.ஏ. அனஸ், முதற்பதிப்பு: ஏப்ரல் 2017, பக்கங்கள்: 107, விலை: 250.00, வெளியீடு: உமர் நெய்னார் புலவர் கழகம் மூதூர்

## பொன் மொழி அது பொய்யா மொழி

***கலைஞர் கருணாநிதியின் கருத்துக்கள் சில:***



- ★ **அணு அளவுகூட இதயமில்லாத ஒருவருக்கு ஆகாயம் அளவு மூளையிருந்து என்ன பயன்?**
- ★ **அனுபவம் ஒரு பள்ளிக்கூடம். ஆனால், அதில் ஆணவக்காரர்கள் கற்றுத் தேர்வதில்லை.**
- ★ **ஆசைகள் சிறகு ஆகலாம்; அதற்காக கால்களை இழந்து விட்டு பறந்தால் பூமிக்குத் திரும்ப முடியாது.**
- ★ **இழிவு செய்யும் நண்பர்களை விட, எதிர்த்து நிற்கும் பகைவர் எவ்வளவோ மேல்!**
- ★ **உண்மையை மறைக்க முனைவது விதையைப் பூமிக்குள் மறைப்பது போலத்தான்.**
- ★ **உண்மையானவனின் பின்னால் ஐந்து பேர் செல்வார்கள்... அந்த உண்மையைப் புரியாதவன் பின்னாலும் ஐந்து பேர் செல்வார்கள்.**
- ★ **மனசாட்சி உறங்கும் சமயத்தில்தான் மனக்குரங்கு ஊர் சுற்றக் கிளம்புகிறது.**
- ★ **அடிமையாக இருப்பவன் தனக்குக் கீழே ஓர் அடிமை இருக்க வேண்டும் என்று கருதினால், உரிமைகளைப் பற்றிப் பேச அவனுக்கு உரிமையே கிடையாது.**

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207

---



## திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர் 51



கே. பத்மானந்தன்

# திருவள்ளுவத்தில் சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்

சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தின் (Marketing Management) மிகவும் முக்கியமான நோக்கமே ஒரு நிறுவனத்திற்குத் தேவையான வாடிக்கையாளரை உருவாக்குவதே ஆகும். பொதுவாக வாடிக்கையாளரின் தேவைகளை அறிதல், அதற்கேற்ப பொருட்களையும் சேவைகளையும் வடிவமைத்தல், தொடர்பு சாதனங்கள் மூலம் வாடிக்கையாளருக்குத் தேவையான பொருட்களைத் தேவையான இடத்தில் தேவையான நேரத்தில் கிடைக்குமாறு செய்தல், வாடிக்கையாளரின் வாங்கும் திறன் மற்றும் வியாபாரப் போட்டி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, பொருட்களின் சேவைகளின் விலைகளை நிர்ணயித்தல், தேவையான சேவையின் மூலம் வாடிக்கையாளரின் மகிழ்ச்சியையும், திருப்தியையும், உறுதி செய்தல் என்பன சந்தைப்படுத்தல் முகாமையாளரின் முக்கிய பணிகளாக இருக்கின்றன.

எனவே ஒரு நிறுவனமானது, தான் தயாரிக்கும் பொருள் அல்லது தான் வழங்கும் சேவையை இப்படித்தான் இன்னதாகத்தான் இருக்க வேண்டும் என்று யோசித்து தயாரிப்புச் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் நடவடிக்கைகளிலிருந்து அதை இலாபகரமாகத் தயாரித்து சந்தைக்கு எடுத்து வந்து, நுகர்வோரின் விருப்பு வெறுப்புகளிற்கேற்ப அவர்களுக்கு அளிப்பதை சந்தைப்படுத்தல் எனலாம். சந்தைப்படுத்தல் வெற்றிகரமாக அமையாவிட்டால் நிறுவனத்தை வெற்றிகரமாக இயக்க முடியாது.

எல்லாக் காலத்திலும் எல்லாப் பொருட்களையும் சந்தைப்படுத்தமுடியாது. காலத்துக்குப் பொருத்தமான பொருட்களைச் சந்தைப்படுத்துவது மிகவும் முக்கியமானது என்பதை சந்தைபடுத்தல் முகாமையாளர் உணர்ந்து கொள்ள வேண்டும். அதாவது, காலத்துக்கும் களத்துக்கும் நேரத்துக்கும் பொருத்தமான பொருட்களையும் சேவைகளையும் வழங்க வேண்டும். அப்போதுதான் விற்பனை இலக்குகளை இலகுவாக அடைந்து நிறுவனத்தை இலாபகர மானதாக மாற்றமுடியும். உதாரணமாகக் கோடை காலத்தில் மழை அங்கிகளை விற்கமுடியாது.

அதேபோல மாரி காலத்தில் இளநீர் விற்கமுடியாது. அப்படி முயற்சித்தால் நட்டத்தைத்தான் எதிர் கொள்ள வேண்டும். இக்கருத்துகளை கீழ் வரும் ஈரடியில் திருவள்ளுவர் சிறப்பாக விளக்குகின்றார்.



**"பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்**
**தீராமை ஆர்க்குங் கயிறு". ( குறள் 482)**

காலத்தோடுப் பொருந்துமாறு ஆராய்ந்து காரியம் ஆற்றுவது நிரந்தரமாக நில்லாத இயல்பு உடைய செல்வத்தை நீங்காமல் நிற்குமாறு கட்டும் கயிறு போலாகும் என்கிறார் திருவள்ளுவர். எனவே நிறுவனமொன்றின் சந்தைப்படுத்தும் முகாமையாளர் காலத்துக்கு ஏற்ற வகையில் காலத்தோடு ஒட்டிய வகையில் தனது நிறுவனப் பொருட்களை சந்தைப்படுத்த முயல வேண்டும். அப்போதுதான் அவரது நிறுவனம் வியாபாரத்தில் வெற்றிகரமாக இருக்க முடியும். காலம் கருதிச் செய்யும் தொழில் வெற்றியைத் தரும் என்பதனை திருவள்ளுவர் இங்கு அறிவுறுத்துகின்றார். "ஆடிப்பட்டம் தேடி விதை", "பருவத்தே பயிர் செய்" என்ற பழமொழிகளும் இதனையே கூறுகின்றன. குறிப்பிட்ட பொருத்தமான பருவத்தில் விதைக்கப்படும் விதைகளே செழுமையாக வளர்ந்து சிறப்பான பயன்களைக் கொடுக்கின்றன. அதேபோன்றுதான் காலத்திற்கு ஏற்ப சந்தைப்படுத்தல் செய்யும் போது அது நிறுவனத்துக்கு நிறைந்த இலாபத்தினைத் தரும் என்பதனைச் சந்தைப்படுத்தல் முகாமையாளர் புரிந்து நடக்க வேண்டும் என்பது திருவள்ளுவரின் நோக்கமாகும்.

அதேபோன்று பொருட்களை விற்பதற்கு அல்லது சந்தைப்படுத்துவதற்கு பொருத்தமான காலம் இல்லாதபோது அப் பொருட்களைச் சந்தைப் படுத்த முயல்வது தற்கொலைக்கு ஒப்பானது. எனவே பொருத்தமான காலம் வரும் வரையும் பொருட்களைச் சேமித்து வைத்துக் காத்திருந்து சந்தைப்படுத்த வேண்டும் . இக்கருத்துக்களைக் கீழ் வரும் ஈரடியில் திருவள்ளுவர் சிறப்பாக விளக்குகின்றார்.

**"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்**
**குத்தொக்க சீர்த்த இடத்து". ( குறள் 490)**

பொறுத்திருக்க வேண்டிய காலத்தில் கொக்கைப் போல் அமைதியாக இருக்க வேண்டும். செயற்படும் காலம் வந்தபோது எவ்வாறு கொக்கு அதன் குத்து தவறாமல் தன் இரையைக் குத்திப் பிடிகின்றதோ அவ்வாறே ஒருவர் காரியங்களை தவறாமல் பிழையின்றிச் செய்து முடிக்க வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். அதாவது வாய்ப்பு ஒடுங்கிய காலத்தில் கொக்கைப் போல அமைதியாக இருந்து காலம் வாய்க்கும் போது கொக்கு மீனைக் கொத்துவது போல சந்தைப்படுத்தல் முகாமையாளர் விரைந்து செய்து முடிக்க வேண்டும். இக்குறள் ஒரு செயலினை செய்து முடிப்பதற்குத் தகுந்த காலத்துக்காக எவ்விதம் காத்திருக்க வேண்டும் என்பதையும் வாய்ப்பு நெருங்கியவுடன் எவ்வாறு விரைந்து செயலாற்ற வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றது. கொக்கு தன் இரைக்காக நீர்ப்பகுதிகளில் காத்திருக்கும்போது உள் ஒடுங்கி வாய்ப்பான வேளைக் காகப் பொறுமையாகவும் அதேவேளை, மனதளவில் பெரிய ஆயத்தநிலையுடனும் விழிப்புடனும் ஒற்றைகாலில் காத்திருக்கும்.

அதுபோல் சந்தைப்படுத்தல் முகாமையாளர், பொருட்களைச் சந்தைப் படுத்துவதற்குரிய காலத்துக்காகக் காத்திருக்கும்போது அமைதியாக, ஆனால் விழிப்புடன் காத்திருக்க வேண்டும். தான் எண்ணிக்கொண்டிருந்த பெரியமீன் தென்பட்டவுடன் கொக்கு சிலிர்த்தெழுந்து அதைச் செங்குத்தாகக் குறி தவறாமல் குத்தி அதைத் தப்பவிடாமல் வாடியிருந்த கொக்கா இவ்வாறு குத்தியது என்று வியக்கும் வகையில் கவ்விக் கொள்ளும். ஓடுகிற மீனின் வேகத்தைத் துல்லியமாகக் கணக்கிட்டுப் பாய்ந்து கவ்வுகின்ற கொக்கு வழுக்கி விழுந்து ஓடக்கூடிய மீனைத் தப்பவிடாத அளவுக்குத் தனது அலகினால் பிடித்துக்கொள்ளும். அதே போன்று தனது நிறுவனத்தின் பொருட்களைச் சந்தைப்படுத்தப் பொருத்தமான வேளை வந்ததும், சந்தைப்படுத்தல் முகாமையாளர் அந்தச் சந்தர்ப்பத்தை இறுகப் பற்றிப் பிடித்து பொருட்களை வெற்றிகரமாகச் சந்தைப்படுத்த வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். அதாவது காலம் கனியும் வரை பொறுமையுடன் காத்திருக்க வேண்டும், கனிந்தவுடன் விரைந்து மின்னல் வேகத்தில் செயல்பட்டு செயலாற்ற வேண்டும், அதேவேளை குறிக்கோளை அடையப் பொறுமையுடன் காத்திருக்கும்போது நம் கவனம் சிதறி விடக்கூடாது என்ற செய்திகளைத் திருவள்ளுவர் சந்தைப்படுத்தல் முகாமையாளருக்குக் கூறுகின்றார்.

காலம், நேரம், பருவம் மாத்திரம் அல்ல பிரதேசங்களில் நிலவும் தட்ப வெப்ப சூழ்நிலைகளும் எவ்வாறான பொருட்களைச் சந்தைப்படுத்த முடியும் என்பதைத் தீர்மானிக்கும், என்பதனைச் சந்தைப் படுத்தல் முகாமையாளர் உணர்ந்து கொள்ள வேண்டும். எல்லாப் பொருட்களையும் எல்லா இடங்களிலும் சந்தைப்படுத்த முடியாது என்ற உண்மையைச், சந்தைப்படுத்தல் முகாமையாளர் உணர வேண்டும். உதாரணமாக வெப்பமான இலங்கையின் வட பகுதியில் கம்பளி உடைகளை இலகுவில் சந்தைப்படுத்த முடியாது, அதேபோல் குளிர் பிரதேசமான மலையகப் பகுதிகளில் இலகுவாகப் பருத்தி ஆடைகளைச் சந்தைப்படுத்த முடியாது. இக்கருத்துகளை திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடிகளில் விளக்குகின்றார்.

**"கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்**
**நாவாயும் ஓடா நிலத்து". (குறள் 496)**

அதாவது வலிய சக்கரங்களையுடைய பெரிய தேர்கள் கடலில் ஓடமுடியாது. அதேபோல் கடலில் ஓடுகின்ற கப்பல்களும் நிலத்தில் ஓடமுடியாது என்கிறார் திருவள்ளுவர். வலிமையான சக்கரங்களைக் கொண்டிருக்கும் தேர்கள் நிலப்பரப்பில் நன்றாக ஓடும். ஆனால் அதே தேர்கள் கடற்பரப்பில் ஒன்றும் செய்யமுடியாமல் முடங்கிவிடும். அதுபோல வலிய சக்கரங்கள் இல்லாமல் ஆழ்கடலில் வெகுதொலைவு செல்லக்கூடிய தோணிகள் நிலத்தில் இயங்க முடியாது. கடலில் மிதக்கக்கூடிய தன்மையோ கடலில் ஓடவைக்கக் கூடிய கருவிகளோ தேருக்கு இல்லை. அதுபோல கப்பல் கடலில் மிதக்கும் ஆற்றல் உடையது. ஆனால் தரையில் ஓடவைக்கக்கூடிய கருவிகள் கப்பலில் இல்லையாதலால், தரையில் அந்தக் கப்பலால் அசைந்து இயங்க முடியாது. எனவே இங்கு இடமறிந்து அதற்கேற்ற கருவிகளின் உதவிகொண்டு வெற்றி காணலாம் என்று திருவள்ளுவர் கூறுவதன் மூலம் சந்தைப்படுத்தல் முகாமையாளர் சந்தைப்படுத்தும்போது இடத்தினையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகின்றார்.

(தொடரும்)

---

## பாரம்பரியம் நிகழ்ச்சியில்

# சோனக இஸ்லாமிய கலாசார நிலைய பங்களிப்பு





முஸ்லிம் சேவைக்கு வளம் சேர்த்து புகழ்சேர்த்தோர் வரிசையில் மூத்த உலமாக்கள், எழுத்தாளர்கள், கலைஞர்களை அடையாளப்படுத்தி வந்த பாரம்பரியம் தொடர் நிகழ்ச்சி, இம்முறை, சேர். ராஸிக் பரீத் இனதும், இன்னும் அவர் ஸ்தாபித்த "சோனக இஸ்லாமிய கலாசார நிலையம்" அமைப்பின் ஊடாகவும் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையின் வளர்ச்சிக்கு ஆரம்ப காலத்தில் வழங்கிய பங்களிப்புகளின் நினைவுகளும் பரிமாறப்பட இருக்கின்றன.

இந்நிகழ்ச்சி எதிர்வரும் 15ஆம் திகதி (15.08.2023) செவ்வாய் இரவு 8.15 மணிக்கு இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாக இருக்கிறது.

இது பற்றிய தகவல்களை இலங்கை வானொலி அறிவிப்பாளரும், முஸ்லிம் சேவையின் சிரேஷ்ட கலைஞரும், வானொலி நாடக எழுத்தாளருமான கலாநிதி எம்.சீ.ரஸ்மின் நேயர்களோடு பகிர்ந்து கொள்கிறார்.

நிகழ்ச்சியை முஸ்லிம் சேவை பணிப்பாளர் எம்.ஜே.பாத்திமா ரினூஷியா தயாரித்தளிக்க, எம்.எஸ்.எம். ஜின்னா தொகுத்தளிக்கிறார்.

சுகந்தி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 75

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | |
| | 06 | | 07 | | 08 |
| 09 | 10 | | 11 | | 12 |
| 13 | | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | | 21 | |
| | | 22 | 23 | 24 | |

பெயர் ..........................................
வகுப்பு ..........................................
தொலைபேசி இல ..........................................
பாடசாலை பெயர் ..........................................
வதிவிட முகவரி ..........................................
..........................................
.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) உலகெங்கும் ஏராளமான மக்களால் விரும்பப்படுகின்ற சர்வதேச விளையாட்டு இது. மாணவர்களாகிய உங்களுக்கும் இவ்விளையாட்டு மிகவும் பிடிக்கும்.
(9) இலட்சத்தின் நூறு மடங்கு. (தலைகீழான சொல்)
(14) புவியின் உபகோளான சந்திரனுக்கு பல்வேறு பெயர்கள் உள்ளன. அப்பெயர்களில் ஒன்று இது. (தலைகீழான சொல்)
(18) காணியின் எல்லையாக சுற்றிவர நிர்மாணிக்கப்படுவது.
(22) கடல், ஆறு போன்றவற்றில் பயணம் செய்வதற்கான போக்குவரத்துச் சாதனம்.

**மேலிருந்து கீழ்**

(2) மரங்களைத் தறிப்பதற்கும், விறகு வெட்டுவதற்குமான கூரிய உபகரணம். (தலைகீழான சொல்)
(4) அறுசுவைகளில் ஒன்று இது. ஆனால் வாயில் வைத்தால் எவருக்குமே பிடிக்காத சுவை இது. இந்தச் சுவை கொண்ட காய்கறியொன்றும் (கொடியில் காய்ப்பது) உள்ளது.
(8) பூவின் இதழை இவ்வாறு கூறலாம். இப்பெயரில் நீர்நிலைத் தாவரமொன்றும் உள்ளது. (தலைகீழான சொல்)
(9) பாம்பாட்டியின் கையில் இருப்பது. இது துளையிசைக் கருவி. (தலைகீழான சொல்)
(14) அழுத்தமான சுவரில் கூட கீழே விழுந்துவிடாமல் பற்றிப்பிடித்தவாறு நகர்ந்து திரியும் பிராணி. இரவு நேரத்தில் உங்கள் வீட்டுச்சுவரிலும் சிறுபூச்சிகளைப் பிடித்துண்பதற்காக நடமாடுகின்ற இப்பிராணியைக் காணலாம். (தலைகீழான சொல்)
(16) கிராமங்களில் நீரைச் சேமித்து வைப்பதற்காகப் பயன்படுத்துகின்ற பாத்திரம். முன்னரெல்லாம் களிமண் பாத்திரங்களைப் பயன்படுத்தினார்கள். தற்போது அலுமினியம், பிளாஸ்டிக் போன்ற பாத்திரங்களும் பாவனைக்கு வந்துவிட்டன. (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 74

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. கல்லூரி 07. மாதுளை 10. தென்னை
17. பாதணி 20. சுவர்

**மேலிருந்து கீழ்**

02. இன்னல் 04. மாரி 05. கிளை 08. துளி
15. தரு 16. சுறா 17. பார் 19. தோணி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 73

### பாராட்டு பெறுவோர்

**1. எம். அப்லல் அஹமத்**
தரம் 05, நாங்கல்ல மு.ம. வித்தியாலயம்,
இல. 337, மங்கெதர, துல்ஹிரிய.

**2. ப. தையிபா**
தரம் 08, பா.மு.ம. கல்லூரி,
இல. 34, டி வாஸ் ஒழுங்கை, கிறேன்பாஸ், கொ- 14.

**3. பஹ்மா ருஷ்டி**
தரம் 09A, பென்ஹில் கல்லூரி,
இல. 12/22A, இளவத்துறை, கம்பளை.

**4. வண. எம். ஆர்யசாந்த**
தரம் 05, தர்மபால பிரிவென,
பெல்லன, அகலவத்தை.

**5. சு. ஜகஸ்வனி**
தரம் 09A, தி/தி கமைகள் ம.வித்தியாலயம்,
இல. 975, அம்பாள் வீதி, அன்புவழிப்புரம்,
திருகோணமலை.

**6. சமீம் அஜிமுசான் அகமட்**
தரம் 11, பபிள்ஸ் தேசிய பாடசாலை,
அக்கரைப்பற்று 02.

**8. எம்.எம்.எம். அப்ராஸ்**
தரம் 05, மா/சாஹிரா தேசிய கல்லூரி, மாத்தளை,
இல. 37, கண்டி வீதி, வறக்காமுறை, உக்குவளை.

**09. நவாப் பாத்திமா ரிப்தியா**
தரம் 06, அல் அமான் மு.ம. வித்தியாலயம்,
கல்லொலுவ, மினுவாங்கொடை.

**10. ஹப்சா முஜீப்**
தரம் 11, மீகஹமுல்ல, அட்டுலுகம,
பண்டாரகம.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 75
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



**இனியவை கூறல்: இன்சொலால் ஈரம் அளைஇப்**
**படிறிலவாம் செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்**

**தெளிவுரை :**
அன்பு கலந்து வஞ்சம் அற்றவைகளாகிய சொற்கள், மெய்ப்பொருள் கண்டவர்களின் வாய்ச்சொற்கள் இன்சொற்களாகும்.

# இவ்வார மழலை




**சதீஸ் குமார் / சிந்துஜா**
கொட்டாஞ்சேனை

# சீன பழமொழிகள்

1. இதயத்தில் பெருந்தன்மை இருந்தால், அது நற்பண்புகளை அழகாக பிரகாசிக்கும்.
2. புலியின் மீது சவாரி செய்தால் இறங்குவது கடினம்.
3. அறிவைத் தந்தையாகவும், மன நிறைவை தாயாகவும் போற்றுங்கள்.
தீர்மானமுள்ள மனிதன் துன்பத்தைப் பொருட்படுத்த மாட்டான்.
5. தீர்மானமாக இரு. காரியமாகி விட்டது.
6. புன்னகை செய்யத் தெரியாத ஒருவன் வணிகத்தில் கால் வைக்கக்கூடாது.
7.
றொட்டியின் படத்தை வரைந்து பசியைத் தீர்க்க முடியாது.
8. தாகம் எடுக்கும்வரை கிணறு தோண்டுவதை ஒத்திப் போடக்கூடாது.
9. குன்றின் உச்சியில் ஏறாவிட்டால் பசுமையான சமவெளியை ரசிக்க இயலாது.
10. அறிவுள்ள மனிதன் குறைவாக பேசுகிறான், அதிகம் கேட்கிறான்.
11. நற்பண்புகளில் அழகு இருந்தால், அது இல்லத்தில் இணக்கமுடன் வாழத் தூண்டும்.
12. நாயின் வாயில் யானைத் தந்தம் இருக்காது.
13. சேற்றில் ஓரடி வைப்பதைவிட, பத்தடி சுற்றிச் செல்வது மேல்.
14. பசித்தவனுக்கு மீனை உண்ணக் கொடுப்பதை விட மீன் பிடிக்கக் கற்றுக்கொடுப்பதே சிறந்தது.
15. பெண்களால் சதா சிரித்துக்கொண்டு இருக்க முடியாது. ஆனால் அவர்களால் நினைத்தவுடன் அழுவதற்கு முடியும்.

துவாரகன்...



# வாசிப்போம்!



வாசிப்பு ஒருவனைப் பூரணமாக்கும்
ஆங்கில அறிஞனின் கூற்று இதுவாகும்.
வாசிப்பினால் மனிதன் அறிவைப் பெருகச் செய்வான்.
வாசிப்பினால் நாம் நிறையப் பயன் பெறுவோம்!

நூல்களை வாசிக்க நாம் முனைந்து நின்றால்
நுண்ணறிவு பெற வழியாக அமைந்திடும்.
நூல் நிலையங்களில் நூல்களைப் பெறலாம்.
நூல்கள் வாங்கப் பணம் இன்றேல் இம்முறை ஏற்புடைத்தே!

பத்திரிகைகளும் நூல் நிலையங்களில் உண்டே.
படிப்புக்குரியனவும் பத்திரிகையில் வெளிவரும்.
பாங்காக நாம் அவற்றை வாசித்திடுவோம்!
பரீட்சைக்கும் அவை கை கொடுத்துதவுமாம்.

கீழ் வகுப்பு முதல் மேல் வகுப்பு வரை
கிறுக்கித் தொட்ட பின் தேவையானவற்றை
தேடி அறிந்து வாசித்தல் முக்கியமாகும்.
தகைமை தனைக் கூட்டியே இவ் வழியில் முயல்வோம்.

வெலிப்பன்னை அத்தாஸ்...

# காலத்தின் அருமையை அறிவோம்

விஜயபுரி என்ற நாட்டை விவேகவர்மன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் அரசவையில் நன்கு கற்றறிந்த அறிஞர்கள் இருந்தனர்.

அரசன் ஒரு நாள் அந்த அறிஞர்களை பார்த்து, "அறிஞர் பெருமக்களே வாழ்க்கையில் மிகவும் மதிப்பு வாய்ந்த பொருள் எது?" என்று கேட்டான்.

இந்த கேள்வியை கேட்டதும், முதல் அறிஞர், "வாழ்க்கையில் மிகவும் மதிப்பு வாய்ந்த பொருள் உயிர்தான். உயிரில்லை என்றால் நம் வாழ்க்கையில் ஒன்றும் அனுபவிக்க முடியாது" என்றான்.

இரண்டாவது அறிஞர், "மன்னா, வாழ்க்கையில் மிகவும் மதிப்பு வாய்ந்தது அறிவுதான். அறிவில்லாமல் ஒருவரும் வாழ முடியாது" என்று பதிலளித்தார்.

மூன்றாவது அறிஞர் எழுந்து, "அரசே, வாழ்க்கையில் பொறுமை இன்றி நாம் ஒருகணம் கூட வாழ முடியாது. எனவே மிகவும் விலை உயர்ந்தது பொறுமை தான்" என்று பதில் அளித்தார்.

நான்காவது அறிஞர், "வாழ்க்கையில் அனைத்தும் இருந்து அன்பு இல்லாவிட்டால் மனிதன் வாழ்ந்து ஒரு பயனும் இல்லை. எனவே அன்பு தான் மிக மதிப்பு வாய்ந்தது" என்றார். இறுதியாக ஓர் அறிஞர் எழுந்து, "அரசே, காலம் தான் அனைத்தையும் விட மிக மிக மதிப்பு வாய்ந்த பொருள். நமக்கு காலம் இல்லையானால் உயிர் இருந்து என்ன பயன்? அறிவை பயன்படுத்த நமக்கு நேரம் எது? பொறுமையாக இருக்க ஏது அவகாசம். அன்பு காட்டை ஏது வாய்ப்பு? எனவே உலகிலேயே மிகவும் மதிப்பு வாய்ந்த பொருள் காலம்தான்".

ஆகவே, அதனை வீணாக்காமல் நம்முடைய ஆக்க பணிகளுக்கு எந்தெந்த வகையில் எல்லாம் அதனை பயன்படுத்திக் கொள்ள முடியுமோ? அந்தந்த வகையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்" என்றார்.

அரசர் அந்த ஐந்தாவது அறிஞர் கூறிய கருத்துதான் சிறந்தது என்று பாராட்டி அந்த கருத்தை ஏற்றுக் கொண்டார். காலத்தின் அருமையை குறித்து மிகவும் அழகாக விளக்கிய அவ் அறிஞருக்கு அவர் மனம் விரும்பும் வகையில் எண்ணற்ற பரிசுகளை கொடுத்து பாராட்டினார்.

அது மட்டுமல்ல அவரை தனது அமைச்சராக நியமித்து கௌரவப்படுத்தினார். மற்ற நான்கு அறிஞர்களும் அரசரின் செயலை பாராட்டினர்.

காலம்தான் இவ்வுலகிலே விலைமதிக்க முடியாத பொருள். காலத்தை தவற விட்டவர்கள் வாழ்க்கையில் முன்னேற முடியாது.

## கடினம் என்று நினைக்கும் விடயங்கள் மிகவும் சரளமானது

ஆசிரியரொருவர் கரும்பலகையில் ஒரு கோடு கீறி அக்கோட்டிற்கு எவ்வித மாற்றங்களும் செய்யாமல் அதனை கட்டையாக்குங்கள் என்று மாணவர்களுக்கு கூறினார்.

'அந்த கோட்டில் கை வைக்காமல் எப்படி? அதை கட்டையாக்குவது? என்று மாணவர்கள் வினா எழுப்பினார்கள்.'

அங்கிருந்து ஒரு மாணவன் கரும்பலகைக்கு அருகில் சென்று ஆசிரியர் கீறிய கோட்டுக்கு அருகாமையில் அக்கோட்டை விட நீளமான இன்னொரு கோட்டை கீறினான்.



என்.கே. வேணி...

# கதிர்வீச்சு என்றால் என்ன?



கதிர்வீச்சு என்பது இயற்கையிலேயே இருக்கின்ற ஒரு விடயம் தான். வளிமண்டலம், நிலம், நீர், காற்று மற்றும் சூரிய ஒளியின் புற ஊதா கதிர்வீச்சு என எல்லாவற்றிலும் கதிர்வீச்சு உள்ளது. ஏன் நம் மனித உடலில் கூட தசை, எலும்பு மற்றும் திசுக்களில் இயற்கை கதிர்வீச்சு தனிமங்கள் உள்ளன. நம் உடலில் இருந்து வெளிவரும் வெப்பம் கூட ஒரு வகை கதிர்வீச்சு தான்.

ஆனால், இவை எல்லாம் இயற்கையானவை. அதே சமயம் நாம் கண்டுபிடித்த மருத்துவ சாதனங்கள், தொலைக்காட்சிகள், செல்போன்கள் மற்றும் மைக்ரோவேவ் ஓவன் போன்ற பொருட்கள் மூலம் செயற்கையான கதிர்வீச்சுகளும் வெளிப்படுகின்றன.

கதிர்வீச்சு என்றாலே எப்போதும் ஆபத்தானது அல்ல. ஒரு கதிர்வீச்சு மனிதர்களுக்கு ஆபத்தானதா என்பது அந்த கதிர்வீச்சின் வலிமை, வகை மற்றும் வெளிப்படும் நீளம் ஆகியவற்றைப் பொறுத்தது.

கதிர்வீச்சு என்பது அலை வடிவில் இருக்கும் ஒரு ஆற்றல். நிலையற்ற ஒரு அணு சிதையும் போது தான் கதிர்வீச்சு ஏற்படும். அதாவது சில இயற்கையான தனிமங்களின் அணுக்கருக்கள் நிலையாக இல்லாமல் சிதையும். அப்போது வெளிவரும் ஆற்றலை கதிர்வீச்சு வடிவத்தில் அவை வெளியிடுகின்றன. இந்த இயற்பியல் நிகழ்வு தான் கதிரியக்கம் எனப்படுகிறது.

கதிர்வீச்சு ஆங்கிலத்தில் *Radiation* எனப்படுகிறது. கதிரியக்கம் ஆங்கிலத்தில் *Radioactivity, Radioactive Decay, Nuclear decay* எனவும் குறிப்பிடப்படுகிறது.

# கண்டுபிடிப்பாளர்கள்

# ரைட் சகோதரர்கள்



வானில் பறந்து கொண்டிருந்த பறவையை வைத்து தான் மனிதன் விமானத்தை படைத்தான். பறவை வானில் பறக்கும் போது இவ்வளவு அழகாய் இருக்கிறதே, நாமும் இது போல் வானில் பறந்தால் எவ்வளவு அழகாய் இருக்கும் என்று நினைத்து, பல ஆண்டு காலம் உறுதியோடு உழைத்து தங்கள் உயிரையும் பணயம் வைத்து விமானத்தை உருவாக்கியவர்கள் தான் இந்த ரைட் சகோதரர்கள்.

உலகில் எந்த இடத்திற்கும் நினைத்தவுடன் சென்று வர முக்கிய காரணமாக இருப்பது ரைட் சகோதரர்கள் அன்று கண்ட கனவும், சிந்திய ஒவ்வொரு துளி வேர்வையும் தான் என்றே சொல்லலாம்.

1903ஆம் ஆண்டு தயாரித்த ஒரு கிளைடரில் தாங்களே உருவாக்கிய ஒரு மோட்டார் இயந்திரத்தைப் பொருத்தினர். அதில் விமானி குப்புறபடுத்துக் கொண்டே தன் கை, கால்களால் இயக்கி அதனை பறக்கச் செய்ய வேண்டும்.

1903 ஆம் ஆண்டு டிசம்பர் 14ஆம் திகதி, முதல் வெள்ளோட்டத்திற்கு தயாராக நின்றது ஃப்ளையர் என்று அவர்களால் பெயர் சூட்டப்பட்ட அந்த விமானம். யார் அந்த விமானத்தை இயக்குவது என்ற குழப்பத்தில் நாணயத்தை சுண்டிப் பார்த்ததில் வில்பருக்கு வாய்ப்பு கிடைத்தது. விமானத்தைக் கிளப்ப முயன்றார் வில்பர், ஆனால் ஏதோ இயந்திரக் கோளாறு காரணமாக விமானம் அந்த இடத்திலிருந்து நகரவே இல்லை. அப்போதே ரைட் சகோதரர்கள் மனம் தளர்ந்து போயிருந்தால் நமக்கு விமானம் கிடைக்காமல் போயிருக்கும். அடுத்த மூன்று நாட்கள் சிந்தித்து மேலும் சில மாற்றங்களை செய்தனர்.

இம்முறை நாணயத்தை சுண்டிப்பார்த்ததில் ஆர்விலுக்கு அதிர்ஷ்ட வாய்ப்பு கிடைத்தது. விமானத்தில் குப்புறபடுத்துக்கொண்டு அமெரிக்க நேரப்படி காலை 10:35 க்கு விசையை இழுத்தார் ஆர்வில். அந்த இயந்திர விமானம் ஆடி குலுங்கி, புகையைக் கக்கியபடியே மெதுவாக மேலே போக தொடங்கியது.

அந்தரத்தில் அப்படியும் இப்படியுமாக ஆடி சரியாக 12 வினாடிகள் பறந்து 37 மீற்றருக்கு அப்பால் போய் பத்திரமாக தரையிறங்கியது. வெற்றி சந்தோஷத்தில் ரைட் சகோதரர்கள் மிதந்தார்கள். அவர்கள் பல நாட்கள் சிந்திய வியர்வைக்கு கடைசியில் பலன் கிட்டியது.

அன்றைய தினமே மேலும் மூன்று முறை ரைட் சகோதரர்கள் மாறி மாறி வானில் பறந்து சோதனைகள் செய்து வந்தார்கள். நான்காவது முறை வில்பர் 57 வினாடிகள் அந்தரத்தில் பறந்தார். அதற்கு அடுத்த ஆண்டே ரைட் சகோதரர்கள் நூறு அடி உயரம் வரை சென்று பன்னிரெண்டு மைல்கள் பறந்து சாதனை படைத்தனர்.

தொடர்ந்து பல முன்னேற்றங்களை செய்து 1908 ஆம் ஆண்டு 57 நிமிடங்கள் ஆகாயத்தில் பறந்து சாதனை படைத்தார் ஆர்வில். ரைட் சகோதரர்கள் முதன் முதலில் பயணம் செய்து வந்த அந்த விமானத்தை வொஷிங்டனில் உள்ள தேசிய வான்வெளி அருங்காட்சியகத்தில் இன்றும் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

இவர்கள் கண்ட கனவை விடாமுயற்சியுடன் மேற்கொண்டதால் தான் இன்று நாம் எந்த மூளைக்கும் சென்று வர விமான சேவை கிடைத்துள்ளது. இவர்களை பார்த்து உலகமே முட்டாள்கள், வானில் பறக்க போகிறார்களாம் என்று கேலியும் கிண்டலும் செய்தார்கள். எந்த கஷ்டத்திலும் தளர்வு இல்லாமல் முயற்சித்துக்கொண்டே இருந்தால் ஒவ்வொரு மனிதனும் கண்டிப்பாக சாதனையாளன் தான்.

இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த இந்த ரைட் சகோதரர்களாகிய வில்பர் ரைட் என்பவர் 1912ஆம் ஆண்டு மே மாதம் 30ஆம் திகதியும், ஆர்வில் ரைட் 1948ஆம் ஆண்டு ஜனவரி 30ஆம் திகதியும் இவ்வுலகை விட்டு பிரிந்து சென்றனர்.



விளையாட்டு

# விடைபெற்றார் தர்ஜினி

தர்ஜினி சிவலிங்கம் சர்வதேச வலைப்பந்து போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றது திடீர் அறிவிப்பாக இருந்தாலும் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றே. ஜீனி என்று செல்லமாக அழைக்கப்படும் 44 வயதாகும் தர்ஜினி ஓய்வு பெறும் வயதுதான். ஆனால், அவர் விடைபெற்ற தருணம் மற்றும் அவர் விடைகொடுத்த விதம் பெரிதாக ஏற்கும்படியாக இல்லை.

தென்னாபிக்காவில் அண்மையில் நிறைவடைந்த வலைப்பந்தாட்ட உலகக் கிண்ணத்தில் இலங்கை அணி பெரிதாக சாதிக்கவில்லை. ஆரம்ப சுற்றின் அனைத்து போட்டிகளிலும் மோசமாகத் தோற்று பின்னர் ஆசிய கிண்ணத்தின் இறுதிப் போட்டியில் இலங்கையால் வீழ்த்தப்பட்ட சிங்கப்பூரிடம் இரண்டு தடவைகள் தோற்று தொடரில் கடைசி இடமான 16 ஆவது இடத்தையே பெற்றது.

உலகக் கிண்ணத்தில் ஒரே வெற்றியாக பார்படோஸை மாத்திரம் வீழ்த்தியது ஆறுதல். உலகக் கிண்ணம் முடிந்து இலங்கை அணி நாடு திரும்ப ஒருநாள் இருக்கும்போது ஓய்வை அறிவித்த தர்ஜினி இலங்கை வராமல் அப்படியே அவுஸ்திரேலியாவுக்கு புறப்பட்டுச் சென்றுவிட்டார்.

உலகக் கிண்ணத்தில் இலங்கை அணி மோசமாக ஆடியது ஒருபக்கம் இருக்க தர்ஜினிக்கு இந்தத் தொடரில் அவருக்கான இடம் கிடைக்கவில்லை என்ற குறையும் இருக்கிறது. ஒரு சில போட்டிகளில் அவர் அணியில் சேர்க்கப்படவில்லை என்பதோடு குறைந்தது சிங்கப்பூருக்கு எதிரான 15 ஆவது இடத்தை தீர்மானிக்கும் கடைசி போட்டியிலாவது இணைத்திருக்கலாம்.

அதேபோன்று அவர் ஓய்வு பெறும் தருவாயிலேயே உலகக் கிண்ணத்திற்கான குழாத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார். எனவே, அவருக்கான முறையான பிரியாவிடை ஒன்று இடம்பெற்றதாகவும் தெரியவில்லை.

எப்படி இருந்தபோதும் இலங்கை சர்வதேச அளவில் திறமையை வெளிப்படுத்தும் விளையாட்டுகளில் ஒன்றாக வலைப்பந்தாட்டம் இருக்கிறது. ஆசிய மட்டத்தில் முதல் நிலை அணியாக இலங்கை வலைப்பந்து அணி இருப்பதோடு கிரிக்கெட்டுக்கு அப்பால் இலங்கையில் இருந்து உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெறும் அணி விளையாட்டாக வலைப்பந்தாட்டத்தை குறிப்பிடலாம்.

வலைப்பந்தில் இலங்கை திறமை படைப்பதில் தர்ஜினியின் பங்கும் முக்கியமானது. இலங்கை அணியில் கோல் சூட்டராக செயல்படும் தர்ஜியின் கைக்கு பந்து கிடைத்தால் அதனை வலைக்குள் நுழைக்காமல் விட்டுவிடமாட்டார். ஒரு சூட்டருக்கே உரிய நிதானம், பரபரப்புடன் ஆடும் தர்ஜினியின் உயரம் எல்லாவற்றுக்கும் மேலே அவரை தனித்துக் காட்டுவதாக உள்ளது.

வலைப்பந்து விளையாட்டில் தர்ஜினி சர்வதேச மட்டத்தில் இத்தனை உயரதுக்குச் செல்வதற்கு அவரது உயரம் தான் பிரதான காரணம். ஆனால் அது அவருக்கு எப்போது சௌகரியமாக இருந்ததாகவும் குறிப்பிட முடியாது.

1978 ஆம் ஆண்டு ஆறு குழந்தைகள் கொண்ட குடும்பத்தில் ஐந்தாமவராகவே தர்ஜினி பிறந்தார். யாழ்ப்பாணத்தில் அப்போது போர் சூழல் இருந்ததால் பிறப்பு முதலே அதன் வேதனைகளை எல்லோரையும் போல் தர்ஜினியும் அனுபவித்தார்.

விசாலா மத்திய கல்லூரியில் கற்ற காலம் தொடக்கமே தனது உயரத்தால் தர்ஜினி வித்தியாசமாக பார்க்கப்பட்டார். அதனால் நையாண்டிகளுக்கும் முகம்கொடுத்தார்.

"உயர்தரம் படித்துக்கொண்டிருந்தபோது பாடசாலையில் நான்தான் உயரமானவர். எமது அதிபர் 6 அடி 1 அங்குலம், நான் அவரை விடவும் உயரமாக 6 அடி 2 அங்குலமாக இருந்தேன். உயரம் ஆரம்பத்தில் சங்கடமாக இருந்தது. குறிப்பாக சிலரது கருத்துகள், நையாண்டிகள் அப்படியான நிலையை ஏற்படுத்தியது. ஆனால் இப்போது சௌகரியமாக உணர்கிறேன்" என்று ஊடகம் ஒன்றுக்கு பேட்டியளித்தபோது தர்ஜினி கூறுகிறார்.

இத்தனைக்கும் தர்ஜினியின் குடும்பத்தில் மற்றவர்கள் கூறும்படி உயரமானவர்கள் அல்ல. எனவே அவரது உயரம் மரபணு வழியில் வந்தது என்றும் கூறுவிட முடியாது. ஏன் அப்படி என்று கேட்டால் 'கடவுளின் செயல்' என்கிறார். 22 வயதிலேயே தான் வளர்வது நின்றது என்கிறார். அப்போது அவரது உயரம் 6 அடி 10 அங்குலம்.

கடைசியில் தர்ஜினிக்கு சங்கடமாக இருந்த உயரம் தான் வாழ்வில் முன்னேற அவருக்கு உதவியது. உண்மையில் தர்ஜினி சிறு வயதில் இருந்து வலைப்பந்து ஆடி தேசிய மட்டத்திற்கு முன்னேறியவர் என்று குறிப்பிட முடியாது. பாடசாலை காலத்தில் வலைப்பந்து ஆடுவது பற்றி பெரிதாக எண்ணம் அவரிடம் இருக்கவில்லை. விளையாட்டு என்று கூறுவதற்கு உயரம் பாய்தலில் பங்கேற்றிருக்கிறார்.

மற்றபடி கற்று பல்லைக்கழக விரிவுரையாளராக வேண்டும் என்பதே அவரது ஆசை. அதற்கு ஏற்ப அவர் பல்கலைக்கழகமும் சென்றார். கிழக்கு பல்கலைக்கழகம் சென்ற பின்னரே அவருக்கு வலைப்பந்து பற்றி அறிமுகம் கிடைக்கிறது.

2004 ஆம் ஆண்டு தெருவில் நடந்துகொண்டிருக்கும்போதே தர்ஜினியை முதலில் அவதானித்தாக இலங்கை வலைப்பந்து அணியின் முன்னாள் பயிற்சியாளர் ஹயசின்த் விஜேசிங்க கூறுகிறார். "அன்று அவர் உள்ளூர் வலைப்பந்து போட்டி ஒன்றில் ஆடிக்கொண்டிருந்தார். வெறுங்காலுடன் நீண்ட பாவடை அணிந்து முன்னர் விளையாடி அனுபவம் இல்லாதபோதும் அவர் போட்டியில் முழு ஆதிக்கத்தையும் தன்னகத்தே வைத்திருந்தார்.

அவரை கண்டது எமக்கு பெரும் உற்சாகத்தை தந்தது. அவரது உயரத்தில் ஒரு வீராங்கனை இருப்பது எந்த ஒரு அணிக்கும் உற்சாகத்தை தரும் ஒன்று" என்கிறார் விஜேசிங்க.

வவுனியாவில் 2004 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மட்டத்திலான வலைப்பந்து போட்டியில் தர்ஜினியின் ஆட்டத் திறமையை பார்த்த அப்போதைய முதல் பெண்மணி ஷிரந்தி ராஜபக்ஷ தேசிய அணியில் இணைவதற்கு தர்ஜினிக்கு அழைப்பு விடுத்தார். என்றாலும் அவரை அப்போது தடுத்த ஒரே காரணமாக மொழி இருந்தது. சிங்கள மொழி சரளமாக வராததால் அவர் சற்று தயக்கம் காட்டினார்.

இதனால் அவர் தேசிய அணிக்கு தெரிவாவதற்கு இன்னும் ஐந்து ஆண்டுகள் காத்திருக்க வேண்டி ஏற்பட்டது. 2009 ஆம் ஆண்டு இலங்கை தேசிய அணிக்கு முதல் முறை தர்ஜினி அழைக்கப்பட்டார். அது தொடக்கம் அவர் இலங்கை அணியில் இன்றியமையாத வீராங்கனையாக மாறிவிட்டார். அந்த ஆண்டு மலேசியாவில் நடத்த ஆசிய வலைப்பந்து சம்பியன்சிப் போட்டியில் இலங்கை சம்பியனானதோடு அந்த அணியில் தர்ஜினியும் இடம் பெற்றிருந்தார்.

தொடர்ந்து இலங்கை வலைப்பந்து அணி ஆசிய மட்டத்தில் அடுத்தடுத்து சாதனைகள் புரிந்தபோது தர்ஜினி அணியில் இன்றியமையாத வீராங்கனையானார். 2011 உலகக் கிண்ண வலைப்பந்தில் இலங்கை அணி ஆரம்ப சுற்றிலேயே சம்பியன் வாய்ப்பை இழந்து வெளியேறிய போதும் தர்ஜினியின் திறமை மாத்திரம் குறைவின்றி இருந்தது. மொத்தம் 290 கோல்களை பெற்ற அவர் சிறந்த சூட்டர் விருதை வென்றார்.

என்றாலும் வலைப்பந்து நிர்வாகம் மற்றும் பயிற்சியாளருடனான பிரச்சினைக்கு மத்தியில் தர்ஜினி தேசிய அணியில் இருந்து நீக்கப்பட்டார். நான்கு ஆண்டுகள் தேசிய அணியில் இடம்பெறத் தவறிய அவர் 2018 ஆம் ஆண்டே மீண்டும் அணிக்கு அழைக்கப்பட்டார். தர்ஜினியை வளர்த்துவிட்ட திலகா ஜினதாச இலங்கை அணியின் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டதை அடுத்தே தர்ஜினி மீண்டும் திரும்பிப் பார்க்கப்பட்டார்.

என்றாலும் அதற்குள் தர்ஜினி தனது வலைப்பந்தாட்ட வாழ்வின் உச்சத்தையே தொட்டுவிட்டார். அதாவது இலங்கையின் முதலாவது தொழில்சார் வலைப்பந்து வீராங்கனையாக அவர் முன்னேறி இருந்தார். அதுவும் வெளிநாட்டு கழகம் ஒன்றுக்கு ஆடும் வாய்ப்பு இதற்கு முன் வேறு யாருக்கும் கிடைத்திருக்கவில்லை. அவுஸ்திரேலியாவின் சிட்டி வெஸ்ட் பல்கோன்ஸ் கழகத்திற்காக வலைப்பந்து ஆட 2017 ஆம் ஆண்டு தர்ஜினிக்கு அழைப்புக் கிடைத்தது.

அவுஸ்திரேலியா புறப்பட்ட அவர் அங்கும் தனது திறமையை வெளிப்படுத்தினார். அந்த ஆண்டின் சிட்டி வெஸ்ட் பல்கோன்ஸ் கழகத்தின் சிறந்த சூட்டராக அவர் விருது வென்றார்.

பின்னர் இலங்கை திரும்பிய அவர் 2018 ஆம் ஆண்டு சிங்கப்பூரில் நடந்த ஆசிய வலைப்பந்து சம்பியன்சி தொடரில் இலங்கை அணி தோல்வியுறாத அணியாக கிண்ணத்தை வெல்ல உதவினார். இதன் போது தொடரில் சிறந்த வீராங்கனையாகவும் அவர் விருது வென்றார்.

தர்ஜினி இலங்கை வலைப்பந்து விளையாட்டில் யாரும் எட்டாத உச்சத்தை தொட்டவர். அவர் அளவுக்கு, அவர் வயதுக்கு யாரும் வலைப்பந்து ஆடியதில்லை. அது இலங்கைக்கு மாத்திரம் அல்ல ஆசியா தாண்டி சர்வதேச மட்டத்திற்கும் பொருந்தும். அவரது உயரம் கூட யாருடனும் ஒப்பிட முடியாதது. உலகின் உயரமான வலைப்பந்து வீராங்கனை வரிசையிலும் அவர் இருக்கிறார்.

எனவே திறமைக்கு அப்பால் இந்த உயரத்தில் கச்சிதமான வீராங்கனை ஒருவர் கிடைப்பது மிக மிக அரிது. அந்த அரிய வாய்ப்பு இலங்கைக்கு மீண்டும் எப்போது கிடைக்கும் என்பது இப்போது இருக்கும் மிகப் பெரிய கேள்வியாகும்.





எஸ்.பிர்தௌஸ்...

# குறிப்புகள்



## யாரும் தொடாத சாதனை படைத்த பிரோட்

இங்கிலாந்து அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் ஸ்டுவட் பிரோட் கடந்த ஆஷஸ் டெஸ்ட் போட்டியுடன் ஓய்வு பெற்றார். 37 வயதான பிரோட் கடந்த ஜூலை 31 ஆம் திகதி நிறைவடைந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான கடைசி ஆஷஸ் டெஸ்ட் போட்டியில் ஆடியபோது இதுவரை யாரும் நிகழ்த்தாத சாதனை ஒன்றுடனேயே தனது டெஸ்ட் வாழ்வுக்கு விடைகொடுத்திருக்கிறார்.

அதாவது அந்த டெஸ்ட் போட்டியில் அவர் துடுப்பெடுத்தாடிய கடைசி இன்னிங்ஸில் மிட்சல் ஸ்டார்க் வீசிய கடைசி பந்துக்கு சிக்ஸர் விளாசினார். தொடர்ந்து அடுத்த ஓவரில் ஜேம்ஸ் அன்டர்ஸன் ஆட்டமிழக்க இங்கிலாந்து இன்னிங்ஸ் நிறைவுக்கு வந்தது.

அதேபோன்று 384 ஓட்ட வெற்றி இலக்கை நோக்கி இரண்டாவது இன்னிங்ஸை ஆடிய அவுஸ்திரேலிய அணியின் கடைசி விக்கெட்டாக அலெக்ஸ் கெரியின் விக்கெட்டை வீழ்த்தி இங்கிலாந்தின் வெற்றியை உறுதி செய்து தொடரையும் சமன் செய்ய உதவினார் ஸ்டுவட் பிரோட்.

அதாவது டெஸ்ட் வீரர் ஒருவர் தனது கடைசி டெஸ்டில் துடுப்பாட்டத்தில் கடைசி பந்துக்கு சிக்ஸரும் பந்துவீச்சில் கடைசி பந்துக்கு விக்கெட்டும் வீழ்த்திய எந்த வீரரும் இதற்கு முன் வரலாற்றில் பதிவானதில்லை.

துடுப்பாட்டத்தை பொறுத்தவரை டெஸ்ட் வரலாற்றில் கடைசி பந்துக்கு சிக்ஸர் அடித்தவர்கள் பற்றி முழுமையான தரவுகள் இல்லை. என்றாலும் இதற்கு முன் ஒருவர் தனது டெஸ்ட் வாழ்வில் கடைசி பந்துக்கு சிக்ஸர் அடித்தது உறுதியாகிறது.

அவர் மேற்கிந்திய தீவுகளின் வேகப்பந்து வீச்சாளர் வைன் டானியல். போர்ட் ஒப் ஸ்பெயினில் 1984 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கு எதிராக நடந்த தனது கடைசி டெஸ்ட் போட்டியின் கடைசி இன்னிங்ஸில் அவர் சிக்ஸர் விளாசி இருந்தார்.

இதில் அவுஸ்திரேலிய சகலதுறை வீரர் கிளன் மெக்ஸ்வெல் 2017இல் சிட்டக்ராமில் பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் தான் முகம்கொடுத்த கடைசி பந்துக்கு சிக்ஸர் விளாசினார். என்றாலும் 34 வயதான மெக்ஸ்வெல் இன்னும் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெறவில்லை என்ற நிலையில் மீண்டும் டெஸ்ட் ஆட திடீரென்று அழைக்கப்பட வாய்ப்பு இருப்பதால் இந்த சாதனை பட்டியலில் அவரை சேர்த்துக்கொள்ள முடியாது.

அதேபோன்று ஆரம்ப டெஸ்ட் வரலாற்றின் தரவுகளின்படி மேற்கிந்திய தீவுகளின் சுழற்பந்து வீச்சாளர் டொம்மி ஸ்கொட்டையும் இந்தப் பட்டியலில் சேர்த்துக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. 1931 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கு எதிராக மெல்போர்னில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் ஸ்கொட் முகம்கொடுத்த கடைசி பந்துக்கு சிக்ஸர் அடித்திருக்கிறார். என்றாலும் அந்தப் போட்டியின் பந்துக்கு பந்து விபரங்கள் கிடைக்கவில்லை. எனவே, அவர் சிக்ஸர் விளாசியது முகம்கொடுத்த கடைசி பந்து தான் என்பதை உறுதியாகக் கூறிவிட முடியாது.



எப்படி இருந்தபோதும் டானியல் மற்றும் மெக்ஸ்வெல் இருவருமே தான் வீசிய கடைசி பந்தில் விக்கெட் வீழ்த்தியதில்லை என்பது மாத்திரம் உறுதி.

என்றாலும் தனது டெஸ்ட் வாழ்வில் தான் வீசிய கடைசி பந்தில் விக்கெட் வீழ்த்தியவர் பட்டியல் நீண்டது. அதில் மொத்தமாக 120 வீரர்கள் இருக்கிறார்கள். என்றாலும் பெயர் குறிப்பிடும்படியான வீரர்களில் முத்தையா முரளிதரனும் உள்ளார்.

டெஸ்ட் வரலாற்றில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியவராக இருக்கும் முத்தையா முரளிதரன் 2010 ஆம் ஆண்டு காலியில் இந்தியாவுக்கு எதிரான தனது கடைசி டெஸ்ட் போட்டியில் கடைசி விக்கெட்டாக பிரக்யான் ஓஜாவின் விக்கெட்டை வீழ்த்தி தனது 800 ஆவது விக்கெட்டை பூர்த்தி செய்தார் என்பது தெரிந்ததே.



இந்தப் பட்டியலில் மற்றொரு சுவாரஸ்யமான வீரரும் இருக்கிறார். அவர் தென்னாபிரிக்க அணியின் முன்னாள் விக்கெட் காப்பாளர் மார்க் பௌச்சர். டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக ஆட்டமிழப்புகளாக 555 ஆட்டமிழப்புகளை செய்த வீரர் என்ற சாதனை பௌச்சரிடம் தான் இருக்கிறது. இதற்கு அப்பால் ஒரே ஒரு இன்னிங்ஸில் மாத்திரம் அவர் பந்துவீசி இருக்கிறார்.

2005ஆம் ஆண்டு செயின்ட்ஸ் ஜோன்ஸ் மைதானத்தில் நடந்த மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் தனது விக்கெட் காப்புக்கான கையுறையை கழற்றி விட்டு எட்டுப் பந்துகளை வீசினார். எட்டாவது பந்தில் சதம் பெற்றிருந்த ட்வாயன் பிரவோ ஆட்டமிழந்தது ஆச்சரியம்தான். என்றாலும் பௌச்சர் அதற்குப் பின்னர் மேலும் 63 டெஸ்ட் போட்டிகளில் ஆடியபோதும் மீண்டும் ஒருமுறை கூட பந்து வீசாததால் அது அவர் வீசிய கடைசி பந்தாக மாறிவிட்டது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடெட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஓகஸ்ட் மாதம் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.




## மேஷம்

(அஷ்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)

11ஆம் இடத்தில் சனி இருக்கிறார். அது பாதகஸ்தானம் என்றாலும்கூட வக்கிரகதியில் இருப்பதால் நன்மையைச் செய்வார். சில நல்ல காரியங்கள் பலிதமாகும். முயற்சி வெற்றி அடையும். உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்படும். மேலதிகாரிகள் உதவி செய்வார்கள். அவர்களுடைய ஒத்துழைப்பு கிடைக்கும். வணிகம் முன்போலவே நல்ல விதமாக நடக்கும். வெளியில் இருந்து நிதி உதவி கிடைத்து தொழிலை விஸ்தரிக்கலாம். முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள். தகவல் தொழில் நுட்பம் அருமையாக இருக்கும். சுக்கிர பலன் இருப்பதால் கலைத்துறை அன்பர்களுக்கு நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். கணவன் மனைவி உறவுகள் சிறப்பாக இருக்கும். சுபத் தடைகள் உண்டு. காரணம், ராகு குரு இருவரும் சேர்ந்து இருக்கிறார்கள். நாம் ஒன்று நினைத்தால் வேறொன்று நடக்கும் வாய்ப்பினை இவர்கள் தந்துவிடுவார்கள். சில எதிர்பாராத செலவுகள் ஏற்படும். 4 இல் சூரியன் இருப்பதால் தாய்வழி உறவு சிக்கலாகும்.

## ரிஷபம்

(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம் , ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )

கேது 6 இல் இருக்கிறார். அது நல்ல இடம்தான். குருவின் பார்வையும் விழுவதால் வருமானம் அதிகரிக்கும். செலவுகள் வந்தாலும்கூட சமாளித்து விடலாம். பக்தி கூடும். ஆலய தரிசனம் செய்யும் வாய்ப்பு ஏற்படும். வேலை அற்றவர்களுக்கு வேலை கிடைக்கும். எதிர்பார்த்த பதவி உயர்வும், ஊதிய உயர்வும் கிடைக்கக் கூடிய வாய்ப்புண்டு. அதற்கான முயற்சிகள் செய்யலாம். சுக்கிரன் பலம் நன்றாக இருப்பதால் கலைஞர்களுக்கு நல்ல மதிப்பு கூடும். புதிய ஒப்பந்தங்கள் ஏற்படும். குடும்பத்தில் கணவன் மனைவி சிறு உரசல்கள் வந்தாலும் பெரிய சிக்கல்கள் இருக்காது. 6இல் கேது இருந்தாலும் ராகுவின் பார்வையில் இருப்பதால் வயதானவர்களுக்கு ஆரோக்கிய குறைவும் மனக் கவலையும் இருந்து கொண்டே இருக்கும்.

## மிதுனம்

(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)

இந்த வாரம் பல கிரகங்கள் உங்களுக்கு அனுகூலமாகவே சஞ்சரிக்கின்றன. சுபகாரியங்களில் இருக்கும் சிக்கல் விலகும். கல்யாண ஓசை கேட்கும் வாய்ப்பு உண்டு. பண வசதி நன்றாகவே இருக்கும். சிலருக்கு சந்ததி விருத்தி உண்டாகும். கடந்த கால துன்பங்கள் படிப்படியாகக் குறைய ஆரம்பிக்கும். பூர்வீக சொத்தில் இருந்த வில்லங்கங்கள் விலகும். இறையருள் பலம் கூடும். சப்தமாதிபதி குரு, இலாபஸ்தானத்தில் இருந்து உங்கள் தைரிய ஸ்தானத்தைப் பார்வையிடுவது நல்ல அமைப்பு. ராசிநாதன் புதன் தைரிய ஸ்தானத்தில் இருக்கின்றார். அவரோடு செவ்வாயும் சுக்கிரனும் இருப்பது நல்ல அமைப்பு. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். வீடு கட்டும் வாய்ப்பும், புதிய வீட்டுக்கு குடி போகும் வாய்ப்பும் உண்டு.

## கடகம்

( புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)

எத்தனை கஷ்டம் வந்தாலும் அதற்கு ஒரு விடிவும் உண்டு. எந்த கிரகங்களும் பூரணமாக நன்மையையோ தீமையையோ செய்வதில்லை. ஏதோ ஒரு ஆறுதல் வந்து கொண்டேதான் இருக்கும். உங்களுக்கு குரு ஆறுதல் தருகிறார். தன குடும்ப பாவத்தை அவர் பார்ப்பதால் எத்தனை சிக்கல்கள் வந்தாலும், நீங்கள் சமயோசிதமாகச் செயல்படுவதன் மூலமாக தீர்ந்துவிடும். கணவன் மனைவி ஒற்றுமை என்பது உங்கள் வார்த்தைகளில்தான் இருக்கிறது. ஒரு சிலருக்கு இட மாற்றங்கள் ஏற்படலாம். தேவையான ஆடம்பர பொருட்களையும் அத்தியாவசியமான பொருட்களையும் வாங்குவீர்கள். 7 க்குரிய சனி 8 இல் வக்கிரத்தை அடைந்திருக்கிறார். 2 இல் உள்ள செவ்வாயை அவர் பார்க்கிறார். தைரியம், நம்பிக்கை, இறை வழிபாடு, ஆலோசனை உங்களுக்கு உதவும்.

## சிம்மம்

(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)

பொதுவாகவே சிம்மம் என்பது எதற்கும் கலங்காத இராசி. மதியாதார் வாசல் மிதிக்க வேண்டாம் என்று வைராக்கியத்தோடு இருக்கும் இராசி. வீடு கட்ட கடன் உதவி கிடைக்கும். சுப நிகழ்ச்சிகள் நடைபெற வாய்ப்புண்டு. மூன்றில் உள்ள கேது பல நல்ல தகவல்களை உங்கள் காதில் போடுவார். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு சிறப்புக்கள் வந்து சேரும். சில நேரங்களில் திட்டமிடாமல் ஒரு காரியத்தை அவசர அவசரமாக செய்துவிட்டு அல்லல்படுவீர்கள். உடம்பு நன்றாக இருக்கிறதே என்று தேவையில்லாத உணவையும் தேவையில்லாத செயலையும் செய்து பாதிப்பு அடையும் வாய்ப்புண்டு. பண வரவு இருப்பது போலவே செலவுகளும் தலைக்கு மேல் இருப்பதால் சிக்கனம் முக்கியம்.

## கன்னி

(உத்தரம் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1 ஆம் 2 ஆம் பாதம்)

இராசிநாதன் ஓரளவு பலமாக இருப்பதால், சுபத்துவமாகவும் இருப்பதால் பெரிய பிரச்சினைகள் வராது. வருமானம் நன்றாக இருக்கும். சுக்கிரன் வக்கிரமாக இருந்தாலும், நன்மையே செய்வார். அதுவும் 12 இல் அவர் இருக்கிறார். எதிர்பாராத அதிர்ஷ்டச் செய்திகளும் வரும். கணவன் மனைவி அந்நியோன்யம் நன்றாக இருக்கும். தொழிலிலும் பல திருப்பங்கள் ஏற்படும். ஆனால், அதில் கவனமாக இருக்க வேண்டும். ஏதோ ஒரு சிக்கல் இருப்பதை நீங்கள் கண்காணிக்க வேண்டும்.

கலைத்துறை சுக்கிர பலத்தால் வெற்றி பெறும். ஆதாயமும் இருக்கும். குருவும் ராகுவும் 8 ஆம் இடத்தில் இருக்கிறார்கள். அது மனச்சிக்கலையும் உடல் சிக்கலையும் தரும். உணவில் கவனம் தேவை.

## துலாம்

(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)

குரு பகவான் 7 ஆம் இடத்திலிருந்து இராசியைப் பார்க்கிறார். புதன் 11 இல் இருக்கிறார். செவ்வாயும் இலாபத்தில் இருக்கிறார். அருமையான அமைப்பு. பண வரவில் சிக்கல் இருக்காது. மேகம் விலகி வெளிச்சம் காட்டுவது போல் துன்பங்கள் மறைந்து புதிய வெளிச்சம் கிடைக்கும். குடும்பத்தில் சந்தோஷம் தலை தூக்கும். சனி வக்கிரம்தான். ஆயினும் பெரும் பாதிப்பைச் செய்யாது. புதன் சுபத்தில் இருப்பதால் புத்தியைக் கூர்மையாக்கி நிதானத்தோடு பிரச்சினையை அணுகுங்கள். தெளிவாகும். எந்த சிக்கலுக்கும் விடை கிடைக்கும். கேது எதையாவது மறைமுகமாக பேச வைப்பார். பிரச்சினையில் சிக்கவைப்பார். யாரையும் விமர்சிக்க வேண்டாம். வாக்குறுதி கொடுத்து மாட்டிக் கொள்ள வேண்டாம். தொழிலில் பின்னடைவு வராமல் இருக்க அதிக உழைப்பு தேவைப்படும். சிறு தவறுகளும் நஷ்டத்தைத் தரும். புதிய முதலீடுகளை தவிர்க்க வேண்டும். உடல் நலனில் கவனம் தேவை.

## விருச்சிகம்

(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)

6 இல் உள்ள ராகு இருக்கும் வரை அச்சம் இல்லை. அது மகாலட்சுமி ஸ்தானம். கூட குரு. தன குடும்ப ஸ்தான பார்வை. எனவே அலையடித்தாலும் தண்ணீர் படகில் ஏறாது. பணப் பிரச்சினைகளில் சிக்கிக் கொள்ளாதீர்கள். யோசித்து செலவு செய்யுங்கள். சுபகாரியம், வியாபார விருத்தி செய்யும் திட்டம் – இவற்றையெல்லாம் சற்றுத் தள்ளிப் போடுங்கள். மற்றபடி அலுவலகத்தில் உங்கள் இராஜ்ஜியம்தான். பதவி உயர்வு, ஊதிய உயர்வு சனி வக்கிர கதியால் சாத்தியம். திடீர் செலவுகள் ஏற்படும். கைக்கு கிடைத்தது வாய்க்கு கிடைக்கும் நிலையில் தள்ளிப் போய்விடும். எதற்கும் முன்னேற்பாடு செய்து கொள்ளுங்கள். குடும்ப ஒற்றுமையை கோபப் பட்டு சீர்குலைக்க வேண்டாம். உணவு மற்றும் ஓய்வில் கவனம் தேவை. பழைய நோய்கள் தலைதூக்கி ஆட்டம் காட்டும்.

## தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)

பொதுவாக இராசிநாதன் சிக்கல் இல்லாமல் இருந்தால், பிரச்சினைகள் வராது. வந்தாலும், தலைவலி தராது. உங்களுக்கு இராசிநாதன் 5 இல் இருக்கின்றார். அது திரிகோண ஸ்தானம். அது மட்டும் இல்லை. இராசியைப் பார்க்கிறார். தன் வீட்டை தானே பார்க்கும் கிரகத்தை மீறி என்ன நடந்துவிடும்? ஆனால், ராகுவோடு இருப்பதால் அவருடைய பலம் சற்று குறைகிறது. மற்ற கிரகங்கள் எல்லாம் சாதகமாக இருக்கின்றன. குடும்ப சூழல் சமாளிக்க கூடியதாக இருக்கும். வருமானம் ஏற்ற இறக்கத்துடன் இருக்கும். ஆனாலும், கையைக் கடிக்காது. குடும்பத்தில் புதிய வரவுக்கான சூழல் உண்டு. அலுவலகம், தொழில் இரண்டிலும் போட்டிகள் இருக்கும். தவறான தகவல்களால் மனவேதனை ஏற்படும். மனதைத் தெளிவாக வைத்துக் கொள்ளுங்கள். எதிலும் அவசரப்பட்டு இறங்க வேண்டாம். நிதானமாக யோசியுங்கள். வார்த்தைகள் தூண்டப் படலாம்.

## மகரம்

(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)

குடும்பத்தில் அமைதியும் ஆதரவும் உண்டு. சுபகாரியங்களுக்கான வாய்ப்புண்டு. ஆரோக்கியம் திருப்தியாகவே இருக்கிறது. அலுவலக சூழலில் நல்ல முன்னேற்றம் உண்டு. அதிகாரிகளால் தொல்லைகள் இருக்காது. சற்று பிரகாசமான எதிர்காலம் தரும் புதிய வாய்ப்புகள் ஏற்படும். புதிய வேலை மாற்றங்கள் சிலருக்கு உண்டு. கூடுதல் பணிச்சுமை தற்காலிகமாக வந்து சேரும். ஆனால், விரைவில் விலகிவிடும். வியாபாரிகளுக்கு லாபம் குறையாமல் இருக்கும். வக்கிர சனி என்பதால் மனதை ஒரு நிலையில் இருக்கவிடாது. "உன் கண் உன்னை ஏமாற்றினால்" என்பது போல் கற்பனையான, உண்மையற்ற எண்ணங்களால் சற்று சோர்வு ஏற்படும். உறவுகளை அனுசரியுங்கள். சேமிப்பும் சிக்கனமும் அவசியம். புதிய திட்டங்களை தள்ளி வையுங்கள். தற்காலிகமாக சில இடையூறுகள் நிகழும். சமாளித்து விடலாம்.

## கும்பம்

( அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1 ஆம் 2 ஆம் 3 ஆம் பாதம்)

7 1/2 சனியில் ஜென்ம சனிதான் நடக்கிறது. ஆயினும் வக்கிரகதி சற்று இளைப்பாற வைக்கும். அதை கெட்டியாக பிடித்துக் கொள்ளுங்கள். உடல் உபாதைகள் நீங்கும். நோயுற்றவர்கள் சற்று ஆரோக்கியம் பெறுவார்கள். தகுந்த சிகிச்சை பலனளிக்கும். சுக்கிரன் நல்ல நிலையில் இருப்பதால் கலைஞர்களுக்கு ஆதரவு உண்டு. புதிய வாய்ப்பும் உண்டு. மனதில் சோர்வு நீங்கி உற்சாகம் பிறக்கும். சில பிரச்சினைகள் தானாகவே கிரக நிலைகளால் தீரும். அஷ்டமாதிபதி புதன் 7 ஆம் இடத்தில் இருப்பதால் நீங்கள் இனி நடக்காது என்று நினைத்த சுபகாரியங்கள் தானாகவே நடைபெறும் வாய்ப்புண்டு. ஜென்ம சனி எனினும், இராசிநாதன் வக்கிரகதி என்ற கோணத்தில் சில பிரச்சினைகள் வரலாம். ஏமாற்றங்களும் வரலாம்.

## மீனம்

(புரட்டாதி 4 ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)

இராசிநாதன் பலமும் சுக்கிரனுடைய பலமும் சில நன்மைகளைச் செய்யும். பணவரவு திருப்தியாக இருக்கும். புதிய பொருட்களை வாங்குவீர்கள். ஆரோக்கியத்தில் அபிவிருத்தி உண்டு. குடும்ப ஒற்றுமை ஓங்கும். கணவன் மனைவி ஒற்றுமை நிறைவாக இருக்கும். குழந்தைகளால் நன்மை போன்ற பல சாதகங்கள் உண்டு. திருமணம் போன்ற சுபகாரிய முயற்சிகள் பலிக்கும். அலுவலகத்தில் சிறப்பாக வேலை பார்ப்பீர்கள். பாராட்டு உண்டு. சிலருக்கு நல்ல வேலை அல்லது வேலை மாற்றங்கள் இருக்கும். வெளிநாட்டு வேலை செய்பவர்களுக்கு நல்ல ஆதாயம் உண்டு. 8ஆம் இடத்தில் கேது. 2 ஆம் இடத்தில் ராகு. இவை இரண்டு கிரகங்களும் சர்ப்ப கிரகங்கள் என்பதால் அவ்வப்பொழுது உங்களை சீண்டிப்பார்க்கும். மாலை வரை சரியாக இருந்து திடீரென்று தலைவலி, கால்வலி ஜுரம் என்று ஒரு மணி நேரம் அலைக் கழிக்கும்.

# கற்பித்தலின் நோக்கத்தையே கேள்விக்குறியாக்கியுள்ள இன்றைய கல்விமுறை

***இன்றைய கல்வி முறையானது பரீட்சையை மையப்படுத்தியதாக, அதிக மதிப்பெண்ணை குறிவைத்து, அதனையே ஊக்குவித்து நடைபெறுவதால் மனித, சமூக, சமய விழுமியங்களை பின்பற்றக்கூடிய சந்தர்ப்பம் குறைவாகவே காணப்படுகிறது. இதனால் பாடசாலைகள் தற்காலத்தில் சமூகமயமாக்கல் செயல் முறைகளிலிருந்து விலகிச் செல்வதாக சமூகவியலாளர்கள் முறையிடுகின்றனர். பாடத்திட்டங்கள் மட்டுமே கவனத்தில் கொள்ளப்படுகின்றன. இணைப்பாடவிதானங்கள் ஒதுக்கப்படுகின்றன. பரீட்சைப் பெறுபேறுகள் மட்டுமே கவனத்தில் கொள்ளப்படுவதால் ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்கள் காட்டும் ஆர்வம் குறைவாக உள்ளது. அதுமாத்திரமன்றி ஆளுமைமிக்க எதிர்கால நற்பிரஜைகளை உருவாக்கும் நோக்கத்தை எய்துவதில் சாத்தியமற்ற நிலையும் உருவாகியுள்ளது!***

***இவ்வாறு அண்மையில் ஓய்வுபெற்ற கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் தெரிவித்தார். தினகரன் வாரமஞ்சரிக்காக அவரை நேர்கண்டபோதே இவ்விதம் தமது கருத்தை ஆதங்கத்தை வெளியிட்டார். அவர் தொடர்ந்தும் எமக்களித்த நேர்காணல் வருமாறு:***

**கேள்வி: இலங்கையில் மூன்று தசாப்த கால யுத்தத்தால் மிகவும் பின்தங்கிப்போன திருகோணமலை, மட்டக்களப்பு, மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களையும் உள்ளடக்கிய கிழக்கு மாகாண சபையின் கல்விப் பணிப்பாளராக பணியாற்றுவதென்பது ஒரு சவாலான விடயம்! தங்களது கடந்த மூன்றாண்டுகால சேவையிலும் அதனை எப்படி எதிர்கொண்டீர்கள்?**

**பதில்:** தாங்கள் கூறியபடி கிழக்கு மாகாணம் ஏனைய மாகாணங்களைவிட பரந்த நிலப்பரப்பையும் மிகக் கூடுதலான கஷ்டப் பிரதேச பாடசாலைகளையும் உள்ளடக்கியது. இப்பாடசாலைகளின் பின்னணிகள், அவற்றின் நிலை, அதேபோல இம் மூன்று மாவட்டங்களின் தன்மை என்பன பற்றிய ஒரு தெளிவு மாகாணக் கல்விப் பணிப்பாளருக்குத் தேவை. நான் 35 வருட காலம் கல்விச் சேவையில் பணியாற்றியுள்ளதுடன், இலங்கை கல்வி நிர்வாக சேவையில் மட்டும் 30 வருடங்கள் பணியாற்றிய அனுபவத்தையும் பெற்றுள்ளேன். இதில் 13 வருடங்கள் வலயக் கல்விப் பணிப்பாளராக, திருக்கோயில் மற்றும் பட்டிருப்பு வலயங்களில் பணியாற்றியுள்ளேன். இரண்டுமே மிகவும் கஷ்டமான பிரதேசங்கள். இரண்டுமே அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் 2009இல் யுத்தம் மௌனிக்கும் வரை பெரும்பாலும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசங்கள். இவற்றில் நான் பிறந்து வளர்ந்து வாழ்கிற இடமாக அம்பாறை மாவட்டம் இருப்பதால் இவ்விரு மாவட்டங்கள் குறித்தும் தெளிவான அறிவு இருக்கிறது.



அதேவேளை திருகோணமலை மாவட்டத்துடன் தொடர்பும் இருந்ததால் மாகாணத்தில் சவால்களை எதிர்கொள்வதில் பிரச்சினைகள் இருக்கவில்லை. அந்தந்த கல்விப் புலத்திலுள்ளவர்களும் பிரச்சினைகளைக் கையாள்வதில் அனுபவசாலிகளாக இருந்தபடியால், என்னைப் பொறுத்தவரை கல்வி தொடர்பான திட்டமிடல்கள், மற்றும் அமுலாக்கல்களை முன்னெடுப்பதில் என்னுடன் ஒத்துழைத்து என் பணியை இலகுவாக்கினரென்றே கூறவேண்டும்!

**கேள்வி: மூன்று மாவட்டங்களிலும் பாடசாலைகள் எத்தனை? மாணவ மாணவிகளின் தொகை எவ்வளவு? சிங்களப் பாடசாலைகளும் உங்கள் பரிபாலிப்பின் கீழ் இயங்கினவா? அப்படியாயின் அம்மாணவர்களின் தொகை பற்றியும் கூறுங்கள்?**

**பதில்:** கிழக்கு மாகாணத்தில் 2022 டிசம்பர் வரை அம்பாறை மாவட்டத்தில் 444 பாடசாலைகளும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 364 பாடசாலைகளும், திருகோணமலை மாவட்டத்தில் 315 பாடசாலைகளுமென மொத்தமாக 1123 பாடசாலைகள் உள்ளன. இவற்றுள் 42 தேசிய பாடசாலைகளும், 1088 மாகாண பாடசாலைகளும் உள்ளன. மாணவர்கள் தொகை தமிழ் மொழி மூலம் 291335, சிங்கள மொழி மூலம் 140907.

**கேள்வி: போர்க்காலத்திலும் சரி, பொருளாதார நெருக்கடியால் பஞ்சம் பசிக்குள்ளான இன்றைய காலகட்டத்திலும் சரி, கிழக்கில் தமிழ் மாணவர்களின் நிலையே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக ஊடக அறிக்கைகள் கூறுகின்றன. இது பற்றி தங்கள் கருத்தென்ன?**

**பதில்:** உங்களது கூற்றை முழுமையாக என்னால் ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது. போர்க்கால சூழலில் அது ஓரளவுக்கு சரியாக இருக்கலாம். தமிழ்ப் பாடசாலைகள் கூடுதலாக கஷ்டப் பிரதேசங்களில் அமைந்துள்ளன. இதனால் பின்னடைவு ஏற்பட்டிருக்கலாம். கிழக்கில் பெரும்பான்மை தமிழ் மொழி மூலப் பாடசாலைகளே. தமிழ், முஸ்லிம் பாடசாலைகள் கலந்தேயுள்ளன. இவற்றில் இவ்விரு சமூக மாணவர்களும் கலந்தே கற்கின்றனர். எனவே, மாணவர்களும் பெற்றோரும் சமூகத்தினரும் எந்தளவுக்கு கல்விக்கு முன்னுரிமையளிக்கிறார்களோ, ஊக்குவிப்பும் ஒத்துழைப்பும் வழங்குகிறார்களோ, அந்தளவுக்கு அந்தந்த சமூக மாணவர்களின் கல்வி மேம்பாடாக இருக்குமென்றுதான் கூறவேண்டும்.

**கேள்வி: மேற்படி மூன்று மாவட்டங்களிலும் கல்வி நிலை அதிகம் பாதிக்கப்பட்டுள்ள வலயமாக எதனைக் கருதுகிறீர்கள்? அதற்கு என்ன காரணம்?**

**பதில்:** ஒவ்வொரு மாவட்டத்திலும் பின்தங்கிய வலயங்கள் உள்ளன. திருமலை மாவட்டத்தில் பின்தங்கிய வலயமாக திருமலை வடக்கு வலயத்தினைக் கூறலாம். இதுவொரு சிங்கள மொழி மூல வலயம். மட்டக்களப்பில் கல்குடா, தமிழ் மொழி மூல கல்வி வலயத்தையும் குறிப்பிடலாம். அம்பாறையில் மகா ஓயா சிங்கள மொழி மூல கல்வி வலயம். இதற்கு முக்கிய காரணம். இவை யாவும் மிகவும் பின்தங்கிய பிரதேசங்களை உள்ளடக்கிய கஷ்டப் பிரதேச பாடசாலைகளாகும். ஆசிரியர் பற்றாக்குறை, பொதுப் போக்குவரத்து வசதிகளின்மை, பாடசாலைகளில் வளப் பற்றாக்குறை, மாணவர்கள் கல்வியில் நாட்டமின்மை, அவ்விதம் நாட்டம் வரக் கூடிய சூழலின்மை, மாணவர்களின் இடைவிட்ட வருகை அல்லது இடைவிலகல், சிறுவர்கள் தொழில்லில் ஈடுபடுதல் என்பன அமைகின்றன. இன்றைய பொருளாதார நெருக்கடி நிலையில் இரவில் பசியோடு படுத்து காலையில் பசியோடு எழும்பும் பிள்ளைகளுக்கு அன்றாடம் ஒருவேளையாவது உணவளிக்கும் முயற்சியில் படாதபாடுபடும் பெற்றோருக்கு, அதையும் மீறி பிள்ளைகளை கல்வியில் ஈடுபடுத்த நாட்டம் வருமா என்பதுதான் இன்றுள்ள கேள்வி!

**கேள்வி: சாப்பாட்டுக்கு வழியில்லாத வறுமைதான் இதற்குக் காரணமென்று நீங்கள் சொன்னால், அரசின் மதிய உணவு மற்றும் சத்துணவுத் திட்டங்களால் இந்த இடைவிலகல்களை தவிர்க்க முடியவில்லையா?**

**பதில்:** இம்மாதிரி பின்னடைவுகளுக்கெல்லாம் அடிப்படை வறுமைதான். இதனால் பாடசாலை சென்று பயிலவேண்டிய பிள்ளைகளை பெற்றோர் வேலைக்குச் செல்லுமாறு தூண்டுகிறார்கள். மிகவும் இளவயதில் திருமணம் செய்துவைத்து படிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கிறார்கள். அதிகரித்து வரும் அன்றாட வாழ்க்கைச் செலவினங்களுக்கு மத்தியில் பாடசாலைக்குரிய தேவைகளை பூர்த்தி செய்ய முடியாமல் திண்டாடுகிறார்கள். பெற்றோருக்கு அடிப்படைக் கல்வியறிவின்மை, அல்லது போதாமை, அல்லது அது பற்றி அக்கறையின்மை போன்ற காரணங்களே இம்மாதிரி இடைவிலகல்களுக்கு அடிப்படையாய் அமைகின்றன.

**கேள்வி: பாடசாலை இடைவிலகல்களை விட இன்று எமது பாடசாலைகளில் கபடத்தனமாக நுழைந்து கொஞ்சம் கொஞ்சமாக மாணவர்களைச் சூறையாடும் போதைப்பொருள் பாவனையில் கிழக்கு மாகாணப் பாடசாலைகளின் நிலைபற்றிச் சொல்ல முடியுமா? அவ்விதம் கண்டுபிடித்த அனுபவங்கள் தங்களது சேவைக் காலத்தில் ஏற்பட்டதுண்டா? போதை பற்றிய விழிப்புணர்வை பாடசாலைகளில் ஏற்படுத்த தாங்கள் அமுல்படுத்திய திட்டங்கள் பற்றியும் குறிப்பிடுங்கள்?**

**பதில்:** இன்று நாடளாவிய ரீதியில் பொது மக்களை சீரழிக்கின்ற விடயங்களில் முக்கியமாக போதைப்பொருள் பாவனை சுட்டிக் காட்டப்படுகிறது. கல்வியில் மாணவர்கள் காட்டுகிற அக்கறையை அர்ப்பணிப்பை, சீர்குலைக்க இதுவொரு சமீபகால சதி! இந்தப் பிரச்சினையை ஏனோதானோவென்று அணுக முடியாது. ஏற்கனவே பல வழிகளாலும் நலிந்துபோன நம் சமூகத்தில் எதிர்காலத்துக்கு உத்தரவாதம் தருகிற நம் பிள்ளைகள் இப்படியான போதைப் புயலில் சிக்கி தம் எதிர்காலத்தைத் தொலைப்பதை பார்த்துக் கொண்டு வெறுமனே சுற்று நிருபங்களை பாடசாலைதோறும் அனுப்பிக் கொண்டிருக்க முடியாது. இதற்கெல்லாம் கடினமான, அழுத்தமான உடனடி நடவடிக்கைகள் தேவை. அதன்படியே மாகாணக் கல்வித் திணைக்களம் சுகாதாரத்துறையுடன் சேர்ந்து அதிரடி நடவடிக்கைகள் எடுத்துவந்துள்ளதை நான் இவ்விடத்தில் குறிப்பிட வேண்டும்.

இதில் மாகாண ஆளுனர், பிரதம செயலாளர், ஏனைய திணைக்களங்களின் தலைவர்கள், செயலாளர்கள், உயரதிகாரிகளும் இந்நடவடிக்கைக் குழுவில் உள்வாங்கப்பட்டு சிரத்தையுடன் செயலாற்றுகின்றனர். அத்துடன் மாணவர்கள், பெற்றோர், பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வுச் செயலமர்வுகள், வீதி நாடகங்கள், குறும்படங்கள் என பல முயற்சிகளை எனது சேவைக் காலத்தில் எடுத்துள்ளேன். இதில் நான் வெற்றி பெறுகிறேனோ இல்லையோ, எனது சமூகத்திற்கு செய்ய வேண்டிய கடமையை முடிந்தளவு சரிவரச் செய்து விட்ட ஆத்ம திருப்தி எனக்குண்டு!

(28ஆம் பக்கம் பார்க்க)

நேர்கண்டவர்: எஸ். ஜோன்ராஜன்

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்

### கல்வி அமைச்சு

| | |
|---|---|
| **கடனிலக்கம் மற்றும் தலைப்பு** | 3698/3699-SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம் |
| **ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு** | **MOE/STHRD/SB/E11A** : இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்தின் பகுப்பாய்வு பௌதீகவியல் ஆய்வுகூடத்திற்கான ஆய்வுகூட உபகரணங்களின் பெறுகை |
| **விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி** | 2023 செப்டெம்பர் 14ஆம் திகதி மு.ப. 10.00 மணித்தியாலம் (உள்ளூர் நேரம்) |

1. இலங்கை சோஷலிச குடியரசானது 145 மில்லியன் ஐ.அ. டொலருக்குச் சமமான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து **(ADB)** கல்வி அமைச்சின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட (**STHRD** செயற்றிட்டம்) அமுல்நடாத்தலின் கிரயச் செலவினத்திற்காக பெற்றுக் கொண்டுள்ளதுடன் இந்த நிதியின் பெறுகைகளின் பகுதியொன்றை மேலே பெயரிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவழிப்பதற்கு உத்தேசித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் **(ADB)** வள நாடுகளின் தகுதியுள்ள விலைமனுதாரர்களும் இவ்விலைமனுவில் பங்கேற்கலாம்.
2. இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட, பிரதி செயற்றிட்ட பணிப்பாளரின் (''கொள்வனவாளர்'') சார்பாக பல்கலைக்கழக பெறுகைக் குழுவின் தலைவர் **MOE/STHRD/SB/E11A - இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்தின் பகுப்பாய்வு பௌதீகவியல் ஆய்வுகூடத்திற்கான ஆய்வுகூட உபகரணங்களின் (`பொருட்கள்'')** பெறுகைக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். இந்த பெறுகையானது இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்தின் பகுப்பாய்வு பௌதீகவியல் ஆய்வுகூடத்திற்கான ஆய்வுகூட உபகரணங்களின் பெறுகை என்பதை அடக்குகின்றது. ஒப்பந்தம் கையொப்பமிடும் திகதியிலிருந்து பூர்த்தி செய்யும் காலப்பகுதியானது 12 வாரங்களாகும்.
3. இந்த விலைமனுக்கோரலில் பங்குபெறுவதற்காக பின்வரும் பிரதான தகைமைகளை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.
   - கடந்த மூன்று வருடங்களில் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் பின்வரும் அட்டவணையில் 2ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியையுடையதும் நிகரான தன்மை மற்றும் சிக்கல்தன்மை ஆகியவற்றைக் கொண்ட ஆகக் குறைந்தது இரண்டு ஒப்பந்தங்களை 6ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறான வழங்கலின் நோக்கத்திற்காக பிரதான வழங்குநராக வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.
   - கடந்த மூன்று வருடங்களில் பின்வரும் அட்டவணையில் 3ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பூர்த்தி செய்யப்பட்ட அல்லது முடிவுறாத ஒப்பந்தங்களுக்காக விலைமனுதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த பணக்கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிதிப்புரள்வு.

***விலைக்கோரலில் பங்குபற்றுவதற்கான பிரதான தகைமைகள்***

| நிரல் - 1 | நிரல் - 2 | நிரல் - 3 |
|---|---|---|
| **லொட் இலக்கங்கள் மற்றும் விபரங்கள்** | **ஒவ்வொரு ஒப்பந்தத்தினதும் பெறுமதி (இல. ரூபா)** | **வருடாந்த சராசரி புரள்வின் பெறுமதி (இல. ரூபா)** |
| Lot 01-Embedded Systems | 2,520,000.00 | 6,300,000.00 |
| Lot 02-Vacuum Based Demonstration Kit | 588,000.00 | 1,470,000.00 |
| Lot 03-Thermodynamics and radiation Kits | 1,960,000.00 | 4,900,000.00 |
| Lot 04-Mechanics Experiment Kits | 1,260,000.00 | 3,150,000.00 |
| Lot 05-Fiber Optical Communication Kit | 3,360,000.00 | 8,400,000.00 |
| Lot 06-Machine Learning and AI, Image Processing Kits | 1,512,000.00 | 3,780,000.00 |
| Lot 07-Computers and Accessories | 6,860,000.00 | 17,150,000.00 |
| Lot 08-Meteorology Experiments | 5,600,000.00 | 14,000,000.00 |
| Lot 09-Electronics and Robotics | 3,920,000.00 | 9,800,000.00 |
| Lot 10-Miscellaneous | 588,000.00 | 1,470,000.00 |

4. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) பண்டங்களின் பெறுகை ஒற்றைக்கட்ட-ஒரு கடித உறை நடைமுறையில் பகிரங்க போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்கேற்கலாம்.
5. மேலதிக தகவலைப் பெற்றுக்கொள்ளவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கவும், விலைமனுதாரர் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

   சிரேஷ்ட பெறுகை அலுவலர்,
   செயற்றிட்ட அமுல்நடாத்தல் பணிமனை,
   விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,
   தொழில்நுட்பவியல் பீடம், இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,
   பெலிஹுல்ஓய, இலங்கை.
   ZIP code : 70140
   தொலைபேசி : 045-2280081
   மின்னஞ்சல் : pasb-sthrd@mohe.gov.lk

   - விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் பீடத்தின் பணிப்பாளர் சபை அறையில் இடம்பெறும்.
6. ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யவுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்களால் "**MOE/STHRD/SB/E11A - இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்தின் பகுப்பாய்வு பௌதீகவியல் ஆய்வுகூடத்திற்கான ஆய்வுகூட உபகரணங்களின் பெறுகை"** என்பதற்கான விலைமனுக்களை வேண்டி மேலேயுள்ள முகவரிக்கு எழுத்து / மின்னஞ்சல் மூலம் அனுப்புதல் வேண்டும். மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 இ.ரூபாவை (ஐயாயிரம் இலங்கை ரூபா மாத்திரம்) ரொக்கப் பணத்தில் அல்லது வங்கி வரைவாக பிரதி செயற்றிட்ட பணிப்பாளர், STHRD செயற்றிட்டம், இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் அல்லது பெலிஹுல்ஓய இலங்கை வங்கியில் பேணப்படும் 0083695474 என்ற கணக்கிலக்கத்திற்கு (சகல லொட்களுக்குமான ஒரு ஆவணத்திற்கு) வரவு வைக்கப்படல் வேண்டும். ஆவணம்/ஆவணங்கள் வங்கி வரவுத் துண்டைச் சமர்ப்பித்ததன் பின் 2023.08.14ஆம் திகதி முதல் மின்னஞ்சலின் ஊடாக மட்டும் அனுப்பப்படும். காணாமல் போன அல்லது தாமதமான ஒப்படைத்தலுக்கு பொறுப்பேற்கப்படமாட்டாது.
7. 2023.09.14ஆம் திகதி 10:00 மணித்தியாலம் அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனுப்பிணையுடன் உங்கள் விலைமனுக்களை ஒப்படைக்கவும்.

   பிரதி செயற்றிட்ட பணிப்பாளர்,
   செயற்றிட்ட அமுலாக்கல் பணிமனை,
   STHRD செயற்றிட்டம், தொழில்நுட்பவியல் பீடம்,
   இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், பெலிஹுல்ஓய, இலங்கை.

   - பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகள் **மூலப்பிரதி** மற்றும் **நகல்பிரதி** என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியாக உள்ளிட்டு ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என முறையே அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். அதன் பின்னர், இந்த இரு தபாலுறைகளும் இன்னொரு தபாலுறையில் உள்ளிட்டு, முத்திரையிடப்பட்டு உரிய ஒப்பந்த அடையாளத்தை **(ID)** அதன் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.
8. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரம் முடிவடைந்ததும் தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், பெலிஹுலஓய, இலங்கை.**
**ZIP code: 70140**
**திகதி: 2023-08-13.**

**For classified advertisements and for replies**

**received in response to advertisements published under Lake House box numbers**

Manager front office
**+94 112429341**
**Hotline 1949**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்

### கல்வி அமைச்சு

| | |
|---|---|
| **கடனிலக்கம் மற்றும் தலைப்பு** | 3698/3699-SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வளம் அபிவிருத்தி செயற்றிட்டம் |
| **ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு** | **MOE/STHRD/SB/E64** : இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கு தேர்மோ அளவை (Thermo Measurement) உபகரணங்களின் பெறுகை |
| **விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி** | 2023 செப்டெம்பர் 14ஆம் திகதி மு.ப. 10.00 மணித்தியாலம் (உள்ளூர் நேரம்) |

1. இலங்கை சோசலிச குடியரசானது 145 மில்லியன் ஐ.அ. டொலருக்குச் சமமான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து **(ADB)** கல்வி அமைச்சின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட (**STHRD** செயற்றிட்டம்) அமுல்நடாத்தலின் கிரயச் செலவினத்திற்காக பெற்றுக் கொண்டுள்ளதுடன் இந்த நிதியின் பெறுகைகளின் பகுதியொன்றை மேலே பெயரிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவழிப்பதற்கு உத்தேசித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் **(ADB)** வள நாடுகளின் தகுதியுள்ள விலைமனுதாரர்களும் இவ்விலைமனுவில் பங்கேற்கலாம்.
2. இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட, பிரதி செயற்றிட்ட பணிப்பாளரின் (''கொள்வனவாளர்'') சார்பாக பல்கலைக்கழக பெறுகைக் குழுவின் தலைவர் **MOE/STHRD/SB/E64 - இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கு தேர்மோ அளவை (Thermo Measurement) உபகரணங்களின் (`பொருட்கள்'')** பெறுகைக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். இந்த பெறுகையானது இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கு தேர்மோ அளவை (Thermo Measurement) உபகரணங்களின் பெறுகை என்பதை அடக்குகின்றது. ஒப்பந்தம் கையொப்பமிடும் திகதியிலிருந்து பூர்த்தி செய்யும் காலப்பகுதியானது 12 வாரங்களாகும்.
3. இந்த விலைமனுக்கோரலில் பங்குபெறுவதற்காக பின்வரும் பிரதான தகைமைகளை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.
   - கடந்த மூன்று வருடங்களில் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் பின்வரும் அட்டவணையில் 2ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியையுடையதும் நிகரான தன்மை மற்றும் சிக்கல்தன்மை ஆகியவற்றைக் கொண்ட ஆகக் குறைந்தது இரண்டு ஒப்பந்தங்களை 6ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறான வழங்கலின் நோக்கத்திற்காக பிரதான வழங்குனராக வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.
   - கடந்த மூன்று வருடங்களில் பின்வரும் அட்டவணையில் 3ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பூர்த்தி செய்யப்பட்ட அல்லது முடிவுறாத ஒப்பந்தங்களுக்காக விலைமனுதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த பணக்கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிதிப்புரள்வு.

***விலைக்கோரலில் பங்குபற்றுவதற்கான பிரதான தகைமைகள்***

| நிரல் - 1 | நிரல் - 2 | நிரல் - 3 |
|---|---|---|
| **லொட் இலக்கங்கள் மற்றும் விபரங்கள்** | **ஒவ்வொரு ஒப்பந்தத்தினதும் பெறுமதி (இல. ரூபா)** | **வருடாந்த சராசரி புரள்வின் பெறுமதி (இல. ரூபா)** |
| L1-I1 - Solid Thermal Properties Measuring Instrument | 33,600,000.00 | 84,000,000.00 |

4. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) பண்டங்களின் பெறுகை ஒற்றைக்கட்ட-ஒரு கடித உறை நடைமுறையில் பகிரங்க போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்கேற்கலாம்.
5. மேலதிக தகவலைப் பெற்றுக்கொள்ளவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கவும், விலைமனுதாரர் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

   சிரேஷ்ட பெறுகை அலுவலர்,
   செயற்றிட்ட அமுல்நடாத்தல் பணிமனை,
   விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,
   தொழில்நுட்பவியல் பீடம்,
   இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்,
   பெலிஹுல்ஓய,
   இலங்கை.
   ZIP code : 70140
   தொலைபேசி : 045-2280081
   மின்னஞ்சல் : pasb-sthrd@mohe.gov.lk

   - விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் சபரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் பீடத்தின் பணிப்பாளர் சபை அறையில் இடம்பெறும்.
6. ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யவுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்களால் "**MOE/STHRD/SB/E64 -** இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கு தேர்மோ அளவை **(Thermo Measurement)** உபகரணங்களின் பெறுகை" என்பதற்கான விலைமனுக்களை வேண்டி மேலேயுள்ள முகவரிக்கு எழுத்து / மின்னஞ்சல் மூலம் அனுப்புதல் வேண்டும். மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 இ.ரூபாவை (ஐயாயிரம் இலங்கை ரூபா மாத்திரம்) ரொக்கப் பணத்தில் அல்லது வங்கி வரைவாக பிரதி செயற்றிட்ட பணிப்பாளர், STHRD செயற்றிட்டம், இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் அல்லது பெலிஹுல்ஓய இலங்கை வங்கியில் பேணப்படும் 0083695474 என்ற கணக்கிலக்கத்திற்கு (சகல லொட்களுக்குமான ஒரு ஆவணத்திற்கு) வரவு வைக்கப்படல் வேண்டும். ஆவணம்/ஆவணங்கள் வங்கி வரவுத் துண்டைச் சமர்ப்பித்ததன் பின் 2023.08.14ஆம் திகதி முதல் மின்னஞ்சலின் ஊடாக மட்டும் அனுப்பப்படும். காணாமல் போன அல்லது தாமதமான ஒப்படைத்தலுக்கு பொறுப்பேற்கப்பட மாட்டாது.
7. 2023.09.14ஆம் திகதி 10:00 மணித்தியாலம் அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனுப்பிணையுடன் உங்கள் விலைமனுக்களை ஒப்படைக்கவும்.

   பிரதி செயற்றிட்ட பணிப்பாளர்,
   செயற்றிட்ட அமுலாக்கல் பணிமனை,
   STHRD செயற்றிட்டம்,
   தொழில்நுட்பவியல் பீடம்,
   இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்,
   பெலிஹுல்ஓய,
   இலங்கை.

   - பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகள் **மூலப்பிரதி** மற்றும் **நகல்பிரதி** என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியாக உள்ளிட்டு ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என முறையே அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். அதன் பின்னர், இந்த இரு தபாலுறைகளும் இன்னொரு தபாலுறையில் உள்ளிட்டு, முத்திரையிடப்பட்டு உரிய ஒப்பந்த அடையாளத்தை **(ID)** அதன் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.
8. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரம் முடிவடைந்ததும் தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்,**
**பெலிஹுலஓய,**
**இலங்கை.**
**ZIP code: 70140**
**திகதி: 2023-08-13.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்

### கல்வி அமைச்சு

| | |
|---|---|
| **கடனிலக்கம் மற்றும் தலைப்பு** | 3698/3699-SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனிதவளம் அபிவிருத்தி செயற்றிட்டம் |
| **ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு** | **MOE/STHRD/SB/E59** : இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கு வாகன (Automobile) ஆய்வுகூட உபகரணங்களின் பெறுகை |
| **விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி** | 2023 செப்டெம்பர் 14ஆம் திகதி மு.ப. 10.00 மணித்தியாலம் (உள்ளூர் நேரம்) |

1. இலங்கை சோசலிச குடியரசானது 145 மில்லியன் ஐ.அ. டொலருக்குச் சமமான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) கல்வி அமைச்சின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட (STHRD செயற்றிட்டம்) அமுல்நடாத்தலின் கிரயச் செலவினத்திற்காக பெற்றுக் கொண்டுள்ளதுடன் இந்த நிதியின் பெறுகைகளின் பகுதியொன்றை மேலே பெயரிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவழிப்பதற்கு உத்தேசித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) வள நாடுகளின் தகுதியுள்ள விலைமனுதாரர்களும் இவ்விலைமனுவில் பங்கேற்கலாம்.
2. இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனிதவள அபிவிருத்தி செயற்றிட்ட, பிரதி செயற்றிட்ட பணிப்பாளரின் **("கொள்வனவாளர்")** சார்பாக பல்கலைக்கழக பெறுகைக் குழுவின் தலைவர் **MOE/STHRD/SB/E59 - இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கு வாகன (Automobile) ஆய்வுகூட உபகரணங்களின் ("பொருட்கள்")** பெறுகைக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். இந்த பெறுகையானது இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கு வாகன (Automobile) ஆய்வுகூட உபகரணங்களின் பெறுகை என்பதை அடக்குகின்றது. ஒப்பந்தம் கையொப்பமிடும் திகதியிலிருந்து பூர்த்தி செய்யும் காலப்பகுதியானது 12 வாரங்களாகும்.
3. இந்த விலைமனுக்கோரலில் பங்குபெறுவதற்காக பின்வரும் பிரதான தகைமைகளை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.
   - கடந்த மூன்று வருடங்களில் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் பின்வரும் அட்டவணையில் 2ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியையுடையதும் நிகரான தன்மை மற்றும் சிக்கல்தன்மை ஆகியவற்றைக் கொண்ட ஆகக் குறைந்தது இரண்டு ஒப்பந்தங்களை 6ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறான வழங்கலின் நோக்கத்திற்காக பிரதான வழங்குனராக வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.
   - கடந்த மூன்று வருடங்களில் பின்வரும் அட்டவணையில் 3ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பூர்த்தி செய்யப்பட்ட அல்லது முடிவுறாத ஒப்பந்தங்களுக்காக விலைமனுதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த பணக்கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிதிப்புரள்வு.

**விலைக்கோரலில் பங்குபற்றுவதற்கான பிரதான தகைமைகள்**

| நிரல் - 1 | நிரல் - 2 | நிரல் - 3 |
|---|---|---|
| லொட் இலக்கங்கள் மற்றும் விபரங்கள் | ஒவ்வொரு ஒப்பந்தத்தினதும் பெறுமதி (இல. ரூபா) | வருடாந்த சராசரி புரள்வின் பெறுமதி (இல. ரூபா) |
| L1-E1CNC Milling Machine | 33,600,000.00 | 84,000,000.00 |

4. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) பண்டங்களின் பெறுகை ஒற்றைக்கட்ட-ஒரு கடித உறை நடைமுறையில் பகிரங்க போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்கேற்கலாம்.
5. மேலதிக தகவலைப் பெற்றுக்கொள்ளவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கவும், விலைமனுதாரர் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

   **சிரேஷ்ட பெறுகை அலுவலர்,**
   **செயற்றிட்ட அமுல்நடாத்தல் பணிமனை,**
   **விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனிதவள அபிவிருத்தி செயற்றிட்டம்,**
   **தொழில்நுட்பவியல் பீடம்,**
   **இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,**
   **பெலிஹுல்ஓய, இலங்கை.**
   **ZIP code : 70140**
   **தொலைபேசி : 045-2280081**
   **மின்னஞ்சல் : pasb-sthrd@mohe.gov.lk**

   - விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் பீடத்தின் பணிப்பாளர் சபை அறையில் இடம்பெறும்.
6. ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யவுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்களால் **"MOE/STHRD/SB/E59 - இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கு வாகன (Automobile) ஆய்வுகூட உபகரணங்களின் பெறுகை"** என்பதற்கான விலைமனுக்களை வேண்டி மேலேயுள்ள முகவரிக்கு எழுத்து / மின்னஞ்சல் மூலம் அனுப்புதல் வேண்டும். மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 இ. ரூபாவை (ஐயாயிரம் இலங்கை ரூபா மாத்திரம்) ரொக்கப் பணத்தில் அல்லது வங்கி வரைவாக பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர், STHRD செயற்றிட்டம், இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் அல்லது பெலிஹுல்ஓய இலங்கை வங்கியில் பேணப்படும் 0083695474 என்ற கணக்கிலக்கத்திற்கு (சகல லொட்களுக்குமான ஒரு ஆவணத்திற்கு) வரவு வைக்கப்படல் வேண்டும். ஆவணம்/ ஆவணங்கள் வங்கி வரவுத் துண்டைச் சமர்ப்பித்ததன் பின் 2023.08.14ஆம் திகதி முதல் மின்னஞ்சலின் ஊடாக மட்டும் அனுப்பப்படும். காணாமல் போன அல்லது தாமதமான ஒப்படைத்தலுக்கு பொறுப்பேற்கப்படமாட்டாது.
7. 2023.09.14ஆம் திகதி 10:00 மணித்தியாலம் அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனுப்பிணையுடன் உங்கள் விலைமனுக்களை ஒப்படைக்கவும்.

   **பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர்,**
   **செயற்றிட்ட அமுலாக்கல் பணிமனை,**
   **STHRD செயற்றிட்டம்,**
   **தொழில்நுட்பவியல் பீடம்,**
   **இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,**
   **பெலிஹுல்ஓய,**
   **இலங்கை.**

   - பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகள் **மூலப்பிரதி** மற்றும் **நகல்பிரதி** என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியாக உள்ளிட்டு ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என முறையே அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். அதன் பின்னர், இந்த இரு தபாலுறைகளும் இன்னொரு தபாலுறையில் உள்ளிட்டு, முத்திரையிடப்பட்டு உரிய ஒப்பந்த அடையாளத்தை (ID) அதன் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.
8. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரம் முடிவடைந்ததும் தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,**
**பெலிஹுலஓய,**
**இலங்கை.**
**ZIP code: 70140**
**திகதி: 2023-08-13.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்

### கல்வி அமைச்சு

| | |
|---|---|
| **கடனிலக்கம் மற்றும் தலைப்பு** | 3698/3699-SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம் |
| **ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு** | **MOE/STHRD/SB/E35A** : இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கு மின்சார ஆய்வுகூட உபகரணங்கள்-1A இற்கான பெறுகை |
| **விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி** | 2023 செப்டெம்பர் 14ஆம் திகதி மு.ப. 10.00 மணித்தியாலம் (உள்ளூர் நேரம்) |

1. இலங்கை சோஷலிச குடியரசானது 145 மில்லியன் ஐ.அ. டொலருக்குச் சமமான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) கல்வி அமைச்சின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட (STHRD செயற்றிட்டம்) அமுல்நடாத்தலின் கிரயச் செலவினத்திற்காக பெற்றுக் கொண்டுள்ளதுடன் இந்த நிதியின் பெறுகைகளின் பகுதியொன்றை மேலே பெயரிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவழிப்பதற்கு உத்தேசித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) வள நாடுகளின் தகுதியுள்ள விலைமனுதாரர்களும் இவ்விலைமனுவில் பங்கேற்கலாம்.
2. இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட, பிரதி செயற்றிட்ட பணிப்பாளரின் (''கொள்வனவாளர்'') சார்பாக பல்கலைக்கழக பெறுகைக் குழுவின் தலைவர் **MOE/STHRD/SB/E35A - இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கு மின்சார ஆய்வுகூட உபகரணங்கள்-1A இற்கான (``பொருட்கள்'')** பெறுகைக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். இந்த பெறுகையானது இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கு மின்சார ஆய்வுகூட உபகரணங்கள்-1A இற்கான பெறுகை என்பதை அடக்குகின்றது. ஒப்பந்தம் கையொப்பமிடும் திகதியிலிருந்து பூர்த்தி செய்யும் காலப்பகுதியானது 12 வாரங்களாகும்.
3. இந்த விலைமனுக்கோரலில் பங்குபெறுவதற்காக பின்வரும் பிரதான தகைமைகளை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.
   - கடந்த மூன்று வருடங்களில் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் பின்வரும் அட்டவணையில் 2ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியையுடையதும் நிகரான தன்மை மற்றும் சிக்கல்தன்மை ஆகியவற்றைக் கொண்ட ஆகக் குறைந்தது இரண்டு ஒப்பந்தங்களை 6ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறான வழங்கலின் நோக்கத்திற்காக பிரதான வழங்குநராக வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.
   - கடந்த மூன்று வருடங்களில் பின்வரும் அட்டவணையில் 3ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பூர்த்தி செய்யப்பட்ட அல்லது முடிவுறாத ஒப்பந்தங்களுக்காக விலைமனுதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த பணக்கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிதிப்புரள்வு.

***விலைக்கோரலில் பங்குபற்றுவதற்கான பிரதான தகைமைகள்***

| நிரல் - 1 | நிரல் - 2 | நிரல் - 3 |
|---|---|---|
| ***லொட் இலக்கங்கள் மற்றும் விபரங்கள்*** | ***ஒவ்வொரு ஒப்பந்தத்தினதும் பெறுமதி (இல. ரூபா)*** | ***வருடாந்த சராசரி புரள்வின் பெறுமதி (இல. ரூபா)*** |
| Lot 01-Electronic Practical Setups | 7,840,000.00 | 19,600,000.00 |
| Lot 02-3-Phase Power Analyzer | 3,360,000.00 | 8,400,000.00 |
| Lot 03-Electronic Manufacturing Tools | 2,800,000.00 | 7,000,000.00 |
| Lot 04-Electronic Components set 1 | 1,960,000.00 | 4,900,000.00 |
| Lot 05-Electronic Components set 2 | 840,000.00 | 2,100,000.00 |
| Lot 06-Solar PV Setup | 1,260,000.00 | 3,150,000.00 |

4. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) பண்டங்களின் பெறுகை ஒற்றைக்கட்ட-ஒரு கடித உறை நடைமுறையில் பகிரங்க போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்கேற்கலாம்.
5. மேலதிக தகவலைப் பெற்றுக்கொள்ளவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கவும், விலைமனுதாரர் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

   சிரேஷ்ட பெறுகை அலுவலர்,
   செயற்றிட்ட அமுல்நடாத்தல் பணிமனை,
   விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,
   தொழில்நுட்பவியல் பீடம்,
   இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,
   பெலிஹுல்ஓய,
   இலங்கை.
   ZIP code : 70140
   தொலைபேசி : 045-2280081
   மின்னஞ்சல் : pasb-sthrd@mohe.gov.lk

   - விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் பீடத்தின் பணிப்பாளர் சபை அறையில் இடம்பெறும்.
6. ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யவுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்களால் **"MOE/STHRD/SB/E35A - இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கு மின்சார ஆய்வுகூட உபகரணங்கள்-1A இற்கான பெறுகை"** என்பதற்கான விலைமனுக்களை வேண்டி மேலேயுள்ள முகவரிக்கு எழுத்து / மின்னஞ்சல் மூலம் அனுப்புதல் வேண்டும். மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 இ. ரூபாவை (ஐயாயிரம் இலங்கை ரூபா மாத்திரம்) ரொக்கப் பணத்தில் அல்லது வங்கி வரைவாக பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர், STHRD செயற்றிட்டம், இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் அல்லது பெலிஹுல்ஓய இலங்கை வங்கியில் பேணப்படும் 0083695474 என்ற கணக்கிலக்கத்திற்கு (சகல லொட்களுக்குமான ஒரு ஆவணத்திற்கு) வரவு வைக்கப்படல் வேண்டும். ஆவணம்/ஆவணங்கள் வங்கி வரவுத் துண்டைச் சமர்ப்பித்ததன் பின் 2023.08.14ஆம் திகதி முதல் மின்னஞ்சலின் ஊடாக மட்டும் அனுப்பப்படும். காணாமல் போன அல்லது தாமதமான ஒப்படைத்தலுக்கு பொறுப்பேற்கப்படமாட்டாது.
7. 2023.09.14ஆம் திகதி 10:00 மணித்தியாலம் அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனுப்பிணையுடன் உங்கள் விலைமனுக்களை ஒப்படைக்கவும்.

   பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர்,
   செயற்றிட்ட அமுலாக்கல் பணிமனை,
   STHRD செயற்றிட்டம்,
   தொழில்நுட்பவியல் பீடம்,
   இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,
   பெலிஹுல்ஓய,
   இலங்கை.

   - பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகள் **மூலப்பிரதி** மற்றும் **நகல்பிரதி** என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியாக உள்ளிட்டு ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என முறையே அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். அதன் பின்னர், இந்த இரு தபாலுறைகளும் இன்னொரு தபாலுறையில் உள்ளிட்டு, முத்திரையிடப்பட்டு உரிய ஒப்பந்த அடையாளத்தை (ID) அதன் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.
8. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரம் முடிவடைந்ததும் தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,**
**பெலிஹுலஓய,**
**இலங்கை.**
**ZIP code: 70140**

திகதி: 2023-08-13

SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
Gayani - 077 7 278 948 / 0112 429 343 / 342 | Piyumi- 0112 429 383 E-mail - classified@lakehouse.lk

Trusted Marketplace of Classified Advertisers
Sunday Observer
aDz Classified
Tuition Vehicle Employment Photo Classifieds Miscellaneous House/ Land Rent or Lease Wanted
Classified
For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-
Gayani - 077 7 278 948 / 011 2 429 342/ 343 / Piyumi - 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / Email - classified@lakehouse.lk
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL: 025 22 22 370 FAX: 025 22 35 411 / Kandy - TEL: 081 22 34 200 FAX: 081 22 38 910 / Kataragama - TEL: 047 22 35 291 FAX: 047 22 35 291
Maradana - TEL: 011 2 429 336 FAX: 011 2 429 335 / Matara - TEL: 041 22 35 412 FAX: 041 22 29 728 / Nugegoda - TEL: 011 2 828 114 FAX: 011 4 300 860 / Jaffna - TEL: 021 22 25 361 FAX: 021 22 25 361

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்

### கல்வி அமைச்சு

| | |
|---|---|
| **கடனிலக்கம் மற்றும் தலைப்பு** | 3698/3699-SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வளம் அபிவிருத்தி செயற்றிட்டம் |
| **ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு** | **MOE/STHRD/SB/F04C** : இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கு ICT கணனி ஆய்வுகூட தளபாடங்களின் பெறுகை |
| **விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி** | 2023 செப்டெம்பர் 14ஆம் திகதி மு.ப. 10.00 மணித்தியாலம் (உள்ளூர் நேரம்) |

1. இலங்கை சோசலிச குடியரசானது 145 மில்லியன் ஐ.அ. டொலருக்குச் சமமான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (**ADB**) கல்வி அமைச்சின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட (**STHRD** செயற்றிட்டம்) அமுல்நடாத்தலின் கிரயச் செலவினத்திற்காக பெற்றுக் கொண்டுள்ளதுடன் இந்த நிதியின் பெறுகைகளின் பகுதியொன்றை மேலே பெயரிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவழிப்பதற்கு உத்தேசித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (**ADB**) வள நாடுகளின் தகுதியுள்ள விலைமனுதாரர்களும் இவ்விலைமனுவில் பங்கேற்கலாம்.
2. இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட, பிரதி செயற்றிட்ட பணிப்பாளரின் (''கொள்வனவாளர்'') சார்பாக பல்கலைக்கழக பெறுகைக் குழுவின் தலைவர் **MOE/STHRD/SB/F04C - இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கு ICT கணனி ஆய்வுகூட தளபாடங்களின் (``பொருட்கள்'')** பெறுகைக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். இந்த பெறுகையானது இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கு ICT கணனி ஆய்வுகூட தளபாடங்களின் பெறுகை என்பதை அடக்குகின்றது. ஒப்பந்தம் கையொப்பமிடும் திகதியிலிருந்து பூர்த்தி செய்யும் காலப்பகுதியானது 12 வாரங்களாகும்.
3. இந்த விலைமனுக்கோரலில் பங்குபெறுவதற்காக பின்வரும் பிரதான தகைமைகளை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.
   - கடந்த மூன்று வருடங்களில் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் பின்வரும் அட்டவணையில் 2ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியையுடையதும் நிகரான தன்மை மற்றும் சிக்கல்தன்மை ஆகியவற்றைக் கொண்ட ஆகக் குறைந்தது இரண்டு ஒப்பந்தங்களை 6ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறான வழங்கலின் நோக்கத்திற்காக பிரதான வழங்குனராக வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.
   - கடந்த மூன்று வருடங்களில் பின்வரும் அட்டவணையில் 3ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பூர்த்தி செய்யப்பட்ட அல்லது முடிவுறாத ஒப்பந்தங்களுக்காக விலைமனுதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த பணக்கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிதிப்புரள்வு.

***விலைக்கோரலில் பங்குபற்றுவதற்கான பிரதான தகைமைகள்***

| நிரல் - 1 | நிரல் - 2 | நிரல் - 3 |
|---|---|---|
| ***லொட் இலக்கங்கள் மற்றும் விபரங்கள்*** | ***ஒவ்வொரு ஒப்பந்தத்தினதும் பெறுமதி (இல. ரூபா)*** | ***வருடாந்த சராசரி புரள்வின் பெறுமதி (இல. ரூபா)*** |
| Lot 01- Computer Lab Teaching Peripherals | 6,000,000.00 | 15,000,000.00 |
| Lot 02- Computer Lab Furniture for Instructor | 224,000.00 | 560,000.00 |
| Lot 03- Student Furniture for Computer Lab | 6,094,800.00 | 15,237,000.00 |
| Lot 04- UPS | 1,500,000.00 | 3,750,000.00 |
| Lot 05- Laser Pointers & Drawing Pads | 640,000.00 | 1,600,000.00 |

4. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) பண்டங்களின் பெறுகை ஒற்றைக்கட்ட-ஒரு கடித உறை நடைமுறையில் பகிரங்க போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்கேற்கலாம்.
5. மேலதிக தகவலைப் பெற்றுக்கொள்ளவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கவும், விலைமனுதாரர் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.
   சிரேஷ்ட பெறுகை அலுவலர்,
   செயற்திட்ட அமுல்நடாத்தல் பணிமனை,
   விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,

   தொழில்நுட்பவியல் பீடம்,
   இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்,
   பெலிஹுல்ஓய,
   இலங்கை.
   ZIP code : 70140
   தொலைபேசி : 045-2280081
   மின்னஞ்சல் : pasb-sthrd@mohe.gov.lk

   - விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் சபரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் பீடத்தின் பணிப்பாளர் சபை அறையில் இடம்பெறும்.
6. ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யவுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்களால் **"MOE/STHRD/SB/F04C - இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கு ICT கணனி ஆய்வுகூட தளபாடங்களின் பெறுகை"** என்பதற்கான விலைமனுக்களை வேண்டி மேலேயுள்ள முகவரிக்கு எழுத்து / மின்னஞ்சல் மூலம் அனுப்புதல் வேண்டும். மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 இ.ரூபாவை (ஐயாயிரம் இலங்கை ரூபா மாத்திரம்) ரொக்கப் பணத்தில் அல்லது வங்கி வரைவாக பிரதி செயற்றிட்ட பணிப்பாளர், STHRD செயற்றிட்டம், இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் அல்லது பெலிஹுல்ஓய இலங்கை வங்கியில் பேணப்படும் 0083695474 என்ற கணக்கிலக்கத்திற்கு (சகல லொட்களுக்குமான ஒரு ஆவணத்திற்கு) வரவு வைக்கப்படல் வேண்டும். ஆவணம்/ஆவணங்கள் வங்கி வரவுத் துண்டைச் சமர்ப்பித்ததன் பின் 2023.08.14ஆம் திகதி முதல் மின்னஞ்சலின் ஊடாக மட்டும் அனுப்பப்படும். காணாமல் போன அல்லது தாமதமான ஒப்படைத்தலுக்கு பொறுப்பேற்கப்பட மாட்டாது.
7. 2023.09.14ஆம் திகதி 10:00 மணித்தியாலம் அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனுப்பிணையுடன் உங்கள் விலைமனுக்களை ஒப்படைக்கவும்.

   பிரதி செயற்றிட்ட பணிப்பாளர்,
   செயற்றிட்ட அமுலாக்கல் பணிமனை,
   STHRD செயற்றிட்டம்,
   தொழில்நுட்பவியல் பீடம்,
   இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்,
   பெலிஹுல்ஓய, இலங்கை.

   - பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகள் **மூலப்பிரதி** மற்றும் **நகல்பிரதி** என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியாக உள்ளிட்டு ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என முறையே அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். அதன் பின்னர், இந்த இரு தபாலுறைகளும் இன்னொரு தபாலுறையில் உள்ளிட்டு, முத்திரையிடப்பட்டு உரிய ஒப்பந்த அடையாளத்தை (**ID**) அதன் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.
8. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரம் முடிவடைந்ததும் தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்,**
**பெலிஹுலஓய,**
**இலங்கை.**
**ZIP code: 70140**
**திகதி: 2023-08-13.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்

### கல்வி அமைச்சு

| | |
|---|---|
| **கடனிலக்கம் மற்றும் தலைப்பு** | 3698/3699-SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வளம் அபிவிருத்தி செயற்றிட்டம் |
| **ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு** | **MOE/STHRD/SB/V01 :** இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கு மாணவர் ஆராய்ச்சி வேலைகள் மற்றும் பொருட்கள் சேகரிப்பதற்கான வாகனத்தின் பெறுகை |
| **விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி** | 2023 செப்டெம்பர் 14ஆம் திகதி மு.ப. 10.00 மணித்தியாலம் (உள்ளூர் நேரம்) |

1. இலங்கை சோஷலிச குடியரசானது 145 மில்லியன் ஐ.அ. டொலருக்குச் சமமான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (**ADB**) கல்வி அமைச்சின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட (**STHRD** செயற்றிட்டம்) அமுல் நடாத்தலின் கிரயச் செலவினத்திற்காக பெற்றுக் கொண்டுள்ளதுடன் இந்த நிதியின் பெறுகைகளின் பகுதியொன்றை மேலே பெயரிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவழிப்பதற்கு உத்தேசித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (**ADB**) வள நாடுகளின் தகுதியுள்ள விலைமனுதாரர்களும் இவ்விலைமனுவில் பங்கேற்கலாம்.
2. இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனிதவள அபிவிருத்தி செயற்றிட்ட, பிரதி செயற்றிட்ட பணிப்பாளரின் (''கொள்வனவாளர்'') சார்பாக பல்கலைக்கழக பெறுகைக் குழுவின் தலைவர் **MOE/STHRD/SB/V01 - இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் - மாணவர் ஆராய்ச்சி வேலைகள் மற்றும் பொருட்கள் சேகரிப்பதற்கான வாகனத்தின் (``பொருட்கள்'')** பெறுகைக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். இந்த பெறுகையானது இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கு மாணவர் ஆராய்ச்சி வேலைகள் மற்றும் பொருட்கள் சேகரிப்பதற்கான வாகனத்தின் பெறுகை என்பதை அடக்குகின்றது. ஒப்பந்தம் கையொப்பமிடும் திகதியிலிருந்து பூர்த்தி செய்யும் காலப்பகுதியானது 12 வாரங்களாகும்.
3. இந்த விலைமனுக்கோரலில் பங்குபெறுவதற்காக பின்வரும் பிரதான தகைமைகளை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.
   - கடந்த மூன்று வருடங்களில் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் பின்வரும் அட்டவணையில் 2ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியையுடையதும் நிகரான தன்மை மற்றும் சிக்கல் தன்மை ஆகியவற்றைக் கொண்ட ஆகக் குறைந்தது இரண்டு ஒப்பந்தங்களை 6ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறான வழங்கலின் நோக்கத்திற்காக பிரதான வழங்குநராக வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.
   - கடந்த மூன்று வருடங்களில் பின்வரும் அட்டவணையில் 3ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பூர்த்தி செய்யப்பட்ட அல்லது முடிவுறாத ஒப்பந்தங்களுக்காக விலைமனுதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த பணக்கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிதிப்புரள்வு.

***விலைக்கோரலில் பங்குபற்றுவதற்கான பிரதான தகைமைகள்***

| நிரல் - 1 | நிரல் - 2 | நிரல் - 3 |
|---|---|---|
| ***லொட் இலக்கங்கள் மற்றும் விபரங்கள்*** | ***ஒவ்வொரு ஒப்பந்தத்தினதும் பெறுமதி (இல. ரூபா)*** | ***வருடாந்த சராசரி புரள்வின் பெறுமதி (இல. ரூபா)*** |
| PASSENGER BUS | 12,600,000.00 | 31,500,000.00 |

4. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) பண்டங்களின் பெறுகை ஒற்றைக்கட்ட-ஒரு கடித உறை நடைமுறையில் பகிரங்க போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்கேற்கலாம்.
5. மேலதிக தகவலைப் பெற்றுக்கொள்ளவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கவும், விலைமனுதாரர் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

   சிரேஷ்ட பெறுகை அலுவலர்,
   செயற்றிட்ட அமுல்நடாத்தல் பணிமனை,
   விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனிதவள அபிவிருத்தி செயற்றிட்டம்,
   தொழில்நுட்பவியல் பீடம்,
   இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,
   பெலிஹுல்ஓய,
   இலங்கை.
   ZIP code : 70140
   தொலைபேசி : 045-2280081
   மின்னஞ்சல் : pasb-sthrd@mohe.gov.lk

   - விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் பீடத்தின் பணிப்பாளர் சபை அறையில் இடம்பெறும்.
6. ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யவுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்களால் **"MOE/STHRD/SB/V01 - இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கு மாணவர் ஆராய்ச்சி வேலைகள் மற்றும் பொருட்கள் சேகரிப்பதற்கான வாகனத்தின் பெறுகை"** என்பதற்கான விலைமனுக்களை வேண்டி மேலேயுள்ள முகவரிக்கு எழுத்து / மின்னஞ்சல் மூலம் அனுப்புதல் வேண்டும். மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 இ.ரூபாவை (ஐயாயிரம் இலங்கை ரூபா மாத்திரம்) ரொக்கப் பணத்தில் அல்லது வங்கி வரைவாக பிரதி செயற்றிட்ட பணிப்பாளர், STHRD செயற்றிட்டம், இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் அல்லது பெலிஹுல்ஓய இலங்கை வங்கியில் பேணப்படும் 0083695474 என்ற கணக்கிலக்கத்திற்கு (சகல லொட்களுக்குமான ஒரு ஆவணத்திற்கு) வரவு வைக்கப்படல் வேண்டும். ஆவணம்/ஆவணங்கள் வங்கி வரவுத் துண்டைச் சமர்ப்பித்ததன் பின் 2023.08.14ஆம் திகதி முதல் மின்னஞ்சலின் ஊடாக மட்டும் அனுப்பப்படும். காணாமல்போன அல்லது தாமதமான ஒப்படைத்தலுக்கு பொறுப்பேற்கப்படமாட்டாது.
7. 2023.09.14ஆம் திகதி 10:00 மணித்தியாலம் அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனுப்பிணையுடன் உங்கள் விலைமனுக்களை ஒப்படைக்கவும்.

   பிரதி செயற்றிட்ட பணிப்பாளர்,
   செயற்றிட்ட அமுலாக்கல் பணிமனை,
   STHRD செயற்றிட்டம்,
   தொழில்நுட்பவியல் பீடம்,
   இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,
   பெலிஹுல்ஓய,
   இலங்கை.

   - பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகள் **மூலப்பிரதி** மற்றும் **நகல்பிரதி** என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியாக உள்ளிட்டு ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என முறையே அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். அதன் பின்னர், இந்த இரு தபாலுறைகளும் இன்னொரு தபாலுறையில் உள்ளிட்டு, முத்திரையிடப்பட்டு உரிய ஒப்பந்த அடையாளத்தை (**ID**) அதன் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.
8. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரம் முடிவடைந்ததும் தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,**
**பெலிஹுலஓய,**
**இலங்கை.**
**ZIP code: 70140**
**திகதி: 2023-08-13.**

# கற்பித்தலின் நோக்கத்தையே...

(25ஆம் பக்க தொடர்)

***கேள்வி: தங்கள் மாகாணத்தில் இலவசக் கல்வியின் நோக்கம் நிறைவேற்றப்பட்டுள்ளதா? உதாரணமாக தனது வகுப்பில், தான் கற்பிக்கும் பாடத்தில் பின்னடைவு காட்டும் ஒரு மாணவனை பிற்பகலில் தான் நடத்தும் பிரத்தியேக ரியூசன் வகுப்புக்கு வருமாறு ஆசிரியர் கோருகிறார். அவ்விதம் போவதானால் அதற்குக் கட்டணம் கொடுக்க வேண்டும். அம்மாணவன் வசதி குறைவானவனாக இருந்தால் அந்த வகுப்புக்குப் போக முடியுமா? இவ்விதம் பாடசாலையில் சம்பளம் வாங்கிக் கொண்டு, அங்கே படிப்பிக்காமல் மாணவர்களை ரியூசன் வகுப்புகளுக்கு அழைத்து பணம் கறக்கும் ஆசிரியர்களை தண்டிக்கும் நிகழ்ச்சி நிரலை தங்களது சேவைக் காலத்தில அமுல் நடத்திய துண்டா?***

**பதில்:** உண்மையில் எல்லோரும் கற்கக் கூடிய வாய்ப்பு எங்கும் மறுக்கப்படவில்லை. ரியூசன் என்பது இன்றைய கால கட்டத்தில் பின்னடைவான மாணவர்கள் மட்டுமல்ல, மீள்திறன் கூடிய மாணவர்களும் விரும்பிச் செல்லும் செயற்பாடாக உள்ளது. ஆசிரியர்கள் பற்றாக் குறையுள்ள இடங்களில் மாணவர்களுக்கு இதுவோர் மிகப் பெரிய வாய்ப்பாகும். அதேசமயம் தான் கற்பிக்கும் மாணவர்களை தன்னிடமே ரியூசனுக்கு வருமாறு அழைக்கும் ஆசிரியர்களும் அதிகமாயுள்ளனர். ஆசிரிய சேவையென்பது அர்ப்பணிப்புடன் கூடியது. அர்ப்பணிப்பு இல்லாத விடத்து அது வெறுமனே கூலிக்கு மாரடிக்கும் தொழிலாகிறது. ஒழுக்க விழுமியங்களுடன் கூடிய, அவைதனிலே முந்தியிருக்கச் செய்யும் நற்பிரஜைகளை உருவாக்காத கல்வியால் பயனில்லை. மாணவர்களிடம் பாடசாலைகள் பணம் அறவிட முடியாதென்று அரசின் சுற்று நிருபம் கூறுகிறது. ஆனால், தனியார் வகுப்புகள் பற்றியும் அவற்றை கட்டுப்படுத்துகிற நிபந்தனைகளோடும் எந்தச் சுற்று நிருபமும் வெளியிடப்படவில்லை. இதனால், எவ்விடத்திலும் எந்தவிதத்திலும் இவ்வாறான ரியூசன் நிலை அதிகரித்துச் செல்வதுடன், மாணவர்களின் தகுதிக்கு மீறிய அளவுக்கதிகமான கட்டணங்களும் எவ்வித கட்டுப்பாடுகளுமின்றி அறவிடப்படுகின்றன. இவ்விடயங்களை கட்டுப்படுத்தும் அதிகாரம் மத்திய கல்வி அமைச்சுக்கே உண்டு.

***கேள்வி: இலவசக் கல்வியை பெற்றுக் கொள்வதில் இன்றுள்ள தடைகள் யாவை?***

**பதில்:** இலவசக் கல்வியில் சமசந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும். ஆனால், சில பாடசாலைகளில் அளவுக்கதிகமான ஆசிரியர்கள் உள்ளனர். ஆனால், பல பாடசாலைகள் ஆசிரியர் பற்றாக் குறையுடன் இயங்குகின்றன. பல சமயங்களில் பாடரீதியான ஆசிரிய பற்றாக்குறை காணப்படுகின்றது. கிழக்கு மாகாணத்தில் 376 கணித பாட ஆசிரிய வெற்றிடங்கள் காணப்படுகின்றன. ஆனால், இப்பாடத்திற்குரிய பட்டதாரிகளுக்கு கிழக்கில் பற்றாக்குறை காணப்படுகிறது. அதற்காக அத்தகைய பட்டதாரிகளே அங்கு இல்லையென்று அர்த்தமல்ல. அவர்கள் பிறமாகாண பாடசாலைகளில் நியமனம் பெற்று அம்மாணவர்களை வளப்படுத்துகிறார்கள். இந்த நிலையில் மாற்றம் வந்தாலன்றி எமது மாணவர்களிடம் சிறந்த பெறுபேறுகளை எதிர்பார்க்க முடியாது. அதேபோல பௌதீக வளங்களில் பாடசாலைக்குப் பாடசாலை சமமின்மை காணப்படுகிறது. கற்பித்தல் உபகரணங்களிலும் அவ்வாறே பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபாடு காட்டப்படுவதும் இன்னொரு தடையாகும்.

***கேள்வி: கடந்த காலங்களில் கிழக்கு மாகாணம் கல்வி நிலையில் மிகவும் பின்தங்கிக் காணப்பட்டது யாவரும் அறிந்ததே. ஆனால், தங்களது சேவைக் காலத்தில், அதாவது கடந்த மூன்றாண்டுகளாக பரீட்சைப் பெறுபேறுகள் விடயத்தில் முதல் நிலை பெற்று இதர மாகாணங்களுக்கு முன்னுதாரணமாக விளங்கச் செய்வது எங்ஙனம் சாத்தியமாயிற்று?***

**பதில்:** உண்மையில் கல்வித்துறை சார்ந்த அனைவரையும் சிந்திக்கவும் கவலையடையவும் வைப்பன பரீட்சைப் பெறுபேறுகளாகும். அதனைப் பொறுத்தவரை கிழக்கு மாகாணம் கடந்த காலங்களில் கடைநிலையைப் பெற்று வந்துள்ளது. கடந்த காலங்களில் கிழக்கு அடுத்தடுத்து 8 ஆம் 9 ஆம் இடங்களை பரீட்சைப் பெறுபேறுகள் விடயத்தில் பெற்று வந்துள்ளது. ஆனால் எனதும் ஆசிரிய சமூகத்தினதும் அயராத முயற்சியால் 2021ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி கிழக்கு மாகாணம் முதலாம் இடத்தினைப் பெற்று வாகை சூடியது.

அதேபோல க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையிலும் எட்டாம் இடத்திலிருந்து நாலாமிடத்தைப் பெற்றுக் கொண்டோம். உண்மையில் நாம் பொறுப்பேற்ற காலம் நாடு முழுவதும் கொவிற் 19 தாண்டவமாடிய காலம். பாடசாலைகள் மூடப்பட்டு கற்றல், கற்பித்தல்கள் ஸ்தம்பிதமடைந்திருந்தன. மாகாணக் கல்வித் திணைக்களம் சிறியதொரு குழுவினரோடு இயங்கியது. அக் காலகட்டத்தில் எமது கூட்டங்கள் கலந்துரையாடல்கள் அனைத்தும் online ஊடாக நடைபெற்றதுடன் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதி மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், மாகாண கல்வித் திணைக்கள பிரதி மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர்களோடு online தொடர்பினூடாக மாதிரி வகுப்புகள், கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெற்றன.

அதேபோல அகில இலங்கை தமிழ்த் தினப் போட்டி இதுவரை கடைநிலையிலிருந்த கிழக்கு மாகாணம் (9 ஆமிடம்) இப்போது முதலாமிடத்தை பெற்று விருது பெற்றுள்ளது. அதேவேளை விளையாட்டு, மற்றும் மெய்வல்லுனர் போட்டிகளிலும் கிழக்கு மேல்நிலை பெறத் தொடங்கியது எனது சேவைக் காலத்திலாகும். வடமோடி, தென்மோடியென கிழக்கிலங்கையின் முதுசமான நாட்டுக் கூத்தில் எமது பாடசாலைகள் பாரம்பரிய அண்ணாவிமாரின் கீழ் பயிற்சிகள் பெற்று வருடாவருடம் கலந்து கொண்டு விருதுகள் பெற்றமை எனது சேவைக் காலத்திலாகும்.

அந்த வகையில் எனது இறுதிக் கால சேவையில் சிறந்த பெறுபேறுகளில் கிழக்கு மாகாணம் தடம் பதித்து எனது சேவையையும் கௌரவப்படுத்தியது. கிழக்கு மாகாண கல்வித் துறைக்கு இதுவரை கிடைத்திராத சாதனைகளுடன் நான் ஓய்வு பெறும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியமையை இறைவனின் ஆசீர்வாதமாக கருதுகிறேன்!


## விலைமனுக்களுக்கான அழைப்பு

# இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்

## கல்வி அமைச்சு

| | |
|---|---|
| **கடனிலக்கம் மற்றும் தலைப்பு** | 3698/3699-SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம் |
| **ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு** | **MOE/STHRD/SB/E08A** : இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கான ICT ஆய்வுகூட உபகரணங்களின் பெறுகை |
| **விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி** | 2023 செப்டெம்பர் 14ஆம் திகதி மு.ப. 10.00 மணித்தியாலம் (உள்ளூர் நேரம்) |

1. இலங்கை சோஷலிச குடியரசானது 145 மில்லியன் ஐ.அ. டொலருக்குச் சமமான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (**ADB**) கல்வி அமைச்சின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட (**STHRD** செயற்றிட்டம்) அமுல்நடாத்தலின் கிரயச் செலவினத்திற்காக பெற்றுக் கொண்டுள்ளதுடன் இந்த நிதியின் பெறுகைகளின் பகுதியொன்றை மேலே பெயரிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவழிப்பதற்கு உத்தேசித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (**ADB**) வள நாடுகளின் தகுதியுள்ள விலைமனுதாரர்களும் இவ்விலைமனுவில் பங்கேற்கலாம்.
2. இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட, பிரதி செயற்றிட்ட பணிப்பாளரின் (''கொள்வனவாளர்'') சார்பாக பல்கலைக்கழக பெறுகைக் குழுவின் தலைவர் **MOE/STHRD/SB/E08A - இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கான ICT ஆய்வுகூட உபகரணங்களின் (``பொருட்கள்'')** பெறுகைக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். இந்த பெறுகையானது இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கான ICT உபகரணங்களின் பெறுகை என்பதை அடக்குகின்றது. ஒப்பந்தம் கையொப்பமிடும் திகதியிலிருந்து பூர்த்தி செய்யும் காலப்பகுதியானது 12 வாரங்களாகும்.
3. இந்த விலைமனுக்கோரலில் பங்குபெறுவதற்காக பின்வரும் பிரதான தகைமைகளை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.
   - கடந்த மூன்று வருடங்களில் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் பின்வரும் அட்டவணையில் 2ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியையுடையதும் நிகரான தன்மை மற்றும் சிக்கல்தன்மை ஆகியவற்றைக் கொண்ட ஆகக் குறைந்தது இரண்டு ஒப்பந்தங்களை 6ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறான வழங்கலின் நோக்கத்திற்காக பிரதான வழங்குநராக வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.
   - கடந்த மூன்று வருடங்களில் பின்வரும் அட்டவணையில் 3ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பூர்த்தி செய்யப்பட்ட அல்லது முடிவுறாத ஒப்பந்தங்களுக்காக விலைமனுதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த பணக்கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிதிப்புரள்வு.

***விலைக்கோரலில் பங்குபற்றுவதற்கான பிரதான தகைமைகள்***

| நிரல் - 1 | நிரல் - 2 | நிரல் - 3 |
|---|---|---|
| ***லொட் இலக்கங்கள் மற்றும் விபரங்கள்*** | **ஒவ்வொரு ஒப்பந்தத்தினதும் பெறுமதி (இல. ரூபா)** | ***வருடாந்த சராசரி புரள்வின் பெறுமதி (இல. ரூபா)*** |
| Lot 01-Desktop Computers | 33,600,000.00 | 84,000,000.00 |
| Lot 02-Workstations | 1,200,000.00 | 3,000,000.00 |

4. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) பண்டங்களின் பெறுகை ஒற்றைக்கட்ட-ஒரு கடித உறை நடைமுறையில் பகிரங்க போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்கேற்கலாம்.
5. மேலதிக தகவலைப் பெற்றுக்கொள்ளவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கவும், விலைமனுதாரர் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

   சிரேஷ்ட பெறுகை அலுவலர்,
   செயற்றிட்ட அமுல்நடாத்தல் பணிமனை,
   விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,
   தொழில்நுட்பவியல் பீடம்,
   இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,
   பெலிஹுல்ஓய,
   இலங்கை.
   ZIP code : 70140
   தொலைபேசி : 045-2280081
   மின்னஞ்சல் : pasb-sthrd@mohe.gov.lk

   - விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் பீடத்தின் பணிப்பாளர் சபை அறையில் இடம்பெறும்.
6. ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யவுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்களால் **"MOE/STHRD/SB/E08A - இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கான ICT உபகரணங்களின் பெறுகை"** என்பதற்கான விலைமனுக்களை வேண்டி மேலேயுள்ள முகவரிக்கு எழுத்து / மின்னஞ்சல் மூலம் அனுப்புதல் வேண்டும். மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 இ.ரூபாவை (ஐயாயிரம் இலங்கை ரூபா மாத்திரம்) ரொக்கப் பணத்தில் அல்லது வங்கி வரைவாக பிரதி செயற்றிட்ட பணிப்பாளர், STHRD செயற்றிட்டம், இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் அல்லது பெலிஹுல்ஓய இலங்கை வங்கியில் பேணப்படும் 0083695474 என்ற கணக்கிலக்கத்திற்கு (சகல லொட்களுக்குமான ஒரு ஆவணத்திற்கு) வரவு வைக்கப்படல் வேண்டும். ஆவணம்/ஆவணங்கள் வங்கி வரவுத் துண்டைச் சமர்ப்பித்ததன் பின் 2023.08.14ஆம் திகதி முதல் மின்னஞ்சலின் ஊடாக மட்டும் அனுப்பப்படும். காணாமல் போன அல்லது தாமதமான ஒப்படைத்தலுக்கு பொறுப்பேற்கப்பட மாட்டாது.
7. 2023.09.14ஆம் திகதி 10:00 மணித்தியாலம் அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனுப்பிணையுடன் உங்கள் விலைமனுக்களை ஒப்படைக்கவும்.

   பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர்,
   செயற்றிட்ட அமுலாக்கல் பணிமனை,
   STHRD செயற்றிட்டம்,
   தொழில்நுட்பவியல் பீடம்,
   இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,
   பெலிஹுல்ஓய,
   இலங்கை.

   - பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகள் **மூலப்பிரதி** மற்றும் **நகல்பிரதி** என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியாக உள்ளிட்டு ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என முறையே அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். அதன் பின்னர், இந்த இரு தபாலுறைகளும் இன்னொரு தபாலுறையில் உள்ளிட்டு, முத்திரையிடப்பட்டு உரிய ஒப்பந்த அடையாளத்தை (**ID**) அதன் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.
8. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரம் முடிவடைந்ததும் தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

**தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,
பெலிஹுலஓய,
இலங்கை.
ZIP code: 70140**

**திகதி: 2023-08-13.**



## விலைமனுக்களுக்கான அழைப்பு

# இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்

## கல்வி அமைச்சு

| | |
|---|---|
| **கடனிலக்கம் மற்றும் தலைப்பு** | 3698/3699-SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம் |
| **ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு** | **MOE/STHRD/SB/E50** : இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கு உயிரியல்வலு (Bioenergy) உபகரணங்கள் 1 (C/H/N Elemental Analyzer) என்பதன் பெறுகை |
| **விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி** | 2023 செப்டெம்பர் 14ஆம் திகதி மு.ப. 10.00 மணித்தியாலம் (உள்ளூர் நேரம்) |

1. இலங்கை சோஷலிச குடியரசானது 145 மில்லியன் ஐ.அ. டொலருக்குச் சமமான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) கல்வி அமைச்சின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட (STHRD செயற்றிட்டம்) அமுல்நடாத்தலின் கிரயச் செலவினத்திற்காக பெற்றுக் கொண்டுள்ளதுடன் இந்த நிதியின் பெறுகைகளின் பகுதியொன்றை மேலே பெயரிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவழிப்பதற்கு உத்தேசித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) வள நாடுகளின் தகுதியுள்ள விலைமனுதாரர்களும் இவ்விலைமனுவில் பங்கேற்கலாம்.
2. இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட, பிரதி செயற்றிட்ட பணிப்பாளரின் (''கொள்வனவாளர்'') சார்பாக பல்கலைக்கழக பெறுகைக் குழுவின் தலைவர் **MOE/STHRD/SB/E50 - இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கு உயிரியல்வலு (Bioenergy) உபகரணங்கள் 1 (C/H/N Elemental Analyzer) ("பொருட்கள்")** பெறுகைக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். இந்த பெறுகையானது இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கு உயிரியல்வலு (Bioenergy) உபகரணங்கள் 1 (C/H/N Elemental Analyzer) என்பதன் பெறுகை என்பதை அடக்குகின்றது. ஒப்பந்தம் கையொப்பமிடும் திகதியிலிருந்து பூர்த்தி செய்யும் காலப்பகுதியானது 12 வாரங்களாகும்.
3. இந்த விலைமனுக்கோரலில் பங்குபெறுவதற்காக பின்வரும் பிரதான தகைமைகளை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.
   - கடந்த மூன்று வருடங்களில் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் பின்வரும் அட்டவணையில் 2ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியையுடையதும் நிகரான தன்மை மற்றும் சிக்கல்தன்மை ஆகியவற்றைக் கொண்ட ஆகக் குறைந்தது இரண்டு ஒப்பந்தங்களை 6ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறான வழங்கலின் நோக்கத்திற்காக பிரதான வழங்குநராக வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.
   - கடந்த மூன்று வருடங்களில் பின்வரும் அட்டவணையில் 3ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பூர்த்தி செய்யப்பட்ட அல்லது முடிவுறாத ஒப்பந்தங்களுக்காக விலைமனுதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த பணக்கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிதிப்புரள்வு.

***விலைக்கோரலில் பங்குபற்றுவதற்கான பிரதான தகைமைகள்***

| நிரல் - 1 | நிரல் - 2 | நிரல் - 3 |
|---|---|---|
| ***லொட் இலக்கங்கள் மற்றும் விபரங்கள்*** | **ஒவ்வொரு ஒப்பந்தத்தினதும் பெறுமதி (இல. ரூபா)** | ***வருடாந்த சராசரி புரள்வின் பெறுமதி (இல. ரூபா)*** |
| BENG 01 C/H/N Elemental Analyzer | 36,400,000.00 | 91,000,000.00 |

4. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) பண்டங்களின் பெறுகை ஒற்றைக்கட்ட-ஒரு கடித உறை நடைமுறையில் பகிரங்க போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்கேற்கலாம்.
5. மேலதிக தகவலைப் பெற்றுக்கொள்ளவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கவும், விலைமனுதாரர் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

   சிரேஷ்ட பெறுகை அலுவலர்,
   செயற்றிட்ட அமுல்நடாத்தல் பணிமனை,
   விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,
   தொழில்நுட்பவியல் பீடம்,
   இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,
   பெலிஹுல்ஓய,
   இலங்கை.
   ZIP code : 70140
   தொலைபேசி : 045-2280081
   மின்னஞ்சல் : pasb-sthrd@mohe.gov.lk

   - விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் பீடத்தின் பணிப்பாளர் சபை அறையில் இடம்பெறும்.
6. ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யவுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்களால் **"MOE/STHRD/SB/E50 - இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கு உயிரியல்வலு (Bioenergy) உபகரணங்கள் 1 (C/H/N Elemental Analyzer) என்பவற்றின் பெறுகை"** என்பதற்கான விலைமனுக்களை வேண்டி மேலேயுள்ள முகவரிக்கு எழுத்து / மின்னஞ்சல் மூலம் அனுப்புதல் வேண்டும். மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 இ.ரூபாவை (ஐயாயிரம் இலங்கை ரூபா மாத்திரம்) ரொக்கப் பணத்தில் அல்லது வங்கி வரைவாக பிரதி செயற்றிட்ட பணிப்பாளர், STHRD செயற்றிட்டம், இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் அல்லது பெலிஹுல்ஓய இலங்கை வங்கியில் பேணப்படும் 0083695474 என்ற கணக்கிலக்கத்திற்கு (சகல லொட்களுக்குமான ஒரு ஆவணத்திற்கு) வரவு வைக்கப்படல் வேண்டும். ஆவணம்/ ஆவணங்கள் வங்கி வரவுத் துண்டைச் சமர்ப்பித்ததன் பின் 2023.08.14ஆம் திகதி முதல் மின்னஞ்சலின் ஊடாக மட்டும் அனுப்பப்படும். காணாமல் போன அல்லது தாமதமான ஒப்படைத்தலுக்கு பொறுப்பேற்கப்பட மாட்டாது.
7. 2023.09.14ஆம் திகதி 10:00 மணித்தியாலம் அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனுப்பிணையுடன் உங்கள் விலைமனுக்களை ஒப்படைக்கவும்.

   பிரதி செயற்றிட்ட பணிப்பாளர்,
   செயற்றிட்ட அமுலாக்கல் பணிமனை,
   STHRD செயற்றிட்டம்,
   தொழில்நுட்பவியல் பீடம்,
   இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,
   பெலிஹுல்ஓய, இலங்கை.

   - பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகள் **மூலப்பிரதி** மற்றும் **நகல்பிரதி** என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியாக உள்ளிட்டு ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என முறையே அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். அதன் பின்னர், இந்த இரு தபாலுறைகளும் இன்னொரு தபாலுறையில் உள்ளிட்டு, முத்திரையிடப்பட்டு உரிய ஒப்பந்த அடையாளத்தை (ID) அதன் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.
8. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரம் முடிவடைந்ததும் தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

**தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,
பெலிஹுலஓய, இலங்கை.
ZIP code: 70140**

**திகதி: 2023-08-13.**


# மட்டக்களப்பில் வரட்சியின் உச்சம்

***(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)***

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் தற்போது அதிக வெயிலுடனான காலநிலை நிலவி வருகின்றது. இதனால் அதிக வரட்சியையும் அவதானிக்க முடிகின்றது. இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங்கரைப் பகுதியில் அமைந்துள்ள போரதீவுப்பற்றுப் பிரதேசத்தில் நிலவும் வரட்சி காணமாக நீர் நிலைகள் வற்றியுள்ளதுடன், குழாய் மூலமான குடிநீர் வழங்கப்படாத கிராமப் புறங்களில் மக்கள் குடிநீருக்காக அதிகளவு பிரயத்தனங்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இது இவ்வாறு இருக்க போரதீவுப்பற்றுப் பிரதேசத்தில் 14 கிராமசேவையாளர் பிரிவுகளில் 3 வவுசர்கள் மூலம் தினமும் 20000 லீற்றர் குடிநீர் மக்களுக்கு வழங்கி வருவதாக போரதீவுப்பற்றுப் பிரதேச சபை நிருவாகம் தெரிவிக்கின்றது.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வரும் இக்குடி நீர் வழங்கும் செயற்பாடுகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் வரைக்கும் மேற்கொள்ளப்படும் என பிரதேச சபை மேலும் தெரிவிக்கின்றது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஓகஸ்ட் மாதம் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.



Senthooram
செந்தூரம்
2023 ஓகஸ்ட் 13 ஞாயிற்றுக்கிழமை

04
நஜ்முல் ஹுசைனின் "வேறாகா வேர்கள்" நூல் வெளியீட்டு விழா

06
கண்ணதாசனின் வரிகள்தான் என்னை கவிதை உலகுக்கு வரத் தூண்டியது

SKவுக்கு ஜோடியாகும் மிருணாள்
09

# வீணாக சிறை அனுபவித்த அப்பாவி

இரண்டே இரண்டு டொலர் செலுத்தினால் சிறையில் இருந்து விடுதலை பெறலாம் என்று தெரியாமல் அமெரிக்காவில் ஒருவர் ஐந்து மாதங்கள் வீணாக சிறையில் கழித்திருக்கிறார்.

பிளாட்டிரோன் பகுதியில் இருக்கும் கடை ஒன்றில் இருந்து ஆடை ஒன்றை திருடியதாக குற்றம் சாட்டிய பொலிஸாரை அடித்ததுதான் அயிதப்தல் சலம் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு. அதற்காக அவர் 2014 நவம்பர் 21 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டார்.

வழக்கு விசாரணைக்கு வந்தபோது சலமுக்கு 25,000 டொலர் பிணை நிர்ணயிக்கப்பட்டது. அதேபோன்று மேலும் இரு சிறு குற்றங்களுக்காக 2 டொலர் பிணையும் நிர்ணயிக்கப்பட்டது.

ஆனால் அந்த வழங்கு அடுத்த நாளும் விசாரணைக்கு வந்தது. சிறையில் இருக்கும் சலமுக்கு அது தெரியாது. அவரது வழக்கறிஞர் அது பற்றி கூறவும் இல்லை. வழக்கு விசாரணையில் சலம் மீதான பெரிய குற்றச்சாட்டு தள்ளுபடி செய்யப்பட்டது. எனவே அவர் இரண்டு டொலர்கள் கொடுத்தால் சிறையில் இருந்து விடுதலை பெற்றிருக்கலாம்.

பாவம், அது தெரியாமல் வீணாக அவர் சிறையில் காலத்தை கழித்தார்.

கடைசியில் சிறைச்சாலை பாதிரியாரே இரண்டு வேளை சாப்பாட்டுக்குக் கூட போதாத அந்த இரண்டு டொலர் பிணையை கொடுத்து சலமை 5 மாதங்களின் பின் விடுவித்தார். ஆனால் குழப்பம் முடியவில்லை.

தன் மீதான வழக்கு நடக்கும் திகதிகள் தெரியாததால் அவர் பல தடவைகள் நீதிமன்றத்தில் ஆஜராக தவறிவிட்டார். இதனால் தன் மீதான உண்மையான தாக்குதல் குற்றச்சாட்டுக்கான வழக்கு ஏற்பாடுகளை செய்யாததற்காக அவர் மீண்டும் கைது செய்யப்பட்டார். இப்போது அவரது பிணை 30,000 டொலர்களாக எகிறியது.



பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

## பேய்த் தூக்கம் போடும் ஊர்





கசகஸ்தான் நாட்டிலே கரஸ்னொகோர்ஸ் என்று ஒரு சிறிய நகரம். இந்த ஊரில் இருப்பவர்களுக்கு விசித்திரமான ஒரு பிரச்சினை. திடீரென்று உறக்கம் வரும். நடந்துகொண்டிருக்கும்போது, பேசிக்கொண்டிருக்கும்போதெல்லா திடீரென்று உறங்க ஆரம்பிப்பார்கள். சிலர் தொடர்ச்சியாக எழு நாட்கள் வரை உறங்கியும் இருக்கிறார்கள். மனிதர்கள் என்றால் பரவாயில்லை பூனைகள் கூட இப்பிடி பேய் தூக்கம் போடுகின்றன.

என்ன பிரச்சினை என்று தேடிப் பார்த்தால் ஊருக்கு அருகில் இருக்கும் சோவியட் காலத்தின் கைவிட்டுச் சென்ற யுரேனிய சுரங்கங்கள்தான் காரணம். இந்த சுரங்கங்களில் இருந்து கார்பன் மோனாக்சைட் கசிகிறது. இதனால் ஊரில் ஒட்சிசன் அளவு குறைந்து மக்களை தூக்கத்தில் தள்ளிவிடுகிறது. கடைசியில் ஊரில் இருக்கும் மக்கள் எல்லோருமே வெளியேற்றப்பட்டார்கள்.



## இதுவரை வாழ்ந்த உயரமான பெண்

உலகில் இதுவரை பதிவான மிக உயரமான பெண் என்ற சாதனை நெதர்லாந்தைச் சேர்ந்த ட்ரிஜின்ட்ஜே கீவர் என்பவரிடமே இருக்கிறது. இவர் வாழ்ந்தது இற்றைக்கு 400 ஆண்டுகளுக்கு முன்னர். ஆனால் இவரது உயரம் அப்போது ஐரோப்பா எங்கும் அண்ணாந்து பார்க்க வைத்தது.

அப்போதைய பதிவுகளின்படி கீவரின் உயரம் 8 அடி 4.4 அங்குலம். அதாவது இப்போது உயிர் வாழ்பவர்களில் யாரும் இந்த உயரத்துக்கு வளரவில்லை என்றால் அவரது உயரம் எவ்வளவு என்பது புரிந்திருக்கும். 1616இல் பிறந்த கீவர் வேகமாக வளர்ந்து கொண்டே போனார். ஒன்பது வயதாகும்போதே 6 அடி 7 அங்குலத்திற்கு வளர்ந்து விட்டார்.

பெற்றோர்களும் அவரை காட்டி கண்காட்சிகளை நடத்தி காசு சம்பாதிக்க ஆரம்பித்தார்கள். என்றாலும் கீவரின் உயரத்துக்கு ஏற்ப ஆயுள் இருக்கவில்லை. 17 வயதிலேயே புற்றுநோயால் இறந்துவிட்டார்.

அவரது பாதணி இன்றும் கூட காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அதன் நீளம் 14 அங்குலம்.

இன்று உலகில் பதிவான மிக உயரமான மனிதர்களில் கீவர் ஏழாவது இடத்தில் இருக்கிறார். 1940இல் பிறந்து 22 வயதே வாழ்ந்த அமெரிக்காவைச் சேர்ந்த ரொபட் வெட்லோவே இதுவரை பதிவான உலகின் மிக உயரமான மனிதன் என்ற சாதனைக்கு சொந்தக்காரராக இருக்கிறார். அவரது உயரம் 8 அடி 11.1 அங்குலம்.





## பலூன் குண்டுகள்

இப்போதெல்லாம் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் இருக்கின்றன. நல்ல வேளை இரண்டாம் உலகப் போர் காலத்தில் அப்படி ஓர் ஆயுதம் இருக்கவில்லை. ஆனால் ஜப்பான் சும்மா இருக்கவும் இல்லை.

இராட்சத பலூன்களில் குண்டுகளை கட்டி பசுபிக் பெருங்கடலுக்கு மேலால் பறக்கவிட்டது. இந்த பலூன்கள் கட்டுப்பாட்டை இழந்து பறந்த போதும் அதில் ஒரு கணக்கு இருந்தது. அவ்வாறு பறந்த பலூன்கள் ஒரு சில கனடா, மெக்சிகோவில் விழுந்தாலும் பெருபாலானவை அமெரிக்கவை வந்தடைந்தது. அமெரிக்காவுக்கு இந்த பலூன்கள் ஆரம்பத்தில் பெரும் மர்மமாகவே இருந்தது.

இரண்டாம் உலகப் போரில் அமெரிக்கா முக்கிய பங்கு வகித்தாலும் ஐரோப்பா மற்றும் ஆசியாவில்தான் போர் உக்கிரமாக இருந்தது. அமெரிக்க மண்ணில் பத்திரிகை மற்றும் வானொலி செய்தி தவிர போர் வாடை கூட வீசவில்லை. அப்படி இருக்க இந்த பலூன்கள்தான் அமெரிக்காவுக்கு விடுத்த ஒரே அச்சுறுத்தல்.

1944 மற்றும் 1945 காலப் பகுதியில் ஏகாதிபத்திய ஜப்பான் இராணுவம் அமெரிக்காவை நோக்கி சுமார் 9,300 பலூன்களை பறக்கவிட்டது. இவை அமெரிக்காவில் தீ சம்பவங்களை ஏற்படுத்தியது. ஒரு பலூன் வெடித்து கர்ப்பிணி பெண் மற்றும் சிறுவர்கள் என ஆறு பேர் கொல்லப்பட்டார்கள். இரண்டாம் உலகப் போரில் அமெரிக்க மண்ணில் உயிரிழப்புகள் நிகழ்ந்த ஒரே சம்பவம் இதுதான்.





நீதிபதி : 'நகைகளை திருடியதாக உன் மீது தொடரப்பட்ட வழக்கில் நீ குற்ற வாளி இல்லைன்னு நிருபணம் ஆயி டுச்சி. நீ போகலாம்'
குற்றவாளி : ' அப்படீன்னா திருடிய நகைகளை நானே வச்சுக்கட்டுமா சாமி?'

ஆசிரியர் : பஸ் கண்டெக்டரிடம் 50 ரூபாய் கொடுத்துட்டு 40 ரூபாவிற்கு டிக்கெட் வாங்கினா மீதி உங்களுக்கு எவ்ளோ தருவாரு?
மாணவன் : ஜேஞ்ச் இல்லைனு சொல்லுவாரு





நிருபர் : உங்க வருங்காலக் கணவர் எப்படி இருக்கணும்னு நினைக்கி றீங்க?
நடிகை : நிகழ்காலக் கணவரை விட நல்லவரா இருக்கணும்னு தான்.



சுரேஷ் : பசங்க ளெல்லாம் பயப் படற மாதிரி சினி மாப்படப் பெயர் சொல்லுடா பார்க்கலாம்...

ரமேஷ் : "காலையில் எக்சாம் மாலையில் ரிசல்ட்...'



மகன் : அப்பா லஞ்சத்துக்கும் மழைக்கும் என்னா சம்பந்தம்
அப்பா : ஒன்னுமில்லை
மகன் : பின்ன என்னாத்துக்கு மழையால் இயல்பு நிலை பாதிப்புன்னு பேப்பர்ல நியுஸ் போட்ருக்கான். ஒனக்கு ஒன்னும் வருமானம் ஸ்டாப் ஆவலியே.
அப்பா : ...............





காதலன் : கண்ணே உனக் காக இமயமலை யையும் தாண்டு வேன்.
காதலி : அதுக் காக ஏன் ஒரு காலை நொண்ட றீங்க ?
காதலன் : உங்க வீட்டு கேட்டை தாண்டும் போது தடுக்கி விழுந் துட்டேன்.

ஆசிரியர் : காந்திக்கும் ஏசுக்கும் கிருஷ்ண ருக்கும் உள்ள ஒத்துமை என்ன?
மாணவன் : எல்லாருமே அரசு விடுமுறை அன்று பொறந்தவங்க .... சார்
ஆசிரியர் : ???????????



அம்மா : எதுக்குடா, குளிக் கும்போது முதல் செம்புத் தண்ணீரை கீழே ஊத்தறே?
மகன் : முதல் செம்பு தண்ணீரை ஊத்தும்போது தான் ரொம்பக் குளிரும்னு நீங்கதானே மம்மி சொல் லீங்க... அதான் கீழே ஊத்த றேன்...

இவர் : டாக்டர் ஏன் கோபமா இருக்காரு..?
அவர் : ஆபரே ஷன் தியேட்டர் வாசல்ல யாரோ "ஒன்வே'ன்னு எழுதி வச்சுட் டாங்களாம்...



Senthooram செந்தூரம்

# என். நஜ்முல் ஹுசைன் எழுதிய "வேறாகா வேர்கள்" சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா



















என். நஜ்முல் ஹுசைன் எழுதிய "வேறாகா வேர்கள்" சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா கடந்த ஞாயிறு 06/08/2023 அன்று கொழும்பு 10, அல் ஹிதாயா பஹார்தீன் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. ஸ்ரீ லங்கா இஸ்லாமிய கலை இலக்கிய மன்ற ஏற்பாட்டில் நடந்த நிகழ்வுக்கு மன்றத் தலைவர் கலாபூஷணம். தமிழ்த் தென்றல் அலி அக்பர் தலைமை வகித்தார்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டதோடு நூல் நயவுரையும் ஆற்றினார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகர் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் முன்னிலை வகிக்க சமூக சேவையாளர் டாக்டர் எம். சீ. பஹார்தீன் நூலின் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார். தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தெ. செந்தில் வேலவர் விசேட அதிதியாக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மன்றச் செயலாளர் எம். எஸ். எம். ஜின்னா வரவேற்புரையும், சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ் வாழ்த்துரையும் வழங்கினர். கலைஞானச்சுடர் சுபாஷினி பிரணவன் வாழ்த்துக் கவிதை வாசித்தார். கண்டி, கல்வித் திணைக்கள ஆசிரிய ஆலோசகர், கவிஞர் ரஷீத் எம். றியாழ் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

ஞானம் ஆசிரியர் டாக்டர் ஞானசேகரன், விடிவெள்ளி ஆசிரியர் எம். பீ. எம். பைரூஸ், கொழும்பு டைம்ஸ் ஆசிரியர் முஹம்மத் ரஸூல்தீன், முஸ்லிம் மீடியா போரம் தலைவர் என். எம். அமீன், கெப்பிட்டல் எப். எம். மற்றும் கெப்பிட்டல் டிவி பிரதானி ஷியாஉல் ஹசன் உட்பட பல்வேறு துறைச் சார்ந்தோர் கலந்து கொண்டனர்.



இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் ஒன்பதாவது மதுர கீதங்கள் இசை நிகழ்ச்சி இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன ஆனந்த சமரகோன் கலையகத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் உயர்கல்வி இராஜங்க அமைச்சர் Dr. சுரேன் ராகவன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்தார். இந்நிகழ்வில் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தமிழ்ப்பிரிவின் பணிப்பாளர் நிலார் N. காசிம் மற்றும் கூட்டுத்தாபனத்தின் செயலாளர் ரேணுகா அழுத்கே ஆகியோர் தங்க நாணயம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வு கூட்டுத்தாபன ஆலோசகர் கலாபூஷண விசாரத A.மகேந்திரன் நெறியாள்கையில் நடைபெற்றது.




கிருஷ்ணானியின் தயாரிப்பில் வெளிவந்த "யோகினி" குறுந்திரைப்படத்தின் முதல் காட்சி கொழும்பு வெள்ளவத்தை ரொக்ஸி திரையரங்கில் (5) சனிக்கிழமை மாலை காண்பிக்கப்பட்டது. இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருனிகா பிரேமச்சந்தரவும் சிறப்பு அதிதிகளாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமரும் தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவரும் கலந்து சிறப்பித்தனர்.



LITTLE STAR KIDS எனும் மாயாஜால நிகழ்ச்சி மிஹிந்து மாவத்தை சிங்கள மகா வித்யாலயத்தில் அண்மையில் நடைபெற்ற போது பிரதம அதிதிகளாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசனை சபை உறுப்பினர் புரவலர் ஹாசீம் உமர், அலை கலை வட்டத்தின் ஸ்தாபகர் ராதா மேத்தா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள்.

# கண்ணதாசனின் வரிகள்தான் என்னை கவிதை உலகுக்கு வரத்துாண்டியது



## கிழக்கு வானம் முஸ்தபா மௌஜூத்துடனான நேர்காணல்

**உங்களைப் பற்றிய அறிமுகத்தைக் கூறுங்கள்?**

எனது பெயர் முஸ்தபா மௌஜூத். கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டத்தின் தோப்பூர் என்னும் ஊரில் தற்பொழுது வசித்து வருகின்றேன். ஆசிரியராக, அதிபராக 36 வருடங்கள் கல்விப் புலத்தில் பணி செய்து வருகின்றேன். சிறுவயது முதல் இலக்கியத்தின் பால் எனக்கு அதிக ஆர்வமுண்டு. நான் கிழக்கு வானம் என்ற புனைப் பெயரிலும் ஒரு சில ஆக்கங்களை எழுதியுள்ளேன்.



**உங்கள் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக வாழ்க்கை பற்றிக் கூறுங்கள்?**

ஆரம்பக் கல்வியை தோப்பூர் அல்ஹம்றா மத்திய கல்லூரியில் கற்றேன். இடைநிலைக் கல்விக்காக 1977 ஆம் ஆண்டு கல்முனை ஸாஹிராவில் சேர்ந்து கற்றேன். மீண்டும் ஊர் வந்து அல்ஹம்றாவிலே 1980 இல் க.பொ.த. சாதாரண தரம் கற்று சித்தியடைந்தேன்.

பின்னர் உயர் தரத்தில் சித்தியடைந்து 1984 இல் எனது பாடசாலையில் பல்கலைக்கழகத்துக்கு தெரிவான முதலாவது மாணவன் நான்தான். 1985/1986 கல்வியாண்டில் பேராதனைப் பல்கலைக்கழகம் சென்று கலைப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டேன். பல்கலைக்கழக வாழ்க்கை ஒரு உத்வேகத்தைத் தந்தது. எனது கவிதைப் பயணம் அங்குதான் கிளைவிட்டு வளரத் தொடங்கியது. அந்த இயற்கைச் சூழலும், அழகும் புதிய நட்புகளும் கவிதையின் ஆர்வத்தை தூண்டியது.

**உங்கள் தொழில் அனுபவம் பற்றிக் குறிப்பிடுங்கள்?**

1987 இல் ஆசிரியப் போட்டிப் பரீட்சை எழுதி திருகோணமலை மாவட்டத்தில் ஆசிரியராக 1988.05.19 இல் நியமனம் பெற்று தி.மூ.அல்தாஜ் மகா வித்தியாலயத்தில் கற்பித்தேன். பின்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை முடித்ததும் மீண்டும் அந்தப் பாடசாலையில் கற்பித்தேன். பின்பு சாஹிறா வித்தியாலயம், அதன் பின்பு அல்ஹம்றா மத்திய கல்லூரி, பின்னர் அந்நூர் வித்தியாலயம், அதன் பின்னர் அல்ஸிபா வித்தியாலயம் என்று எனது கற்பித்தல் நடவடிக்கை தொடர்ந்தது. பின்னர் புதிய பாடசாலை ஒன்றை உருவாக்கி அல்ஸாஹிர் வித்தியாலயம் எனப் பெயரிட்டு அதிபராக 05 வருடங்கள் கடமையாற்றினேன். பின்னர் சுயவிருப்பில் மீண்டும் ஆசிரியராக தி/மூ/அல்ஹம்றா மத்திய கல்லூரியில் கடமையாற்றினேன். தற்போது பாலத்தோப்பூர் ஸாஹிறா வித்தியாலயத்தில் பிரதி அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருகின்றேன்.

தரம் 8 முதல் 13 ஆம் வகுப்புக்களுக்கு இஸ்லாம், தமிழ், சமூகக் கல்வி, இஸ்லாமிய நாகரிகம், அரசியல் போன்ற பாடங்களைக் கற்பித்துள்ளேன். 100 க்கும் மேற்பட்டவர்கள் பல்கலைகழகம் செல்ல மிகுந்த அர்ப்பணிப்போடு கற்பித்தல் பணியில் ஈடுபட்டுள்ளேன். எனது ஆசிரியர் பணி 35 வருடங்களைக் கடந்து செல்கிறது. ஆசிரியர்ப்பணி அறப் பணி. அர்ப்பணிப்பே முதற் பணி.

**உங்களுக்கு இலக்கியத் துறையில் எப்படி நாட்டம் ஏற்பட்டது?**

அது 1979 ஆம் ஆண்டு என்று நினைக்கின்றேன், அப்போதுகளில் எனது பள்ளியில் உள்ள சக நண்பர்



கள் சிலர் கவிதை எழுதுவார்கள். அதைப் பார்த்துத் தான் நானும் கவிதை எழுத வேண்டும் என்று ஆசைப் பட்டேன். அத்துடன் பழைய சினிமாப் பாடல்களை நான் அதிகமாகக் கேட்பேன், அதன் ஒவ்வொரு வரிகளையும் மிகவும் உன்னிப்பாக இரசிப்பேன், குறிப்பாக கண்ணதாசன் பாடல்கள், வாலியின் பாடல்கள் என்னை வெகுவாகப் பாதித்தன. என் மானசீகக் கவிக் குருவாக கவியரசர் கண்ணதாசனை மகிழ்வோடு குறிப்பிடுவேன். அவரின் பாடல் வரிகள்தான் என்னைக் கவிதை உலகுக்கு வேகமாக வரத்துண்டியது.

**முதலாவது கவிதையை எழுதிய தருணத்தை நினைவுபடுத்தி கூற முடியுமா?**

1979 ஆம் ஆண்டு தரம் 10 இல் கற்றுக்கொண்டிருக்கும் வேளை சக நண்பர்களுக்குப் போட்டியாக நானும் கவிதை எழுதினேன். நட்பு என்ற தலைப்பில் நான் எழுதிய முதற் கவிதை அது. அக்கவிதையின் நினைவிலுள்ள வரிகள் பின்வருமாறு:

அன்று சொன்னாயே
நன்றென்று
அந்த வாழ்க்கையின்
நன்னாளை
அன்னாளை என்றென்றும்
நான் மறவேன்
என்னுயிர் உள்ளத்தில்
உள்ளவரை

இதுதான் நான் எழுதிய முதற் கவிதை. இதை எழுதியதும் வகுப்பறையில் நான் வாசித்துக் காட்டினேன்.

(07 ஆம் பக்கம் பார்க்க)



நேர்கண்டவர்:
வெலிகம ரிம்ஸா முஹம்மத்

(06 ஆம் பக்கத் தொடர்)

வகுப்பறை ஒரே கலகலப்பாக இருந்தது. இதை என் வாழ்வில் மறக்க முடியாத தருணம் என்றும் கூறலாம். இந்த சந்தர்ப்பத்தில் எனது சக நண்பன் ஏ.ஜே. பறக்காத் தொழிலதிபர் (கொழும்பு) துணையாக இருந்து, உற்சாகம் தந்தார். அந்தப் பயணம் இன்று வரை தொடர்கிறது.

**புதுக்கவிதைகள் மீது இளைஞர்களுக்கு ஏன் இவ்வளவு மோகம்? நீங்கள் ரசித்த புதுக் கவிதைகளைச் சொல்ல முடியுமா?**

புதுக்கவிதை இலகு நடையில் அழகு தமிழில் புனையப் படுவது. பாமரன் வரை புரிந்து கொள்ளக் கூடியதானது. வரம்புகள் இல்லாத காட்டாறு மாதிரி. பூமியைத் தழுவி நழுவி இலக்கியக் கடலில் சங்கமமாவது. ஆதலால்தான் புதுக் கவிதைகளை ஆசிர்வதிக்கிறார்கள். எண்ணங்கள் வண்ணங்களாக யாரும் எழுதலாம் என்பதால் இதற்கு ரசிகர்கள் அதிகம். கவிஞர் வைரமுத்துவின் மரம் பற்றிய புதுக் கவிதை என்னை வெகுவாகக் கவர்ந்தது.



மரம்தான் மரம்தான்
எல்லாம் மரம்தான்..
மறந்தான் மறந்தான்
மனிதன் மறந்தான்..
மனிதா
மனிதனாக வேண்டுமா
மரத்திடம் வா,
ஒவ்வொரு மரமும் போதிமரம்..

மற்றும் கவிஞர் மு. மேத்தாவின் கவிதைகள், கவிக்கோ அப்துல் ரஹ்மான் கவிதைகள் போன்றவை எனக்கு மிகவும் பிடிக்கும். நான் இரசித்த இன்னுமொரு கவிதை,

காற்றில் அலக்கழிந்து
செல்கிறது
பட்டாம் பூச்சி
அதன் கால்களில் காடு

இந்தக் கவிதையை எழுதிய கவிஞரின் பெயர் ஞாபகத்தில் இல்லை. இவ்வாறு நான் இரசித்த கவிதைகள் நிறைய உண்டு. அனைத்தையும் இங்கு எழுத முடியாதுள்ளது.

**நீங்கள் இதுவரை வாசித்த நூல்களில் உங்களைக் கவர்ந்த நூல் எது?**

நான் வாசித்த முதல் நூல் ஷஷஉமர் முக்தார்|| என்ற நூலாகும். சரித்திர நாவல் சிந்து நதிக் கரையினிலே, மஹ்ஜபீன், மேற்கு வானம், நபிமார்கள் சரிதம், வன வாசம், இப்பி பக்கீர், வந்தார்கள் வென்றார்கள், புனித பூமியிலே, சிலுவை யுத்தங்கள் இதில் மிகவும் பிடித்தவை ஷஷமேற்கு வானம்|| என்ற நூலாகும். அத்துடன் வைரமுத்துவின் காவி நிறத்தில், வைகறை மேகங்கள் போன்ற கவிதைத் தொகுதிகள், கண்ணதாசன் கவிதைகள், சோலைக் கிளியின் அவணம் கவிதைத் தொகுதி போன்றவற்றையும் குறிப்பிடலாம்.

**நீங்கள் இதுவரை வெளியிட்ட நூல்கள் பற்றிக் குறிப்பிடுங்கள்?**

1987 இல் முத்திங்கள் (மூன்று மாதங்களுக்கொரு முறை) வெளியீடு கையெழுத்துப் பிரதியாக ஷஷநினைவாகும் நிஜங்கள்|| என்ற பெயரில் கவிதை இதழ்கள் இரண்டை வெளியிட்டேன். அடுத்து தோப்பூர் மண்ணில் முதலாவது வெளியாகிய எனது தனிப்பட்ட இலக்கியப் படைப்பு ஷஷ கீழ்த்திசைக் காற்று|| என்ற கவிதை நூலாகும். எனது இந்தக் கவிதை நூல் 2022.02.20 இல் வெளியிடப்பட்டது. இந்த நூலில் 94 கவிதைகள் இடம்பிடித்துள்ளன.

**உங்களது நூலான கீழ்த்திசைக் காற்றின் ஷஷபேசுபொருள்|| குறித்துக் கூறுங்கள்?**

கிழக்கின் விடியல் பக்கமாக எழும் காற்றையே இது குறித்து நிற்கிறது. விடியலுக்கான தூதாகவே இக்காற்று அமைகிறது. (எனது நூலும் அமைகிறது) மெல்லியதாய் வீசும் போது தென்றலாய், வருடலாய், இதமாய், கனிவாய், எம்மை மகிழ்வித்துச் செல்லும் தன்மை கொண்டது. காற்று வேகம் கொள்ளும் போது, கோபம் கொள்ளும் போது புயலாகி பெருஞ் சூறாவளியாய் உலகையே உசுப்பி விட்டுப் பாடம் சொல்லும். இந்த இரண்டு கருவையும் மையப்படுத்தியே எனது எழுத்துக்கள் பலருக்குத் தென்றலாகவும், பலருக்குப் புயலாகவும் வீசி அடித்துத் தாக்கும் வல்லமை கொண்டது. இதில் கிராமியம் மணக்கும். காதல் சிலிர்க்கும். ஏக்கம், தவிப்பு, ஏமாற்றம், வலி, துயரம், விடுதலை எல்லாம் தாங்கி சமாதனம், சமத்துவம் போதிக்கும்.

**நூல் வெளியீடுகளில் நீங்கள் வெற்றி பெற்றீர்களா?**

இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். முதல் காப்பாற்பட்டது, வெற்றி கிட்டியது, வரவேற்பு பலமாக இருந்தது என்று சொல்வதைவிட இது மனத்திருப்திக்கான பயணம் என்றே சொல்ல முடியும். இதனால் நான் பெரிதாகக் கவலைப்படவில்லை.

**புதுக்கவிதையென்பது மரபுக் கவிதையிலிருந்து தன்னை முழுமையாகத் துண்டித்துக் கொள்கின்றதா?**



இல்லை. சந்தம், சீர், அணி, எதுகை, மோனை, இவைகள் கலந்த சுவைமிக்கதானதே புதுக் கவிதை. எழிய நடையில் இவைகளைக் கலந்து அழகு செய்ய வேண்டும். இல்லாது போனால் உப்பில்லாத பண்டம் போல் ஆகிவிடும்.

**மரபுக் கவிதைகளை மனதில் நிறத்தி வைப்பது மாதிரி புதுக் கவிதைகளை நினைவில் நிறுத்திக் கொள்ள முடியுமா?**

ஏன் முடியாது? இதற்கு சில உதாரணங்களைக் குறிப்பிட முடியும். சினிமாப் பாடல்கள் எல்லாம் புதுக்கவிதைகள் தான். அந்தவகையில் கண்ணதாசன், வைரமுத்து, வாலி, மு. மேத்தா, பேன்றவர்களின் பாடல்கள் மக்கள் மனதில் பதியவில்லையா? பேச முடியாத குழந்தையும் முணுமுணுப்பது இந்தப் பாடல்களைத்தானே. கடின சொற்களால் வடிக்கப்பட்ட கவிதைகளை மெத்தப் படித்தவர்கள் மட்டுமே வாசித்து இன்புற முடியும். அதாவது 20 வீதத்தினர் மட்டுமே. மிகுதி 80 வீதத்தினர்; புதுக் கவிதைகளின் சுவைகளைப் பருகியவர்கள் தான். இதுதான் நிதர்சனம். இன்று உலகை, தமிழை ஆட்சி செய்வதும் இதுதான்.

**மரபுக் கவிதைகள் காலப்போக்கில் முற்றாக அழிந்து விடும் என்று பரவலாகச் சொல்லப்படுகிறதே இதுபற்றி நீங்கள் என்ன சொல்வீர்கள்?**

இதை ஏற்றுக் கொள்ள முடியாது. மரபுதான் புதுக் கவிதையின் பிறப்பிடம், அடித்தளம். அது இன்றி இது இல்லை. ஓரளவு மரபுகள் பேணி எழுதும் புதுக்கவிதையே காலங் கடந்தும் மணக்கும். வேரில்லாது கிளைகள் ஏது? மரபின் அலங்காரமே புதுக்கவிதையாகும்.

**உங்கள இலக்கிய வாழ்வில் இதுவரையில் உங்களால் மறக்க முடியாத சம்பவம் ஒன்றை குறிப்பிடுங்கள்?**

மறக்க முடியாத சம்பவம் என்றால் எனது நாற்பது வருடக் கனவான கீழ்த்திசைக் காற்று நூல் வெளியீடுதான். எனது நீண்ட காலக் கனவு நனவான சம்பவம், ஊர் கூடி மகிழ்ந்த தருணம், நான் அங்கீகரிக்கப்பட்ட நாள், இது எனது மண்ணின் சாதனையின் முதற்படி ஆகும். இந்த இலக்கியப் படைப்பை இந்த மண்ணில் உருவாக்கியவன் என்ற மனத்திருப்தியே இன்னும் படைக்க ஆர்வம் ஊட்டுகிறது.



பிரம்ம ஸ்ரீ A G S சுவாமிநாதன் சர்மாவின் 'இசை அர்ச்சனை' குழுவினர் வழங்கிய "ஆடிவேல் சிறப்பு இசை நிகழ்ச்சி 2023" அண்மையில் நடைபெற்றது. இதில் வயலின் & பாட்டு: வாசுகி★ சுவாமிநாதன் சர்மா மற்றும் நந்தினி சுவாமிநாதன் சர்மா. கீ போர்ட், பாட்டு, புல்லாங்குழல் : S. அரவிந்தன் சுப்பிரமணியம் சர்மா. பாட்டு & ஒக்டோ பாட்: S. அனந்த நாராயணன் சர்மா. மிருதங்கம்: பிரம்மஸ்ரீ AGS சுவாமிநாதன் சர்மா.

Senthooram செந்தூரம்



# ரஜினி, அஜித், விஜய் அங்கிள்களுக்கு ஜோடியாக நடிக்க ஆசை

## மானஸ்வி



ரஜினி அங்கிளுக்கு ஜோடியாக நடிக்க வேண்டும் என குழந்தை நட்சத்திரமான மானஸ்வி தெரிவித்துள்ளார். மேலும் அஜித், விஜய் ஆகியோருக்கும் ஜோடியாக நடிக்க ஆசைப்படுகிறார்.

இமைக்கா நொடிகள் படத்தில் லேடி சூப்பர் ஸ்டார் நயன்தாராவின் மகளாக நடித்து பிரபலமானவர் மானஸ்வி. நடிகர் கொட்டாச்சியின் மகளான மானஸ்வி சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் நடிப்பில் வெளியான தர்பார் படத்தில் ஒரு பாடலில் வந்து சென்றார். த்ரிஷாவின் பரமபதம், விஷாலின் எனிமி, விஜய் சேதுபதியின் மாமனிதன், ஹன்சிகாவின் மஹா, சந்தானத்தின் டிடி ரிட்டர்ன்ஸ் உள்ளிட்ட படங்களில் நடித்திருக்கிறார். பேட்டிகளில் க்யூட்டாக பேசி வருகிறார். குட்டி மானஸ்விக்கு ஏற்கனவே ஏகப்பட்ட ரசிகர்கள், ரசிகைகள் இருக்கிறார்கள். பெரிய மனுஷி மாதிரி பேசுகிறார் பாரேன் என தாய்மார்கள் எல்லாம் வியக்கிறார்கள். இந்நிலையில் பேட்டி ஒன்றில் மானஸ்வி கூறியது பலரையும் அதிர்ச்சி அடைய வைத்திருக்கிறது. மானஸ்வி கூறியிருப்பதாவது, ரஜினி அங்கிளுக்கு ஹீரோயினாக நடிக்க வேண்டும். இதை அவரிடமே கூறியிருக்கிறேன். உங்களுக்கு ஹீரோயினாக நடிப்பேன் என தெரிவித்தேன். கமல்ஹாசன் சாருடன் சேர்ந்து நடிக்கணும். அவர்களுடன் நடிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். ஆனால் அந்த ஆசை எல்லாம் நடக்கணும். விஜய் அங்கிள், அஜித் அங்கிளுக்கு முதலில் மகளாக நடிக்க வேண்டும். அதன் பிறகு அவர்களுக்கு ஹீரோயினாக நடிக்க வேண்டும்.என் அப்பாதான் விஜய்யுடன் சேர்ந்து நடித்த அனுபவங்களை என்னிடம் சொன்னபோது எனக்கும் அவருடன் சேர்ந்து நடிக்க வேண்டும் என்கிற ஆசை ஏற்பட்டது. மகளாக நடித்துவிட்டு அவர்களுக்கே ஹீரோயினாக நடிப்பது ஒரு சூப்பரான அனுபவம். நான் யார், யாருக்கு எல்லாம் மகளாக நடிக்கிறேனோ அவர்களுக்கு எல்லாம் ஜோடியாக நடிக்க வேண்டும் என்றார்.

மானஸ்வி பேசியதை பார்த்த சமூக வலைதளவாசிகளோ, என்ன பேசுகிறோம் என்பதே தெரியாமல் பேசுகிறது இந்த குழந்தை. ரஜினி, அஜித், விஜய் வயசு என்ன இந்த சிறுமியின் வயசு என்ன?. அவர்களுக்கு போய் ஹீரோயினாக நடிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறதே. யப்பா கொட்டாச்சி உங்கள் மகளிடம் பேசி புரிய வையுங்கள். சும்மா எதையாவது சொல்லிவிடக் கூடாது. வளர்ந்த பிறகு அய்யோ நான் இப்படி எல்லாமா பேசியிருக்கிறேன் என மானஸ்வி வருத்தப்படக் கூடாது. பேட்டிகளில் என்ன பேச வேண்டும் என்பதை மகளுக்கு சொல்லிக் கொடுங்கள் என தெரிவித்துள்ளனர். மேலும் சிலரோ, ரஜினி அங்கிள் என்று கூறி அவருடன் குழந்தை நட்சத்திரமாக நடித்தவர் மீனா. வளர்ந்த பிறகு அதே ரஜினிக்கு ஜோடியாக நடிக்கவில்லையா?. மீனா செய்தால் தவறு இல்லை. மானஸ்வி ஆசைப்படுவது மட்டும் தவறா என கேள்வி எழுப்பியுள்ளனர். அண்மையில் வெளியான டிடி ரிட்டர்ன்ஸ் படத்தில் பேயாக நடித்து அசத்தியிருந்தார் மானஸ்வி. அவரின் நடிப்பை பார்த்தவர்கள் பாராட்டினார்கள். இந்நிலையில் பேட்டியை பார்த்தவர்கள் விமர்சிக்கிறார்கள்.மானஸ்வி இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கிறார். அவ்வப்போது தன் புகைப்படங்களை வெளியிட்டு வருகிறார். தான் பெற்றோருடன் இருக்கும் புகைப்படங்கள், பிரபலங்களுடன் இருக்கும் புகைப்படங்களை தொடர்ந்து போஸ்ட் செய்து கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



# ரஜினி சம்பளம் 150 கோடி தமன்னா 3 கோடி ரூபாய்



மிகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குனர்களின் படங்களில் மட்டுமே நடித்து வந்த ரஜினிகாந்த் இளம் இயக்குனர் நெல்சனுக்கு வாய்ப்பளித்தது பலரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்தது. அந்த வகையில் நெல்சன் இயக்கத்தில் ரஜினிகாந்த் நடித்து கடந்த 10ஆம் திகதி திரைக்கு வந்த திரைப்படம்தான் ஜெயிலர். இந்த திரைப்படத்தில் விடிவி கணேஷ், விஜய் வசந்த், விநாயகம், சுனில் உள்ளிட்ட பலரும் நடித்துள்ளனர். கொலை, காமெடி, கடத்தல் உள்ளிட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு படம் இயக்கி வருபவர் நெல்சன். இவரது படங்களில் நகைச்சுவைக்கு பஞ்சம் இருக்காது. இதில் நடிகர் மோகன்லால் மற்றும் சிவராஜ்குமார் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இந்த படத்தில் நடிக்க நடிகர் ரஜினிகாந்த் 150 கோடி சம்பளம் பெற்றுள்ளதாக கூறப்படுகிறது. அடுத்தடுத்த படங்களில் ரஜினியின் சம்பளம் உயரும் என்றும் கூறப்படுகிறது. இந்த படத்தில் இருந்து சமீபத்தில் வெளியான நூ காவலயா பாடல் பட்டி தொட்டி எங்கும் பிரபலமடைந்தது. அந்த பிரபல தன்மைக்கு காரணம் தமன்னாவின் திறமை என்று கூறினால் மிகையாகாது. அப்படிப்பட்ட தமன்னா இந்த படத்தில் வாங்கக்கூடிய சம்பளம் 3 கோடி ரூபாய் என்று கூறப்படுகிறது. என்னதான் உயிரை கொடுத்து நடிகைகள் நடித்தாலும் சம்பள விஷயத்தில் திரையுலகத்தின் பார்வை இன்னமும் மாறவே இல்லை என்பது வருந்தத்தக்க விஷயமாகும்.



# படங்கள் தோல்விக்கு நடிகைகள் காரணமா?

தமிழில் ஆடுகளம் படத்தில் நாயகியாக அறிமுகமாகி பிரபல நடிகையாக உயர்ந்த டாப்சி தெலுங்கிலும் நிறைய படங்களில் நடித்தார். தற்போது இந்தியில் முன்னணி கதாநாயகியாக உயர்ந்துள்ளார். நாயகியை முதன்மைப்படுத்தும் கதாபாத்திரங்களில் நடிக்க வாய்ப்புகள் குவிகின்றன. மீண்டும் தமிழ், தெலுங்கு படங்களில் நடிக்க வராமல் இந்தியிலேயே கவனம் செலுத்துகிறார். இது குறித்து டாப்சி கூறும்போது, "நான் நடித்த சில தென்னிந்திய படங்கள் தோல்வி அடைந்தன. குறிப்பாக தெலுங்கு படங்கள் தோல்வியை சந்தித்தன. இதனால் எல்லோரும் என்னை விமர்சனம் செய்தனர். துரதிர்ஷ்டக்காரி என்றார்கள். நான் சினிமா பின்னணி உள்ள குடும்பத்தில் இருந்து வரவில்லை. அதனால் எந்த மாதிரியான கதைகளை தேர்வு செய்து நடிக்க வேண்டும் என்ற புரிதல் எனக்கு இல்லாமல் இருந்தது. செய்த தவறுகளில் இருந்து நிறைய பாடம் கற்றுக்கொண்டேன். படம் வெற்றி பெறாமல் தோல்வி அடைந்தால் கதாநாயகிகள் மீது ஏன் குற்றம் சுமத்த வேண்டும். படங்களில் மொத்தமாக சில காட்சிகளிலும், பாடல் காட்சிகளிலும் மட்டுமே கதாநாயகி இருப்பார். அப்படி இருக்கும்போது தோல்விக்கு அவர்கள் தான் காரணம் என்று பழிசொல்வது தவறு. என் விஷயத்தில் இதுதான் நடந்தது. ஆரம்பத்தில் இதற்காக வருத்தப்பட்டேன். பிறகு விமர்சனங்களை கண்டு கொள்வது இல்லை'' என்றார்.

# சந்திரமுகியாக கங்கனா ரனாவத்



லைகா நிறுவனம் தயாரித்துள்ள இந்த படத்திற்கு எம்.எம் கீரவாணி இசையமைத்துள்ளார். தற்போது இந்த படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்து போஸ்ட் புரொடக்சன் பணிகள் நடைபெற்று வருகின்றன. 'சந்திரமுகி 2' திரைப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, கன்னடம் ஆகிய மொழிகளில் விநாயகர் சதுர்த்தி அன்று வெளியாகவுள்ளது. சமீபத்தில் படக்குழு 'வேட்டையன் ராஜா' கதாபாத்திரத்தின் பர்ஸ்ட்லுக் போஸ்டரை வெளியிட்டது. வேட்டையன் ராஜாவாக ராகவா லாரன்ஸ் இருக்கும் அந்த போஸ்டர் இணையத்தில் வைரலானது. இந்த நிலையில் தற்போது படத்தில் கங்கனா ரனாவத்தின் தோற்றத்தை படக்குழு வெளியிட்டுள்ளது. முதல் பாகத்தில் நடிகை ஜோதிகா நடித்திருந்த 'சந்திரமுகி' கதாபாத்திரத்தில் கங்கனா ரனாவத் நடிப்பதாக படக்குழு தெரிவித்துள்ளது. மனதை மயக்கும் அழகியாக கங்கனா ரனாவத் இடம்பெற்றுள்ள இந்த பர்ஸ்ட்லுக் போஸ்டர் தற்போது ரசிகர்களை கவர்ந்து இணையத்தில் வைரலாகி வருகிறது.




# SKவுக்கு ஜோடியாகும் மிருணாள்



ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடிக்கவுள்ள படத்தில் மிருணாள் தாகூர் ஹீரோயினாக நடிக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. சிவகார்த்திகேயன் நடிப்பில் அண்மையில் வெளியான 'மாவீரன்' படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பினை பெற்றது. 'பிரின்ஸ்' தோல்வியால் துவண்டு போயிருந்த சிவகார்த்திகேயனுக்கு 'மாவீரன்' வெற்றி புது தெம்பை கொடுத்துள்ளது. இந்நிலையில் சிவகார்த்திகேயனின் புதிய படம் குறித்து வெளியாகியுள்ள லேட்டஸ்ட் தகவல் சோஷியல் மீடியாவில் வைரலாகி வருகிறது. டான், பிரின்ஸ் படங்களை தொடர்ந்து மடோன் அஸ்வின் இயக்கத்தில் 'மாவீரன்' படத்தில் நடித்தார் சிவகார்த்திகேயன். யோகிபாபு நடிப்பில் வெளியாகி பெரிதும் கவனம் ஈர்த்த 'மண்டேலா' படத்திற்கு பிறகு மாவீரனை இயக்கினார் மடோன் அஸ்வின். இயக்குனர் மிஷ்கின் வில்லனாக நடித்த இந்தப்படத்தில் அதிதி ஷங்கர், சரிதா, யோகி பாபு உள்ளிட்டோர் நடித்திருந்தனர். மேலும் இந்தப்படத்தில் சிவகார்த்திகேயனுக்கு கேட்கும் அசரீரி குரலுக்காக நடிகர் விஜய் சேதுபதி வாய்ஸ் கொடுத்தார். சம்பளமே வாங்காமல் அவர் செய்த இந்த செயல் கோலிவுட் திரையுலகினர் மத்தியில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. மேலும் விமர்சன ரீதியாக வரவேற்பை பெற்றதுடன் வசூலிலும் சாதனை படைத்தது 'மாவீரன்'. இந்தப்படத்தை தொடர்ந்து தற்போது உலக நாயகனின் ராஜ் கமல் பிலிம்ஸ் தயாரிக்கும் 'எஸ்கே 21' படத்தில் நடித்து வருகிறார் சிவகார்த்திகேயன். ராஜ்குமார் பெரியசாமி இயக்கும் இந்தப்படத்தில் சாய் பல்லவி கதாநாயகியாக நடிக்கிறார். சிவகார்த்திகேயன் இந்தப்படத்தில் இராணுவ வீரராக நடிக்கிறார். 'எஸ்கே 21' படப்பிடிப்பு தற்போது காஷ்மீரில் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில் புதிய படம் ஒன்றிலும் சிவகார்த்திகேயன் நடிக்கவுள்ளதாக கூறப்படுகிறது. தீனா, ரமணா, கஜினி, துப்பாக்கி, கத்தி போன்ற படங்களை இயக்கி வரவேற்பை பெற்ற ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில் கடைசியாக ரஜினி நடிப்பில் வெளியான 'தர்பார்' படம் தோல்வியை சந்தித்தது. இதனையடுத்து தற்போது 3 ஆண்டுகளுக்கு பிறகு சிவகார்த்திகேயன் நடிப்பில் புதிய படத்தை இயக்கவுள்ளார் ஏ.ஆர். முருகதாஸ். இந்நிலையில் லேட்டஸ்ட் தகவலாக இந்தப்படத்தில் சிவகார்த்திகேயன் ஜோடியாக மிருணாள் தாகூர் நடிக்கவுள்ளதாக செய்திகள் வெளியாகி எதிர்பார்ப்பை கிளப்பியுள்ளது. 'சீதா ராமன்' படத்தில் இளவரசி நூர்ஜஹானாக நடித்து தென்னிந்திய ரசிகர்களின் மனங்களை கொள்ளையடித்த மிருணாள், ஏ.ஆர். முருகதாஸ் சிவகார்த்திகேயன் படம் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமாகவுள்ளதாக கூறப்படுகிறது. மேலும் இந்தப்படத்திற்கு அனிருத் இசையமைக்கவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.





# மீண்டும் களத்தில் இறங்கும் நஸ்ரியா

தமிழ் சினிமாவில் பிரபலமான நடிகையாக வளர்ந்து வந்தவர் நஸ்ரியா. இவர் தமிழ் மற்றும் மலையாள மொழி திரைப்படங்களில் நடித்து ரசிகர்கள் மத்தியில் பிரபலமானவராக அறியப்பட்டு வருகிறார். தமிழில் முதன் முதலில் நஸ்ரியா கதாநாயகியாக 'நேரம்' திரைப்படத்தில் நடித்தார். இவர், சினிமாவில் உச்சத்தில் இருக்கும் போதே மலையாள நடிகரான பகத் பாஸிலை திருமணம் செய்து கொண்டு சினிமாவிலிருந்து விலகிவிட்டார். இருப்பினும் நஸ்ரியாவையும், அவரது கியூட்டான நடிப்பு திறமையும் ரசிகர்கள் இன்று வரை ஞாபகம் வைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இது போன்ற நிலையில், தற்போது மீண்டும் நஸ்ரியா தமிழ் சினிமாவில் ரீ எண்ட்ரி கொடுப்பதாக அதிகாரப்பூர்வமான அறிவிப்பு வெளியாகி உள்ளது. ஏ.எல் விஜய் இயக்கத்தில் வெப் சீரீஸ் ஒன்றில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார்.







# சமூகமும் பெண்களும்

ஆணும் பெண்ணும் பருவ வயதை அடைந்ததும் திருமணம் செய்கின்றனர். திருமணம் முடித்து தங்கள் வாழ்க்கையில் குழந்தை ஒன்று பிறக்கும் போதே அந்த வாழ்க்கை முழுமை பெறுவதாக உணர்கின்றனர். ஆம்!

ஆணுக்கும் பெண்ணுக்கும் பெற்றோர் என்கிற பதவியுயர்வு கிடைக்கப்பெற்று கம்பீரமாக நடைப் பயில குழந்தை பிறப்பு காரணமாக அமைகிறது.

ஆனாலும் குழந்தை என்கிறது உண்மையில் அந்த காலங்களில் பெண் குழந்தை என்றால் ஏதோ நமக்கு செலவு வைக்கவே பிறந்தவள், ஆண் பிள்ளை என்றாலே சிங்கம் என்கிற எண்ணத்தில் பல நாச வேலைகள் நடக்கின்றன. பெண் குழந்தை பிறந்தால் கள்ளிப்பால் கொடுத்து கொல்லுதல் போன்றன இடம் பெற்றன. இதற்கென கைதேர்ந்த பெண்கள் கிராமங்களில் வாழ்ந்தார்கள். வீடுகளிலே பிரசவம் நடந்ததால், இவ்வாறான நிகழ்வுகள் இடம்பெற சாதகமான நிலை காணப்பட்டது. அத்துடன் பெண் சிசுவை பெற்றெடுத்த மனைவியை கொடுமை செய்தல், சீதனம் கேட்டல், வீட்டை விட்டு அடித்து துரத்துதல், ஆண் பிள்ளை பெற முடியாதவள் என்கின்ற காரணத்தை கூறி ஒதுக்கி வைத்து ஆண்கள் மறுமணம் செய்து கொள்ளுதல் என பல கொடூரங்கள் நடந்தன.

அத்துடன் கருவில் இருக்கும் குழந்தை என்ன குழந்தையென ஊரில் வாழும் மருத்துவச்சிமார்கள் தீர்மானிக்கின்றனர். கர்ப்பிணி பெண் படுக்கும் முறை, அவள் உண்ணும் உணவு முறை, தாயாகும் பெண் இருக்கும் தோற்றத்தை வைத்துக் கணிக்கும்முறை அப்பப்பா...

அந்தக் கர்ப்பிணி பெண்ணின் நிலையோ மிகவும் மோசமானதாக இருந்தது.

கொஞ்சக் காலம் முன்னேற ஸ்கேன் செய்து பார்த்து கருவிலேயே அழித்தல் இடம் பெற்றது. காலத்திற்கு காலம் ஏதோ ஒரு வகையில் பெண்கள் துன்பங்களை அனுபவித்தே வருகிறார்கள். முற்காலத்தில் அடுப்பூதும் பெண்ணுக்கு படிப்பெதற்கு என்கிற ஆணித்தரமான பேச்சு இப்போது குறைந்தாலும் முற்றிலும் மாறிவிடவில்லை. என்னதான் பெண் பிள்ளை படித்தாலும் ஆண்களுக்கு சமத்துவமாக நடக்க முடியாது என்கிற சமூக தொற்று இன்னும் அழிந்து விடவில்லை.

அந்த காலம் இந்தக்காலம் என்று பேசினாலும் எல்லாம் பேச்சிலேயே தான் உள்ளது. பெண்ணடிமைத்தனம் இன்னும் நிறைய மாற வில்லை.

"பொம்பிளைப் பிள்ளை இப்படியா உக்காருவது, பொம்பிளைப்பிள்ளை இவ்வளவு நேரமா தூங்குவது, பொம்பிளைப் பிள்ளைக்கு இவ்வளவு வாய் ஆகாது என்று கரித்துக் கொட்டுவதும் ஆண் பிள்ளைகள் வீட்டில் வேலை செய்தால் "பொம்பள செய்யும் வேலைய ஆண்பிள்ளை நீ ஏன் செய்கிறாய்" என சொல்வது கேலி கூத்தாக இருக்கிறது.

இப்படி நிறைய சொல்லிக் கொண்டே போகலாம். பிறப்பும் இறப்பும் சரி சமம் என்கிறபோது இந்த சாதாரண வேலைகளை யார் பிரித்து வைத்தது. இரத்தம் சதை எலும்புகளான இந்த உடம்பில் யார் அடித்தாலும் வலிக்கும். யாருக்கு அடித்தாலும் வலிக்கும். ஆண்கள் வலிமை நிறைந்தவர்கள் என்பதில் ஐயமில்லை. அதற்காக பெண்ணின் மென்மையை மதிக்க வேண்டாமா!

**தொடரும்...**



கவிஞர் நடராஜா தாமரைச் செல்வி...



# "அழகை வர்ணித்தே பெண்கள் அடிமைப்படுத்தப்படுகிறார்கள்"



பிரசவ வலியை தாங்கும் உடல் வலிமையும் மனவலிமையும் பெற்றது. பழைய பிற்போக்கான சடங்குகளில் இருந்து அவள் முதலில் வெளிவர வேண்டும். அடுப்படி மட்டுமே அவள் வாழ்க்கை அல்ல. அனைத்து தரப்பு பெண்களும் பொருளாதார தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு அவள் தன்னை முழுவதும் கல்வி மயப் படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆண்களுக்கு நிகராக சமூக உற்பத்தி செயல்கள் மற்றும் உடற்பயிற்சி போன்ற விடயங்களில் தன்னை முழுவதும் ஈடுபடுத்திக் கொள்வதுடன் அறிவியல் பூர்வமான விடயங்களிலும் தனது திறன்களை பெண்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

வசதி படைத்த, வசதியற்ற, நடுத்தரப் பெண்கள் என அனைவரும் பெண் என்ற ஒரே உணர்வுடன் ஒன்று பட வேண்டும். இங்கு உடல் ரீதியாக பாலியல் மற்றும் மனரீதியாக அனைத்து தரப்பு பெண்களும் கசக்கி நசுக்கப்படுகின்றனர். சில மனித மிருகங்கள் ''மலரினும் மெல்லிய காதலை, காமத்தை... இரும்பு கம்பிகள் கொண்டு'' ஆராய்ச்சி செய்ய முற்படுகின்றன. பணம் மற்றும் இன ரீதியான ஜாதி மத வித்தியாசம் ஏதும் இன்றி பெண் எனும் ஒரே புள்ளியில் இந்தியப் பெண்கள் ஒன்று பட வேண்டும். அன்றைய இந்தியாவில் பெரும் புரட்சி கரமான செயல்களை ஆரம்பித்து சிறப்பாக முடித்து வைத்தவர்கள் வசதி படைத்த மேல் தட்டு பெண்களே. சாதாரண எளிய பெண்களைக் கொண்ட ''சில அமைப்புகள்'' வசதியான பெண்களை ஒதுக்கி வைப்பது ஒட்டு மொத்த பெண் இனத்தின் ஒற்றுமையை சீர் குலைக்கும் செயல் ஆகி விடும்.

பெண்ணிய அமைப்புகளுக்குள் மனரீதியான புரிந்து கொள்ளும் தன்மை அவசியம் வேண்டும். திருமண ஒப்பந்தம், அதை முறித்துக் கொள்வது, சொத்துகளில் சம உரிமை என்று ஒரு குறுகிய வட்டத்துக்குள் பெண் விடுதலை என்ற விடயத்தை அடக்கி விடக் கூடாது. அதிகரித்து வரும் இன்றைய உலகளாவிய கவர்ச்சிகரமான விளம்பரங்களின் மூலம் நம் இந்தியப் பெண்களை குறி வைத்து அவர்களை தேவையற்ற பொருள்களை வாங்க வைத்து பெண்களின் கடுமையான உழைப்பின் மூலம் சம்பாதித்த பணத்தை வீணடிக்கும் ஏமாற்றும் முயற்சிகளில் இருந்தும் அவர்கள் வெளியில் வர வேண்டும். அழகி அழகி என வர்ணித்து புகழ்ந்தே இங்கு பெண்கள் அடிமைப் படுத்தப் படுகின்றனர். அடிமைத் தளைகளை அறுத்தெறிந்து வெளியில் வாங்க ஆண்களின் தோழிகளே !





# அஸ்மியா அஷ்ரப் எழுதிய "நேந்தம்பியும் நிலாப்பெண்ணும்" நூல் சாய்ந்தமருதில் வெளியீடு








**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

சாய்ந்தமருதில் பெண் எழுத்தாளரின் முதல் நாவலான "நேந்தம்பியும் நிலாப் பெண்ணும்" என்ற நாவல் திருமதி அஸ்மியா அஷ்ரபினால் (06) ஞாயிற்றுக்கிழமை சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் வெளியிடப்பட்டது.

கலாசார உத்தியோகத்தர் எம்.ஐ.எம். அஷ்ரப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக சட்டம் ஒழுங்கு அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் ஏ.எல்.எம். சலீம் கலந்து கொண்டார். சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் தலைவர் ஏ.ஹிபத்துல் கரீம் சிறப்பு அதிதியாகவும், முன்னாள் கோட்டக்கல்வி அதிகாரி ஏ. பீர் முஹம்மட், சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி யூ.கே.எம் றிம்சான் ஆகியோர் விசேட அதிதியாகவும் கலந்து கொண்டதோடு, நூல் நயவுரையை ஏ. பீர் முஹம்மட் வழங்கினார்.

மருதம் கலைக்கூடல் மன்றத்தின் செயலாளர் கலைஞர் அஸ்வான் மௌலானா பாடலொன்றைப் பாடியதோடு, மருதம் கலைக்கூடல் மன்றத்தின் உபதலைவரும் பல்துறைக் கலைஞருமான என்.எம். அலிக்கான் கவிதை பாடி மற்றும் பாடல் பாடியும் சபையோரைப் பரவசப்படுத்தினர். இதன் போது நூலாசிரியர் திருமதி அஸ்மியா அஷ்ரப் தனது கணவர் அஷ்ரபிடம் முதற் பிரதியைக் கையளித்ததோடு, கல்விமான்கள், புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள், குடும்பத்தினர் எனப்பலரும் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர். நிகழ்வை அறிவிப்பாளர் எம்.பி.எம்.றின்சான் சிறப்பாக தொகுத்து வழங்கினார்.

# கத்தாரில் ஆளுமைகளை கௌரவிக்கும் விருது வழங்கும் விழா

கத்தாரில் மூன்று அகவைகள் கடந்து இயங்கிக் கொண்டிருக்கும் ஸ்கை தமிழ் ஊடகம் இவ் ஆண்டு இலங்கை மற்றும் இந்திய ஆளுமைகளை கௌரவிக்கும் முகமாக விருது வழங்கும் விழாவைத் திட்டமிட்டுள்ளது.

இந்த விருது கத்தார் நாட்டில் பணி புரிந்து அவர்களுடைய திறமைகளை வெளிக்காட்டியவர்களுக்கு வழங்கப்படவுள்ளது. இவ்விழாவானது அவர்களுடைய திறமையை கௌரவிக்கும் விதமாக சாதனை விருது, பெண்கள் சிறப்பு விருது, ஆண்டின் வணிகத் தலைவர் விருது, சிறந்த புகைப்படக் கலைஞர் விருது, சிறந்த எழுத்தாளர்களுக்கான விருதுகள், சிறந்த ஊடகவியலாளர் விருது, சிறந்த கலைஞர் விருது, சிறந்த அறிவிப்பாளர் விருது, இளம் சாதனையாளர் விருது, விவசாய ஊக்குவிப்பு விருது, சிறந்த டிஜிட்டல் கற்றல் கண்டுபிடிப்பு விருது, சிறந்த சமூக ஊடக செல்வாக்கு விருது என 12 வகையான விருதுப் பிரிவுகளாக வகுக்கப்பட்டு வழங்கப்படவுள்ளது.

இவ்விருதுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. நீங்களும் ஒரு ஆளுமைகளாக இருப்பின் ஜூலை 23 தொடக்கம் ஆகஸ்ட் 31 வரை விண்ணப்பிக்க முடியும்.www.skytamilnews.com/awards இணையதளத்தினுடாக சென்று உங்கள் விபரங்களை பூர்த்தி செய்யவும். விண்ணப்பம் கோரல் நிறைவுற்ற பின்னர் நடுவர்களினால் தெரிவுகள் இடம்பெற்று தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான விருது வழங்கும் விழா கத்தாரில் மிகபிரம்மாண்டமாக இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உங்கள் தனித்துவத்தை அடையாளப்படுத்த ஸ்கை தமிழ் ஊடகம் வழங்கும் ஒரு அரிய வாய்ப்பு இது! ஊடக அனுசரணை தினகரன், தினகரன் வாரமஞ்சரி.



Print Media Partner : தினகரன் வாரமஞ்சரி
Sky Tamil Media Network (Pvt) Ltd

## நிறம் தீட்டுங்கள்



## வழிகாட்டுங்கள்




## கூட்டுங்கள்




## 05 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



## விடுகதைகள்

1. இவனும் ஒரு பேப்பர் தான்; ஆனால், மதிப்போடு இருப்பான். அது என்ன? **விடை: பணம்**

2. டாக்டர் வந்தாரு, ஊசி போட்டாரு, காசு வாங்காமல் போனாரு. **விடை: கொசு**

3. கன்று நிற்க கயிறு மேயுது அது என்ன? **விடை: பூசனிக்கொடி**

4. எப்போதும் மழையில் நனைவான் ஆனால் ஜுரம் வராது. எப்போதும் வெயிலில் காய்வான் ஆனால் ஏதும் ஆகாது. அவன் யார்? **விடை: குடை**

5. தொடாமல் அழுவான், தொட்டால் பேசுவான். அவன் யார்? **விடை: தொலைபேசி**

6. பெட்டியைத் திறந்தால் பூட்ட முடியாது. அது என்ன? **விடை: தேங்காய்**

7. தன் மேனி முழுவதும் கண்ணுடையாள் தன்னிடம் சிக்கியபேரைச் சீரழிப்பாள் அவள் யார்? **விடை: மீன் வலை**




# பசுமை நினைவுகளை மீட்ட வைத்த அறபா 91 ஒன்றுகூடல்















தென்மாகாணத்தில் நூற்றாண்டை தாண்டி கல்விச் சேவையாற்றி வரும் ஒருசில பாடசாலைகளில் வெலிகம அறபா தேசிய பாடசாலையும் ஒன்று. இப்பாடசாலை கல்வித்துறையில் மட்டுமன்றி விளையாட்டு,கலை,கலா சார துறைகளிலும் சாதனை படைத் துள்ளது.தொடர்ந்தும் சாதனைகளை படைத்து வருகிறது.

பாடசாலையின் கல்வித்துறையை மேலும் மேம்படுத்துவதற்காக பாடசாலை அதிபர் முதஹ்ஹர்,ஆசிரி யர் குழாத்துடன் பழைய மாணவர் சங் கமும் அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகிறது. இந்த நிலையில் பாடசாலை Back to School நிகழ்வு அடுத்த மாதம் மாதம் 30 மற்றும் ஒக்டோபர் 1 ஆம் திகதிகளில் நடைபெற இருக்கிறது.

இதனை முன்னிட்டு பல்வேறு முன் னேற்பாடுகள் நடைபெறும் நிலையில் பழைய மாணவர் குழுக்களின் ஒன்று கூடல்களும் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் வெலிகம அறபா பழைய மாணவர் குழுக்களில் ஒன்றான அறபா 91 நலன்புரிச் சங்கம் அண்மையில் பாடசாலை உயர் வகுப்பு மாணவர்களுக்கு முதன் முறையாக கருத்தரங்கொன்றை நடத்தியது. தனது வருடாந்த ஒன்று கூடலை முன்னிட்டு இந்த கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாணவர்களுக்கான கருத்தரங்கில் அறபா 91 பழைய மாணவர்களான வைத்தியர் M.F.M இம்தியாஸ், வைத் தியர் M.Z.M.ஸிஹான் ஆகியோர் வள வாளர்களாக கலந்து கொண்டார்கள். மாணவர்களின் பெருவரவேற்பைப் பெற்ற இந்த நிகழ்வின் போது மாண வர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

மறுநாள் அதாவது ஆகஸ்ட் 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் பலப் பிட்டி பகுதியில் ஒன்றுகூடல் சிறப்பாக நடந்து முடிந்தது. பெரும்பாலான அங்கத்தவர்கள் இதில் ஆர்வத்துடன் கலந்து கொண்டதோடு நீண்ட காலத் தின் பின்னர் நண்பர்கள் இணைந்து கிரிக்கெட் போட்டி,நீச்சல் போட்டி என்பவற்றிலும் பங்கேற்றனர்.

சிறுபிள்ளைகளை போல சத்தமிட் டுக் கொண்டு போலியாக சண்டை போட்டுக் கொண்டு விளையாடுவது அனைவரையும் மீண்டும் அந்த இனிமையான இளமை நாட்களுக்கு அழைத்துச் சென்றது.

அன்றைய தினம் இரவு சங்கத்தின் பொதுக் கூட்டம் நடைபெற்றதோடு இதன் போது வெலிகம அறபா 91 நலன்புரி சங்கத்தின் 2023/2024 ஆம் ஆண்டுகளுக்கான புதிய செயற் குழு தெரிவானது. இதன்போது ஆலோ சகர்களாக வைத்தியர் M.F.M இம் தியாஸ், வைத்தியர் M.Z.M.திஹான் ஆகியோர் மீண்டும் நியமிக்கப்பட்ட தோடு தலைவராக M.Z.M அர்பத் தெரி வானார். ஏனைய பதவி விபரங்கள்:

உபதலைவர்கள்: M.M.முபஸ் ஸல், M.I.M முர்சித், செயலாளர்: M.S பாஹிம்,பொருளாளர்: M.H.M நளீம், உப பொருளாளர்: M.N.M தாரிக், செயற் குழு உறுப்பினர்கள்: M.I.சதா அஹ்மட், M.Y.M வாஸிப், M.Z.M அக்ரம், M.T.M பலாஹ், M.M.M. இமாமுதீன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

இதன்போது பல்வேறு எதிர்கால திட் டங்கள் பற்றியும் ஆராயப்பட்டதோடு கல்வி சார்ந்த திட்டங்களை செயற் படுத்துவது பற்றியும் அங்கத்தவர் களின் நலன் சார்ந்த திட்டங்களை முன்னெடுப்பது பற்றியும் கவனம் செலுத்தப்பட்டது.

மறுநாள் பல்வேறு பொழுது போக்கு அம்சங்கள், போட்டிகள் நடைபெற் றதோடு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.மாது கங்கையில் படகு சவாரி செல்லவும் அங்கத்தவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைத் தது. பாடசாலை நாட்களை மீண்டும் கண்முன் கொண்டு வரும் இவ்வாறான பசுமையான நினைவுகள் ஒவ்வொருவர் வாழ்விலும் கட்டாயம் வர வேண்டும்.

குடும்பப் பொறுப்பு, பிள்ளைகள், தொழில், என பல பல விடயங்களுடன் இயந்திரமாக ஓடும் மனிதர்களுக்கு இவ்வாறான ஒன்று கூடல்கள் என்றும் இனிமையானவைதான். தாம் கற்ற பாடசாலைகளை மறந்து விடாது அவற் றின் முன்னேற்றத்திற்கு பங்களிக்கவும் பழைய நினைவுகளை மீட்டிப் பார்க்க வும் கிடைக்கும் இவ்வாறான அரிய சந் தர்ப்பங்களை தவறவிடக் கூடாது.

எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com







# எனினும் நான் எழுகின்றேன் 2

எனினும் நான் எழுகின்றேன் 2
கையறுநிலையில் என்னைக் காண விரும்பினாயா?
குனிந்த தலையுடனும் கவிழ்ந்த விழியுடனும்?
கண்ணீர்த்துளிகள் போல தோள்கள் தொங்கிவீழ
என் ஆத்மார்த்த அழுகையால் வலு விழந்து
என் அகந்தை உன்னை அல்லல்படுத்துகிறதா?
என் கொல்லையில் தங்கச் சுரங்கக் கிடங்குகள்
இருப்பதாக இறுமாப்புடன் நான் நகைப்பது வலுவான உன்னை வருத்தவில்லையா?
உன் சொல்லால் என்னை நீ சுடலாம்
உன் கண்ணால் என்னை நீ காயப்படுத்தலாம்
உன் கொடூர வெறுப்பால் என்னை நீ கொல்லலாம்
ஆயினும், நான் மேலெழுவேன், காற்றைப் போல
Still Rise 2
Did you want see me broken?
Bowed head lowered eyes?
Shoulders falling down like teardrops
Weakened by my soulful cries.
Does my haughtiness offend you?
Don't you take it awful hard
Cause I laugh like I've got gold mines
Diggin'in my own back yard.
You may shoot me with your words
You may cut me with your eyes
You may kill me with your hatefulness
But still like air I'll rise.

**– Maya Angelou**
**தமிழில் க.நவம்**



## மறுவாசல்

**முல்லை முஸ்ரிபா**

# காட்சிமொழி அரசியல் / அழகியல்

காட்சி மொழியின் இயங்கியல் குறித்து சினிமாவை முன்வைத்த நோக்கு அவதானத்துக்குரியது. காட்சிமொழியில் உயிர்ப்பாக இயங்குவது திரையூடக சினிமா தான்.

உலகம் முழுதும் காட்சிமொழியை கமெராப்பேனா

எழுதிக்கொண்டிருக்கிறது. சினிமா இயக்கத்தில் ஒளிப்பதிவாளராக கமெராக்காரர் நிற்கிறார். அவர் திரையில் வரையும் காட்சி மொழிதான் ரசிகர் உள்நுழையும் வாசலாக உள்ளது.

நவீன சினிமாவில் கதை, இயக்கம், கதைமொழி, இசையென்று புதுத்தன்மை புகுந்த சூழலில் நவீன கமெராவின் இயங்கியல் குறித்த நோக்கு முக்கியமானது.

நவீன ஓவியம் போலவும் நவீன கவிதை போலவும் நவீன

காட்சிமொழி சினிமாவின் இயக்கத்துக்கு உறுதுணையாகி நிற்கிறது.

ரசிகப்பார்வைப் புலமும் தேடலும் தொழில்நுட்ப மேம்படு சூழலில் உயர்ந்த ஆவலில் உள்ள நிலையில் கமெராக்காரனின் மொழி திரையை முழுமையும் ஆக்கிரமித்துள்ளது.

உலகில் எல்லா மொழிகளிலும் காட்சிமொழியின் செல்வாக்கு

ஆதிக்கம் பெற்றுள்ளது. இந்தப் பின்புலத்தில் காட்சிமொழி

அழகியல் அல்லது அரசியல் குறித்த சினிமாத்துறை

மேம்பட்டுள்ளது.

காட்சிமொழி அரசியல் தேசம், மொழி, சினிமாப்பண்பாடு,

பொருளாதார நோக்கு, ரசனை ஈர்ப்பு, சினிமா அரசியல் என

பலவற்றினடியாகத் தோன்றுவது. அது போல காட்சிமொழி

அழகியல் கமெரா இயக்கம் குறித்து நவீன நோக்கினடியாகத்

தொழிற்படுவது. இன்றைய நவீன தொழில்நுட்ப நூற்றாண்டில் காட்சிமொழியின் திரை இயக்கம் மிகுந்த அவதானிப்புக்குரியதேயாகும்.

# நதுநிசி கவிதை




முல்லைத்தீவின் மற்றொரு கவி நதுநிசி. தடம் தந்த வரிகள், மனம் மாறணுமே, மாற்றம் ஆகணுமே பிரதிகள் தந்தவர். தினகரனில் எழுதியவற்றின் திரட்டாக முனை உடைந்த முளை, முளைகொண்டுள்ளது.

நா.நகுலேஸ்வரன் என்கிற இயற்பெயர் கொண்ட நதுநிசி எளிய மொழியில் இனிய கவி சொல்ல வல்லவர். இப்பனுவலுக்குப் பலரும் முன்குறிப்பு எழுதியுள்ளனர். மிக அதிகமானோரின்முன்னுரை அல்லது முன்குறிப்போடு வரும் பனுவல் இது. தீபச்செல்லன் நதுநிசி கவிதையை போரிடை முளை என்கிறார்.

'போர் ஏற்படுத்திய தாக்கம் இவரின் கவிதைகளில் இன்னமும்

கொதித்துக்கொண்டிருக்கிறது. அடக்க முடியாத துயரமும்

அந்தரிப்பும் வெறுமையும் கவிந்த இக்கவிதைகள் நம்பிக்கையின் வெளிச்சமாகவும் தென்படுகின்றன'' என்பார். வாழ்ந்திடு கண்ணே முதல் மௌனமான உலகில் நலமாக வாழலாம் ஈறான கவிதைகளின் திரட்சிதான் முனை உடைந்த முளை.

ஒரு தேசிய பத்திரிகையில் வெளிவந்த கவிதைகளின் திரட்டாகமட்டுமே வெளிவரும் முதல் தொகுதியென்றே தினகரனை முன்னிறுத்தி வாழ்த்தலாம்.

கவிதை மீதான காதலின் நிமித்தம் எழுதிக் கொண்டேயிருக்கும் நதுநிசி, ஈழத்தின் கவிதை வெளிக்குப் புதிய பாய்ச்சலைச் செலுத்த வேண்டும். முனை உடையா நிசியின் பேனா முளை கொண்டெழட்டும். வாழ்த்துக்கள்.

# விதிக்கப்பட்ட கதை 10

தவப்பயன் கதை சொல்லும் தவத்தின் (பெறு) பேறு கதையின்

மையம். இந்த ஆகஸ்ட் கு.அழகிரிசாமியின் நூற்றாண்டு.

நூற்றாண்டுக் கதை மனிதனின் கதைகள் நினைவு கொள்ளப்படும் காலத்தில் மறுசொல் விதிக்கப்பட்ட கதை பத்தில், கு.அழகிரிசாமியின் தவப்பயன் கதையுலகு குறித்து

நினைவுகொள்கிறது.

அழகிரிசாமியின் இறுக்கமான எழுத்தின் கனதியான கதை

தவப்பயன். தவத்தின் பயனை அல்லது தவத்தின் அளவு பயனை அது பொருள் கொள்கிறது.

ஆசிரமத்தின் கதை பரமானந்தரின் தவவலிமையைச் சொல்கிறது கதை. சீடர்களின் தவ ஆர்வமும் தம் குரு மீதான ஆழ்ந்த நம்பிக்கையும் கதையை நகர்த்துகிறது.

கு.அ அவர்களின் இலக்கியப்பணி கனதியானது. 1942இல் உறக்கம் கொள்ளுமோ ஆனந்தபோதினிக் கதையுடன் தொடங்கிய கு.அழகிரிசாமி இதழாளராக, பதிப்பாளராக, மொழிபெயர்ப்பாளராக, நாடகவியலாளராக, கலை இலக்கியக்காரராக பல்துறையில் காலூன்றியவராயினும் இவரது கதையுலகு இவருக்கான

அடையாளத்தைப் பதிந்தது. நூற்றொரு கதைகள்

எழுதியிருக்கிறார் அழகிரிசாமி. தவப்பயன் கதை மூன்று

தளங்களில் இயங்குகிறது. ஆசிரமம், சுவனலோகம், உயிர்களின் சிருஷ்டிப்பு.

சுவர்க்கம், நரகத்திற்கு வேறுபாடு காணவியலாத ஜீவான்மாவால் பயனேது. நிர்மலானந்தர் என்கிற சுவாமியின் கடுந்தவமும் அவர் உயிர்துறத்தலும் ஜீவான்மாவைச் சுவனத்தில் சேர்ப்பித்தலும், கடவுள் அவ் ஜீவான்மாவைக் கண்டு சுவனமும் அதற்குப் பிடித்தமானதன்று, அதனையும் தாண்டிய ஜீவான்மா பரமான்மா சங்கமத்துக்கான ஏக்கமெனக் காணலும், பின் அணில் குஞ்சாக பூவுலகுக்கு மீளனுப்புதலும் கதையில் ஆழமாகப் பேசப்படுகிறது.

'சுவர்க்கத்தின் போக நிலத்தில் புழுவெனத்துடித்து

உபசாந்தப்பரவெளியை நோக்கித் துள்ளிக் குதிக்குக்

கொண்டிருந்தது நிர்மலானந்தரின் ஜீவான்மா'' அத்தகைய

ஜீவான்மா அணிற்குஞ்சாகி இன்பமுணரும் கணம் உணரத்தக்கது.

இக்கதையில் மாயக்குயவன் இயக்கம் முக்கியமானது. குறியீடாக அல்லது குயவனின் பாத்திர வனைவாகக் கதையில் வரும் நிகழ்வு ஜீவான்மா பரமான்மாவின் இணைவை உச்ச ரசனைப்புலத்தில் கு.அழகிரிசாமி விபரிக்கிறார். கு.அழகிரிசாமி நூற்றாண்டில் அவரது எழுத்துப்புலவீச்சுக் குறித்து பேசப்படுவது பொருத்தமானதே.

# வி.பி. கணேசன்



வி.பி. கணேசன் என்றழைக்கப்படும் வைத்திலிங்கம் பழனிசாமி கணேசன் இலங்கை ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் (ஜ.தொ.க) என்ற மலையகத் தொழிற்சங்கத்தின் நிறுவனரும், இலங்கைத் தமிழ்த் திரைப்பட நடிகரும் இயக்குனரும் ஆவார். தொழிற்சங்க அரசியலில் இருந்து திரைப்படத் துறைக்கு வந்தவர். நடிப்புக் காலம்1970கள்.

துணைவர்: டயனா ரூத் தவமணி. பிள்ளைகள்: மனோ கணேசன், பிரபா கணேசன்.

**இவர் நடித்த சில குறிப்பிடத்தக்கபடங்கள்:**

புதிய காற்று, நான் உங்கள் தோழன்.

இலங்கையில் மூன்று தமிழ்த் திரைப்படங்களை தொடர்ந்து தயாரித்தவர். மூன்றிலும் இவரே கதாநாயகனாக நடித்தார். தென்னிந்திய திரைப்படங்களின் சாயலில் அமைந்த இந்த மூன்று திரைப்படங்களில் "புதிய காற்று", "நான் உங்கள் தோழன்" என்பன வெற்றியைப் பெற்றன. மூன்றாவது படமான 'நாடு போற்ற வாழ்க" சமகாலத்தில் "அஞ்சான" என்ற பெயரில் சிங்களத் திரைப்படமாகவும் உருவாகியது. அரசியல்வாதிகள் பிரபா கணேசன், மனோ கணேசன் ஆகியோர் இவருடைய பிள்ளைகளாவார். வி.பி. கணேசனின் வாழ்க்கை வரலாற்றை "சிகரம் தொட்ட செம்மல் வி.பி.கணேசன் என்ற பெயரில் எழுத்தாளர் மொழிவாணன் எழுதி வெளியிட்டுள்ளார்.

# உமறுப்புலவர்



தூத்துக்குடி மாவட்டம், நாகலாபுரத்தைச் சேர்ந்தவர். இவரின் தந்தை ஷேகு முதலியார் என அழைக்கப் பெற்ற ஷேகு முகம்மது அலியார் ஆவார்.

எட்டயபுர மன்னன் வெங்கடேஸ்வர எட்டப்ப பூபதியின் அவைப் புலவராக விளங்கிய கடிகைமுத்துப் புலவரிடம் உமறு தமிழ் பயின்று புலமை பெற்றார்.

தம் ஆசானுக்குப் பின் எட்டயபுர மன்னனின் அவைப் புலவராகப் பொறுப்பேற்றார். ஷேகு அப்துல் காதிர் மரைக்காயர் என்ற வள்ளல் சீதக்காதியின் வேண்டுகோளின்படியே உமறுப்புலவர் சீறாப்புராணத்தை எழுதத் தொடங்கினார்.

நூல் முற்றிலும் நிறைவடையும் முன்னரே சீதக்காதி இறந்து விட்டார்.

பின் அபுல் காசிம் என்ற வள்ளலின் உதவியால் சீறாப்புராணம் நிறைவு பெற்றது. உமறுப்புலவர் அபுல் காசீம் அவர்களை நூலின் பல இடங்களில் நினைவு கூர்ந்து போற்றுகிறார். உமறுப்புலவர் முதுமொழிமாலை என்ற எண்பது பாக்களால் ஆகிய நூலையும் படைத்தளித்துள்ளார்.



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...
கம்பளை

# இரவீந்திரநாத் தாகூர்



இரவீந்திரநாத் தாகூர் புகழ் பெற்ற வங்காள பல்துறையறிஞர் ஆவார். 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலும் இவர் வங்காள இலக்கியம் மற்றும் இசை வடிவத்தில் பெரும் மாற்றங்களைக் கொண்டு வந்தார். மேலும் இந்தியக் கலைகளிலும் மாற்றங்களைக் கொண்டு வந்தார். இவர் கீதாஞ்சலி எனும் கவிதைத் தொகுப்பின் ஆசிரியர் ஆவார்.

இந்த கவிதைத் தொகுப்பிற்காக இவர் 1913இல் இலக்கியத்திற்கான நோபல் பரிசினைப் பெற்றார். இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற முதல் ஆசிரியர் இவரேயாவார்.

மேலும் ஐரோப்பியர் அல்லாத ஒருவர் இந்த விருதைப் பெறுவதும் இதுவே முதல் முறையாகும். தாகூரின் படைப்புகள் ஆன்மீகத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

உமறுப் புலவர் முகம்மது நபிகளின் வரலாற்றை அடியொற்றித் தமிழ் இலக்கிய மரபிற்கேற்பச் சீறாப் புராணம் என்ற காப்பியத்தைப் பாடியவர்.

# மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.– 20



வாடகைக்கு குடியிருக்கும் ராயப்பேட்டை லோயஸ் வீதியில் அமைந்த வீட்டை சொந்தமாக வாங்க சத்தியபாமா விரும்பினார். தாயின் விருப்பப்படி எம்.ஜி.ஆர் இந்த வீட்டை சொந்தமாக வாங்க வீட்டுக்காரரிடம் சென்றார். வீட்டுக்காரரின் பெயர் ராமன். அவர் ஒரு அட்வகேட். எம்.ஜி.ஆர் அட்வகேட் ராமனிடம், தங்களிடம் 5 நிமிடம் பேசணும் அடியேனுக்கு அனுமதி கிடைக்குமா என்றார். உடனே அவர் வாங்க வாங்க 5 நிமிடம் என்ன 10 நிமிடமே பேசலாமே என்ன விடயம் சொல்லுங்க. எம்.ஜி.ஆர் அவரை நோக்கி ஐயா, நான் பேசப்போவதை கேட்டு தவறாக நினைத்து கோபப்படக்கூடாது. நாங்கள் குடியிருக்கும் வீட்டை விற்கப் போவதாகக் கேள்விப்பட்டோம். அப்படி அந்த வீட்டை விற்பதாக இருந்தால் அதை எங்களுக்கே விலைக்கு கொடுத்து உதவுங்கள் என்று மிகப் பணிவுடன் கேட்டார். அட்வகேட் ராமன் எம்.ஜி.ஆருக்கு அந்த வீட்டை குறைந்த விலைக்கு நிறைந்த மனதோடு விற்றார்.

இந்த வீடு தான் எம்.ஜி.ஆருடைய கடும் உழைப்பால் பெரும் முயற்சியால் முதன் முதலாக சொந்தமாக வாங்கப்பட்ட சொத்தாகும். அந்தப் பழைய வீட்டின் முன்னும் பின்னும் காலியான இடம் இருந்தது. அந்த வீட்டிலுள்ள காலியான இடங்களில் வசதிக்குத் தகுந்தாற்போல் கட்டிடங்கள் கட்டி பழையதையும் ஒன்றாக இணைத்து ஒரு பெரிய வீடாக்கி அந்த வீட்டிற்கு “தாய் வீடு” என்று பெயர் வைத்தார் எம்.ஜி.ஆர். எம்.ஜி.ஆர் 1937 இல் வெள்ளையர் ஆட்சிக்காலத்தில் மகாத்மா காந்தியினுடைய இயக்கத்தில் இணைந்து “வெள்ளையனே வெளியேறு” “வந்தே மாதரம்”;, “மகாத்மாகாந்திக்கு ஜே” என்று சொல்லியவர்களில் ஒருவராவார். எம்.ஜி.ஆர் நாடகங்களில் நடித்த காலம் முதல் சினிமாவில் நடிக்கும் போதும் காந்தி இயக்கத்தை சேர்ந்தவர். மகாத்மாகாந்தி அகிம்சை போராட்டம் செய்பவராக இருந்தார். எம்.ஜி.ஆருக்கு அகிம்சை முறை பிடிக்கவில்லை. கிம்சை முறை பிடிக்காமல் விலகி சுபாஷ் சந்திரபோஷ் “வீர போர்” என்ற பெயரில் ஒரு அமைப்பை தோற்றுவித்தார்.

அகிம்சை முறை பிடிக்காத எம்.ஜி.ஆரும் பல இளைஞர்களுடன் “வீர போர்” எனும் அமைப்பில் இணைந்தார். 1947 இல் இந்தியாவை காங்கிரஸ் வெள்ளையர்களிடமிருந்து ஆட்சியை கைப்பற்றியது. 1948 இல் எம்.ஜி.ஆர் காமராஜர் தலைமையில் காங்கிரஸ் கட்சியில் இணைந்தார். காமராஜரின் சிஷ்யனாக இருந்த எம்.ஜி.ஆர் 1953 இல் கலைஞர் கருணாநிதியின் தூண்டுதலில் அண்ணாத்துரை அவர்களுடைய சிஷ்யன் ஆனார்.வருடத்திற்கு வருடம் எம்.ஜி.ஆருக்கு நல்ல நல்ல கதை அம்சங்களை கொண்ட படங்கள் ஒப்பந்தமானது. இவர் நடித்த படங்கள் நல்ல வருமானத்தை படத் தயாரிப்பாளர்களுக்கு கொடுத்தது.

1950 ஆம் ஆண்டளவில் எம்.ஜி.ஆருடைய வீட்டிற்கு முன் எம்.ஜி.ஆரை பார்க்க காலையிலும் மாலையிலும் ரசிகர்கள் கூட்டமாக இருப்பார்கள். எம்.ஜி.ஆர் படப்பிடிப்பிற்கு போகும் போதும் வீட்டிற்கு வரும் போதெல்லாம் இதைக்காணும் சத்தியபாமா மிகவும் பெருமை அடைந்தார். 1954 ஆம் ஆண்டளவில் எம்.ஜி.ஆருக்கு தமிழ்நாடு எங்கும் ரசிகர்கள் பெருகி விட்டார்கள். இதனால் ரசிகர் மன்றங்கள் தோன்றின. “மோகினி” எனும் படத்தில் எம்.ஜி.ஆர் நடிகை வி.என் ஜானகியுடன் இணைந்து நடித்த போது இருவரும் நல்ல நண்பர்களாக பழகி பின்னர் காதலர்களாக மலர்ந்தார்கள்.

நடிகை ஜானகி நல்ல அழகியும் சிறந்த நடிகையும் ஆவார். ஜானகியின் சொந்த ஊர் கேரள மாநிலத்தின் பாலக்காட்டுக்கு அடுத்துள்ள ஊரான வைக்கம் என்னும் ஊராகும். வைக்கத்தில் பிறந்தாலும் படித்ததும் நடனம் கற்றுக்கொண்டதும் எல்லாம் சென்னை தான். ஜானகி நடித்த முதல் படம் “ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி” இந்த படத்தில் கதாநாயகியாக மிகவும் பிரமாதமாக நடித்துள்ளார்.

அந்த படத்தில் ஜானகி ஆயிரம் தலைகளை வெட்டி குவிக்கும் காட்சி மயிர் சிலிக்க வைக்கும் காட்சியாக அமைந்துள்ளது. எம்.ஜி.ஆரும் ஜானகியும் காதலிக்கும் போது இருவருமே ஏற்கனவே திருமணமானவர்களே. “மருத நாட்டு இளவரசி” எனும் படத்தில் எம்.ஜி.ஆர் கதாநாயகனாகவும் ஜானகி கதாநாயகியாகவும் நடித்துள்ளனர். அந்தக் கட்டத்தில் இவர்களது காதல் உச்சக்கட்டத்தில் இருந்தது.ஜானகி அழகியாகவும் சிறந்த நடிகையாகவும் இருந்தமையால் எம்.ஜி.ஆரை கவர்ந்தார். எம்.ஜி.ஆர் ஜானகியை ஆரம்பத்தில் காதலிக்கும் எண்ணத்தில் பழகவில்லை. எம்.ஜி.ஆர் ஜானகியுடன் நண்பர்கள் என்னும் நட்புடன் தான் பழகினார். ஆனால் ஜானகி காதலை நோக்கமாக கொண்டே எம்.ஜி.ஆருடன் பழகினார். எம்.ஜி.ஆர் ஜானகியுடன் நட்பாக பழகும் காலகட்டத்தில் இல்லறவாழ்க்கையே நமக்கு இனிமேல் இல்லை. தான் உண்டு தன் தொழில் உண்டு. உழைப்பே உயர்வு என்ற ஏணியில் ஏறிக்கொண்டு இருக்கும் போது ஜானகி இடையில் புகுந்தார். ஜானகி தான் முதலில் எம்.ஜி.ஆரிடம் காதலை பொழிந்தார். ஜானகி எம்.ஜி.ஆர் மீது அளவு கடந்த காதலை வெளிப்படுத்தினார். எம்.ஜி.ஆர் ஜானகியை நோக்கி, நான் உங்களை சினிமாவில் தான் காதலிக்கின்றேன். நீங்களோ சினிமாவிலும் காதலிக்கிறீர்கள். நிஜத்திலும் காதலிக்கிறீர்கள்.

ஆனால் என்னால் நிஜத்தில் உங்களை காதலிக்க முடியவில்லை. எனது சொந்த வாழ்க்கையில் எனது தாய் எனக்கு கேரளாவில் பெண் பார்த்து திருமணம் செய்து வைத்தார்கள். நான் அந்த பெண்ணுடன் ஒரு வருடம்தான் வாழ்ந்தேன். பிறகு ஒரு வருடம் கழிந்து கட்டாயத் திருமணமாக இரண்டாவது திருமணம் நடந்தது. அந்த பெண்ணோடு நான் ஒரு வருடம்தான் நல்ல சந்தோஷமாக வாழ முடிந்தது. பிறகு அந்த பெண்ணுக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டது.

எவ்வளவோ வைத்தியம் பார்த்தும் நலக்குறைவாக இருக்கிறாங்க. இந்த மாதிரியான சூழ்நிலையில் உள்ள என்னிடம் என்னை நீங்கள் விரும்புவது எப்படி சரியாகும். தயவு செய்து இது வேண்டாம். நாம் இருவரும் நல்ல நண்பர்களாக இருப்போம். தொடர்ந்து படங்களில் நடிப்போம் என்று விளக்கமாக கூறினார். மேலும் சினிமாவில் நன்றாகக் காதலிப்போம் என்றார்.

**(தொடரும்)**



கலாபூஷணம்
பரீட் இக்பால்...
யாழ்ப்பாணம்



கலைஞர்கள் படப்பிடிப்புக்கு போகும் போது...



நடனக் கலைஞர் காளி



ஒளிப்பதிவாளர் தனா



வைத்திய அத்தியட்சகர் சுகுணனுடன்...



அதிகாரி சகா



Amarabathi Prabakaran



கலைஞர் துவான்



**Name:** S. Vigaashini
**Father Name:** Satheeskumar
**Mother Name:** Sinthuja
**D.O.B:** 24th August 2023(4th Birthday)
**Place:** Kotahena



அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத் தலைவர் எஸ். விஜே.



நடராஜா தாமரைச் செல்வி

இப்பத்திரிகை அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஒகஸ்ட் மாதம் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.